
Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 63 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 டிசம்பர் 2023



## அலையே...
## உன்னைப்போல்
## மீண்டும் நாங்கள்
## மலையாய் எழுவோம்
## அழிப்பதற்காய் அல்ல
## அழியாது தழைப்பதற்காய்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananatham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

வெள்ளி அச்சுப் பதிப்பக நூல் வெளியீட்டாளர்கள்
Silver Print House
Digital Printing, Graphics & Publication
4775 Yarmarok Crt,
Mississauga Ontario L5R 0A6.
Contact: Muhunthan (437) 423 - 5460
உங்களது தேவையே எங்களது சேவை
மேலதிக தொடர்புகளுக்கு : முகுந்தன் சிவதாசன்
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

BUY | SELL | LEASE | INVEST
வீடு வாங்கணுமா விற்கணுமா
VARAN SUBRAMANIAM
SALES REPRESENTATIVE
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
RAISING YOUR VALUE
VS LOVE WHERE YOU LIVE
647-295-5672
varanrealtor@gmail.com

விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203

2024 உலக வணிகம்
Ulaga VANIKAM
ULAGA VANIKAM உலக வணிகம்
Tel: 437 345 4203
www.ulagavanikam.ca
ulagavanikam@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**உலகெங்கும் தமிழன் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பொற்றிருக்கிறது. தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கிறது. தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியுள்ளது.**







## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சுதந்திரத்திற்கான பல்திசைப்பணியின் இருப்பும் வாழ்வும்

# 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்

*சுதந்திரத்திற்கான பல்திசைப்பயணியின் இருப்பும் வாழ்வும் –சில குறிப்புக்கள்*



சாவு ஒரே நொடியில் - ஒரு கணப்பொழுதில் எல்லாவற்றையும் மாற்றி விடுகிறது; எல்லாவற்றையுடம் புரட்டிப் போட்டுவிடுகிறது; ஒரு மனிதனுடைய ஆசை, அபிலாசை, இருப்பு என்று எல்லாவற்றையும் இந்தச் சாவு அழித்துவிடுகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் எங்கள் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு - கொடிய புற்று நோய் தாக்கியிருப்பதாவும் - இன்னும் குறைந்தபட்சம் நான்கு மாதங்களே அவர் உயிர் வாழ்வார் என்றும் - மருத்துவர்கள் நாட்குறித்துவிட்டபோது அவரது சாவுக்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டதாகவே தமிழ் கூறும் நல்லுலகம் கலங்கியது. ஆனால் சாவு என்பது வாழ்வின் முடிவல்ல என்பதையும் அதை மக்களுக்காக - மக்களின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணிப்பவர்களை சாவு அழித்து விடுவதில் என்பதையும் போராளிகள் ஒரு போதும் புதைக்கப் படுவதில்லை விடுதலையின் வித்தாக விதைக்கப்படுகின்றார்கள் என்பதையும் உணர்ந்த எங்கள் தேசத்தின் குரல் எங்கள் பாலா அண்ணா அந்த சாவை நெஞ்சுறுதியோடு எதிர்கொண்டார்.

சிங்களப் படைகளின் கொடூரத்தனங்களால் ஈழத் தமிழ் மக்கள் படும் இன்னல்களுடன் ஒப்பிடும் போது தன்னுடைய உடலை வருத்தும் கொடிய நோய் தரும் வலி பெரிதல்ல என்று கூறிய அந்த மாமேதை தன்னுடைய வாழ்வின் இறுதிக் கணங்களை எண்ணி ஒரு போதும் கலங்கவில்லை.

தனக்கே உரித்தான கம்பீரத்துடன் தனக்கே உரித்தான தன்னம்பிக்கையுடனும் அவர் மீளாத துயிலில் ஆழ்ந்துவிட்டார்; 1988ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் திகதி தாயகத்தின் வடமராட்சி கரவெட்டி மண்ணில் முதல் முதலாக ஒலித்த அந்த தேசத்தின் குரல், 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி பிற்பகல் 1:45 மணிக்கு லண்டன் மாநகரத்தில் அடங்கிவிட்டது. மார்க்கண்டு ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் அல்லது அன்ரன் ஸ்னிஸ்லஸ் என்ற இந்த மனிதரின் வாழ்வில் பொதுவுடமை சித்தாந்தவாதி, ஊடகத்துறை விற்பன்னர், தமிழ் தேசிய விடுதலைப் போராளி என்ற மூன்று பரிணாமங்கள் இருக்கின்றன. தென் தமிழீழத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தை பூர்விகமாகக் கொண்ட இந்துப் பாரம்பரியத்தை உடைய தந்தையாருக்கும் வட தமிழீழத்தின் வடமாராட்சி கரவெட்டி நகரத்தின் கிறிஸ்தவ பாரம்பரியத்தை கொண்ட தாயாருக்கும் தமிழ் தேசியத்தினதும் மத இணக்கப்பாட்டினதும் சின்னமாகப்பிறந்த ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் அவர்கள் கரவெட்டி இருதயக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை கற்றகாலத்தில் அந்தப் பிரதேசத்தில் நிலவிய சமூக ஒடுக்குமுறையும் அதற்கு எதிரான போராட்டங்களும் பொதுவுடமை சித்தார்ந்தத்தின் பால் அவரை நாட்டங்கொள்ள வைத்தன. சமூக ஒடுக்குமுறைக்கு எதிராகவும் மதத்தின் பேரால் மாணவர் சமுகம் பிளவுபடுத்தப்படுவதையும்



எதிர்த்து அவர் மேற்கொண்ட பரப்புரைகள், அவர் கரவெட்டியில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கும் திரு இருதயக் கல்லூரியில் படிப்பதற்கும் முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தின. இந்த நிலையில் யாழ்ப்பாணம் சென்பற்றிக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்வதற்காக மார்கண்டு என்ற தனது தந்தையின் பெயருக்கு அன்ரன் என்று கிறிஸ்தவ பெயர் சூட்டவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. மார்க்கண்டு ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் என்று அழைக்கப்பட்ட அவர் அதன் பின்னர் அன்ரன் ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் என்று அழைக்கப்பட்டார். தனது கல்லூரி காலத்திலேயே சமூகத்தின் கருத்தியில் தளத்தில் உறைந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளை ஒழித்து புதிய கருத்தியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கு

**அன்ரன் பாலசிங்கம் என்ற அந்த மாமேதை வாழ்ந்த நாட்கள், வாழ்ந்த கணங்கள், தமிழர் தேசத்தின் உன்னதமான உயரிய நாட்களும், அவர் தேசத்தின் குரலாய், தேசத்தின் தத்துவ ஒளியாய் என்றும் அவர் வாழ்ந்துகொண்டிருப்பார்.**

ஊடகத் துறையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அந்த காலத்திலேயே ஆக்கபூர்வமான கருத்துக்களையுடைய கட்டுரைகளை எழுதிவந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 1960களின் பிற்பகுதியில் தனது கல்லூரி படிப்பை முடித்த பின்னர் சிரித்திரன் ஆசிரியர் சுந்தரின் ஒத்தாசையால் வீரகேசரி நாளிதழில் ஊடகவியலாளராக தனது கருத்தியல் போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்தார். பிரம்ம ஞானி என்ற பெயரில் பல்வேறு அரசியல் தத்துவக் கட்டுரைகளை எழுதி வந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மலையகத்திலிருந்து வெளிவந்த "செய்தி" என்ற நாளிதழில் ஐம்பது அத்தியாயங்களுக்கு மேல் தொடராக எழுதிய தத்துவக் கட்டுரை அவரது ஆளுமையையும் மெஞ்ஞான செழுமையையும் வெளிப்படுத்தியது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வீரகேசரி நாளிதழில் உதவி ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் தமிழ் சமூகத்தின் கருத்தியல் தளம் பல்வேறு பிற்போக்கும் தனங்களால் கட்டமைக்கப்பட்டிருந்தது. சமூகம், அரசியல், தத்துவம், ஊடகம் என்று எல்லா துறைகளிலேயும் அவை மலிந்து போயிருந்தன.

தமிழ்ச் சமூகம் சாதி, சமயம், பிரதேசம் என்று பிளவுபட்டுப் போயிருந்தது. ஊடகத்துறை என்பது இந்த பிற்போக்குத் தனங்களைக் கண்டு கொள்ளாத அல்லது இவற்றை கண்டும் கொள்ளாத அல்லது இவற்றை கண்டும் காணாமல் நடுநிலமை என்ற பெயரில் மதில்மேல் பூனையாக நடந்துகொள்ளும் சந்தர்ப்பவாதப் போக்குடைய தாக இருந்தது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்த சந்தர்ப்பவாத நழுவல் போக்கை உடைத்து புதிய கருத்தியல் சித்தாந்தப் போக்குகளை ஊடகத்துறையில் புகுத்துவதற்கு முனைந்தார். தமிழ்ச் சமூகத்தின் உண்மையான மெய்யியல் அடையாளத்தைத் தேடிய அவர் பௌத்த மெய்யியல் அடையாளங்கள் பற்றியும் நிறையவே எழுதினார்.

ஆக்கிரமிப்பு கருத்தியல்களால் மாசுபட்டுப் போயிருந்த, திரிவுபட்டுப் போயிருந்த தமிழ்ச்சமூகக் கருத்தியல் தளத்தை உடைத்து புத்துயிர் அளிக்க முயன்றார். அவருடைய ஆளமை மிக்க எழுத்துக்கள், அவற்றிலிருந்து தத்துவ வீச்சுகளை பாமரனும் புரிந்துகொள்ளும்படி எளிமையாகச் சொல்லிய விதம் இவையெல்லாம் தமிழ் சமூகத்தின் தத்துவ ஆசிரியனாக அவரை இனம் காட்டின.

1970களின் முற்பகுதியில் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத் தில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றிய காலத்தில் உடன் பணியாற்றிய தமிழ் பெண்ணை மணந்து அவருடன் இணைந்து லண்டன் மாநகருக்கு புலம்பெயர்ந்து தனது தத்துவ மேற்படிப்பை தொடங்கினார். அவரது துணைவியார் சிறுநீரக நோய்வாய்ப்பட்டு உயிரிழத்த நிலையில் 1976 காலப்பகுதியில் அவுஸ்திரேலியப் பிரஜையான அடேல் அம்மையாரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மற்றொரு பரிணாமமாகவும் திருப்பு முனையாகவும் அமைந்தது.

அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த கருத்தியல் ஒற்றுமையும் பரஸ்பர புரிந்துணர்வும் பொதுவுடமை சித்தாந்தத்தின் தந்தையான கார்ல்மாக்ஸிற்கும் அவரது வாழ்நாள் எல்லாம் அவருடன் இருந்து அரியதத்துவ பொக்கிஷங்களை வெளியிடுவதற்கு துணைபுரிந்த அவரது மனைவி ஜென்னி மாக்ஸ்சுக்கும் இணையாக பேசப்படுகிறது.

1979ம் ஆண்டு சென்னையில் தமிழீழ தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை சந்தித்ததானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மைல் கல்லானது.

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், அவர் அரசியல் தத்துவார்த்த தளங்களில் புதிய வடிவமும், புதிய பரிணாமமும் கொடுத்தார். அந்தக்கால கட்டத்திலே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கென்று புறப்பட்ட பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த பல்வேறு நபர்கள் தங்களது மேதாவித்தனத்தையும், கருத்தியல் செருக்கையும் வெளிப்படுத்திக்



கொண்டிருந்த நேரத்தில் அவர் அவர்களிலிருந்து வேறுபட்டு உண்மையான தமிழ்த் தேசிய விடுதலைக்கான கருத்தியலை கட்டமைத்தார். அவர் எப்பொதும் எதையும் தமிழ் மக்கள் மீது திணிக்கவில்லை. தமிழ்த் தேசியத் விடுதலைப் போராட்டத் தளத்தில் தேசியத்தலைவர், தளபதிகள், போராளிகள், மக்கள் என்று அனைவரிடமும் கற்றுக் கொண்ட விடயங்களையும் அவர்களுடைய அனுபவப்பதிவுகளையும் தன்னுடைய அனுபவப்பதிவுகளையும் ஒருசேர இணைத்து தமிழ்த் தேசியக் கருத்தியலைச் செழுமைப்படுத்தினார். சோசலிசத் தமிழீழத்தை நோக்கி என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதலாவது தத்துவ நூலாக அமைந்தது.

தான் ஒரு மேதை, நிறையக் கற்றவன், லண்டன் சீமையில் இருந்து வந்தவன் என்ற பெருமைகள் எதுவுமே இல்லாது ஒரு சாமானியனாக போராளிகளோடு போராளியாக அவர் பழகியதை இன்றும் அவருடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்த அனைத்துப் போராளிகளும் நினைத்து நினைத்து நெஞ்சுருகுகின்றார்கள்.

1985இல் திம்புப் பேச்சுவார்த்தையிலிருந்து 1990ம் ஆண்டு பிரேமதாசாவுடன் நடந்த பேச்சுவார்த்தை, அதன் பின் சந்திரிகா ஆட்சிக் காலத்தில் நடந்த பேச்சுவார்த்தை, தொடர்ந்து 2002ம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானபின் நடந்த அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் தன்னுடைய ஆளமையாலும் வாதத் திறமையாலும் தமிழர் தரப்பின் நியாயங்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் பரிணாமங்களையும் சர்வதேச அரங்கில் ஆணித்தரமாக நிலைநிறுத்தினார்.



இந்தப் பேச்சுவார்த்தைகளில் அவருடைய ஆளுமையையும், இராஜதந்திர நகர்வுகளையும் அவர் பயன்படுத்திய இராஜதந்திர மொழியையும் பார்த்து சிங்கள அதிகாரவர்க்கம் மட்டுமல்லாது, தமிழ் மக்களை மேலாதிக்க வலைப் பின்னல்களுக்குள் சிக்க வைப்பதற்கு பொறி வைத்து காத்திருந்த மேலாதிக்க சக்திகளும் கலக்கம் கொண்டன். தமிழர் தரப்பின் தலைசிறந்த இராஜதந்திரி என்றும் தத்துவ வித்தகர் என்றும் மேற்குலக ஊடகங்களும் மேற்குலக அரசியல் நிபுணர்களும் அவரைப்புகழ்ந்துரைத்தனர். விடுதலை, போரும் சமாதானமும் போன்ற அவரது நூல்கள் தமிழர் தரப்பின் தத்துவ செழுமைக்கும் அவரது ஈடு இணையில்லாத தன்மைக்கும் சான்றாக விளங்குவதாக பல விமர்ச்கர்கள் புகழ்ந்துரைத்தனர்.

30 வருடங்களுக்கு மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தமையால் அவைரது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 2000மாம் ஆண்டு நோர்வேயில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்தார்.

முன்னின்று நடத்திய வீதம் அவரது ஊடகத்துறை ஆளுமைக்கு சான்றாக அமைந்தது.

ஜெனிவாவில் கடந்த ஒக்டோபர் மாதம் நடந்த பேச்சுவார்த்தையில் உடல் நலம் குன்றிய நிலையில் கலந்து கொள்ளாதிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு கொடிய புற்றுநோய் தாக்கியிருக்கிறது என்ற விபரம் அவருக்கே தெரியாமல் இருந்தது.

நவம்பர் 27ம் நாள், தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வின் போது தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றும் உரைக்கு விளக்க உரைபோல் வருடா வருடம் லண்டன் மாநகரில் கலாநிதி அன்ரன் பாலசிங்களம் அவர்கள் ஆற்றும் உரை இம்முறை (2006ம் ஆண்டு) இடம் பெறாததும் தமிழ் நெஞ்சங்களை கலங்க வைத்தது.

2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி லண்டன் நேரம் பிற்பகல் 1:45 மணியளவில் தமிழீழ தேசத்தின் தத்துவச் சுடர் அணைந்ததாக செய்தி வெளியானபோது தமிழ் கூறும் நல்லுலகமே கலங்கி நின்றது. தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் “தேசத்தின் குரல்” என்ற உயரிய சிறப்பைக் கொடுத்து அவருக்கு மதிப்பளித்தார்.



2002ம் அண்டு மார்ச் மாதம் 22ம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டபின் 5 தடவைகள் லண்டனில் இருந்து வன்னி பெருநிலப்பரப்புக்கு சென்று தேசியத் தலைவரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

2002ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் நடத்திய சர்வதேச ஊடகர் மாநாட்டை கலாநிதி அன்ரன் பாலசிங்களம் அவர்கள்

அன்ரன் பாலசிங்களம் என்ற அந்த மாமேதை வாழ்ந்த நாட்கள், வாழ்ந்த கணங்கள், தமிழர் தேசத்தின் உன்னதமான உயரிய நாட்களும், அவர் தேசத்தின் குரலாய், தேசத்தின் தத்துவ ஒளியாய் என்றும் அவர் வாழ்ந்துகொண்டிருப்பார்.
திறலோன்

- எரிமலை நவம்பர் -டிசம்பர் 2006




# தமிழீழப்பகுதிகளில் தடைகளைத் தாண்டி எழுச்சியுடன் மாவீரர் நாள் !

நவம்பர் 15, 2023



வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் தடைகளை தாண்டி மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் நினைவேந்தல் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதேவேளை, இறுதி நிமிடத்தில் உட்புகுந்த பொலிஸாரின் அராஜகத்துக்கு மத்தியில் மட்டக்களப்பு தரவையில் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. அங்கு நுழைந்த பொலிஸார் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக் கொடிகளை அறுத்தெறிந்தனர்.







## யாழ்ப்பாணம் – கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ,மாவீரர் நாளான இன்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய்  மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், நினைவேந்தல் இடம்பெற்றது.







## கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம்

யாழ்ப்பாணம் - கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இன்று மாலை முன்னெடுகப்பட்டன.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகைச் சுடரை மாவீரர்களான கப்டன் ரசியன், மேஜர் ரெஸ்ரார்,மேஜர் வண்ணன் ஆகியோரின் தாயாரும் மற்றும் மாவீரர் குமரர் மற்றும் சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் பொதுச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், சகோதரர்கள், உறவுகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.







## எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்

யாழ்ப்பாணம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக, மாவீரர் நாளான இன்றைய தினம் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்  இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதான ஈகைச் சுடரினை கடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம்  ஏற்றி வைத்தார்.





சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்

யாழ்ப்பாணம் - தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் வணக்கம் செலுத்திப்பட்டது.

ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர், மற்றும் உறவினர்கள் சாட்டி மாதா தேவாலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பொது ஈகைச்சுடர் முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையுமான வி.கந்த சுவாமியினால் ஏற்றப்பட்டது.





முல்லை. இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம்

இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தையான தனபாலசிங்கம் ஏற்றி வைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.






முல்லைக் கடற்கரை மாவீரர் துயிலும் இல்லம்

முல்லைத்தீவு கடற்கரையில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

அந்தவகையில் முல்லைத்தீவு கடற்கரையில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை கடற்கரும்புலி மேஜர் நிதர்சன் அவர்களின் தாயார் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து துயிலுமில்ல பாடலான தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தன பேழைகளே எனும் பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்தியிருந்தனர்.

குறித்த வணக்க நிகழ்வில் பெருந்திரளான பொதுமக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.





மட்டக்களப்பு – மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லம்

மட்டக்களப்பு மாவட்டம் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள் கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் திங்கட்கிழமை (27.11.2023) மாலை 6.05 மணிக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி சொலுத்தினர்.

குறித்த மாவீரர் துயிலும் இல்லத்தைச் சூழ பொலிசார் அவர்களது கடமையில் ஈடுபட்டிருந்துடன் அவ்வப்போது நிகழ்வை குழப்பும் வகையில் ஏற்பாட்டாளர்களுடன் தர்க்கத்திலும் ஈடுபட்டிருந்ததுடன், கலந்து கொண்டிருந்த பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் பொலிசார் அவர்களது கைபேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

எனினும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடவோ, கார்த்திகை பூ சின்னங்கள் காட்சிப்படுத்தவோ அங்கு பொலிசார் அனுமதியளித்திருக்கவில்லை. மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்துள்ள கற்பாறையில் ஏற்கனவே கார்த்திகை பூ ஓவியம் வரையப்பட்டுள்ளது. அதனையும் அகற்றுமாறும் பொலிசார் கோரினர். ஆனாலும் அதனை ஏற்பாட்டாளர்கள் கருத்திற் கொள்ளவில்லை.

மாவீரர் தினத்தில் கலந்து கொள்ளாத்திருக்க மக்கள் பிரதிநிதிகள் பலருக்கு பொலிசார் நீதிமன்றத்தினூடாக ஞாயிற்றுக்கிழமை தடைஉத்தரவைப் பிறப்பித்திருந்தனர்.

ஆனாலும் திங்கட்கிழமை நீதிமன்றிற்குச் சென்ற மக்கள் பிரதிநிதிகள் அவர்களது சட்டத்தரணிகளூடாக தமக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவை விலக்கக் கோரி முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க அவர்களுக்கு இந்நிகழ்வில் பயங்கரவாத செயற்பாடுகளை தூண்டும் வகையிலான எதுவித செயற்பாடுகளையும் மேற்கொள்ளாது கலந்து கொள்வதற்கு அனுமதியளித்திருந்தது.

அதற்கிணங்க இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மற்றும், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா, மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

**உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**





**வவுனியா – ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்**

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நினைவேந்தல்கள் இடம்பெற்றது.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகைச்சுடரினை மேஜர் உமாசங்கர் மற்றும் கப்டன் கஜலக்சுமி ஆகியோரின் தாயார் வள்ளிப்பிள்ளையால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது.
கண்ணீர் மல்க, மலர் தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக உயிரிழந்த வீரர்களுக்கு தமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்தியிருந்தனர். இதில் பல ஆயிரக்கணக்





**மட்டக்களப்பு – வாகரை மாவீரர் துயிலும் இல்லம்**

மட்டக்களப்பு வாகரையில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள் இன்று இடம்பெற்றன.





**மன்னார் – மடு பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம்**

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டகளத்தில் தியாகம் செய்தவர்களின் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தாயகம் கோரிய உரிமைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இன்று தாயகம் முழுவதும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது..

அந்த வகையில் மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்று திரண்ட மக்கள் சுடரேற்றி உணர்வுபூர்வமாக தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்..

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின் மாவீரர்களின் உறவுகள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.இதன் போது மாவீரர்களின் உறவுகள் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரதி நிதிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.





**ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம்**

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு.மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வு பூர்வமாக மாவீரர் நினைவு நாள் இன்றைய நாள் திங்கட்கிழமை (27) மாலை நினைவு கூறப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்திற்காக உயிர் நீத்த உறவுகளை நினைவு கூறும் வகையில் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாள் வருடா வருடம் நினைவு கூறப்பட்டு வருகிறது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை (27) மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைக்காக தனது மகனை கரும்புலியாக வழங்கிய தந்தை பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.



**திருகோணமலை சம்பூர் ஆலங்குளம் துயிலும் இல்லம்**

திருகோணமலை மாவட்டம் சம்பூர் ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் பொலிஸாரால் தடுக்கப்பட்ட நிலையில், சம்பூர் பத்திரகாளி கோவில் முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டது.





**வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம்**

யாழ் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழிச்சியோடு மக்கள் தங்கள் மாவீரர்களை நினைவேந்தினர்.






**வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்**

வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்




**முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம்**

முள்ளியவளை துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வெளிச்சியோடு கடைப்பிடிக்கப்பட்டது.







**கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம்**

கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல பொதுச்சுடர் மாவீரர்க ளான லெப்டினன்ட் கணேஸ், லெப்டினன்ட் தினேஸ், மேஜர் தேன்மொழி ஆகிய மூன்று மாவீரர்களின் சகோதரியும் தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்களின் புதல்வியுமான திருமதி. அனந்தி நற்குணம் அவர்கள் ஏற்றி வைத்தார் அலைகடலென திரண்ட மக்கள் விழி நீரால் பிரகாசித்த சுடர்கள். விவரிக்க முடியாத உணர்வு. கனகபுரம் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வெளிச்சியோடு கடைப்பிடிக்கப்பட்டது.

**இலட்சியத்தால் ஒன்று பட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-






**முதல் மாவீரர் லெப். சங்கர் நினைவிடத்தில்**

வல்வெட்டித்துறை கம்பர் மலையில் உள்ள முதலாவது மாவீரர் லெப்.சங்கர் நினைவாலையத்தில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

ஏற்கனவே பருத்தித்துறை,நெல்லியடி பொலிஷார் மாவீரர் தினத்திற்கு தடை கோரி தாக்கல் செய்த மனு தமிழ் சட்டத்தரணிகளின் போராட்டத்தில் பருத்தித்துறை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





**துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்**

முல்லைத்தீவு துணுக்காய் ஆலங்குளம் துயிலம் இல்லத்தில் மாவீரர் தாயினால் பெரும் சுடர் ஏற்றப்பட்டது.






**யாழ். இந்துக்கல்லூரி**

“எம் மாவீரர்களின் தியாக வரலாறு வீண்போக கூடாது. ஆகவே விழித்தெழு இளம் தலைமுறையே... போதை வஸ்துக்களில் இருந்தும், வன்முறை சமூகத்தில் இருந் தும் விழித்தெழுந்து, அறிவாயுதத்தை பயன்படுத்து” என பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள சுற்றுவட்ட பாதையில் " மாவீரர் நாள் என பதாகை கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடியுடன் மேலும் சில பதாகைகள் வைக்கப்








**தேராவில் மாவீரர் துயிலும் இல்லம்**

அலைகடலென திரண்ட மக்கள் விழி நீரால் பிரகாசித்த சுடர்கள். விவரிக்க முடியாத உணர்வு. கனகபுரம் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் உணர்வெளிச்சியோடு கடைப்பிடிக்கப்பட்டது.





**அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம்**

அளம்பில் துயிலுமில்லத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்






**முல்லை. இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம்**

பேரெழுச்சி கொண்டது இரணைப்பாலை மாவீரர்

நிகழ்வுகள்

முல்லைத்தீவு இரணைப்பாலை துயிமில்லத்தில்

பேரெழுச்சிகொண்ட மக்கள்ளுடன்.





**மணலாறு கோடாலிக்கல் மாவீரர் துயிலும் இல்லம்**

முல்லை - மணலாறு கோடாலிக்கல் துயிலுமில்லத்தில்

பேரெழுச்சி கொண்டது மாவீரர் நிகழ்வுகள்.





**நல்லூர் மாவீரர் நினைவாலையத்தில்**

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட

மாவீரர் நினைவாலையம் முன்றலில் நடைபெற்ற நினைவேந்தல் நிகள்வில்

ஆயிரக்கணக்கான மக்கள் மாவீரர்களுக்கு தமது வணக்கங்களை செலுத்தினர்.





**திருமலை மூதூர் கட்டபறிச்சான் பாலத்தில் வணக்க நிகழ்வு**

திருமலையின் சம்பூர் மாவீரர் துயிலுமில்லத்திற்கு வணக்கம் செலுத்த சென்ற மக்கள் கட்டைபறிச்சான்

பாலத்திற்கு அப்பால் பயணிக்க இன்று அனுமதிக்கபட வில்லை. இந்நிலையில் பாலத்திற்கு முன்னால் அனுமதி மறுக்கப்பட்ட உறவுகளின் நினைவேந்தல் துயிலுமில் லத்தை நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இறுதி யுத்தத்தின் முன்னராக விடுதலைப்புலிகளது கட்டுப் பாட்டிலிருந்த சம்பூர் பகுதியில் மாவீரர் துயிலுமில்லம் பேணப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.





**அம்பாறை கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலுமில்லம்**

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லம் முன்பாக பொலிஸாரின் கெடுபிடி மத்தியில் சுடரேற்றி வணக்கம்

செலுத்தினர்.





**கிழக்குப் பல்கலைக்கழகத்தில்**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் சுடரேற்றி வணக்கம் செலுத்தப்

பட்டுள்ளது.





**ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில்**

மாவீரர் நாளான்று அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்திலேயே ஈகை சுடரேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன், வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி வணக்கம் செலுத்தினர்.





**முதல் மாவீரர் லெப். சங்கர் இல்லத்தில்**

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் மாவீரர் லெப்டினன்ட் சங்கர் என அழைக்கப்படும் செல்வச்சந்திரன் சத்திய நாதனுக்கு, ஈகைச்சுடரேற்றி வணக்கம் செலுத்தப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள சங்கரின் பூர்வீக இல்லத்திற்கு முன்பாக ஈகை சுடரேற்றி வணக்கம் செலுத்தப் பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அக வணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.




**வவுனியா பல்கலைக்கழகத்தில்**

வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் சுடரேற்றி வணக்கம் செலுத்தப் பட்டுள்ளது.








**யாழ். பல்கலைக்கழக மாவீரர் நினைவாலையத்தில்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலையம் முன்றலில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பல நூற்றுக்கணக்கில் மாணவர்கள்மாவீரர்களுக்கு தமது வணக்கங்களை செலுத்தினர்.



**ஒரு விடுதலை வீரனின் சாவு,**
**ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல**
**அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு,**
**ஓர் உன்னத இலட்சியம் உயிர்பெறும்**
**அற்புதமான நிகழ்வு.**
**உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை,**
**அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு**
**என்றுமே அணைந்து விடுவதில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழ விடுதலைக்கு முரசறைந்த கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்!

நவம்பர் 27, 2023

அலைகடலென ஆர்ப்பரித்த மக்கள் வெள்ளத்தில் கனக புரம் மாவீரர் துயிலுமில்லம் விழிநீரால் நனைந்த செங்குருதி நிலமாகியது.

ஆயிரமாயிரம் வீரத்தின் வித்துக்களால் செழித்த விளை நிலத்தில் ஒன்று சேரக்கூடி தமிழர் தம் ஆதர்ச புரசர் களாகிய வீரகாவிய நாயகர்களான மான மாவீரர்களிற்கு அஞ்சலி செலுத்தியது.

2008ற்கு முன்னர் எப்படி தமிழர் தாயகத்தில் தம் இதயக் கோயில்களான மாவீரர் தெய்வங்களுக்கு அஞ்சலி செலுத்தியதோ அதுபோலவே ஒன்று கூடி மக்கள் வணக்க வழிபாடுகளை மேற்கொண்டனர் அதுமட்டுமன்றி நிகழ்வு திறன்பட மாவீரர் பணிக்குழுவினால் மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மக்கள் உணர்வெழிச்சியுடன் பங்கு பற்றுதலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல நிகழ்ச்சி ஒழுங்கமைப் பில் எவ்வித ஆச்சரியமுமில்லை ஏனெனில் கிளிநொச்சி தமிழரசு தலைமையின் அடையாளப் பண்புகளில் இதுவும் ஒன்றே எனக்கூற வேண்டும். மாவட்ட தலைமை இளைஞர்களிடம் (பணிக்குழு) பொறுப்புக்களை முறை யாக வழங்கி வழிநடத்தி முடித்திருக்கின்றது என்றே கூறவேண்டும். கிளிநொச்சி மண் தனது இனமான வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதில் வெற்றியும் கண்டுள்ளது என்பதை இவ் மக்கள் திரட்சி உணர்வு பூர்வமான எழுச்சி பறைசாற்றி நிற்கின்றது.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் எங்கும் எத் திசையிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்பு துயிலுமில்ல வளாகம் எங்கும் காண முடிந்தது இத்திரட்சி தமிழ் தேசியம் மீது எம் மக்கள் கொண்ட பற்று உருதியையே எடுத்துக்காட்டுகின்றது.



துயிலும் இல்ல மக்கள் எழுச்சியானது மக்கள் என்றும் எப்போதும் உணர்வு ரீதியாக ஒன்று படுவார்கள் என்ற செய்தியை உலகத்திற்கு பறைசாற்றி நிற்கிறார்கள் எவ்வெழுச்சி காலத்தின் கட்டாயம் சிங்கள தேசத்திற்கு தம் எண்ணக்கிடக்கையை தமிழர் தேசமெங்கும் பொங்கு தமிழ் போல் திரண்டெழுந்து ஒன்று கூடி புஜித்து அஞ்சலி செலுத்தி சொல்லியிருக்கிறது வரலாற்று மரபுவழி தொடர்கிறது




















# தேசியத் தலைவரின் மகளா? இல்லையா? காலமே தீர்மானிக்கும்

## 2023 நவம்பர் 27 அவர் ஆற்றிய மாவீரர் நாள் உரை

நவம்பர் 27, 2023

எனது அன்புக்கும், மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

தமிழீழம் என்ற அதியுன்னத இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த எமது காவல் தெய்வங்களை எமது இதயக் கோவில்களில் நாம் பூசிக்கும் இத் திருநாளில் உங்கள் முன் வெளிப்படுவதற்குக் காலம் எனக்கு வாய்ப்பு அளித்திருப்பதை மிகப்பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

இப்படி ஒரு சந்தர்ப்பம் எனது வாழ்நாளில் ஏற்படும் என்று நான் நினைத்திருக்கவில்லை. எத்தனையே ஆபத்துகள், நெருக்கடிகள், சவால்கள், துரோகங்களைக் கடந்தே இன்று உங்கள் முன் நான் வெளிப்படுகின்றேன். அதே போல் என்றோ ஒரு நாள் தமிழீழத் தாயகம் திரும்பி, அங்கு எமதுமக்களோடு கூட இருந்து அவர்களுக்காகப் பணிசெய்வதற்குக் காலம் வாய்ப்பளிக்கும் என்ற அசையாதநம்பிக்கை எனக்கு உண்டு.

எனது அன்பார்ந்த மக்களே,

முழு உலகமுமே வியப்படையும் வகையில் களமுனைகளில்சாதனை படைத்தவர்கள் எமது மாவீரர்கள். தனித்து நின்று எம்மோடு போர் புரியத் திராணியற்ற சிங்கள அரசு, சக்திவாய்ந்த நாடுகளைத் தன் பக்கம் வளைத்தது. தோல்வியின் விளிம்பில் நின்ற தருணங்களில் எல்லாம் அந்நியசக்திகளிடமும், சக்திவாய்ந்த நாடுகளிடமும் மண்டியிட்டுயாசகம் புரிந்தது. எமது தேச சுதந்திர இயக்கத்தின் மீது உலகின் பல நாடுகளில் தடைகள் விதிக்கப்பட்டு எமது வளங்கள் முடக்கப்பட்டன. தமிழீழ தாயகத்திற்கான விநியோகப் பாதைகள் மூடப்பட்டன. சிங்களப் படை இயந்திரத்தை எமது தேச சுதந்திர இயக்கம் பலவீனப் படுத்திய ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சக்திவாய்ந்த நாடுகள் தலையிட்டு சிங்களப் படை இயந்திரத்திற்கு உயிர்ப்பூட்டின. உலகின் ஒரு மூலையில்தனித்து நின்று, எமது மக்களின் ஆதரவில் மட்டும் தங்கிநின்று போராடிய எமது தேச விடுதலை இயக்கத்தின் ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப் போனதற்குஇதுவே காரணமாகும்.

ஆனாலும் அரசியல் சுதந்திரத்திற்கான எமது போராட்டம் முற்றுப் பெறவில்லை. தமிழீழம் என்ற அரசியல் வேணவாகருக் கொள்வதற்குக் காரணமாக இருந்த புறநிலை சூழல்கள் இன்றும் கூட அப்படியே தான் இருக்கின்றன. தமது தாயக பூமியில் தமது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையோ, தத்தமது சமய வாழ்வையோ, மொழிப் பாதுகாப்பையோ பேணிப் பாதுகாக்க முடியாத அளவிற்குப் பண்பாட்டுச் சீர்கேடுகளை ஊக்குவித்து, கல்வி, வேலை வாய்ப்புகளில் பாகுபாடுகளை மேற்கொள்வதோடு, சிங்கள - பௌத்த மயப்படுத்தல் நடவடிக்கைகளை சிங்கள அரசு முழு மூச்சுடன் முன்னெடுத்து வருகிறது.

இவை போதாதென்று ஈழத்தீவில் முற்று முழுதாகச் சிங்களப்படையாட்சிக்கு உட்பட்ட ஒரேயொரு மாநிலமாகத் தமிழீழ தாயகத்தைச் சிங்களம் மாற்றியமைத்துள்ளது. அனைத்து சுதந்திரங்களும், மனித உரிமைகளும் மறுக்கப்பட்டதேசமாகத் தமிழீழத் தேசம் திகழ்கின்றது. சட்ட ஆட்சிமறுக்கப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசர காலச்சட்டம் என எந்நேரமும் இராணுவப் பேயாட்சியைச் சிங்களம் திணித்துள்ளது. குரல்வளை நசுக்கப்பட்ட ஒரு மக்களாகவே ஈழத்தீவில் எமது மக்கள் வாழ்கிறார்கள்.

மறுபுறத்தில் எமது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தால், அரசியல் வழிகளில் எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றலாம் எனப் போர் நிகழ்ந்த காலப்பகுதியில் ஆசைவார்த்தை கூறி, நம்பிக்கையூட்டிய உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் இற்றை வரைக்கும் எமது மக்களுக்கு ஒரு காத்திரமான அரசியல் தீர்வைத் தானும் வழங்கவில்லை. ஈழத்தீவில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டது போர்க் குற்றம் என்றும், மானிடத்திற்கு எதிரான குற்றச் செயல் என்றும் கடந்த பதினான்கு ஆண்டுகளில் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்ட ஐ.நா. மன்றமும், இவை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றிய சக்தி வாய்ந்தநாடுகளும், இனவழிப்பிற்கு ஆளாக்கப்பட்ட தமிழீழத்தேசத்திற்கு இற்றை வரைக்கும் ஒரு பரிகார நீதியைத்தானும் பெற்றுத் தரவில்லை.

இவை தான் அரசியல் சுதந்திரத்திற்கான எமது போராட்டம் தொடர்ந்தும் உயிர்ப்புடன் இருப்பதற்கான காரணிகளாகும். சமஸ்டி அரசு கோரி 1950களில் எழுச்சி கொண்ட எமதுதேசத்தின் அகிம்சைப் போராட்டம், 1960களில் ஆயுத வலுக்கொண்டு சிங்கள அரசால் நசுக்கப்பட்டது. இதன் விளைவாகவே 1970களில் போர்க் குணம் கொண்ட இளையதலைமுறை தோற்றம் பெற்றது. சிங்கள ஆயுதப்படைகளையும், அதன் ஒடுக்குமுறை அரச இயந்திரத்தையும் எதிர்த்து வீரம் செறிந்த ஆயுதப் போராட்டத்தை எமது இளைஞர்கள் நிகழ்த்தினார்கள். எமது தேசியத் தலைவரும் எனது தந்தையுமாகிய மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிநடத்தலில் ஆயிரமாயிரமாய் அணிதிரண்ட எமது இளைஞர்களும், யுவதிகளும் ஈழத்தமிழினம் ஓர் வீறுகொண்ட, மண்டியிடாத வேங்கையினம் என்பதை நிறுவினார்கள். இந்த நிலையை உருவாக்கித் தந்தவர்கள் தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களே. மாவீரர்கள் என்றும் காலத்தால் அழியாதவர்கள். அந்த மகத்தான, உன்னதமானவர்களை என்றும் எம்மனக் கோவிலில் வைத்துப் பூசிப்போம்.

எமது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்திருந்தாலும், எமது சுதந்திரத்திற்கான, எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் போராட்டம் உயிர்ப்போடு இருப்பதற்கு, எமது தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் எமது மக்களும், அரசியல் தலைவர்களும், எமது தேச விடுதலை இயக்கத்தில் பணிபுரிந்தபோராளிகளும், செயற்பாட்டாளர்களுமே காரணம் என்பேன். சுதந்திரத்திற்கான போராட்டம் முனைப்புடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறான யதார்த்த சூழமைவில் மக்கள் என்றும், புலிகள் என்றும் ஈழத் தமிழர்களை வேறுபடுத்திப் பார்ப்பது அர்த்தமற்றது. மக்களே புலிகளாகவும், புலிகளே மக்களாகவும் விளங்கும்யதார்த்தம் எமது போராட்டத்தின் பரிமாணமாகும்.

ஆனாலும் எமது அரசியல் போராட்டத்தை மேலும் வினைத்திறனுடன் முன்னெடுத்து, எமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். கட்சி பேதங்கள், அமைப்புகளுக்கிடையேநிலவும் வேறுபாடுகளைக் கடந்து தமிழீழ தேசத்தின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகவும், இனவழிப்பிற்கு ஆளாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதிகிட்டுவதற்காகவும் ஒற்றுமையோடும், வினைத் திறனோடும் பயணிக்க வேண்டிய கடப்பாடு தாயகத்திலும், புலம்பெயர்தேசங்களிலும் வாழும் ஒவ்வொரு ஈழத்தமிழர்களுக்கும் உண்டு. கருத்து வேறுபாடுகள் எமக்கிடையே நிலவலாம். ஆனாலும் வேற்றுமையிலும் ஒற்றுமை என்பதே தேசத்தின் அரசியல் உரிமைகள் என்று வரும் போது ஒரே கோட்டின் கீழ்பயணிக்க வேண்டியவர்களாக நாம் எல்லோரும்இருக்கின்றோம்.

அதே நேரத்தில் தாயகத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எமது மக்களினதும், கடந்த காலங்களில் தம்மையே அர்ப்பணித்துப் போராடிய முன்னாள் போராளிகளினதும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி, அவர்களின் பொருண்மிய வாழ்வை மேம்படுத்த வேண்டிய கடப்பாட்டைக்கொண்டவர்களாக எமது தேசத்தின் வளம் கொண்டதரப்பினர் இருக்கின்றார்கள். குறிப்பாக இதற்கானபொறுப்பு புலம்பெயர் தேசங்களில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு உண்டு. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எம் இன உறவுகள் அனைவரையும் பொறுப்பேற்று உதவி புரிந்தால் அந்நியர்களிடம் எமது தேசம் கையேந்தி நிற்கும்நிலை ஏற்படாது.

இத்தனை ஆண்டுகளாக எமக்காகத் தொடர்ச்சியாகக் குரலெழுப்பி, பக்கபலமாகத் திகழும் தாய்த் தமிழக உறவுகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், உலகத் தமிழ் மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது இனம் கடந்து இந்தியாவிலும் மற்றும் உலகநாடுகள் எங்கும் எமக்காகக் குரல் கொடுத்து துணை நிற்கும் உறவுகளின் கரங்களையும் வாஞ்சையோடு பற்றிக்கொள்கிறேன். தமிழீழ தேசத்திற்குப் பக்கபலமாகத் திகழும் தாய்த் தமிழக உறவுகளும், உலகத் தமிழர்களும் எமது மக்களுக்கு உறுதுணையாக நின்று, எமது மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தொடர்ந்தும் நீங்கள் குரல் கொடுப்பீர்கள் என்று எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

எனது அன்பார்ந்த மக்களே,

நாம் வரித்துக் கொண்ட இலட்சியமும், இதற்காக எமது மாவீரர்கள் கொடுத்த விலையும், எமது தேசம் புரிந்த




ஈகங்களும், சந்தித்த இழப்புகளும் அளப்பரியவை. இவை ஒரு நாளும் வீண்போகாது. நெருக்கடி மிகுந்த காலங்களில் எல்லாம் எமக்குத் தூண்களாக நின்றவர்கள் எமது மக்களாகிய நீங்களே. இலட்சியத்தால் ஒன்று பட்ட மக்களாக எமது விடுதலையை வென்றெடுக்க ஒன்று சேர வேண்டுமென்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றேன்.

மாற்றம் கண்டுள்ள உலக ஒழுங்கிற்கு ஏற்ப, அரசியல் வழியில், அறநெறி நின்று நாம் தொடர்ந்தும் போராடுவோம். எல்லா வகையான போராட்டங்களிலும் அரசியல் போராட்டம் மிகவும் கடினமானது. இவ் வகையான போராட்டத்திற்குப் பொறுமையும், நம்பிக்கையும், இலட்சிய உறுதியும் அடிப்படையானது. இதனை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை.

தமிழீழத் தனியரசே எமது தேசத்தின் இறைமையையும், தன்னாட்சி உரிமையையும் உறுதி செய்யும் என்பது எனது அசையாத நம்பிக்கை. இதுவே எமது தேசியத் தலைவரின் நிலைப்பாடும் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். எமது மக்கள் தமது தாயக பூமியில் அவர்களது மொழியையும், பண்பாட்டையும், தத்தமது சமய வாழ்வையும், பொருண்மிய வளங்களையும் பேணிப் பாதுகாத்து, மேம்படுத்தக் கூடியவகையிலும், சனநாயக விழுமியங்களுக்கு இசைவாகவும், தனிமனித சுதந்திரத்தையும், மனித உரிமைகளையும் பேணக் கூடிய விதத்திலும், சட்ட ஆட்சி கொண்டமக்களாட்சியாகத் “தமிழீழம்” என்ற தனியரசு அமைவதற்கான புறச்சூழலை காலம் ஒரு நாள் கட்டவிழ்க்கும் என்ற திடமான நம்பிக்கை எனக்கு உண்டு.

அதேநேரத்தில் தமிழீழ தாயகத்தில், தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஒரு தேசமாகத் தமிழீழ மக்கள் வாழ்வதற்குவழிசமைக்கக் கூடிய வகையில் உலகம் முன்வைக்கக்கூடிய அரசியல் தீர்வுகளைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு எமது தேசம் தயாராக இருக்க வேண்டும் என்பதை நான் உணராமல் இல்லை.

சிங்கள மக்களுக்கும் இந்நேரத்தில் ஒரு விடயத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் சிங்கள மக்களுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்ல. நீங்கள் எங்களுக்கு எதிரிகளும் அல்ல. சிங்கள மக்களுக்கு எதிராக நாம் செயற்பட்டதுமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். சிங்கள இனவெறிகொண்ட அரசு இயந்திரத்தாலும் சுயநலம் கொண்ட சிங்கள அரசியல் வாதிகளினாலும் திட்டமிட்டவகையில் பொய்யான கருத்துக்கள் விதைக்கப்பட்டு அப்பாவிச் சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்களாகத் தூண்டிவிடப்பட்டார்கள் என்பதையும் நான் அறிவேன். எனவே எம்மினத்தின் தார் மீகஉரிமைகளையும் எமது மக்களின் உணர்வுகளையும், எமது அறத்தின்பாற்பட்ட போராட்டத்தையும் ஏற்றுக்கொள்வீர்கள்என்று நம்புகிறேன்.

எனது அன்பார்ந்த மக்களே,

எமது தேசியத் தலைவர் குறிப்பிட்டது போன்று “எமது பாதைகள் மாறலாம், ஆனால் ஒரு போதும் எமது இலட்சியம்மாறப் போவதில்லை.” சத்தியத்தின் சாட்சியாக நின்று எமது மாவீரர்களின் தியாகமும், மாண்டு போன மக்களின் ஈகங்களும் எமது தேசத்திற்கு வழிகாட்டும். அந்தச்சத்தியத்தின் வழியில் சென்று, என்றோ ஒரு நாள் நாம் எமது இலட்சியத்தை அடைந்தே தீருவோம்.

”புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

நன்றி: தமிழ் ஒளி இணையம்

**உண்மைகள் உறங்காது!**

# தமிழர்களின் உரிமைகளை சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் மீறிவருகின்றது!

## நீதிக்கான சர்வதேச திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா

நவம்பர் 27, 2023

மாவீரர் தினநிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களை அரசதரப்பினர் படமெடுப்பதை தடுப்பதற்காக சர்வதேச சமூகம் தனது கண்காணிப்பாளர்களை அந்த பகுதிக்கு அனுப்பவேண்டும் என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

2009 மே மாதம் முடிவிற்கு வந்த உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிற்கு காரணமானவர்களை எந்த வகை பொறுப்புக்கூறலிற்கும் உட்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துள்ளமை இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை ஆழமாக்கியுள்ளது.

யுத்தம் முடிவிற்கு வந்திருக்கலாம் ஆனால் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தமிழர்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவது தொடர்கின்றது.

பாதுகாப்பு படையினர் தொடர்ந்தும் இழைத்துவரும் வன்முறைகள் தனிநபர்களையும் குடும்பங்களையும் பாதிப்பதுடன் மாத்திரமல்லாமல் கூட்டுசகவாழ் நம்பிக்கை பாரம்பரியம் போன்றன கட்டி எழுப்பப்படும் சமூககட்டுமானத்தையும் அழிக்கின்றது.

விடுதலைக்கான தமிழர்களின் போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான குடும்பங்களின் நியாயபூர்வமான உரிமைகளை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மீறிவருகின்றது.

2014ம் ஆண்டு முதல் பலவருடங்களாக எனது அமைப்பு இலங்கையில் சித்திரவதைகளுக்கு உள்ளாகி அங்கிருந்து தப்பியோடியவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளது - இதன் போது அவர்கள் நினைவேந்தலில் கலந்துகொண்டவேளை அவர்களை படமெடுத்த இலங்கையின் புலனாய்வு பிரிவினர் பின்னர் அவர்களிற்கு வீடுகளுக்கு சென்று அவர்கள் அச்சுறுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

நாங்கள் சந்தித்த ஒருவர் 2022 நவம்பர் ஏழாம் திகதி வட பகுதியில் மயானத்தில் உரையாற்றியுள்ளார்- புதிய ஜனாதிபதி அவ்வாறான நிகழ்வுகளிற்கு அனுமதியளித்துள்ளதால் அவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்வது பாதுகாப்பானது என அவர் கருதியுள்ளார்,

எனினும் சில நாட்களின் பின்னர் அவரது கருத்துசுதந்திரம் நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றை மீறும் விதத்தில் அவரை கைது செய்து சித்திரவதை செய்துள்ளனர் அவர் தனது புதிதாக பிறந்த குழந்தையையும் வளர்ச்சியடைந்து வந்த வர்த்தகத்தையும் விட்டு இலங்கையிலிருந்து தப்பிவெளியேறியுள்ளார்.

இவ்வாறான விசாரணைகளின் போது பாதுகாப்பு படையினர் இந்த நினைவுகூரல்களிற்கு யார் வழங்குவது என கேள்வி கேட்கின்றனர் .

நினைவேந்தல்களை ஏற்பாடு செய்வதும் கலந்துகொள்வதும் வெறும் எதிர்ப்பின் செயற்பாடுகள் மட்டுமல்ல இந்த பயங்கரமான போரில் தப்பிய அனைவராலும் உணரப்பட்ட மிக ஆழமான தனிப்பட்ட துரயத்தின் வெளிப்பாடுகள் ஆகும்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வன்முறைக்கு பலியானவர்களின் குடும்பத்தவர்களும் வன்முறைக்கு பலியானவர்களே மேலும் அவர்கள் காணாமல்போதல் சித்திரவதை அல்லது தங்கள் அன்புக்குரியவர்களின் இழப்பு போன்றவற்றை அனுபவித்தவர்கள்.

அவர்கள் உயிர்பிழைத்துள்ள போதிலும் தண்டனையின்மை மற்றும் குற்ற உணர்ச்சியின் பெரும் தடையை எதிர்கொள்கின்றனர்.

உயிர்பிழைத்தவர்கள் உண்மை மற்றும் நீதிக்கான அவர்களது போராட்டத்தில் இறந்தவர்களையும் காணாமல்போனவர்களையும் தொடர்ந்தும் நினைவுகூருவது ஒரு தார்மீக மற்றும் சமூக பொறுப்பு என கருதுகின்றனர்.

நவம்பர் 27 ம் திகதி குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களை இழந்தவர்கள் மாத்திரம் அவர்களை நினைவுகூறுவதில்லை, மாறாக முழுசமூகமும் தியாகத்தையும் கூட்டுதுயரத்தையும் நினைவுகூருகின்றது.

பல ஆண்டுகளாக வெளிநாடுகளில் தப்பிப்பிழைத்த தமிழர்களின் குழுக்கள் இறந்தவர்களை தனிப்பட்ட மற்றும் பொது இடங்களில் நினைவுகூரும் உரிமையை மீட்டெடுப்பதை நாம் காண்கிறோம். செயல்பாட்டில் அவர்கள் உயிர்வாழ்வது மற்றும் சாட்சியமளிப்பதன் அர்த்தம் என்ன என்று போராடுகிறார்கள். வருங்கால சந்ததியினருக்கு நினைவாற்றலை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக அவர்கள் தங்கள் தனிப்பட்ட துன்பங்களை மட்டுமல்ல தங்கள் சமூகங்களின் துன்பங்களையும் வெளிப்படுத்த புதிய வழிகளைக் காண்கிறார்கள்.

எந்த அடக்குமுறையும் நினைவுகூறுவதற்கான மக்களின் தேவையை தடுத்து நிறுத்தப்போவதில்லை ,குறிப்பாக அது உங்களின் குழந்தை அல்லது பெற்றோருக்கானதாகயிருந்தால்.



சித்திரவதையிலிருந்து உயிர்தப்பிய ஒருவர் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை தானும் தனது நண்பர்களும் நவம்பர் 27 ம் திகதி மெழுகுதிரியை ஏற்றுவதற்காக அதிகாலையில் எழுந்ததை நினைகூர்ந்திருந்தார்.

சிறைப்பாதுகாவலர்கள் பழிவாங்குவார்கள் என தெரிந்திருந்தும் அவர்கள் அதனை செய்தனர்.

அவர்களுக்கு உள்ள இறுதிகௌரவம் அதுவே அது மிகவும் பெருமதியானது.

போரிலிருந்து உயிர்பிழைத்தவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும்போது துக்கத்தை வெளிப்படுத்தி காயங்களை ஆற்ற முடியாத நிலையில் காணப்படுகின்ற சூழலில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க உண்மையை கண்டறியும் ஆணைகுழுவை நிறுவது பற்றி பேசுகின்றார்.

உயிர்பிழைத்தவர்கள் அந்த ஆணைக்குழுவிடம் சென்று சாட்சியமளிக்கப்போவதில்லை.

உண்மை ஆணைக்குழு நம்பிக்கை மிக்கதாக காணப்படவேண்டும் வெற்றியளிக்கவேண்டும் என்றால் ஜனாதிபதி அரசவன்முறைகள் முடிவிற்கு வரும் என்பதையும் நவம்பர் 27 ம் திகதி நிகழ்வுகள் கண்காணிக்கப்படாது என்பதையும் அதில் கலந்துகொள்பவர்கள் அவற்றை ஏற்பாடு செய்தவர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள் என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

இந்த ஒடுக்குமுறைகள் இடம்பெறுகின்ற வேளை சர்வதேச சமூகம் அமைதியாகயிருக்ககூடாது சீருடை அணியாதவர்கள் படங்களை எடுப்பதை உறுதி செய்வதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்பவேண்டும் எனஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

# குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் துரைராசா ரவிகரன் ஒரு மணி நேர விசாரணை!

நவம்பர் 27, 2023

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வீரசிங்கம் ஆகிய இருவரிடமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) முல்லைத்தீவு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரட்டை வாய்க்கால் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையில் கார்த்திகை பூ இருப்பதாகவும், மாவீரர் நாள் என்ற சொற்பதம் இருப்பதாகவும் அதனை அகற்ற வேண்டும் எனவும் பொலிஸார் அவ்விடத்திற்கு சென்று முரண்பட்டிருந்தனர்.



அதனையடுத்து மக்களும், ஏற்பாட்டுக் குழுவினருமாக அதனை அகற்ற முடியாதெனவும் அதற்கான விளக்கத்தையும் கூறியிருந்தோம். இதனையடுத்தே குறித்த விசாரணை இடம் பெற்றுள்ளது.

குறித்த விசாரணை தொடர்பாக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து ஒரு மணித்தியாலமாக விசாரணைகளை மேற்கொண்டு இருந்தனர்.

அவ் விசாரணையில் இரட்டை வாய்க்கால் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட கார்த்திகை பூ மற்றும் மாவீரர் நாள் என எழுதப்பட்டது தொடர்பாகவே வாக்கு மூலம் பெறப்பட் டிருந்தது.

நாம் நீதிமன்ற கட்டளைகளை மீறவில்லை இனியும் மீற மாட்டோம். நவம்பர் 27 எழுச்சியாக இடம்பெற இருக்கும் நாளினை பொலிஸார் திட்டமிட்டு குழப்ப வேண்டும் என ஈற்றிலே விசாரணைக்கும் அழைத்து தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால் நாங்களும் எமது உரிமையை , நினைவு நாளினை நினைவு கூருவோம். தேவிபுரம், மாத்தளன், அளம்பில், முள்ளியவளை, முல்லைத்தீவு கடற்கரை, முள்ளிவாய்க்கால் போன்ற பல பகுதிகளில் குழப்ப நிலை ஏற்படுத்தப்பட்டது.




அத்தோடு மஞ்சள், சிவப்பு கொடிகளையே கட்ட வேண்டாம் என்ற நிலை தான் காணப்பட்டது. பொலிஸார் தாங்கள் நினைத்தது போல் , தங்களுக்கு ஏற்றால் போல் குழப்ப வேண்டும் என்ற நோக்கத்திலே செயற்படுகிறார்கள்.

முன் நின்று செய்பவர்களை பொலிஸ் நிலையம் அழைப்பதும் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதும் இடையூறுகள் ஏற்படுத்துவதுமே இவர்களது நோக்கமாகும்.

குழப்பநிலை எவ்வாறு இடம்பெற்றாலும் இறந்தவர்களது நாளினை நினைவு கூருவோம்.

அத்தோடு எமக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை (27) காலை நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# அடக்கு முறைக்கு எதிராக மக்கள் வீறு கொண்டு எழுவார்கள்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

நவம்பர் 27, 2023

இந்த சிங்கள தேசத்தின் அடக்கு முறைக்கு எதிராக தான் ஆயுத போராட்டம் தொடங்கியது. இந்த அடக்குமுறை நெருக் குதல்களை கொடுக்கின்ற போது அடக்கு முறைக்கு எதிராக மக்கள் வீறு கொண்டு எழுவார்கள். இப்போது போர் துப்பாக்கி சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் சூழலில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே மண்ணுக்காக உயிர்தியாகம் செய்கின்ற அத்தனை பேருக்கும் நாங்கள் செய்கின்ற கைமாறு அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) ரோலே கட்சியின் 11 தேசிய மாநாடு தொடர்பில் கட்சி உறுப்பினரளுக் கிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அடக்குமுறை தொடர்ச்சிய இருந்துவருகின்றது. இப்போது எங்களுடைய மக்கள் பட்டினிசாவை எதிர் நோக்கியுள்ள சூழலிலே இப்போது நடைபெறுகின்ற நிலங்களாக இருக்கட்டும் இப்படி ஒட்டுமொத்த பல திணைக்களங்களை வைத்துக் கொண்டு எங்களுடை தேசத்தில் புத்தகோயில்களை கட்டுவதும் பறவைகள் சரணாலயம் அமைக்க நிலங்களை அபகரிப்பதும் இடம்பெறுகிறது.

தென்னிலங்கையில் இருந்து எங்கள் பகுதியிலுள்ள கடலிலே வருகின்ற மீனவர்கள் சட்டத்துக்கு புறம்பான வலைகளை கொண்டுவந்து மிக மோசமான செயல்பாடுகளை செய்து வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் எங்க ளுடைய பிரதேசம் பறி போகின்றது.

அடக்குமுறை என்பது நாங்கள் எதிர்பார்த்தது. அந்தவகையில் எங்களுடைய மக்கள் நிச்சயமாக கிழர்ந்தெழுவார்கள். நகு லேஸ் கைது செய்யப்பட்டார் அவர் செய்த தவறு என்னவென்று பார்க்கின்றபோது மாவீரர் பெற்றோரை கௌரவித்ததுதான் அவர் செய்த தவறு. பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவரை கைது செய்தது ஏற்று கொள்ள முடியாது இதனை கண்டிக் கின்றோம்.

அந்த அடிப்படையில் இன்று நடைபெறுகின்ற மாவீரர் தின நினைவேந்தல் பயங்கரவாத தடைச்சட்டத்தில் அடக்க நினைக் கின்றனர் நாங்கள் இதை எதிர்பார்க்கவேண்டும். ஆனால்



பின்நோக்கி போக முடியாது மக்கள் கிழந்தொழுவார்கள் அதற்கான ஆதரவு செயற்பாட்டை நாங்கள் செய்வோம்.

போர் முடிந்துவிட்டது சகல விடையங்களை செய்யமுடியும் என எதிர்பார்க்கமுடியாது. போர் துப்பாக்கி சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் சூழலில் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். ஆகவே இதனை எதிர்பார்த்து எதிர்த்து செயற்படுகின்ற மண்ணுக்காக உயிர்தியாகம் செய்கின்ற அத்தனைபேருக்கும் நாங்கள் செய்கின்ற கைமாறு அவர்களுக்கு அஞ்சலி செலுத் துவது ஆகவே இந்த விடையத்தில் நாங்கள் பின்னோக்கி போக முடியாது என்றார்.

# சம்பூர் நீதிமன்ற தடை விவகாரம்!

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

நவம்பர் 28, 2023

கடந்த ஒரு வாரமாக மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற் றிருந்தன. மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்றைய தினம், 27 ஆம் திகதி, வடக்கு கிழக்கு முழுவதிலும் – தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்துக்காக உயிர்த்தியாகம் செய்த உறவுகளை நினைவு கூர்ந்து வந்திருந்தனர். தாங்களாகவே தங்களது சொந்த செலவில் முயற்சிகளை மேற்கொண்டிருந் தனர். அப்படிப்பட்ட நிலையில் – சிறீலங்கா அரசின் இனவாத போக்கால் அனைத்து துயிலும் இல்லங்களிலும் நினைவேந் தல்களைத் தடைசெய்யவதற்காக – பொலிசார் நீதிமன் றங்களை நாடும் முயற்சிகள் நடைபெற்றிருந்தன. நீதிமன் றங்கள் தடைகளை வழங்கியிருந்தாலும், பின்னர் எங்களது நியாயங்களை பதிவு செய்து அந்தத் தடையை நீக்க நாங்கள் கோரியிருந்த நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன் றங்கள் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களை நினைவுகூராமல் நினைவேந்தலை செய்யமுடியும் என்றே தீர்ப்புகளை வழங்கி யிருந்தது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை சம்பூரில் மட்டும் தான் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனை மீள் பரி சீலனை செய்யுமாறு கோரியிருந்தும் கோரிக்கை நிராகரிக்கப் பட்டிருந்தது. அம்பாறையில் நினைவேந்தலை தடைசெய்யு மாறு கோரியிருந்த பொலிசாரின் கோரிக்கை நிராகரிக்கப் பட்டிருந்தது. மட்டக்களப்பில் தடைசெய்யப்பட்ட அமைப்பையோ அடையாளங்களையோ நினைவு கூரக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க, கிழக்கு மாகாணத்தில் முழுமையாக தடை வழங்கப்பட்டிராதபோதும் பொலிசார் குறித்த நிகழ்வுகளை குழப்பும் வகையிலேயே செயற்பட்டிருந் தனர். பல இடங்களில் துயிலுமில்ல காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு படுமோசமாக அவமதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. அனைத்து துயிலுமில்லங் களிலும் இருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தனியாரின் காணிகளில் தனியாருடைய அனுமதி பெற்று நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் கூட நினைவேந்தல்கள் செய்வதற்கு பொலிசாரால் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த அரச காணிகள் அனைத்தையும் நினைவேந்தல் செய்வதற் குரிய காணிகளாக அங்கீகரித்து அதற்கென ஒதுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை , நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரி யாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூரு கின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந் தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்



குற்றமாகும். ஆகவே – இது தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பி. க்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே அவர்களை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீர்கள்.

இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

# உலகில் தமிழன் இருக்கும் வரை மாவீரர்களின் தியாகம் போற்றப்படும்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

நவம்பர் 27, 2023

உலகில் ஒற்றைத் தமிழன் இருக்கும் வரை மாவீரர்களின் தியாகம் போற்றப்படும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை (27) மாவீரர் தின இறுதிநாள் தொடர்பில் இந்திய மின் இதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவம்பர் 27 மாவீரர் நாள். சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழர்கள் விடுதலை பெற்று தமிழர்களுக்கு என்று ஒரு தேசம் கிடைக்க வேண்டும் என்பதற்காக தங்கள் இன்னு யிர்களை ஆகுதியாக்கிய ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மா வீரர்களை நினைவு கூருவதற்காக தாயகம், தமிழகம் உள் ளிட்ட உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் தயாராகிக் கொண் டிருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசு எப்படியாவது மாவீரர் நாளை திட்டமிட்டு முடக்க வேண்டும் என்பதற்காக மாவீரர் நாள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதில் தனது இனவழிபு காவல்துறையை தீவிரமாக களமிறக் கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து எமது செய்திப் பிரிவுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தின் தலைவர் விஜயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

ஐ.நா.வில் இலங்கை குறித்து 2015 இல் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு தீர்மானத்தை தாம் முழுமையாக நடைமுறைப் படுத்துவதாக ஐ.நா மனித உரிமை ஆணையத்திடம் ஒப்புதல் வழங் கியிருந்தது.

இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறுகால நீதியின் வழியே இழப்பீட்டு உரிமை என்பதற்குள் நினைவேந்தல் உரி மையை ஏற்றுக்கொள்வதாக இலங்கை அரசு ஒப்புக் கொண்டது.

அவ்வாறு இருக்கும்போது தற்போது தமிழ் மக்களின் மாவீரர் நாள் நினைவேந்தல் உரிமையை சிறீலங்கா அரசு நீதிமன் றங்களின் ஊடாகவும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன் னெடுப்பதும் மாவீரர் நாள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதானது சிறீலங்கா அரசு தானே ஒப்புக்கொண்ட ஐ.நா தீர்மானத்தை மீறும் செயலாகும்.

அரசின் இத்தகைய நடவடிக்கையானது அரசு கூறும் நல்லிணக்கத்தை எப்படி புரிந்து கொள்வது என்று மாணவர் களாகிய நாங்களே குழப்பத்தில் இருக்கின்றோம். இலங்கை அரசின் இந்த நடவடிக்கை தமிழர்களை மட்டுமல்ல ஐ.நா



உள்ளிட்ட பன்னாட்டு சமூகத்தையும் ஏமாற்றும் செயலாகும்.

எம்மைப் பொறுத்தவரை இறந்தவர்களை இறைவனுக்கு நிகராக வழிபடும் மரபு வழியில் வந்தவர்கள் நாங்கள் அந்த வகையில் எமது உரிமைகளுக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த ஒவ்வொரு மாவீரர்களையும் உலகில் ஒற்றைத் தமிழன் இருக்கும் வரை நினைவு கூருவான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிங்கள ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களிற்கு நினைவேந்தல்!

நவம்பர் 29, 2023

சிங்கள ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவேந்தல் ஐயன்கன்குளம் பகுதியில் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது





முல்லைத்தீவு துணுக்காய் - ஐயன்கன்குளம் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி சிறீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரினால் நோயாளர் காவு வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்ட 8 பேரின் 16ஆம் ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

இத் தாக்குதலில் ஆறு மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் இருவர் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்தனர். இவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று உயிரிழந்த மாணவ செல்வங்களின் நினைவிடத்தில் இடம்பெற்றது.

நோயாளர் காவுவண்டியில் பாடசாலை சீருடையுடன் பயணித்த மாணவிகளான - "நாகரத்தினம் பிரதீபா (வயது-16), நாகரத்தினம் மதிகரன் (வயது-15), நித்தியானந்தன் நிதர்சனா (வயது-13), கருணாகரன் கௌசிகா (வயது-15), சந்திரசேகரம் டிறோஜா (வயது-16), அற்புதராசா அஜித்நாத் (வயது-17)ஆகிய ஆறு மாணவர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களான சண்முகவடிவேல் சகுந்தலாதேவி (வயது-19), மாரிமுத்து கிருஸ்ணவேணி (வயது-21)" ஆகியோருமாக எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

நினைவு நிகழ்வில் பொது சுடரினை சம்பவத்தில் பலியான மாணவிகளில் தந்தையர் ஏற்றி வைக்க சம நேரத்தில் ஏனைய உறவுகள் சுடரேற்றி வணக்கம் செய்தனர். குறித்த சம்பவத்தில் உயிரிழந்த பிள்ளைகளின் புகைப்படங்களை வைத்து மலர் தூவி அவர்களுக்கான வணக்கம் செலுத்தினர.

# கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 இளைஞர்களின் பெற்றோர் நீதிகோரிப் போராட்டம்!

நவம்பர் 20, 2023

கொழும்பில் கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 11 இளைஞர்களின் பெற்றோர் நேற்று தங்கள் பிள்ளைகளிற்கு நீதிகோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தாய்ஒருவர் கருத்து தெரிவிக்கையில் உயர்நீதிமன்றத்தில் டிரையல் அட்பார் விசாரணை இடம்பெறும்போது தங்களிற்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து சட்டமாஅதிபர் திணைக்களத்தின் அக்கறையின்மை காரணமாக நீதி 15 வருடங்களாக தாமதமாகியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு பதில் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான முன்னாள் கடற்படை தளபதி வசந்தகராணகொடவிற்கு ஆதரவளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் சட்டமா அதிபர் திணைக்களம் இந்த இளைஞர்கள் கடத்தப்பட்டுகாணாமலாக்கப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தது என தெரிவித்துள்ள காணாமலாக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் தாயார் எனினும் கரணாகொடவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொண்டது எனவும் தெரிவித்துள்ளார்.

எங்கள் பிள்ளைகளை யார் கடத்தினார்கள் என்பதற்கான அனைத்து ஆதாரங்களும் எங்களிடம் உள்ளன பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் குறித்த விபரங்கள் கூட எங்களிடம் உள்ளன என குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கமும் சட்டமா அதிபர் திணைக்களமும் எங்களிற்கு நீதிவழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேவிசம்பத் என அழைக்கப்படும் கடற்படை வீரரினால் கப்பத்திற்காக 11 இளைஞர்களும் கடத்தப்பட்டனர் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2008 - 2009 இவர்கள் கொழும்புர் திருகோணமலை கடற்படை முகாமில் வைக்கப்பட்டிருந்தனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

11 இளைஞர்களில் ஐவர் 2008 செப்டம்பர் 17 ம் திகதி கடற்படையினரால் கடத்தப்பட்டனர் - கருப்பு டாட்டா இன்டிகோ வாகனத்தையும் கடற்படையினர் கொண்டுசென்றனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்கள் ராஜீவ்நாகநாதன் பிரதீப் விஸ்வநாதன் முகமட் சஜித் திலகேஸ்வரம் ராமலிங்கம் ஜமால்தீன் திலான் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காணாமல்போன ஏனையவர்கள் கஸ்தூரியராச்சிகே ஜோன்ரீட் அமலன் லியோன் ரொசன் லியோன் அன்டனி கஸ்தூரியாராச்சி கனகராஜா ஜெகநாதன்.

இத்துடன் தகவல் வழங்கியதாக சந்தேகிக்கப்படும் முகமட் அலி அன்வரும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.



# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியின் 2ஆம் கட்டம் நிறுத்தம்!

நவம்பர் 29, 2023

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இருந்து உடற்பாகங்கள் அகழ்தெடுக்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதகாலம் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே முதலாம் கட்டத்தில் 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை (28) வரை 39 மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட ஸ்கான் பரிசோதனை ஊடாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது கொக்கிளாய் முல்லைத்தீவு பிரதான வீதிப்பக்கமாக ஏற்கனவே அகழ்வுக்காக தோண்டப்பட்ட இடத்திலிருந்து மேலதிகமாக ஒன்று தசம் ஏழு மீற்றர் வரை செல்வதாகவும் அகலமாக 3 மீற்றர் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஏற்கனவே அகழப்பட்ட குழியில் இருக்கின்ற உடற்பாகங்கள் அகழ்தெடுக்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் இந்த அகழ்வுப் பணியானது இன்றுடன் இரண்டாம் கட்டம் நிறுத்தப்பட இருக்கின்றது.

மேலதிகமாக இனங்காணப்பட்டுள்ள உடற்பாகங்களை மீட்பதற்காக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதகாலம் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.




இது தொடர்பான மேலதிக விடயங்களை கலந்தாலோசித்து முடிவு எட்டுவதற்காக இம்மாதம் 14 ஆம் திகதிக்கு குறித்த வழக்கு தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அராலி முதல் பொன்னாலை வரையிலான கரையோரத்தை சுவீகரிக்க முயற்சி?

**வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸ்**

நவம்பர் 29, 2023

யாழ்ப்பாணம் - அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதி தொடர்பில் அண்மையில் பொது அமைப்புகளுடன் சங்கானை பிரதேச செயலாளர் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தினார்.

அதன் போது, குறித்த பகுதி மக்கள் அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்வதை ஏற்றுக்கொள்ளவில்லை.

கரையோர பகுதி மக்களின் வாழ்வாதரமே கடற்கரையை நம்பியே காணப்படுகின்றது. மாட்டுவண்டி சவாரித்திடல், சுடுகாடுகள், விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. ஆகவே வன வள பாதுகாப்பு திணைக்களத்தின் முன்மொழிவை முற்றிலும் எதிர்க்கிறேன்.

அதேவேளை குறித்த பகுதியை வன வள பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கினால் விகாரைகள், சிங்கள குடியேற்றம் வரவும் வாய்ப்பு உள்ளது என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.




எனவே யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் குறித்த முன்மொழிவை நிராகரித்து வன வள பாதுகாப்பு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டும். இல்லையேல் இதற்கு எதிராக போராட்டம் நடத்துவோம் – என்றார்.

# யாழில் கூட்டு பலாத்காரத்தின் பின் கொலை செய்யப்பட்ட பெண் தொடர்பான வழக்கின் குற்றவாளிகளான சிங்கள இராணுவத்தினர் விடுதலை!

நவம்பர் 29, 2023

யாழ்ப்பாணத்தில் கூட்டு பலாத்காரத்தின் பின் கொலை செய்யப்பட்ட ரஜினி வேலாயுதம்பிள்ளை என்ற 24 வயது இளம் பெண் தொடர்பான வழக்கின் குற்றவாளிகளான இராணுவத்தினரை விடுதலை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டு இருக்கின்றது

1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி கோண்டாவில் இராணுவ சாவடியில் இந்த பெண்ணை கடத்திய இராணுவத்தினர் கோரமான பலாத்காரத்தின் பின் வீடொன்றின் மலக்குழிக்குள் கொன்று வீசி இருந்தனர்

வெளிநாடு செல்வதற்கு முதல் நாள் மானிப்பாயிலிருந்த சிறிய தாயாரிடம் பிரியாவிடை பெறுவதற்காக சென்று கொண்டு இருந்த போது ரஜினி கடத்தப்பட்டு இருந்தார்

மேஜர் ஜெனரல் ஜனக பெரேராவின் கட்டுப்பாட்டிலிருந்த போது நடந்த மேற்படிசம்பவம் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் எழுந்த கடுமையான அழுத்தங்களையடுத்து 6 இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்



காணாமற்போன உரும்பிராய் யுவதி அழுகிய நிலையில் சடலமாக மீட்பு!

மருத்துவ சோதனைக்காக கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக். 11
கடந்த மாதம் முப்பதாம் திகதி காணாமற் போனதாகக் கருதப்பட்ட ஓர் இளம் பெண்ணின் சடலம், மிகவும் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.
கோண்டாவில் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மலசல... புதைக்கப்பட்டிருந்த சடலமே தற்போது மீட்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.
உரும்பிராயில் வசித்த வெற்றிவேலாயுதம் ரஜனி (வயது 24) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.
அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகவும், மரண... ...சாரால் யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.
சடலம் மிகவும் அழுகிய நிலையில் இருந்தபடியால், இங்கு பிரேத பரிசோதனை செய்யமுடியாது எனக் கருதப்பட்டதால் அது நேற்று மாலையில் கொழும்புக்கு...

ஆனால் கைது செய்யப்பட்டிருந்த இராணுவத்தினருக்கு பாதுகாப்பில்லை என வழக்கை கொழும்புக்கு மாற்றி இருந்தார்கள்

பல்வேறு இழுபறிகளுக்கு பின்னர் 2001ஆம் ஆண்டு சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஜூரியின் உடன்பாட்டின் மூலம் மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது



உரும்பிராய் யுவதி மரணம் தொடர்பாக 5 சிப்பாய்களுக்கு விளக்க மறியல்



கொழும்பு நீதிமன்றில் 6 சிப்பாய்களும் ஆஜர்

உரும்பிராய் ரஜினி கொலை தொடர்பாக

4 ஆசிரியர்கள் நிலை கவலைக்கிடம்

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த இரண்டு இராணுவ அதிகாரிகளை குற்றமற்றறவர்கள் என விடுதலை செய்து இருக்கின்றார்கள்

மற்றைய இராணுவ அதிகாரிக்கு எதிராக மீள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு இருக்கின்றார்கள். எனவே அவரும் விரைவில் விடுதலை செய்ய பட போகின்றார்.

# ஒதியமலை படுகொலை
# 39ஆம் ஆண்டு நினைவேந்தலில் திடீரென புகுந்த சிங்கள காவல் துறையினர்!

டிசம்பர் 02, 2023

ஒதியமலைப் பகுதியில் ஒதியமலை படுகொலை நினை வேந்தல் உணர்வு பூர்வமாக வணக்க இடத்தில் நிலையில் திடீ ரென சிங்கள காவல்துறையினர் புகுந்து குழப்பம் விளைவித் துள்ளனர்.








ஒதியமலைப் படுகொலையின் 39 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று (02) ஒதியமலை சனசமூகநிலைய வளாகத்தில் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி யில் உணர்வுபூர்வமாக இடம் பெற்றன.

ஒதியமலைப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி அதிகாலை வேளையில் புகுந்த இராணுவத்தினரும், சிங்களவர்களும் அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்திற்கு வரவழைத்துவிட்டு அவர்களது ஆடைகளை களைந்து அவற் றினால் அவர்களை கட்டி 27 பேரை சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்திருந்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று (02) நண்பகல் 12 மணிக்கு ஆரம்ப மாகி நிகழ்வு அமைதியாக இடம்பெற்றுக் கொண்டிருந் தபோது திடீரென நுழைந்த சிறீலங்கா காவல்துறையினர் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறவில்லை என தெரி வித்து நிகழ்வில் குழப்பத்தை விளைவித்தனர்.







02.12.1984ம் ஆண்டு ஒதியமலை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களின் பெயர் விபரம்

அழகையா அழகராஜ்
சங்கரப்பிள்ளை சபாரத்தினம்
சங்கரப்பிள்ளை சண்முகசுந்தரம்
நாகமணி சின்னையா
சின்னையா இராசேந்திரம்
கணபதிப்பிள்ளை சின்னையா
கிருஷ்ணபிள்ளை பரமலிங்கம்
கிருஷ்ணபிள்ளை இராசலிங்கம்
காசிப்பிள்ளை செல்வராசா
கந்தையா தருமலிங்கம்
நாகரத்தினம் கேதீஸ்வரன்
நல்லையா நவரத்தினம்
சிதம்பரப்பிள்ளை இராசையா
சண்முகராசா இரவீந்திரன்
சந்திரலிங்கம் நடராசா
பொன்னையா தேவராசா
தம்பிஐயா வேலுப்பிள்ளை
தம்பிஐயா காசிப்பிள்ளை
தம்பிஐயா சுப்பிரமணியம்
தம்பிஐயா சிவஞானம்
சின்னையா சிதம்பரப்பிள்ளை
கணபதிப்பிள்ளை சிவபாதம்
தாமோதரி கணபதிப்பிள்ளை
தாமோதரி சதாசிவம்
கந்தப்பு சிவசிதம்பரம்
கோவிந்தர் கணபதிப்பிள்ளை
கந்தையா கனகையா
கந்தையா பொன்னம்பலம்
சுப்பையா கெங்காதரன்
வேலுப்பிள்ளை சந்திரன்
வீரகத்தி தில்லைநடராசா
மாணிக்கம் மோகனதாஸ்

OKB
தலைவர்
ஒதியமலை கிராம அபிவிருத்திச் சங்கம்
02.12.1984

# பலரை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்தமை நினைவேந்தல் போன்ற நிகழ்வுகளிலிருந்து விலக செய்யும் செயற்பாடே!

## அருட்தந்தை மா. சக்திவேல்

டிசம்பர் 02, 2023

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் பலரை கைது செய்தமை நினைவேந்தல் போன்ற நிகழ்வுகளிலிருந்து இளைஞர்களை விலக செய்யும் செயற்பாடே என சமூக நீதிக்கான செயற்பாட் டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.



சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளரு மான அருட்தந்தை மா.சக்திவேலினால் வெள்ளிக்கிழமை (01.12.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாவீரர் வாரமும் மாவீரர் நாளும் ஒட்டுமொத்த தமிழர்களை யும் ஒன்றிணைக்கும் ஒரு தேசிய நிகழ்வாகும். அதனை வடக் கிலும், கிழக்கிலும், புலம்பெயர் நாடுகளிலும் வேதனைக்கு மத்தியிலும் அந்நாட்களில் எழுச்சியுடன் ஒன்று கூடி உயிர் கொடையாளர்களுக்கு சுடர் ஏற்றி நினைவஞ்சலி செய்வதோடு நின்று விடாது தமிழர்களின் தேசத்திற்காக போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க திடசங்கட்பம் கொள்ளும் நாளும் இதுவாகும்.

இதனை பாரிய இனப்படுகொலைகளோடு அழிக்க நினைத் தவர்களுக்கு அது தோல்வியே என தற்போது உணர்வதால் இந்நிகழ்வுக்கு எதிரான செயற்பாடுகளை உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் பல்வேறு வடிவங்களில் கூட்டாக அழிப்பு வேலை களை நடைமுறைப்படுத்த எதிர் சக்திகள் திட்டமிட்டுள்ளன என்பதை இவ்வருட சம்பவங்கள் உணர்த்துகின்றன.

இதற்கு வடகிழக்கு தமிழ் தேசிய உணர்வாளர்கள் கூட்டாக தமது அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். தற்போது நாம் முகம் கொடுக்கும் சிக்கல்களை சிவப்பு சமிக்ஞை யாக ஏற்காவிடின் பாரிய விலை கொடுக்கும் நிலை உருவாகும்.

தமிழர் தேசத்திற்கும், தேசியத்திற்கும் எதிரான சக்திகளிடம் சோரம் போன தமிழர் முகமூடி தரித்த சிலர் மேதகு தலைவரின் மக்களென ஒரு போலியை மேடையேற்றி தீட்டிய சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. "தலைவர் இருக்கிறார்". "அவர் வருவார்..." "வருவார்..." என கூறி இன்னும் ஒரு தலைமைத் துவம் உருவாகக்கூடாது என நினைத்தவர்கள் தமது முயற் சியின் அடுத்த கட்டமா போலி முகத்தை மேடையேற்றி அவ மானப்பட்டுள்ளனர்.இத்தோடு அவர்கள் நின்றுவிடப் போவ தில்லை.

இன்னும் ஒரு பக்கம் சேனையின் பெயரால் தாயகத்தில் இயங்கும் அமைப்பு ஒன்று மாவீரர்களை கொச்சைப்படுத்தும் வகையில் அவர்களை அவமானப்படுத்தும் வண்ணம் முக நூலில் பதிவிட்டுள்ளது. அதன் மூலம் புதிய தலைமுறை யினரின் மூளையை சலவை செய்து அரசியலில் இருந்து தூரமாக்க முயற்சிக்கின்றனர். உயிர் தியாக வரலாற்றை எம் காலத்திலேயே குழி தோண்டி புதைக்கவும் வழி செய்கின்றனர்.

அடுத்ததாக தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாததும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டதுமான 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்க கூட்டமாக காவடி தூக்கி கொடி பிடிக்க இன்னும் ஒரு கூட்டம் பகிரங்கமாகவே எழுந்து நிற்கின்றது. இதனையும் சதியாகவே கொள்ளல் வேண்டும். இவர்கள் தமிழ் மக்கள் பேரவை இயங்கிய காலத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என ஆவணம் தயாரித்து பௌத்த மன சங்கத்திடம் தூக்கி சென்றதை மறந்துவிட்டனர் போலும். இவர்களே தமிழ் மக்கள் பேரவைக்கு வீழ்ச்சிக்கும் காரண மானவர்கள் என்பது இப்போது புலனாகின்றது.

இது இவ்வாறு இருக்க இலங்கை அரசு மீண்டும் புலி உரு வாக்கம் என்பதை கையில் எடுத்து இவ்வருடம் மாவீரர் தின நிகழ்வோடு பலரை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்து இருக்கின்றது. மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாக மேலும் பலருக்கு வலை வீசிக் கொண்டிருக்கின்றனர். இதுவும் இளை ஞர் மத்தியில் அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு பயத்தை உரு வாக்கும் செயலாகும். நினைவேந்தல் போன்ற நிகழ்வில் இருந்து சுயமாகவே விலகச் செய்வதற்கான வேலை திட்டங் களில் இதுவும் ஒன்று எனக் கூறலாம்.

2009ல் விடுதலை இயக்கத்தை அழிப்பதாக ஒரு இலட்சத்துக் கும் மேற்பட்ட பொது மக்களை படுகொலை செய்த இலங்கை அரசு தமிழர்களை அரசியல் ரீதியாக படுகொலை செய்வதற்கு பல்வேறு சதிகளை கூட்டு சேர்ந்து தீவிரபடுத்தி உள்ள கால கட்டத்தில் வாழ்கிறோம். இதற்கு எம்மவர்களும் மறைமுக மாகவும் நேரடியாகவும் சூழ்ச்சி செய்வதும் பயணிப்பதும் நீண்ட நாட்களாக தொடர்கின்றது.

இத்தகையவர்களை சமூகத்துக்கு அடையாளம் காட்டுவதுடன் எமது அடுத்த சந்ததியினரை இச் சூழ்ச்சி வலை நின்று பாது காத்து அரசியல் அறம் பிறழாது வாழ்வு போராட்டங்களை பாதுகாப்போடு முன்னெடுக்க வழிகாட்டும் மிகப்பெரிய பொறுப்பு விழிப்புடன் செயல்படும் அரசியல் தலைமைகளுக்கு உள்ளது.

சுயநல அரசியலையும், சுகபோக அரசியலையும், காவடி தூக் கும் அரசியலையும் புறந்தள்ளி அரசியல் தலைமைத்துவங்கள் கூட்டாக செயல்பட வேண்டிய காலம் இதுவாகும்.

அன்று உயிருக்கு பயந்து ஒரு தலைமையின் கீழ் நாங்கள் செயல்படுவோம் என போலி முகத்தோடு உறுதி பூண்ட அர சியல் தலைமைத்துவங்கள் தடம் புரண்டுள்ள இன்றைய நிலையில் தியாகத்தோடு தமிழர்களின் தேசிய அரசியலை முன் னகர்த்த அறம் சார்ந்த அரசியல் செயற்பாட்டை ராஜதந்திரத் தோடு முன்னெடுக்க அரசியல் தலைமைகளுக்கு சமூக அமைப் புக்கள் அனைத்தும் கூட்டாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

டிசம்பர் 02, 2023

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வவுனியாவில் இன்று (02) கவனயீர்ப்பு போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.





வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற தரப்புக்கள் தமிழ் ஊடகங்களை அடக்கியாள நினைப்பது வழமையான தொடர் கதையாகவே இருந்து வருகிறது.

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் அதிகாரத்தரப்பின் வன்முறைகளால் 39 ஊடகவியலாளர்களின் இன்னுயிர்களை நாம் இழந்துள்ளோம். அதற்கான நீதி மறுக்கப்பட்ட நிலையில் இன்றும் நீதி கோரி போராடி வருகின்ற தரப்பாக நாம் இருக்கின்றோம்.

இதேவேளை மாற்றுக்கருத்துக்களை ஒடுக்கும் இந்த அரசாங்கம், ஊடகங்களை ஒடுக்கி, மக்களின் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன், வவுனியாவில் கடமையாற்றிவரும் பிராந்திய ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

எனவே, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஊடகவியலாளர்கள் ஆகிய நாம் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத்தரப்புக்கு தெரிவித்துக்கொள்கிறோம் என்றனர்.

இந்த ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் “ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்”, “பொய்வழக்கு போடாதே”, “ஊடகப் படுகொலைகளுக்கு நீதி வேண்டும்”, “கருத்துச் சுதந்திரமே மக்களின் சுதந்திரம்” என்றவாறு கோஷம் எழுப்பினர்.

இப்பேரணி வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் வரை சென்று, அங்கிருந்து மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை அடைந்ததோடு போராட்டம் முற்றுப்பெற்றது.

ஊடகவியலாளர்களுக்கு ஆதரவாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் வவுனியா வர்த்தக சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி கண்டறியும் சங்கங்கள், போராளிகள் நலன் புரிச் சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் முக்கியஸ்தர்களும், மதகுருமார்களும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.







# வட்டுக்கோட்டையில் சிறீலங்கா காவல்துறையினரின் படுகொலைக்கு எதிராக மக்கள் கண்டனப் போராட்டம்!

டிசம்பர் 03, 2023

வட்டுக்கோட்டை சிறீலங்காப்பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த அலெக்ஸிற்கு நீதி கோரி கண்டனப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.













தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெறுகின்ற இந்தப் போராட்டமானது இன்றைய தினம் (03) மாலை 03 மணியளவில் வட்டுக்கோட்டைச் சந்தியில் ஆரம்பமாகியது.



உயிரிழந்த இளைஞனுக்கு வணக்கம் செலுத்தி ஆரம்பித்த இந்தப் போராட்டத்தின் போது வட்டுக்கோட்டை காவல் நிலையத்திற்கு செல்லும் வீதியில் சிங்கள பொலிசார் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

நாகராசா அலெக்ஸின் மரணத்துக்கு நீதி கோரியும் வட்டுக்கோட்டை கவல்த்துறை நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்தக் கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடை பவனி!

டிசம்பர் 04, 2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்வதனை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடை பவனி நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இணைந்த சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி. சபாஆனந்த் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்த இந்த நடை பவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.




இந்த நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவு தூபி; விசாரணைக்கு சென்றுள்ள யாழ. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்!

டிசம்பர் 04, 2023

யாழ். பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இன்றைய தினம் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளன.

பல்கலைக்கழகத்தினுள் அனுமதி பெறப்படாமல், முள்ளிவாய்க்கால் தூபி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், தூபி அமைப்புக்கான நிதி கையாளுகை தொடர்பிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மூன்று பேரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இம் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

தூபி அமைப்பதற்காக பல்கலைக்கழக மாணவர்களால் நிதி சேகரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளையும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் இன்றைய தினம் நண்பகல் விசாரணைகளுக்குச் சமூகமளிக்குமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந் நிலையில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்



சிரேஷ்ட பொருளாளரும், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஒருவரும், தூபி அமைக்கப்பட்ட வேளையில் இருந்த மாணவர் ஒன்றியத் தலைவரும் இன்று நண்பகல் 1.00 மணியளவில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ள விசாரணைகளுக்காகச் சென்றுள்ளனர்.

# இராணுவத்தின் பங்களிப்புடன் வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் விநியோகம்!

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

டிசம்பர் 05, 2023

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கும் செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன, இப்பிரதேசங்களில் இராணுவம் அதிகம் குவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தின் பங்களிப்புடன் போதைப்பொருள் அமுல்படுத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஆயுத போராட்டத்தையும் போராடுகின்ற மக்களையும் தோற்கடிக்கும் மனநிலையில் தான் இந்த அரசும் இராணுவமும் இருக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக வடக்கு, கிழக்கில் இளைஞர்களை போதைப்பொருளுக்கும் மதுபானங்களுக்கும் அடிமையாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இராணுவத்திற்கு தெரியாமல் வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமில்லை. எனவே இதற்கு இராணுவத்தின் பங்களிப்பும் உள்ளது.

எனவே போதைப்பொருள் தொடர்பில் உளவள ஆலொசனைகள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன.ஏனெனில் இவ்வாறான போதைப்பொருள் பாவனைகளை கட்டுப்படுத்தாது விட்டால் அது வேறு மாதிரியான பிரச்சினைகளை கொண்டு வந்து விடும்.

பாடசாலைகளில் உளவள ஆலோசனை திட்டம் இருந்தாலும். அது சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதற்கு தேவையான ஒதுக்கீடுகள் இல்லை.

அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கில் 60000 க்கும் மேற்பட்ட விதவைகள் பெண்கள் உள்ளார்கள். இம்மாகாணங்களே யுத்தத்தில் மோசமாக பாதிக்கப்பட்டன.

அழிவை சந்தித்தன. இங்கு வீடமைப்பு என்பது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மக்களுக்கு காணிகள் இருந்தாலும் வீடுகள் இல்லை. இதற்கு இந்திய வீடமைப்புத்திட்டம் ஓரளவுக்கு உதவினாலும் இலங்கை அரசின் வீடமைப்புக்கான நிதி உதவித்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

வீடமைப்புக்கான நிதி கட்டம் கட்டமாக வழங்கப்பட்டதால் வீடுகளை நிர்மாணிக்க முடியவில்லை. இதனை பயன்படுத்தி நுண்நிதி கடன் கம்பனிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை ஆக்கிரமித்துள்ளன. அந்த மக்களின் வறுமையை பயன்படுத்தின.

பணத்தேவைக்காக மக்கள் குறிப்பாக பெண்கள் இந்த நுண்நிதி கடன் கம்பனிகளின் பொறியில் சிக்கினர். பலர் தற்கொலையும் செய்தனர்.

வடக்கு கிழக்கில் இராணுவத்தாக்குதலில் அழிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்கியிருந்தால் அந்த மக்கள் அதன் மூலம் வீடுகளை நிர்மாணித்திருப்பார்கள்.

எனவே நுண் நிதி கடன் கம்பெனிகளின் பொறியிலிருந்து



வடக்கு, கிழக்கு மக்களை பாதுகாக்க வேண்டும் ஆகவே இவ்வாறான நிலைமையை தொடர விட முடியாது.

விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க ஒரு பெண் என்ற அடிப்படையில் இதில் தலையிட்டு தீர்வு வழங்க வேண்டும் என்றார்.

# யாழ். பல்கலைக்கழக சட்ட பீடத்தில் தமிழ் மொழிக்கு அனுமதி வழங்க வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன்

டிசம்பர் 05, 2023

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வியற் பீடத்தை ஆரம்பிப்பதற்கும், யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்லூரியை தொடர்வதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்களின் நலன்களுக்காக தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை முல்லைத்தீவு மாங்குளத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (4) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

கிளிநொச்சி நாவலர் பண்ணை ஊற்றுக்குளம் பகுதியை சேர்ந்த செல்வி டிலானி ரவிச்சந்திரன் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தர பரீட்சையில் கணித பிரிவில் தோற்றி சித்தியடைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 44 ஆவது நிலையை பெற்றார்.

கல்வி தகைமைக்கு அமைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கு தொழில்நுட்ப பிரிவுக்கு தெரிவானார். குடும்ப வறுமையினால் அவரால் அப்போது பல்கலைக்கழக கல்வியை தொடர முடியவில்லை.

அதனை தொடர்ந்து முறையான கல்வி தகைமை உள்ளதால் இந்த மாணவி தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு கல்வியை தொடர அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதால் தேசிய கல்லூரிக்கான கல்வியற் கல்லூரிக்கான இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.இந்த மாணவியின் கனவுகள் இவ்வாறு இல்லாமல் போனதால் இவர் விரக்தியடைந்துள்ளதை அறிய முடிகிறது.

இந்த மாணவி தொடர்பில் கல்வி அமைச்சுக்கும், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குவுக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளேன்.

ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பகுதியை சேர்ந்த மாணவிக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய வேண்டும். 2022 மற்றும் 2023 ஆகிய கல்வியாண்டு மாணவர்களுடன் ஒன்றிணைந்து இந்த மாணவி பல்கலைக்கழக கல்வியை தொடர வாய்ப்பளிக்குமாறு வினையத்துடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.



இதன்போது எழுந்து உரையாற்றிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் உட்பட அதிகாரிகள் பாராளுமன்றத்துக்கு வருகை தந்துள் ளார்கள். ஆகவே குறிப்பிட்ட விடயங்களை என்னிடம் தாருங்கள் நான் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சிறீ தரன், நன்றி அமைச்சரே. அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமான ஜெயபுரம் பல்லவராயன்கட்டு பூனேரி கிளிநொச்சியை சேர்ந்த செல்வி கோபிகா சுதர்ஷன் 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றி, உரிய பெறுபேற்றை பெற்றுக்கொண்டு பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததை தொடர்ந்து அவர் தமிழ், இந்து நாகரிகம், சமூக கல்வி ஆகிய பாடங்களுக்காக தேசிய கல்வியல் கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளார். இந்து நாகரிகம் பாடத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்படும் நிலையில் தனது பெறுபேற்றுக்கு அமைய தனக்கு கல்வியற் கல்லூரி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த மாணவிக்கு ஏமாற்றம் மிகுதியாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்து நாகரிகம், வரலாறு, சமூக கல்வி ஆகிய பாடங்களுக்கு மாத்திரம் 63 வெற்றிடங்கள் நிலவுகின்ற நிலையில் இந்த பாடங்களுக்கு ஆளணி வெற்றிடம் இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய கல்வியற் கல்லூரி இந்த மாணவியின் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. இதனால் இந்த மாணவி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவியை விட குறைந்த பெறுபேற்றை பெற்றவர்களுக்கு கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி கிடைத்துள்ளது. ஆனால் இந்த மாணவி விண்ணப்பித்த மூன்று பாடங்களுக்கும் அனுமதி கிடைக்கவில்லை. இந்த விடயங்கள் தொடர்பான ஆவணங்களை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். மனிதாபிமான அடிப்படையில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 'கல்வியியல் பீடம்' உருவாக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கிய பல்கலைக்கழகமாக உள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியற் துறையை 'பீடமாக' உருவாக்குமாறு கடந்த ஆண்டும் வலியுறுத்தினேன். ஆனால் இதுவரை அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளையை முல்லைத்தீவு மாங்குளத்தில் நிறுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ளேன். தற்போதைய பொருளாதார சுமைகளுக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் தமது துறைசார் நடவடிக்கைகளுக்காக தலைநகருக்கு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே இந்த கோரிக்கை தொடர்பிலும் கரிசனை கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழியில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்ட கல்வியை தொடர வாய்ப்பில்லை. தமது தாய்மொழியில் சட்ட கல்வியை கற்க எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்துக்கு தெரிவானேன். அப்போதைய சூழ்நிலையால் என்னால் சட்ட கல்வியை தொடர முடியவில்லை. சட்டக்கல்வி வாய்ப்பு யாழ்.பல்கலைக்கழத்தில் இருந்திருந்தால் நானும் ஒரு சட்டத்தரணியாகியிருப்பேன். ஆகவே தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சட்டத்தை கற்கும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யாழ்.தீவக பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில் தான் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# புத்தசாசனம், தொல்பொருள் திணைக்கள செயற்பாடுகளே நல்லிணக்கத்துக்கு பாதிப்பு!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

டிசம்பர் 06, 2023

நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகியும் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளாகும்.

அதனால் அவர்கள் தங்களின் செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே வாழ விரும்புகின்றனர் என செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (6) இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் காலத்திலும் கூட வடக்கு கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை.

எனினும் யுத்தம் நிறைவடைந்ததற்கு பின்னர் தொல்பொருள் இடங்களை திரிபு படுத்தி பௌத்த அடையாளங்களாக சித்தரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பௌத்த அடையாளங்களாக இருந்திருந்தால் அது பௌத்த இடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர அவற்றை திரிபு படுத்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.



அத்துடன் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரை அகற்றப்பட வேண்டும். தையிட்டியில் தனி யார் காணி அபகரிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப் பட வேண்டும். மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை அகற் றப்பட வேண்டும்.

குருந்தூர் மலையில் ஆதி சிவனார் ஆலயத்தில் தமிழ் மக்கள் ஒரு பொங்கல் வைக்கக் கூட முடியாமல் உள்ளது. தொல் பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தகரம் ஒன்றை வைத்துதான் பொங்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின் றார்கள்.

அப்படியானால் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகியும் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற இது போன்ற நடவடிக்கைகள்தான். திணைக்களம் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.

# முல்லை – கரியல் வயல், சுண்டிக்குளம் பிரதேசவாசிகள் 130 பேருக்கு எதிராக சிறீலங்கா வனஜீவராசிகள் திணைக்கத்தினர் வழக்குப் பதிவு!

டிசம்பர் 07, 2023

முல்லைத்தீவு, கரியல் வயல், சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள 130 பிரதேசவாசிகளுக்கு எதிராக சிறீலங்கா வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

1908ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதி மக்கள் பயிர் செய்து வாழ்ந்துவரும் நிலையில், அந்த மக்கள் தம் காணிகளை துப்பரவு செய்தமையை அடுத்து, வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

சுண்டிக்குளம் தேசியா பூங்காவுக்குள் உட்சென்றமை, தாவரங்களை வெட்டி வெளியாக்கியமை, காணிகளை வெளியாக்கியமை, பாதைகளை அமைத்தல் மற்றும் பாதைகளை பயன்படுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கானது இன்றைய தினம் (07) முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர், சட்டத்தரணி சி.தனஞ்சயன் கருத்து தெரிவிக்கையில்,

இன்று முல்லைத்தீவு மாவட்டத்திலே சுண்டிக்குளம் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் கிட்டதட்ட 130 நபர்களுக்கு எதிராக வழக்குகளை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே தாக்கல் செய்துள்ளார்கள்.

அதில், அப்பிரதேசவாசிகள் அத்துமீறி குடியிருந்ததாகவும், தாவரங்களை அழித்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

சுண்டிக்குள பிரதேசத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூர தொலைவில் இருக்கும் மக்களுக்கு எதிராகவும், இறந்த மக்களுக்கு எதிராகவும், ஒரு நபருக்கு எதிராக மூன்று, நான்கு வழக்குகள் என பதிவு செய்யப்பட்டுள்ளன.

சரியான வரைபடங்களோ, எந்த காலப்பகுதியில் அப்பகுதி சரணாலயமாக இருந்தது என்பதற்கான எந்த வித தகவல்களோ இல்லாத நிலையில் போலியான விசாரணையை நடாத்தி, வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் நில அளவை திணைக்களத்தினர் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

இன்றைய நாள் நீதிமன்றில் இவ்வழக்கானது அடிப்படை ஏதுகள் அற்ற நிலையில் கொண்டுவரப்பட்டதும், மக்களின் நில உரிமையினை பறிக்கும் அரசியல் நோக்கத்துக்காகவே இந்த




வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என்பதையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தோம்.

மேலும், வழக்கு தொடுநர் தரப்பு மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் நீதவானால் பணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இவ்வழக்கு அடுத்த வருடம் வைகாசி மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்காவிட்டால் போராட்டம் வெடிக்கும்!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

டிசம்பர் 07, 2023

மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்காவிட்டால் மாவட்ட செயலகம், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் முன்பாக பாரிய போராட்டம் வெடிக்கும் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

கரியல்வயல் சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்த பகுதியில் வாழும் மக்கள் 130 நபர்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வன ஜீவராசிகள், வன இலாகா தொல்லியல், இல்மனைட், படையினர் இவ்வாறு நிலப்பரப்புக்களை அபகரிக்கும் நோக்கத்தோடு செயற்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில் முல்லைத்தீவில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 75 வீதமான காணிகள் வன இலாகாவிடமும், நந்திக்கடல், நாயாறு, சுண்டிக்குளம் உள்ளிட்ட பகுதிகள் முழுவதும் கிட்டத்தட்ட 12 வீதமான காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அபகரித்து எங்களை குறுகிய இடத்திற்குள் குடியிருப்பு காணிகளுக்குள் மட்டும் இருக்குமளவிற்கு செய்தால் நாங்கள் என்ன செய்வது.

உழைப்பிற்காக, வாழ்வாதாரத்திற்காக எங்கே போவது, பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது இவ்வாறு மோசமான திட்டத்தினை திணைக்களங்களின் ஊடாக தமிழர்களுடைய நிலங்களை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு இனவாதிகள் செய்து கொண்டிருக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வன இலாகா திணைக்களத்திடம் இருந்த காணிகள் 2,22,006 ஏக்கர். ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் முழுவதையும் எடுத்து 4,35,000 ஏக்கர் காணியை வன இலாகா வைத்திருக்கின்றது என்றால் எங்களுடைய காணிகளை காத்தது யார்? விடுதலைப் புலிகள் தான் எங்களுடைய காணிகளை காத்து மக்களுக்காக நின்றவர்கள் என்பது இதனூடாக தெரியும்.

அப்போது இளைஞர்கள், யுவதிகள் நிலங்களை பாதுகாத்து வாழ்வாதாரத்திற்கு வழி சமைத்தார்களே தவிர அவர்கள் பயங்




கரவாத செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. ஆகவே பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடும் திணைக்களங்களாக இந்த திணைக்களங்களே காணப்படுகின்றன.

எங்களுடைய காணிகளை எங்களுக்கே வழங்க வேண்டும். வழங்காது விட்டால் மாவட்ட செயலகம், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் முன்பாக மக்கள் ஒன்றுதிரண்டு போராட்டத்தினை மேற்கொள்ளுவோம் என்பதனை தெரிவித்து கொள்ளுகின்றேன் என மேலும் தெரிவித்தார்.

# வீடுகளுக்குள் நுழையும் ஆகாயத் தாமரை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

அதிர்ஸ்ட மூங்கிலத்தைத் தொடர்ந்து வாஸ்துவின் பெயரால் இப்போது ஆகாயத்தாமரை வீடுகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. அந்நிய நீர்க்களையான ஆகாயத் தாமரையை அதிர்ஸ்டம் தரும் தாவரமாகப் பலரும் வீடுகளில் நீர்த்தொட்டிகளில் வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். பூச்செடிகள் விற்பனையாளர்களும் பின்விளைவுகளை அறியாது இதனை விற்பனை செய்யத் தொடங்கி உள்ளார்கள். இந்தப்போக்கு மிகவும் ஆபத்தானது. மூடநம்பிக்கை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.



ஆகாயத் தாமரை வீடுகளில் வளர்க்கப்படுவது தொடர்பாக ஐங்கரநேசனால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,


இயற்கை எந்த உயிரியையுமே தேவையற்றுப் படைப்பதில்லை. ஒவ்வொரு உயிரியும் முக்கியத்துவம் மிக்கவை. அவை பரிணாமிக்கும் சூழலின் சமநிலையில் இன்றியமையாத பங்களிப்பை நல்கி வருகின்றன. ஆனால், அவை இயற்கையாகத் தோன்றிய பிரதேசத்தில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்படும்போது அவற்றுள் சில இனங்கள் ஆக்கிரமிப்பு இனங்கள் ஆகிவிடுகின்றன.

புதிய சூழலின் சமநிலையைக் குழப்பிச் சரிசெய்யமுடியாத அளவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. உலகின் உயிர்ப்பல்வகைமையை அழித்துவரும் பிரதான காரணிகளில் ஒன்றாக இவ்வந்நிய ஊடுருவல் இனங்கள் உள்ளன. அத்தகைய ஒரு அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமே ஆகாயத்தாமரை ஆகும்.

ஆகாயத் தாமரை தென் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட ஒரு அசுர நீர்க்களை. நீரே தெரியாத அளவுக்கு விரைந்து மூடிவளரும் ஆற்றல் பெற்றவை. இதனால், நீர்ச் சூழற் தொகுதியில் ஏனைய உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. குளங்களில் இருந்து தப்பிச்செல்லும் இக்களை வயல் நிலங்களில் பல்கிப்பெருகி நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

இதனால், இலங்கை அரசாங்கம் ஆகாயத் தாமரையை அந்நிய ஊடுருவல் ஆக்கிரமிப்பு இனமாகக் கருதி அழிக்கத் தலைப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆரியகுளத்திலிருந்து இதனை முற்றாக அகற்றுவதற்கு மிகப் பெருந்தொகைப் பணமும் பெருங்காலமும் எடுத்தது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

இன்னும் ஏராளமான குளங்கள் ஆகாயத் தாமரையின் ஆக்கிர



மிப்புக்குள் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் அதிர்ஸ்ட தேவதை என்ற அந்தஸ்தை வழங்குவது அதற்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்துவிடும்.

வீடுகளிலிருந்து தவறுதலாக வெளியேறும் இதன் சிறு அரும்பே அதன் பல்கிப்பெருகும் ஆற்றலால் சூழலை அதன் ஆக்கிரமிப்பின்கீழ் விரைந்து கொண்டுவந்துவிடும்.

ஏற்கனவே பார்த்தீனியம், சீமைக்கருவேலம், இப்பில்இப்பில் போன்ற அந்நியன்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் எம் நிலம் ஆகாயத் தாமரையினாலும் வலிகளைச் சுமக்க நேரிடும். எமது விவசாயத் திணைக்களம் ஆகாயத் தாமரை தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் தீவில் ஏற்படவுள்ள அழிவு? மன்னார் பிரஜைகள் குழு விளக்கம்!

டிசம்பர் 09, 2023

மன்னார் தீவில் ஏற்படவுள்ள மிகப்பெரிய அழிவுக்கு அரசு சம்பந்தப்படுகிறதா என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் இன்று சனிக்கிழமை (9) பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் தீவு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. அவற்றில் முக்கியமாக பாரிய மண் அகழ்வுத் திட்டம் மற்றும் எல்லை மீறிய காற்றாலை கோபுரங்கள் மற்றும் காடழிப்பு போன்றவை காணப்படுகின்றன.

எனினும், மண் அகழ்வு தொடர்பாக பல்வேறு விடயங்களை முன்வைக்க விரும்புகின்றோம். மண் அகழ்வில் ஈடுபடுகின்ற தொழிற்சாலைகள் சம்பந்தமாக விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்காக அரச தரப்பில் பல்வேறு முயற்சிகளை கடந்த வருடம் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். ஆனால், அரச தரப்பிடம் இருந்து இதுவரை எந்த விதமான பதில்களும் எமக்கு கிடைக்கவில்லை.

பல ஆண்டுகளாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் இவ்விடயம் தொடர்பாக வினவியபோதும், விளக்கம் கோரிய போதும் எவ்வித பதிலும் எமக்கு கிடைக்கவில்லை.

மேலும், மன்னார் பிரதேச செயலகத்திடமும் நாங்கள் பல்வேறு விதமான விளக்கங்களை கேட்டிருந்தபோதும் எவ்வித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக நாங்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள அரசை நாடினோம். விளக்கம் கோரி பல்வேறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டது. ஆனால், இதுவரை அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

மிகப் பெரிய அழிவுக்கு அரசும் சம்பந்தப்படுகிறதா என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. அவற்றை தெளிவாக நாங்கள் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

29.12.2021 அன்று தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இதற்காக விளக்கம் கேட்டு, நாங்கள் எழுதியிருந்தோம். அதற்கான



பதிலை 10.01.2022 அன்று வழங்கியிருந்தார்கள். கோரிய விளக்கங்களை வழங்குவதாக தெரிவித்திருந்தனர். ஆனால், எவ்வித பதிலும் இல்லை.

தொடர்ந்தும் பல தடவைகள் விளக்கம் கோரி கடிதம் எழுதியிருந்தோம். எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் எமக்கு கவலையளிக்கின்றன. மன்னாரை மிகவும் ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்கின்றனர்.

அரசிடம் பல்வேறு முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ள போதும் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம் என தெரிவித்தார்.

# அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கரையோர சுவீகரிப்பிற்கு எதிராக பொன்னாலையில் போராட்டம்!

டிசம்பர் 10, 2023

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியை கைவிட வலியுறுத்தி போரட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து பொன்னாலை சந்தியில் இன்று காலை இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது எமது கடல் எமக்கு வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், கடலைச் சுவீகரித்து கடற்றொழிலாளர்களை பட்டினிச்சாவிற்குள் தள்ளாதே, எமது கடலை சுவீகரிக்க எவருக்கும் அனுமதியில்லை, ரணில் அரசே எமது கடலளச்சுவீகரித்தூ வரலாற்று தவறைச் செய்யாதே, மேச்சல் தரையையும் மயானங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக்கும் திட்டத்தை உடனே கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# சர்வதேச மனித உரிமைகள் நாளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்!

10.12.2023

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை (10) காலை 10 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தின்போது 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா' போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வினை கூறுங்கள்!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

டிசம்பர் 09, 2023

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில் முதல் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் தீர்வினை கூறுங்கள் அந்த முடிவில்லாமல் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிப்பது பிழை என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்

போராட்டம் மேற்கொள்ளும் போராட்ட இடத்திற்கு முன்பாக இன்று (10.12.2023) மனித உரிமைகள் தினத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்ட உறவுகள் 2500 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வீதிகளில் நின்று தம் உறவுகளுக்காக போராடிகொண்டிருக்கின்றார்கள். ஆனால் முடிவுகள் எதுவுமில்லை. இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். மனித உரிமை ஆணைக்குழு சம்பந்தமாக அல்லது ஐநா சம்பந்தமாகவோ எமக்கு எந்த தீர்வும் தரவில்லை

எங்கள் நிலங்கள் பறிக்கப்படுகின்றன, மதங்கள் அழிக்கப் படுகின்றன, கடலிலே மீன்பிடிக்க முடியவில்லை, வயலிலே பயிர்கள், விவசாயம், தோட்ட செய்கைகள் செய்ய முடிய வில்லை, காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடி கிடைக்க வில்லை, சிறையிலிருப்பவர்களை விடுவிக்கவில்லை, இவ் வாறு இலங்கை அரசாங்கம் செய்யும் போது அதனை பொறுத்து வேடிக்கை பார்ப்பதுதான் ஐநாவின், மனித உரிமை ஆணைக் குழுவின் வேலை என்றால் அவர்களுக்கு ஏன் இந்த சர்வதேச தினம்?

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில் முதல் இலங்கையில் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர்



தீர்வினை கூறுங்கள் அந்த முடிவில்லாமல் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிப்பது பிழை என்பதை சுட்டிக் காட்டுகின்றேன் என மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

டிசம்பர் 11, 2023

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு மாகாண பெண்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில், இன்றைய நாள் திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு மகஜரொன்றையும் கையளித்தனர்.

குறித்த மகஜரில்,

இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பு இன்மையே இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற ரீதியில் தொடர்ச்சியாக நாங்கள் எதிர் நோக்கி வருகின்றோம் குறிப்பாக நீரியல்வளங்கள், நில வளங்கள், சுற்றாடல் போன்ற வள பகிர்வுகளில் அரசாங்கம் மற் றும் மக்களுக்கு இடையிலே உள்ள சமூக ஒப்பந்தம் மீறப்படுவ துடன் அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் நடைபெறு கின்றது.

அதிலும் வட பகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவமயமாக்கல், இராணுவ சோதனை தடுப்பு அரண்கள், மக்கள் மீள்குடியேற்றப்படாமை போன்றவற்றால் இங்கு வாழ்கின்ற மக்களாகிய நாம் பெரும் சவாலையே எதிர் நோக்கின்றோம்.

தற்காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருட் களின் விலை அதிகரிப்பு, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை, இந்திய இழுவை மடி எமதுகடற்பரபில் மீன்பிடியில் ஈடுபடுகின் றமை, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப்பொருள் பாவனை, சமூர்த்தி கொடுப்பனவுகள் சரி யான முறையில் கிடைக்கபெறாமை போன்ற சாவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதார கொள்கை, நாட்டின் புதிய சட்ட மற்றும் சட்ட மூலங்கள் சர்தேச உடன்படிக்கைகள் மூலம் வட பகுதி மக்களாகிய நாம் பல இன்னல்களை எதிர் நோக்கின்றோம்.

அதிலும் நாட்டின் முதலீட்டை அதிகரித்தல் என்ற ரீதியில் மக் களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் மக்களின் எதிர்ப்பையும் மீறி சில திட்டங்கள் நடைபெறுகின்றது

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின்சார உற்பத்தி, விடத்



தல்தீவு இறால் பண்ணை, கனிய மண் அகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் அட்டைப்பண்ணை, பொன்னாவெளி கிராம டோக்கியோ சீமேந்து தொழிற்சாலை திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மயிலிட்டி துறைமுக அபிவிருத்தி அத்துடன் நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்றசெயற்பாடுகளும் நடைபெறுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட குருந்தூர் மலைவிவகாரம், திட்டமிட்ட மாகாவலி குடியேற்றங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தையிட்டி திஸ்ஸ விகாரை போன்ற பல்வேறு பிரச்சனைகளை வட மாகாண பெண்கள் என்ற ரீதியில் எதிர்நோக்குகின்றோம்

ஆகவே வட மாகாண பெண்கள் குரல் என்ற ரீதியில் மேற் கூறப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என் பதனுடன் மனித உரிமைகள் பாதுகாக்க வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள். - என்றுள்ளது.

# யாழ். ஊடகவியலாளரின் வீடு புகுந்து மிரட்டிய போதைப்பொருள் கும்பல்!


12.12.2023

யாழில். ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு கும்பல் ஒன்று சென்று மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலை, முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 06 பெண்கள் உள்ளிட்ட 20 பேர் தனது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, தனக்கு தாக்க முற்றப்பட்ட போது, அயலவர்கள் கூடியமையால், தாக்குதல் முயற்சியை கைவிட்டு, மரண அச்சுறுத்தல் விடுத்து விட்டு, அங்கிருந்து சென்றதாக, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் தொடர்பான செய்தி ஒன்று இணையத்தள ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த நிலையில் , அதனை அகற்ற கோரியே குறித்த கும்பல் மிரட்டியது என பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் கோப்பாய் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# வடக்கு கிழக்கு தமிழர் நிலத்தை துண்டு துண்டாக விற்பனை செய்வதில் சிங்கள அரசு முனைப்பு காட்டுகிறது!

டிசம்பர் 12, 2023

சிங்கள அரசு தன்னை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுவிக்க வடக்கு, கிழக்கு தமிழர் தாயப்பகுதிகளை சர்வதேசத் திற்கு வாடகைக்கு விடுவதில் முனைப்பு காண்பித்துவரு கின்றது.

அதன் பிரகாரம் சமுதாய மட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்பாட்டு ஒப்பந் தத்தில் கையொழுத்திட அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

அதற்கமைய, கொரியக் குடியரசின் 1.65 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியனுசரணையுடன் குறித்த திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது 21 தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, யாழ் தீபகற்பத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் குடியிருப்போருக்கு மின் சாரம் வழங்குவதற்காக 11 மில்லியன் அமெரிக்க டொலர் பங்காள நிதியனுசரணையை அரசாங்கத்துக்கு வழங்க இந் திய அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை யின் நிபந்தனைகளுக்கமைய்திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக இந்திய ஒப்பந்ததாரர்களிடமிருந்து மட்டும் விலை மனு கோரப்பட்டுள்ளது.

மேலும், பூநகரி குளத்திலிருந்து 700 மெகாவொட் சூரிய மின்சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய் வதற்காக யுனைற்றட் சோலர் எனர்ஜி கம்பனியால் சமர்ப்பிக் கப்பட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன் மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

ஆயிரத்து 500 மெகாவோட் ஆற்றல் சேமிப்பு அமைப்புடனான 700 மெகாவோட் சூரிய மின்சக்தி திட்டத்தில் முதலீடு செய்வதற் காக அவுஸ்திரேலியாவின் யுனைடெட் சோலார் குழுமத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

# மட்டக்களப்பு மயிலத்தமடுவில் இடம்பெறும் அத்துமீறல்கள் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும்!

## பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா

டிசம்பர் 12, 2023

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மேச்சல் தரை பிரச்சினைகள் மிகவும் பிரதானமானதாகும். குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயற்பாடகவே பார்க்கப் படுகின்றது என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (09) இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கமத்தொழில் அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பு செய்கின்ற விவசாயிகள் தமது தொழில் முயற்சியில் பல்வேறு தடைகளையும் இன்னல்களையும் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் உர மானியம் உரிய வேளைக்கு விவசாயிகளை சென்றடைவதில்லை. உரிய காலத்தில் பயிர்களுக்கு போதியளவு உரம் இடுவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமங்களையும் பொருளாதார கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் உர மானியத்தை உரிய வேளையில் விவசாயிகளுக்கு வழங்க அரசாங்கம் நவடிக்கை எடுக்க வேண்டும்.

அறுவடை காலத்தில் நெல்லுக்கு ஸ்திரமான விலையின்மை காரணமாக விவசாயிகள் பெரிதும் கஷ்டமும் கவலையும் அடைகின்றனர். அறுவடை காலத்தில் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட விலையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையோ பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களோ அறுவடை காலத்தில் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதில்லை. இதன் காரணமாக விவசாயிகள் தனியாருக்கு குறைந்த விலையில் தமது நெல்லை விற்பனை செய்து பாரிய நஷ்டமடைகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுயானைகளின் தொல்லை கட்டுக்கடங்காமல் அதிகரித்து காணப்படுகின்றது. விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். சேனைப் பயிர் நிலங்களும் நெல் வயல்களும் வயல் வாடிகளும் காட்டு யானைகளினால் சேதப்படுத்தப்படுகின்றது. அடிக்கடி மனித உயிரிழப்புக்ளும் ஏற்படுகின்றன.

விவசாயிகள் மீன்பிடியாளர்கள் கால்நடை பண்ணையாளர்கள் எனப் பலர் இறந்திருக்கின்றனர். இதற்கான தீர்வாக காட்டு யானை அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களுக்கு மின்சார வேலி அமைக்கப்பட வேண்டும். வன ஜீவராசிகள் திணைக்களம் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று கூட ஏறாவூர் பற்று கொம்பர்சேனை விவசாய அமைப்பானது தங்கள் பிரதேசத்திற்கு யானை வேலியை அமைத்துத் தருமாறு என்னிடம் அவசர கோரிக்கை விட்டுள்ளனர்.

எமது பிரதேசத்தில் காணப்படும் அதிகமான விவசாய வீதிகள் மக்கள் பயணிக்க முடியாது பாதிப்படைந்து காணப்படுகின்றன. தங்கள் வயல்நிலங்களுக்குத் தேவையான பொருட்களை மழை காலங்களில் எடுத்துச் செல்வதற்கும் அறுவடை செய்த நெல்லை தமது வீடுகளுக்கு எடுத்து வருவதற்கும் விவசாயிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். குறித்த விவசாய



வீதிகள் உடனடியாக புனரமைப்பு செய்யப்படவேண்டும்.

அத்துடன் விவசாயிகளுக்கான காப்புறுதி திட்டமானது கட்டாயமாக்கப்படவேண்டும். இதன் மூலம் விவசாயிகள் அடையும் நட்டத்தை ஓரளவு ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும் விவசாயிகளுக்கான கடன் வசதிகளை அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் இலகுவான முறையில் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மேச்சல் தரை பிரச்சினைகள் மிகவும் பிரதானமானதாகும். கால்நடைகளுக்கான மேச்சல் தரைகளை வர்த்தமானி மூலம் அடையாளப் படுத்துவதற்கான முயற்சிகள் நீண்டகாலமாக கிடப்பில் போடப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் மாதவணை மயிலத்தமடு பிரதேசத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் செயற்பாடாகவே பார்க்கப் படுகின்றது. இதனுடைய எதிர்விளைவாக மகோயா பகுதியில் உள்ள கால்நடை பண்ணையாளர்களுடன் இராணுவத்தினர் மிகவும் இறுக்கமாக நடந்துகொள்வது தவிர்க்கப்படவேண்டும். இந்த கால்நடை பண்ணையாளர்களுக்கு எதிரான முரண் பாடுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# யாழ். பல்கலைக்கழக தமிழ் மாணவர்களை அச்சுறுத்தும் அரச படையினர்!

டிசம்பர் 12, 2023

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவரும் ஊடகவியலாளருமான இராசரத்தினம் தர்ஷனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் யாழ் மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து சுமார் 3 மணத்தியாலத்திற்கும் மேலாக விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர்

கடந்த 2022 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ். பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்தபொழுது தமிழீழ விடுதலைப்புலிகளின் பாடல் இசைக்கபட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகள் தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இழந்த தம் உறவுகளை நினைவு கூர்ந்து வணங்க ஒவ்வொரு மனிதனிற்கும் உள்ள உரிமை எம் மண்ணில் மாணவ சமூகத்திற்குக் கூட மறுக்கப்படுவதையும் அதைப் பயங்கரவாதச் செயலாகப் பார்க்கப்படுவதையும் வன்மையாகக் கண்டிப் போம்!



# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு மட்டக்களப்பில் கவன ஈர்ப்புப் போராட்டம்!

11.12.2023

சர்வதேச மனித உரிமைகள் நாள் நேற்றாகும். சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு மட்டக்களப்பில் நேற்று (10) பிற்பகல் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக நடைபெறும் மனித உரிமை மீறல்களை வன்மையாக கண்டிக்கின்றோம் என்னும் தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மனித உரிமைகள் தொடர்பான கோசங்கள் எழுப்பப்பட்டதுடன் தற்போதைய நிலையில் காணப்படும் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்தும் கருத்துகள் பரிமாறப் பட்டன.

அண்மையில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வினை தொடர்ந்து பொலிஸார் மிக மோசமான செயற்பாடுகளை முன்னெடுத்துவருவதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்தி அப்பாவி மக்களை கைதுசெய்துவருவதுடன் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் சுதந்திரத்தினையும் மறுத்துவருவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

ஆத்துடன் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் தமது மேய்ச்சல் தரை உரிமைக்காக இதுவரையில் 154 மாடுகள் கொல்லப்பட் டுள்ளதுடன் அவர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படும் நிலையில் பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாகவும் அவர்களுக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு போராட்டத்தில் கலந்துகொண்டவர்களினால் தெரிவிக்கப்பட்டது.




வுலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இதுவரையில் நீதி கிடைக்காத நிலையில் சர்வதேச நீதியை கோரியுள்ள நிலையில் அதனையே இன்று தாங்களும் வலியுறுத்திவருவதாகவும் இலங்கையின் நீதித்துறையில் தமிழர்கள் நம்பிக் கையிழந்து காணப்படும் நிலையில் சர்வதேச சமூகம் அதற்கு ஆதரவாக குரல்கொடுக்கவேண்டும்ஏ னவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# திருமலை மனித உரிமை ஆணைக்குழுக் காரியாலயம் முன் கவனயீர்ப்பு போராட்டம்!

டிசம்பர் 11, 2023

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று திருகோணமலை மனித உரிமை ஆணைக்குழு காரியாலயம் முன் கவனயீர்ப்பு போராட்டம்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (10) திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

Trinco HR Day திருகோணமலை மனித உரிமை ஆணைக் குழு காரியாலயம் முன் கவனயீர்ப்பு போராட்டம் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகளின் சங்கம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந் தனர். நீதியான சர்வதேச பொறிமுறை விசாரனை தேவை உரிமைகளே இல்லாத நாட்டில் எதற்கு மனித உரிமைகள் தினம் எமது உறவுகளை காணாமல் ஆக்கப்பட்டு பல வரு டங்கள் கடக்கின்றது நீதி இல்லை இதனால் எதற்கு இந்த மனித உரிமைகள் தினம் என இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் உறவினர்கள் இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததுடன் பல பதாகைகளை ஏந்தியவாறு கவன



யீர்ப்பில் ஈடுபட்டனர்.

# வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயம் தொடர்பில் மீண்டும் சிறீலங்கா காவல்துறை விசாரணை!

டிசம்பர் 12, 2023

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய நிர்வாகத்தினர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை (12) மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர்களின் தொன்மையான வழிபாட்டங்களுள் ஒன்றான வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு புத்தர் சிலையும் வைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றிருந்ததுடன், ஆதிசிவன் ஆலய விக்கிரகங்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தொல்பொருட்களை சேதப்படுத்தாது வழிபாடு செய்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை அழைத்த நெடுங்கேணி பொலிசார் அவர்களிடம், 2019-2020ஆம் ஆண்டு வருடாந்த திருவிழாவிற்கு அனுமதி தந்தது யார்? 2019ஆம் ஆண்டு ஏணிப்படி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியது யார்? ஏணிப்படியினை மலைக்கு கொண்டு சென்று நிறுவியவர்கள் யார்?

2019-2020ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஒலி பெருக்கியினை பயன்படுத்த அனுமதி தந்தது யார்? 2019ஆம் ஆண்டு ஆலய சூழலை அடையாளப்படுத்தும் நோக்கில் சில முக்கிய மரங்கள்



தொல்பொருள் சாராத இடங்களுக்கு வெள்ளைநிற சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது.

# மாவீரர் நினைவேந்தலில் கைதான த.தே.ம. முன்னணி அமைப்பாளருக்கும் அவரது மகனுக்கும் விளக்கமறியல் நீடிப்பு!

டிசம்பர் 13, 2023

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர், அவரது மகன் இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் இன்று புதன்கிழமை (13) உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தினை அலங்கரிக்க மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் கம்பிகள் உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

அப்போது அவர்களது வாகனத்தை மறித்த பொலிஸார், வாகன சாரதியை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், கைதான சாரதியை பார்ப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) மற்றும் அவரது மகன் ஆகியோர் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதியில் மாவீரர்களுக்காக விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர், அவர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்ததுடன், 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, கைதான நபர்களை டிசம்பர் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதன் பிரகாரம், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாரதியை பிணையில் விடுவிப்பதற்காக கடந்த வாரம் முன்நகர்வு விண்ணப்பப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேவேளை, ஏனைய இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் இருந்த இருவரும் இன்று (13) வழக்கு விசாரணைக்காக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் பீற்றர்போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.



இதன்போது, அந்த இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.க்கப்படுவதையும் வன்மையாகக் கண்டிப்போம்!

# முல்லைத்தீவு கொக்கிளாய் மனித புதைகுழி மனித எச்சங்கள் யாழில் பகுப்பாய்வு!

1டிசம்பர் 14,2023

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான பகுப்பாய்வு எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



புதைபொருள் அகழ்வுப்பணிகளை முன்னெடுத்த சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ இன்று முல்லைதீவு நீதிமன்றத்திற்கு பகுப்பாய்வு பற்றிய தகவலை தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இன்று இடம்பெற்றது.

இதுவரை நடைபெற்ற அகழ்வுப் பணிகளின் போது மீட்கப்பட்ட 40 மனித எச்சங்களின் வயது மற்றும் பாலினம் தொடர்பில் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதன்போது சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ இன்று நீதிமன் றத்திற்கு தெரி வித்தார்.

அத்துடன் திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி மீண்டும் அகழ்வுப் பணிகளை



முன்னெடுப்பது தொடர்பில் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கு விசாரணையில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னதாக அகழ்வுப்பணிகளிற்கு நிதி ஒதுக்கீடு போதியளவில் இன்மையினை காரணங்காட்டி புதைகுழி அகழ்வு மார்ச் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகத்தமிழர் பேரவையின் முயற்சி ஒடுக்குமுறை அரசாங்கத்துக்கு 'வெள்ளையடிக்கும்' செயற்பாடு!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



டிசம்பர் 13, 2023

தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளும், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மையமாகக்கொண்டு உலகத்தமிழர் பேரவையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சியை அரசாங்கத்துக்கு 'வெள்ளையடிக்கும்' செயற்பாடாகவே தாம் கருதுவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி அடுத்த ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் தமது வாக்குவங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத்தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை உருவாக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய 'இமயமலை' பிரகடனம் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

அப்பிரகடனத்தை முற்றாக நிராகரித்தும், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாட்டைக் கண்டித்தும், இவ்விடயத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியும் இன்று புதன்கிழமை (13) கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் கூறுகையில்:

பௌத்த தேரர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் நேபாளத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஏப்ரல் 27 இல் கைச்சாத்திடப்பட்ட 6 அம்சங்களை உள்ளடக்கிய 'இமயமலை' பிரகடனத்தைக் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்துள்ள உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள், அதுகுறித்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து அப்பிரகடனத்துக்கு அங்கீகாரம் கோரியுள்ளனர்.

முதன்முதலாக உலகத்தமிழர் பேரவை உருவாக்கப்பட்டபோது, அது பல்வேறு அமைப்புக்களையும் உள்ளடக்கியதோர் குடை அமைப்பாகவே காணப்பட்டது. அதன்படி அவ்வமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் அங்கம்வகித்த (பின்னர் அதிலிருந்து விலகிய) பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து இப்பிரகடனத்தைக் கண்டித்தும், விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக உலகத்தமிழர் பேரவையானது புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தம்மைக் காண்பித்துக் கொள்வது தவறு எனவும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் எம்மைச் சந்தித்து இது குறித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரியிருந்தார். இருப்பினும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்ததுடன், அதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி அவருக்குரிய பதிலும் அனுப்பிவைக்கப்பட்டது.

மாவீரர் நாளில் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு ஒன்றுகூடியவர்களுக்கு எதிராகத் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பிரயோகிக்கின்றது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

இவ்வாறு அடக்குமுறைகள் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ரணில் விக்ரமசிங்கவை மையப்படுத்தி உலகத்தமிழர் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியை அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்கும் செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அதுமாத்திரமன்றி முன்னைய காலங்களில் தமிழர்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டுவந்த உலகத்தமிழர் பேரவை, இன்னமும் அதிலிருந்து மாறவில்லை என்பதையும் இந்நகர்வு வெளிப்படுத்துகின்றது.

உலகத்தமிழர் பேரவையின் இந்த நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர், குறிப்பாக இரா.சம்பந்தனும், எம்.ஏ. சுமந்திரனும் அங்கீகரித்திருப்பதாகத் தெரிகின்றது. கடந்த காலங்களிலும் கூட்டமைப்பு உலகத்தமிழர் பேரவையுடன் மிகநெருங்கிய உறவைப் பேணிவந்திருப்பதுடன், கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாத அதன் தொடர்ச்சியாகவே பேரவை இயங்கிவருகின்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்படுவதாகக் கடந்த காலங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன. அதன் விளைவாகவே கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் கூட்டமைப்பின் வாக்குவங்கி வெகுவாகச் சரிவடைந்தது.

எனவே எதிர்வரும் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் கூட்டமைப்பு 'நல்ல பிள்ளையாக' செயற்பட முயற்சிக்கின்றது.

அதன்படி தமது வாக்குவங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத்தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபடுகின்றது.

'இமயமலை' பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 6 அம்சங்களும் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல்லது அண்மையில் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூர்ந்தமைக்காகப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கோ எவ்வகையிலும் பயனளிக்காது.

மாறாக அவை தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிட்ட விதத்தில் இடம்பெற்றுவரும் இனவழிப்பை மூடிமறைத்து, அதனை நேர்மறையான விதத்தில் காண்பிப்பதற்கும், தற்போதைய அரசியலமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதன் ஊடாக தமிழ்மக்களுக்குப் போலியான நம்பிக்கையைக் கொடுப்பதற்கும், பொறுப்புக்கூறலுக்கு முற்றுப்புள்ளிவைத்து போலியான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முழுமையான அங்கீகாரத்தை வழங்குவதற்குமே பங்களிப்புச்செய்யும்.

எனவே இதனை முற்றாக நிராகரிக்கவேண்டுமெனவும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கநேரும் என்ற பாடத்தை அவர்களுக்குப் புகட்டவேண்டும் எனவும் தமிழ்மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# தமிழீழ வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த பலகோடி பெறுமதியான நகைகளுக்கு நேர்ந்ததென்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

டிசம்பர் 13, 2023

தமிழீழ வைப்பகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட பலகோடி பெறுமதியாக தங்க நகைகளுக்கு நேர்ந்ததென்ன, தமது நகை தமக்கு கிடைக்கும் என தமிழ் மக்கள் இன்றும் நம்பிக்கை



கொண்டுள்ளார்கள். ஆகவே கைப்பற்றிய தங்கங்களை இலங்கை அரசாங்கம் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் வன்னி பகுதியில் இருந்து எமது தேசத்தின் அரசு கோலோச்சிய பகுதியில் இருந்து பல கோடி பெறுமதியான தங்கங்கள் மீட்கப்பட்டு அவை கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்டிருந்த மற்றும் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த தங்கங்கள் பாதுகாப்பான முறையில் உரியவர்களின் பெயர் மற்றும் முகவரி குறிக்கப்பட்டு, பாதுகாப்பாக பொதியிடப்பட்டிருந்ததாக அரசாங்கம் அப்போது அறிவித்திருந்தது.

இவ்வாறு இலங்கை அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் தமக்கு மீளவும் கிடைக்கும் என தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள்.ஆனால் இன்று வரை உரியவர்களுக்கு அவர்களின் தங்கம் கையளிக்கப்படவில்லை.தமிழீழ வைப்



பகத்தில் அடகு வைத்த தங்கம் பற்றி வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த பெண்மணி ஒருவர் என்னை தொடர்புக்கொண்டு "தமது நகைகளுக்கு நேர்ந்தது என்ன, அவை கிடைக்காது' என்று வினவினார்.

கைப்பற்றப்பட்ட தங்கங்களுக்கு என்ன நேர்ந்தது. ஏன் உரியவர்களிடம் கையளிப்படவில்லை.ஆகவே உரியவர்களிடம் அவர்களின் நகைகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன் என்றார்.




# கனடா முழுவதும் போலி நாணயம் தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

நவம்பர் 30, 2023

கனடா முழுவதும் போலி நாணயம் தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!

கனடா முழுவதிலும் போலி நாணயக் குற்றிகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கியூபெக்கில், ஏற்கனவே 26000 நாணயக் குற்றிகள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் போலி நாணயக்குற்றிகள் ஒன்ராரியோவில் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவில் இந்த நாணயக் குற்றிகள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.







இரண்டு டொலர் பெறுமதியான நாணயக் குற்றிகளே இவ்வாறு போலியாக தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


ஒன்ராரியோவிலும் கியூபெக்கிலும் மீட்கப்பட்ட போலி நாணயக் குற்றிகள் ஒரே இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த இரண்டு நாணயக் குற்றிகளிலும் அச்சிடப்பட்ட ஆண்டாக 2012ம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

# ரொரான்ரோவில் நடைபெற்ற தேர்தலில் பார்த்தி கந்தவேள் வெற்றி!

டிசம்பர் 30, 2023

ஒன்ராரியோ ரொரன்ரோவில் நடைபெற்ற தேர்தலில் பார்த்தி கந்தவேள் என்பவர் வெற்றியீட்டியுள்ளார்.



ஸகாப்ரோ தென்மேற்கு நகராட்சி இடைத் தேர்தலில் அவர் இவ்வாறு வெற்றியீட்டியுள்ளார்.

பார்தி கந்தவேள் 4641 வாக்குகளைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பார்தி, ரொரன்ரோ பாடசாலை சபையின் பொறுப்பாளராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இடைத் தேர்தலில் பார்தியை எதிர்த்து போட்டியிட்ட கெவின் ரூபசிங்க என்வர் 3854 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நகராட்சி மன்ற உறுப்பினராக கடமையாற்றி வந்த கெரி க்ராபொர்ட் பதவியை ராஜினாமா செய்ததனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பார்தி வெற்றியீட்டியுள்ளார்.




பார்தி ஓர் ஆசிரியர் என்பதுடன் அவரது மனைவி அனுவும் ஓர் கல்வியியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரொரன்றோவில் சட்டவிரோத வாகனத் தரிப்பு அபராதம் அதிகரிப்பு!

டிசம்பர் 01, 2023

ரொரன்ரோவில் சட்டவிரோத வாகனத் தரிப்பு அபாராதம் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை அல்லது தனியார் இடங்களில் சட்டவிரோதமான முறையில் வாகனங்களை தரித்து நிறுத்துவோரிடம் அபராதம் அறவீடு செய்யப்பட உள்ளது.

இதுவரையில் இவ்வாறு சட்டவிரோதமான வாகனத்தை நிறுத்துவோரிடமிருந்து 30 டொலர்கள் அபராதம் அறவீடு செய்யப்பட்டது.

இனி வரும் காலங்களில் இந்த அபராதத் தொகை 75 டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் முதல் இந்த கட்டண அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அபராதத் தொகை குறைவானதாக காணப்பட்டதனால் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதில் சிரமங்கள் நிலவி வருவதாக காவல்துறையிர் தெரிவிக்கின்றனர்.



இதன் காரணமாக அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# கனடாவின் உணவு விலை அறிக்கை 2024!

டிசம்பர் 07, 2023

கனடாவில் எதிர்வரும் 2024ம் ஆண்டில் உணவுப் பொருட்களின் விலைகள் எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பில் ஆய்வு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொதுவாக மக்கள் அடுத்த ஆண்டில் உணவுப்பொருட்களின் விலை குறையவடைய வேண்டுமென கோரி வருகின்றனர்.

எனினும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் சடுதியாக குறையாது என தெரிவிக்கப்படுகின்றது.

உணவுப் பொருள் விலைகள் எதிர்வரும் ஆண்டிலும் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எனினும், பணவீக்கம் குறைவடையும் நிலையில் தற்போதைய விலைகளை விடவும் விலைகள் குறையும் சாத்தியம் உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் உணவுப் பொருட்களின் விலைகள் 2.5 வீதம் முதல் 4.5 வீதம் வரையில் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இறைச்சி, மறக்கரி மற்றும் பேக்கரி உற்பத்திகள், என்பன வற்றின் விலைகள் அதிகளவில் உயர் வடையும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் தற்போதைய உணவுச் செலவுகள் சராசரியாக 700 டொலர்களினால் உயர்வடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கனடாவுக்கு வரும் சர்வதேச மாணவர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் இனி 20,635 டொலர்கள் வைத்திருக்கவேண்டும்!

டிசம்பர் 09, 2023

2024, ஜனவரி 1 ஆம் திகதி முதல், கனடாவில் கல்வி கற்கும் சர்வதேச மாணவர்கள் வாரம் ஒன்றிற்கு 20 மணி நேரம் வரைதான் வேலை செய்ய அனுமதி என இப்போதுதான் ஒரு தகவல் வெளியானது.

தற்போது, அதற்குள் இன்னொரு தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, சர்வதேச மாணவர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகை வைத்துள்ளதைக் காட்டவேண்டும் என ஒரு விதி உள்ளது.

அந்த தொகை தற்போது கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அது தொடர்பாக கனேடிய புலம்பெயர்தல் அமைச்சரான மார்க் மில்லர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், 2024, ஜனவரி 1 முதல், சர்வதேச மாணவர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் வைத்திருக்கவேண்டிய தொகை, 10,000 கனேடிய டொலர்களிலிருந்து 20,635 டொலர்களாக உயர்த்தப்பட உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச மாணவர்கள் நலனின் அதீத அக்கறை கொண்டுள்ள மார்க் மில்லர், மாணவர்கள் கனடாவில் பணக்கஷ்டத்தை அனுபவிக்கக்கூடாது என்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்!

மேலும், கனடாவில் வீடுகள் பற்றாக்குறைக்கு சர்வதேச மாணவர்கள்தான் காரணம் என சில அரசியல்வாதிகள் கூறியிருந்ததற்கு கடும் விமர்சனங்கள் எழுந்தன.

அதனால் மார்க் மில்லர் கடும் கடுப்படைந்துள்ளார் போலும், வீடுகள் தட்டுப்பாட்டுக்கு சர்வதேச மாணவர்களை குறை சொல்வது தவறுதான், அதே நேரத்தில், தங்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூடகொண்டுவராமல் கனடாவுக்கு வரலாம் என்று சர்வதேச மாணவர்களிடம் கூறுவதும் தவறுதான் என்று



அவர் கூறுவதிலிருந்து, அவர் எந்த அளவுக்கு விமர்சனங்களால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

# ஒன்ராரியோ மாநிலத்தின் ரொரான்ரோவில் கைத்தொலைப்பேசிகளை தடை செய்யத் திட்டம்!

டிசம்பர் 12, 2023

ஒன்ராரியோ மாகாணத்தின் ரொரான்ரோவில் கைத்தொலைப்பேசிகளை தடை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ரொரான்ரோ பாடசாலை சபையினால் இது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யோசனைத் திட்டத்தை வரவேற்பதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் விசேட கல்வித் தேவைகளுக்கு மட்டும் செல்பேசி பயன்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

எனினும் தற்பொழுது அதிகளவில் சமூக ஊடகப் பயன்பாடு உள்ளிட்ட பல காரணிகளினால் செல்பேசிகளினால் பாதக விளைவுகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இளம் தலைமுறையினரின் உளச்சுகாதாரம் வெகுவாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பாடசாலைகளில் கைத்தொலைப்பேசி பயன்பாட்டை மட்டுப்படுத்த அல்லது தடை செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ரொரபன்ரோ பாடசாலை சபை தெரிவித்துள்ளது.



# இந்தியாவை தடுப்பதற்காகவே வெளிப்படையாக குற்றம் சாட்டினோம்; கனேடியப் பிரதமர்!

நவம்பர் 13, 2023

கனடாவில் கனேடியர் ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக குற்றம் சாட்டியதால், இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவில் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், அப்படி வெளிப்படையாக குற்றம் சாட்ட என்ன காரணம் என்பது குறித்து விளக்கமளித்துள்ளார் அவர்.

கனேடியர் கொலையின் பின்னணியில் இந்தியா இருப்பதாக நம்பத்தகுந்த எங்களிடம் உள்ளன என்பதை வெளிப்படையாக கூறுவதன் மூலம், இந்தியா இனிமேலும் அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காகவே, அதை சத்தமாக, வெளிப்படையாக கூறினோம் என்று கூறியுள்ளார் ட்ரூடோ.

இனிமேல் அப்படிஎதுவும் செய்யக்கூடாது என்ற பயம் இந்தியாவுக்கு ஏற்படவேண்டும் என்ற காரணத்தால்தான் அப்படி செய்தோம் என்று கூறிய ட்ரூடோ, தங்களுக்கும் அதேபோன்றதொரு நிலைமை ஏற்படலாம் என கனேடியர்கள் பலர் கவலைப்பட்டதாலேயே, அப்படி ஒரு அறிக்கையை வெளியிடவேண்டியதாயிற்று என்றும் கூறியுள்ளார்.



# கனடாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

டிசம்பர் 14, 2023

கனடாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

முக்கியமான நகரங்கள் பலவற்றில் வீடற்றவர்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வீடற்றவர்கள் தற்காலிக முகாம்கள் அல்லது கூடாரங்களில் தங்கி இருப்பதாகவும் இவர்கள் பல்வேறு விபத்துக்களை சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் தீ விபத்து சம்பவங்கள் பதிவாகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் நிலவி வரும் கடும் குளிரான காலநிலையின் மத்தியில் இந்த பிரச்சனை அதிகரித்துள்ளது.

உரிய கட்டமைப்பை கொண்டிராத கூடாரங்கள் மற்றும் முகாம்களில் குளிரை கட்டுப்படுத்துவதற்காக மூட்டப்படும் தீ, விபத்துக்களாக மாறி விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடா முழுவதும் சுமார் மூன்று இலட்சம் பேர் வீடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது






## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## யாழ். சுழிபுரத்திலிருந்து சென்ற ஒரு குடப்பத்தை சேர்ந்த 07 பேர் தமிழிழகத்தில் தஞ்சம்!

நவம்பர் 27, 2023

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 07 பேர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தமிழகம் சென்றுள்ளனர்.

தனுஷ்கோடிக்கு அண்மித்த பகுதியில் இன்றைய நாள் திங்கட்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது,



இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி காணப்படுவதால், தொடர்ந்து அங்கு வாழ முடியவில்லை என்பதால், தமிழகம் வந்துள்ளோம் எனவும், இதற்காக மன்னாரில் இருந்து தனுஷ்கோடி பகுதியில் எம்மை இறக்கி விட படகோட்டிக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பணம் வழங்கியதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

## திருச்சியில் பலாயிரக்கணக்கில் திரண்ட மக்கள் மத்தியில் மாவீரர் நினைவேந்தல்!

நவம்பர் 27 , 2023

நாம் தமிழர் கட்சி சார்பில் மாவீரர் நாளை திருச்சி ஜி கார்டன் திடலில் பேரெழுச்சியாக நினைவேந்தப்பட்டது.

மாநாடுபோல் பல்லாயிரக்கணக்கில் திரண்ட கட்சி மற்றும் தமிழ் உணர்வாளர்கள் மாவீரர் தெய்வங்களின் ஈகத்தைப் போற்றும் விதமாக மெழுகுதிரி ஏந்தி வீரவணக்கம் செலுத்தினர்.

முன்னதாக கட்சி கொடி ஏற்றி நிகழ்வை தொடங்கி வைத்த தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தாயக நேரப்படி மாலை 6:07 க்கு ஈகைச்சுடரினை ஏற்றி, பின் சிறப்புரை ஆற்றினார்.








## மதுரையில் மாவீரர் நாள் நினைவேந்தல்!

நவம்பர் 27 , 2023

மதுரையில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் மாவீரர் நாள் நிகழ்வு நடைபெற்றது.

கட்சியின் நிறுவுனர் சட்டமன்ற உறுப்பினர் பன்றிருட்டி தி. வேல்முருகன் தலைமைதாங்கி ஈகைச்சுடர் ஏற்றி வீரவணக்க உரை நிகழ்த்தினார். சிறப்பு அழைப்பாளராக தமிழின உணர்வாளர் மும்பை வழக்கறிஞர் ஸ்டாலின் சிறப்புரை நிகழ்தினார், அத்துடன் பொட்டு அம்மான் எழுத்தும் பேச்சும் என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது.







## அரசபாளையத்தில் நடைபெற்ற மாவீரர் நாள்!

நவம்பர் 27, 2023

தமிழீழப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளுக்கு அரசபாளையத்தில் மாவீரர் நாள் அகவணக்கம் செலுத்தப்பட்டது. மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு பெருந்திரளான மக்கள் மலர் தூவி வீரவணக்கம் செய்தனர். தமிழீழ விடுதலையை நெஞ்சில் ஏந்தி களமாடிய வீரர்களுக்கு பொதுச் சுடர் ஏற்றி மருத்துவர் தாயப்பன் அவர்கள் மாவீரர்களின் ஈகங்கள், வீர களமுனைச் செய்திகள், ஈழ வரலாற்றில் தமிழினத்தின் எழுச்சிகள் பற்றி விரிவான உரை ஆற்றி, மாண்ட விடுதலை வீரர்களை தமிழர்களின் நெஞ்சில் படமாகச் செதுக்கினார். தொடர்ந்து மாவீரர்களின் எழுச்சி பாடல்களுக்கு கலைநிகழ்வுகள் நடந்தேறின. நிகழ்சிகளை தமிழ் தமிழர் இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.






# தமிழ்த்தேசியப் பேரியக்கத்தினால் தமிழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல்!

நவம்பர் 27, 2023

தமிழ்த்தேசிய மாவீரர் நாளில் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் சார்பில் தமிழகத்தின் பல்வேறு நினைவேந்தப்பட்டது. தஞ்சையில் இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் மாலை 6:00 மணியளவில் மாவீரர் நாள் 2023 சிறப்பாக நடைபெற்றது. மாவீரர் நாள் நிகழ்வு தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தஞ்சை மாவட்ட செயலாளர் தோழர் நா.வைகறை தலைமை தாங்கினார். மாவீரர் நாள் சிறப்புரையாக தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் ஐயா பெ.மணியரசன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இதேபோன்று மதுரை, ஓசூர் போன்ற பல்வேறு இடங்களில்







# புதுச்சேரி கப்டன் மில்லர் அரங்கில் மிக எழுச்சியுடன் தமிழீழ மாவீரர் நாள் 2023!

நவம்பர் 27, 2023

புதுச்சேரி திராவிடர் விடுதலைக் கழகம் கப்டன் மில்லர் அரங்கில் மிக எழுச்சியுடன் தமிழீழ மாவீரர் நாளை நடத்தியது. அற்புதம் அம்மாள் புலிக்கொடியை ஏற்றி வைத்தார்

தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு.உ.தனியரசு அவர்கள் தியாகச் சுடரினை ஏற்றி வைத்து உரையாற்றினார். மற்றும் தோழர் லோகு ஐயப்பன்,அற்புதம் அம்மாள் மற்றும் தேவர் அண்ணா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியாக 'பாசறைப் பட்டறை' யின் தயாரிப்பில் உருவான 'என்ர மகன் எழிலன்' குறும்படமும் திரையிடப்பட்டது.







# "வெள்ளத்தில் மிதக்கிறது சென்னை மீட்பும் பணிகளை விரைவுபடுத்துக" தமிழக அரசுக்கு இராமதாஸ் வலியுறுத்தல்!

நவம்பர் 30, 2023





சென்னையில் கனமழை தொடரும் நிலையில், மீட்பு மற்றும் நிவாரணபணிகளை தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் விரைவுபடுத்த வேண்டும். மழை - வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று (நவ.30) வெளியிட்ட அறிக்கையில், "சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்றிரவு பெய்த மழையால், மாநகரத்தின் பெரும்பான்மையான பகுதிகள் வெள்ளக்காடாக மாறியிருக்கின்றன. சாலைகளில் வெள்ளம், வீடுகளுக்குள் தண்ணீர், போக்குவரத்து பாதிப்பு என பல வழிகளில் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மழை பாதிப்புகளை சரி செய்ய போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது கண்டிக்கத்தக்கது.

சென்னை பெருநகரப் பகுதிகளில் நேற்று மாலை 6 மணிக்குத் தொடங்கி 9 மணி வரை இடைவிடாமல் பெய்த கனமழை மிகக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பான்மையான இடங்களில் 10 முதல் 12 செ.மீ வரை மழை கொட்டியுள்ள நிலையில், மிக அதிக அளவாக மீனம்பாக்கத்தில் 26 செ.மீ அளவுக்கும், ஆவடியில் 19 செ.மீ அளவுக்கும் மழை கொட்டியுள்ளது. மிகக்குறுகிய காலத்தில் இந்த அளவுக்கு மழை பெய்திருப்பது எதிர்பார்க்கப்படாத ஒன்று தான் என்றாலும், கூட அதனால் பல இடங்களில் ஏற்பட்ட மழை வெள்ளம் பல மணி நேரம் ஆகியும் வடியாதது பாதிப்பை அதிகரித்துள்ளது.

சென்னை புறநகர் பகுதியான ஆவடியில் தொடங்கி சென்னை கொளத்தூர், அம்பத்தூர், அண்ணா நகர், கோடம்பாக்கம், அசோக்நகர், மேற்கு மாம்பலம், தியாகராயநகர், மயிலாப்பூர் என மாநகரத்தின் பெரும்பான்மையான இடங்களில் பல அடி ஆழத்திற்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனால், இரு சக்கர ஊர்திகள், மிதிவண்டிகள் ஆகியவற்றில் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னையின் பெரும்பான்மையான இடங்களில் தாழ்வான குடியிருப்புப் பகுதிகளில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்திருக்கிறது. அதனால், அப்பகுதிகளில் உள்ள வாழும் மக்கள், வீடுகளை விட்டு வெளியே வர முடியாமல் தவித்து வருகின்றனர். அவர்களால் உணவுப் பொருட்கள், காய்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கூட வாங்க முடியவில்லை. சாலைகளில் தேங்கி நிற்கும் மழை நீரால் போக்குவரத்து தடைபட்டிருப்பதால் பல குடியிருப்பு பகுதிகள் தீவாக மாறியிருக்கின்றன.

மழை நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் அமைச்சர்கள் களத்திற்கு செல்ல வேண்டும் என்று முதலமைச்சர் ஆணையிட்டதாக செய்திகள் வெளியான போதிலும் களத்தில் அதற்கான அறிகுறிகள் தென்படவில்லலை. சென்னை மாநகரத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அவர்களின் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டாலும் மற்ற பகுதிகளை மாநகராட்சியோ, அமைச்சர்களோ கண்டுகொள்ளவில்லை. மழை பாதிப்புகள் குறித்து மாநகராட்சி அறிவித்துள்ள தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தாலும் உடனடியாக நடவடிக்கை இல்லை.

சென்னையில் பெய்துள்ள மழை ஒப்பீட்டளவில் அதிகம் இல்லை. அதிலும் குறிப்பாக கடந்த இரு ஆண்டுகளாக சென்னை மாநகரத்தில் 800 கி.மீக்கும் கூடுதலான தொலைவுக்கு மழைநீர் வடிகால்கள் புதிதாக அமைக்கப்பட்ட நிலையில், சென்னையில் மழைநீர் தேங்காது என்று பலரும் நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த நம்பிக்கை நேற்றைய மழையில் பொய்த்துப் போயிருக்கிறது. மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படுவதற்கு முன்பாக ஒவ்வொரு பகுதியிலும் எந்த அளவுக்கு தண்ணீர் தேங்கி நின்றதோ, இப்போதும் அதே அளவுக்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது. நேற்று மாலை தொடங்கி இரவு வரை மிக அதிக மழை பெய்தாலும், இரவில் மழை பெய்யவில்லை. ஆனாலும், மழை நீர் வடியவில்லை. இன்று காலை முதல் மீண்டும் கடுமையான மழை பெய்யத் தொடங்கியுள்ள நிலையில், அடுத்து வரும் நாட்களில் சென்னை மாநகரின் நிலை என்னவாகுமோ? என்ற அச்சமும், கவலையும் ஏற்படுகிறது.


சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் முதல் கட்டமாக முடிக்கப்பட்ட பிறகு இப்போது தான் ஓரளவு கனமழை பெய்துள்ளது. இந்த மழையால் பெருக்கெடுத்த தண்ணீரை வெளியேற்ற மழைநீர் வடிகால்கள் திணறுகின்றன என்பது தான் உண்மை. எனவே, மழைநீர் வடிகால்களின் அமைப்பு, அமைக்கப்படும் முறை ஆகியவற்றை ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தியிருந்தேன். அதையே மீண்டும் வலியுறுத்துகிறேன். மழைநீர் வடிகால் கட்டமைப்புகளை ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையில் கனமழை தொடரும் நிலையில், மீட்பு மற்றும் நிவாரணபணிகளை தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் விரைவுபடுத்த வேண்டும். மழை, வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

# மிச்சுவாங் சூறாவளியால் வெள்ளத்தில் மூழ்கிய சென்னை!

டிசம்பர் 05, 2023

மிச்சுவாங் சூறாவளி இன்று செவ்வாய்க்கிழமை கரைக் கடக்கவுள்ள நிலையில் தென்கிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தில்குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர்.



சூறாவளி புயல் மணிக்கு 90-100 கிலோமீட்டர் (மணிக்கு 56-62 மைல்) வேகத்தில் காற்று வீசியது.

நிலச்சரிவு செயல்முறை தொடர்கிறது மற்றும் அடுத்த மூன்று மணி நேரத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆந்திரப் பிரதேச மாநிலம் பாபட்லா நகருக்கு அருகே உள்ளூர் நேரப்படி மதியம் மதியம் சூறாவளி கரையைத் தாக்கியதால், சாதாரண கடல் மட்டத்திலிருந்து 1.5 மீட்டர் (கிட்டத்தட்ட ஐந்து அடி) உயர அலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று வானிலை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த சூறாவளி ஏற்கனவே தமிழ்நாடு மாநிலத்தில் கரையோரத்தில் மேலும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அங்கு தெருக்களில் மார்பளவு நீர் பெருக்கெடுத்து ஓடியது. பெருவெள்ளத்தில் கார்கள் மிதப்பதும், வீடுகள் வெள்ளத்தில் மூழ்குவதும், ஒரு முதலை கூட நகரின் தெருக்களில் நீந்துவதும் காணப்பட்டது.

மரம் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார், மற்றொருவர் தண்ணீரில் மின் கம்பிகளால் மின்சாரம் தாக்கி இறந்தார், மற்றவர்கள் நீரில் மூழ்கி இறந்ததாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை தமிழ்நாட்டில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



அதே நேரத்தில் கடலோரப் பகுதியில் வாழ்ந்த ஆயிரக்கணக்



கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்தியாவின் பரபரப்பான பயண மையங்களில் ஒன்றான சென்னை விமான நிலையம் ஓடுபாதை வெள்ளத்தில் மூழ்கியதால் செயல்பாடுகளை நிறுத்த வேண்டியிருந்தது.

அதே நேரத்தில் பள்ளிகள் மற்றும் பிற கற்றல் மையங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுடன் நகரின் நான்கு மாவட்டங்களில் மூடியுள்ளன.

மிச்சுவாங் சூறாவளி செவ்வாய்க்கிழமை மாலையில் சூறாவளியின் வீச்சுக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதால் ஏற்படும் பருவநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமடைந்து வருவதால் இதுபோன்ற புயல்கள் அதிக சக்தி வாய்ந்ததாக மாறுவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# சூறாவளியால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின்சாரம் இன்றித்தவிக்கும் மக்கள்!

டிசம்பர் 06, 2023

புயல், அதிகனமழை காரணமாகபாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின்விநியோகம் நிறுத்தப்பட்டது. மழை காரணமாக, பல துணைமின் நிலையங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அதேபோல், புறநகர்பகுதிகளில் சில இடங்களில் மரகிளைகள் முறிந்து மின்சார கம்பிகள் மீது விழுந்துள்ளன. மின்வாரியம் தரப்பில் 15 ஆயிரம்பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், மழைவிட்டதும் படிப்படியாக மின்விநியோகம் தொடங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால், நேற்று முன்தினம் இரவுமழை விட்ட பிறகும் நேற்று இரவுவரை பல இடங்களில் மின்விநியோகம் வழங்கப்படவில்லை. இதனால், பொதுமக்கள் கடும்சிரமத்துக்கு ஆளாகினர். குறிப்பாக, வீடுகளில் கிணறு மற்றும் ஆழ்துளை குழாய் கிணறுகளில் இருந்துதண்ணீர் எடுக்க முடியாமல் அவதிப்பட்டனர். அதேபோல், வீடுகளில் தண்ணீரை சுத்திகரிக்க ஃபில்டர்களை பொருத்தியவர்களும் மின்சாரம் இல்லாததால் அவற்றை இயக்க முடியவில்லை. இதனால், குடிக்கதண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர். கடைகளில் தண்ணீர் கேன்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

மின்சாரம் இல்லாததால் வங்கி ஏடிஎம் மையங்கள், யுபிஐ பணப் பரிவர்த்தனைகள் பாதிக்கப்பட்டன. இதனால், பலர் வங்கிக் கணக்கில் பணம் இருந்தும் கையில் ரொக்கமாக இல்லாததால் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாமல் சிரமப்பட்டனர். வங்கிகளுக்கு விடுமுறை விடப்பட்டதால் வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று பணம் எடுக்க முடியாமல் அவதிப்பட்டனர். மேலும், மின்சாரம் இல்லாததால் ஏடிஎம் மையங்களும் செயல்படவில்லை. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 80 சதவீதம் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார். ஆனால், உண்மையில்பல இடங்களில் இன்னும் மின்விநியோகம் தொடங்கப்படவில்லை. மின்விநியோகம் நிறுத்தப்பட்டதால் பல இடங்களில் செல்போன்மற்றும் இணையதள சேவை பாதிக்கப்பட்டது. இதனால், தகவல் பரிமாற்றம் கடுமையாக பாதிக்கப்பட்டது. அவசரத்துக்குகூட உறவினர்களையும், நண்பர்களையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஐ.டி. நிறுவன ஊழியர்கள் வீட்டில் இருந்தபடி பணிபுரிய முடியாமல் தவித்தனர்.

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் முதல் கட்டமாக முடிக்கப்பட்ட பிறகு இப்போது தான் ஓரளவு கனமழை பெய்துள்ளது. இந்த மழையால் பெருக்கெடுத்த தண்ணீரை வெளியேற்ற மழைநீர் வடிகால்கள் திணறுகின்றன என்பது தான் உண்மை. எனவே, மழைநீர் வடிகால்களின் அமைப்பு, அமைக்கப்படும் முறை ஆகியவற்றை ஆய்வு செய்து, தேவை



யான மாற்றங்களை செய்ய வேண்டும் என்று ஏற் கனவே வலியுறுத்தியிருந்தேன். அதையே மீண்டும் வலி யுறுத்துகிறேன். மழைநீர் வடிகால் கட்டமைப்புகளை ஆய்வு செய்து, தேவையான மாற்றங்களை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையில் கனமழை தொடரும் நிலையில், மீட்பு மற்றும் நிவாரணபணிகளை தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் விரைவுபடுத்த வேண்டும். மழை, வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

# ஓய்வின்றி உழைத்துவரும் தூய்மைப் பணியாளர்கள்!

டிசம்பர் 08, 2023

முக்கிய சாலைகளில் வெள்ளநீர் வடிந்த நிலையில், அப்பகுதிகளில் மாநகராட்சி சார்பில் நேற்று தீவிர தூய்மைப் பணி தொடங்கியது. இதற்காக தூய்மைப் பணியாளர்கள் ஓய்வின்றி உழைத்து வருகின்றனர். சென்னை மாநகரப் பகுதியில் பெய்த வரலாறு காணாத மழை காரணமாக மாநகரமே கடந்த 4, 5 தேதிகளில் ஸ்தம்பித்தது. பல்லாயிரக்கணக்கான வீடுகள் மற்றும் கடைகளில் கழிவுநீர் கலந்த வெள்ளநீர் புகுந்தது.

மழையால் மாநகராட்சியின் பேட்டரி வாகனங்கள் நீரில் மூழ்கியதாலும், கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய குப்பை கொட்டும் வளாகங்களுக்கு லாரிகள் செல்ல முடியாத அளவுக்கு சாலைகளில் மழை நீர்தேங்கி இருப்பதாலும், வீடு வீடாக குப்பை சேகரிப்பை கடந்த 3-ம் தேதி முதல் மாநகராட்சி நிர்வாகம் நிறுத்தி இருந்தது. இதனால் பொதுமக்கள் ஆங்காங்கே பொது இடங்கள், சாலையோர பகுதிகள், காலி இடங்களில் குப்பைகளை கொட்டி வந்தனர். இதனால் மாநகரில் பல இடங்களில் குப்பை குவியல்கள் அதிக அளவில் இருந்தன.

மேலும் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்ததால் சேதமடைந்த சோபா, மெத்தை, துணிகள் போன்றவற்றை பொதுமக்கள் வெளியில் கொட்டி வருகின்றனர். மரங்கள் விழுந்து ஏற்பட்ட குப்பையும் ஆங்காங்கே சாலையோரங்களில் கிடக்கின்றன. தற்போது மழைநீர் வடிந்துவரும் நிலையில் நேற்று முதல் தீவிர தூய்மைப் பணியை மாநகராட்சி தொடங்கியுள்ளது. இப்பணி களை தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என். மகேசன் நேரில் ஆய்வு செய்தார். சாலையோரங்களில் 4 நாட்களாக தேங்கிக் கிடந்த வீட்டு குப்பை, வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட குப்பைகள் போன்றவற்றை தூய்மைப் பணியாளர்கள் சேகரித்து வாகனங்களில் எடுத்துச் சென்று அகற்றினர்.



மேலும் சேறு, சகதிகளையும் அகற்றி அப் பகுதிகளில் பிளீச்சிங் பவுடர்களை தூவினர். கோவை மாநகராட்சி பணியாளர்கள் புளியந்தோப்பு பகுதியில் தூய்மைப் பணிகளை மேற்கொண் டனர். மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு உணவு ஏதும் வழங்கப்படவில்லை என வருத்தம் தெரிவித்தாலும், சென்னை மீட்கும் பணிக்காக உழைக்கிறோம் என்று பெருமையாக கூறினர். தீவிர தூய்மைப் பணி நேற்று தொடங்கினாலும், அவர்கள் கடந்த 4 நாட்களாகவே ஓய்வின்றி உழைத்து வரு கின்றனர்.

# உலக செய்திகள்

## உலகில் மிகப்பெரிய பனிப்பாறைஉருகுவதால் ஏற்படப்போகும் அபாய எச்சரிக்கை!

நவம்பர் 27, 2023



அண்டார்ட்டிக்காவில் இருந்து நியூயோர்க் மாநகரை விட மூன்று மடங்கு பெரிய பனிப்பாறை ஒன்று பிரிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உலகின் மிகப்பெரிய பனிப்பாறையால் தெற்கு ஜோர்ஜியா தீவில் பாதிப்பு ஏற்படலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

1986 ஆம் ஆண்டு அண்டார்டிகாவில் இருந்து பிரிந்த உலகின் மிகப் பெரிய பனிப்பாறையான ஏ23 - ஏ 30 ஆண்டுகளின் பின் முதல் முறை நகர ஆரம்பித்துள்ளது.

சுமார் ஒரு ட்ரில்லியன் மெட்ரிக் தொன் எடையுள்ள இந்த பாறையானது, பலத்த காற்று மற்றும் நீரோட்டங்களின் உதவியால், அண்டார்டிக் தீபகற்பத்தின் வடக்கு முனையை கடந்து வேகமாக நகர்ந்து வருகிறது.

அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்களும் பனிப்பாறை நகர்வதை உறுதி செய்துள்ளது.

பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே, பனிப்பாறை நிபுணர் ஒலிவர் மார்ஷ் கூறும் போது, “உலகின் மிகப்பெரிய அளவில் உள்ள இந்த பனிப்பாறையை நகர்த்தும்போது, அதனை பார்ப்பது அரிது. எனவே விஞ்ஞானிகள் அதன் பாதையை உன்னிப்பாகக் கவனித்தது வருகிறார்கள்” என்றார்.

இந்த இராட்சத பாறை சற்று ஆவியாகி உள்ளதால், எடை குறைந்து காற்று மற்றும் கடல் நீரோட்டம் குறைந்து அட்லாண்டிக் பெருங்கடலின் தெற்கு நோக்கி நகர்கிறது. இது தெற்கு ஜோர்ஜியா தீவினை நோக்கி நகர்ந்து வருகிறது.

அந்த தீவிற்கு இந்தப் பனிப்பாறை சென்றால், அண்டார்டிகாவின் வனவிலங்குகளுக்கு சிக்கலை ஏற்படுத்தும். பல்லாயிரம் உயிரினங்கள், பென்குயின்கள் மற்றும் கடற்பறவைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## காசா மண்ணில் மீண்டும் சாவு ஓலம் குண்டுமழையால் குவியும் அப்பாவி மக்களின் உடல்கள்!

டிசம்பர் 02, 2023

போர் நிறுத்தம் முறிவடைந்து காசா மீதான தாக்குதலை நேற்று (01) ஆரம்பித்த இஸ்ரவேல் படையினர் நடத்திய குண்டுமழையில் பெண்கள் குழந்தைகள் என 178 பேர் கொல்லப்பட்டதுடன் 500 ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று காலை 8.00 மணி முதல் 178 பேரின் உடல்கள் கிடைத்துள்ளதாகவும், மேலும் 589 பேர் காயமடைந்துள்ளதாகவும் காசா மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கில் உள்ள பெய்ட் லாஹியா நகரில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனை நேற்று அதிகாலையில் இருந்து இஸ்ரவேலிய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட 54க்கும் மேற்பட்டோரின் உடல்கள் கொண்டுவரப்பட்டதாக தெரிவித்துள்ளது. காசா நகரின் மீது இஸ்ரவேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட முப்பது பேரின் உடல்கள், பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் பெண்கள், காசாவில் உள்ள பாப்டிஸ்ட் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன.

தெற்கில் உள்ள மருத்துவமனைகளும் டசின் கணக்கில் உயிரிழப்புகள் இடம்பெற்றதாக தெரிவித்துள்ளன. இஸ்ரவேலிய படையினர் நிலம், கடல் மற்றும் வான்வழியாக, காசா பகுதியின் வடக்கு, மையம் மற்றும் தெற்கில் வெவ்வேறு பகுதிகளில் குண்டுவீசித் தாக்கியுள்ளனர், இதன் விளைவாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்ட



துடன் பெருமளவானோர் காயமடைந்துள்ளனர்.

## சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை மீறி சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது!

டிசம்பர் 05, 2023

சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளையும் மீறி இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய விவகாரங்களிற்கான The Parliamentary Under-Secretary of State for Foreign Affairs அமைச்சர்களில் ஒருவரான லியோ டொச்செட்ரி தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து பிரிட்டிஸ் அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்கின்றது குறிப்பாக தமிழர்களின் நிலைமை குறித்து.

அங்கு காணப்படும் நிலவரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனதை வருத்தும் விதத்தில் வலுவான விதத்தில் இங்கு முன்வைத்தார்கள்.

மனித உரிமைகள் விடயத்தில் முக்கிய பிரிட்டனின் கரிசனைக்குரிய 32நாடுகளில் ஒன்று இலங்கை பல விடயங்கள் தொடர்பில் நாங்கள் கரிசனை செலுத்துகின்றோம்.

இலங்கையில் பல வருடகாலமாக காணப்படும் இன மத பதற்றங்களை தொடர்ந்து தமிழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்படுவது ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவது எங்கள் அனைவருக்கும் தெரியும்.

பயஙகரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேசதராதரத்திலான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் நீண்டகாலமாக வாக்குறுதியளித்து வருகின்ற போதிலும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து பிரிட்டிஸ் அரசாங்கம்

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது - கடந்த வாரமும் பயன்படுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும்..

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நினைவுகூரலிற்கு எதிரான பொலிஸாரின் கடுமையான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.



இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் கண்காணித்தல்கள் மிரட்டல்கள் போன்றன இடம்பெறுகின்றன. குறிப்பாக இவை தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை இலக்கு வைத்து இடம்பெறுகின்றன.

முன்னாள் போராளிகளும் காணாமல்போனவர்களின் உறவினர்களும் கண்காணிக்கப்படுகின்றனர் அச்சுறுத்தப்படுகின்றனர்.

# கயானா –வெனிசுலா பதற்றம் அதிகரிப்பு; 95 வீத மக்கள் சர்ச்சைக்குரிய நிலப்பரப்பை இணைக்க வாக்களிப்பு!

டிசம்பர் 05, 2023

தென்னமரிக்கக் கண்டத்தில் உள்ள கயானாவின் கட்டுப்பாட்டில் உள்ள சர்ச்சைக்குரிய எண்ணெய் வளம் நிறைந்த பிரதேசத்தை உரிமை கோருவதற்கு ஆதரவாக வெனிசுலா மக்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர்.



எஸ்சிகிபோ (Essequibo) இல் ஒரு புதிய மாநிலத்தை நிறுவுவதற்கு 95% க்கும் அதிகமான வெனிசுலா மக்கள் வாக்களித்து ஒப்புதல் அளித்துள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

200 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்பெயினில் இருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து இப்பகுதி வெனிசுலாவின் ஒரு பகுதியாக இருந்ததாக வெனிசுலா கூறுகிறது.

ஆனால் கயானா 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானியாவினால் கயானாவிற்கு வழங்கப்பட்டது என்று கூறுகிறது.

கயானாவில் 2015 இல் ஒரு பெரிய கடல் எண்ணெய் கண்டுபிடிப்புக்குப் பிறகு வெனிசுலா - கயானா பிரச்சினை மீண்டும் வெடித்தது.

இந்த வாக்கெடுப்பு முடிவை நீண்டகாலமா சர்ச்சைக்குரிய பகுதியா இருந்துவரும் கயானாவில் பகுதிகளை வெனிசுலாவுடன் இணைத்துக்கொள்ள வெனிசுலா மக்கள் முழுவதும் "ஆம்" என்று வாக்களித்தாக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கூறினார். இது அமோக வெற்றி என்று பாராட்டினார்.

159,500 சதுர கிமீ (61,600 சதுர மைல்கள்) பரப்பளவைக் கொண்ட எஸ்சிகிபோ (Essequibo) கயானாவின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளது மற்றும் அதன் மக்கள்தொகையில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது.

இப்பகுதியின் நிலை நீண்ட காலமாக இரு அண்டை நாடுகளுக்கு இடையே பதட்டத்தை ஏற்படுத்துகிறது. வாக்களிப்பை அடுத்து வெனிசுலா தனது படைகளை அனுப்பி அப்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.

1899 ஆம் ஆண்டு சர்வதேச நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, கயானாவின் காலனித்துவ சக்தியாக இருந்த பிரிட்டனுக்கு அந்த பகுதி வழங்கப்பட்டது.

ஆனால் சமீபத்திய தசாப்தங்களில். அடுத்தடுத்த வெனிசுலா அரசாங்கங்கள் இந்த தீர்ப்பு நியாயமற்றது என்று வாதிட்டன.

1966 ஆம் ஆண்டில், கயானா சுதந்திரம் பெற்ற ஆண்டில், பிரித்தானியாவும் வெனிசுலாவும், கயானா மற்றும் வெனிசுலாவின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவை இந்த சர்ச்சையை மறுபரிசீலனை செய்ய அமைக்கப்படும் என்று ஒப்புக்கொண்டன. ஆனால் ஆறு தசாப்தங்களுக்குப் பிறகு எந்த முடிவும் எட்டப்படவில்லை.

அமெரிக்க எண்ணெய் நிறுவனமான Exxon Mobil ஆல் 2015 இல் Essequibo கடற்கரையில் உள்ள நீரில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

2018 ஆம் ஆண்டில், பிராந்தியத்தின் மீதான தனது உரிமையை நிலைநாட்டும் நம்பிக்கையில், கயானா சர்வதேச நீதிமன்றத்தில் (ICJ) ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது. இது



1899 தீர்ப்பாயத்தின் முடிவு நிற்க வேண்டுமா என்பதை நிறுவும். ICJ இன்னும் தீர்ப்பை வழங்கவில்லை.

இந்த விவகாரத்தில் சர்வதேச நீதிமன்றத்தில் அதிகார வரம்பு உள்ளது என்பதை வெனிசுலா ஏற்கவில்லை. ஆனால் இது வரை நீதிமன்ற விசாரணைகளில் தொடர்ந்து கலந்து கொண்டுள்ளது.

இந்த ஆண்டு செப்டம்பரில் கயானா ஒரு ஏலத்தை நடத்திய போது பதட்டங்கள் மேலும் அதிகரித்தன, அதில் எண்ணெய் நிறுவனங்கள் Essequibo நீரில் ஆய்வு உரிமங்களை ஏலம் எடுத்தன.

இந்த வாக்கெடுப்பு, எஸ்சிகிபோ மீதான வெனிசுலாவின்




கூற்றை ஆதரிக்கிறதா மற்றும் ICJ அதிகார வரம்பை அரசாங்கம் ஏற்க மறுத்ததை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா என்பது உட்பட பல கேள்விகளை வாக்காளர்களிடம் கேட்டது.

சட்டத்தின்படி எல்லா வகையிலும் எதிர்க்க ஒப்புக்கொள்கிறீர்களா என்றும், கயானாவின் ஒருதலைப்பட்சமாக நிலப்பகுதிக்கு வெளியே உள்ள நீரைப் பயன்படுத்துவதையும், Essequibo இன் வெனிசுலா பிரதேசத்தின் வரைபடத்தில் இணைப்பதை அவர்கள் ஆதரிப்பீர்களா என்றும் அவர்களிடம் கேட்கப்பட்டது.

நாட்டின் தேர்தல் ஆணையத்தின் தலைவரின் கூற்றுப்படி, அனைத்து கேள்விகளும் 95% க்கும் அதிகமான வாக்காளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கயானா வாக்கெடுப்பை இணைக்க ஒரு ஆக்கிரோஷமான முயற்சி என்று கண்டனம் செய்துள்ளது. அதே நேரத்தில் ICJ வெனிசுலாவுக்கு வெள்ளிக்கிழமை எசெக்விபோவில் உள்ள நிலையை மாற்றக்கூடிய எந்தவொரு உறுதியான நடவடிக்கையிலிருந்தும் விலகி இருக்குமாறு உத்தரவிட்டது.

2024 இல் நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக தேசியவாத ஆர்வத்தைத் தூண்டும் வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் முயற்சி என்றும் விமர்சகர்கள் வாக்கெடுப்பைக் கண்டித்துள்ளனர்.

வாக்கெடுப்பின் முடிவை வெனிசுலா அரசாங்கம் என்ன செய்ய திட்டமிட்டுள்ளது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் வலுக்கட்டாயமாக பிரதேசத்தை கைப்பற்றும் எந்த முயற்சியும் ஒரு வலுவான சர்வதேச பின்னடைவை ஏற்படுத்தும்.

வெனிசுலாவின் எண்ணெய் ஏற்றுமதிகள் மீதான அமெரிக்கத் தடைகளை மீண்டும் சுமத்துவது. அக்டோபரில் மட்டுமே தளர்த்தப்படத் தொடங்கியது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வெனிசுலா தனது படைகள அண்டை நாடான கயானா எல்லைகள் மீது குவித்து வருகிறது. இதேநேரம் பிரேசிலும் தனது படைகளை எல்லைப் பகுதி நோக்கி நகரத்தி வருகிறது.

# தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அவசியம்!

## பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே!

டிசம்பர் 06, 2023

தமிழர்களிற்கு சுயநிர்ணய உரிமை அவசியம் என பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இது பொறுப்புக்கூறலிற்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற கரிசனை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். ஸ்கொட்டிஸ் தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே தனது உரையில் தெரிவித்துள்ளதாவது.

மனித உரிமை மீறல்களை சாத்தியமாக்கும் சட்டங்கள் குறித்தும் கரிசனைகள் காணப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டம் 1979 ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது முதல் அரசியல் கைதிகளை நீண்ட காலம் தடுத்துவைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகமோசமான கறுப்புஜூலை கலவரத்தின் பின்னர் நிகழ்ந்த வெலிக்கொடை படுகொலைகள் என அழைக்கப்படும் சிறைச்சாலை படுகொலையில் கொல்லப்பட்ட 53 பேரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களே.

பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை கைது செய்யப்பயன்படுகின்றது அந்த சட்டம் தற்போது நீக்கப்படலாம் என்கின்ற போதிலும் புதிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மோசமானதாகயிருக்கலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் அணுகுமுறை இன்னமும் மாற்றமடையவில்லை. இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இது பொறுப்புக்கூறலிற்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற கரிசனை காணப்படுகின்றது.

மேலும் இது பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளையோ சர்வதேச தராதரங்களையோ பூர்த்தி செய்யாது. இலங்கையில் நல்லிணக்கம் குறித்து எனக்கு மேலதிக தெளிவுபடுத்தல்களை வழங்கியமைக்காக பிரிட்டனிற்கான இலங்கை தூதரகத்திற்கு நான் நன்றியை தெரிவிக்கின்றேன்.

இலங்கை தூதரகத்தின் ஆவணத்தின் ஒரு பகுதி இவ்வாறு தெரிவிக்கின்றது நவம்பர் 2023 வரை காணாமல்போனவர்களின் அலுவலகத்தின் தேடும் பிரிவினர் காணாமல்போனதாக தெரிவிக்கப்பட்டவர்களில் 16 பேரை உயிருடன் கண்டுபிடித்துள்ளனர் 3 பேர் உயிரிழந்துள்ளதை கண்டுபிடித்துள்ளனர் என இலங்கை தூதரகம் தனது ஆவணத்தில் தெரிவித்துள்ளது.

18000 தமிழர்கள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது அப்படியானால் ஏனையவர்களிற்கு என்ன நடந்தது அவர்கள் எங்கிருக்கின்றார்கள் அவர்கள் குறித்து தெரிவிப்பதற்கு என்ன ஆவணங்கள் உள்ளன?



ஐக்கியநாடுகளின் உறுப்பினர் என்ற அடிப்படையிலும் இலங்கையின் சகா என்ற அடிப்படையிலும் பொறுப்புக்கூறல் நீதி மனித உரிமை பாதுகாப்பு போன்றவற்றிற்கான வேண்டுகோள் களிற்கு ஆதரவாக பிரிட்டன் அதிகளவில் செயற்படவேண்டும் நடவடிக்கை எடுக்கவேண்டும்சரியான எண்ணிக்கை தெரிய வில்லை ஆனால் ஐக்கிய நாடுகள் குழு 40000 தமிழர்கள் உட் பட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மோதல்களின் போது கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரை இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளான சவேந்திரசில்வா மற்றும் இலங்கையின் ஏனைய குற்றவாளிகளுக்கு எதிராக பிரிட்டன் உட்பட உலக நாடுகள் தடைகளை விதிக்கவேண்டும் என தெரிவித்துள்ளது. பாரிய அநீதிகளில் ஈடுபட்டவர்கள் பிரிட்டனிற்குள் வர அனுமதிக்கப்படமாட்டார்கள் என காண்பிப்பதன் மூலம் பிரிட்டன் அமெரிக்கா கனடாவின் நடவடிக்கைகளிற்கு ஆதரவளிக்கலாம் என்று கூறினார்.

# மத்திய கிழக்கு பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வந்தடைந்த ரஷ்ய அதிபர்!

டிசம்பர் 06, 2023

சவூதி அரேபியாவையும் உள்ளடக்கிய மத்திய கிழக்குப் பயணத்தின் ஒரு பகுதியாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இன்று புதன்கிழமை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வந்தடைந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைநகர் அபுதாபியில் புடினின் விமானம் தரையிறங்கியதாக ரஷ்ய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஓடுபாதையில் அதிகாரிகள் அவரை வரவேற்றதை அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய படங்கள் காட்டுகின்றன.

ரஷ்ய தலைவரின் வருகை துபாயில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் COP28 காலநிலை பேச்சுவார்த்தையுடன் ஒத்துப் போகிறது. இருப்பினும் புடின் கலந்துகொள்வாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. உக்ரைனில் நடந்த போர் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக கைது உத்தரவு இருக்கின்ற போதிலும் அவரது பயணம் வருகிறது.

எண்ணெய் ஆதிக்கம் செலுத்தும் பேச்சுவார்த்தைகள்

அக்டோபர் 2019 முதல் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுடன் தனது முதல் நேருக்கு நேர் சந்திப்பதற்காக சவூதி அரேபியா செல்வதற்கு முன் புடின் அபுதாபியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

உலகின் 40% க்கும் அதிகமான எண்ணெயை பம்ப் செய்யும் OPEC+ இன் ஒரு பகுதி உட்பட எரிசக்தி ஒத்துழைப்பைப் பற்றி விவாதிப்பதாக கிரெம்ளின் கூறியது.

காசாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரவேலின் போர், சிரியா மற்றும் யேமனின் நிலைமை மற்றும் வளைகுடாவில் ஸ்திரத்தன்மை பற்றிய பரந்த பிரச்சினைகள் மற்றும் உக்ரைனில் உள்ள போர் ஆகியவை நிகழ்ச்சி நிரலில் உள்ளன என கிரெம்ளின் கூறியது.

சவூதி அரேபியாவோ அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸோ சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகளாக இல்லை. ஒப்பந்



தத்திலும் கையெழுத்திடவில்லை.

# சிறீலங்காவில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் துணை ஆசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி

டிசம்பர் 08, 2023

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த சட்டத்தை நீக்கும் வரையில், அதன் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும் என அந்த கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவு கூர்ந்தமைக்காக 9 தமிழர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுபான்மை சமூக உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக செயற் பாட்டாளர்களை தன்னிச்சையாக தடுத்து வைத்து சித்திரவதை செய்வதற்கு நீண்டகாலமாக இந்த சட்டம் பயன் படுத்தப்பட்டு வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட் டுள்ளது.

இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, மாற்றியமைப்பதாக சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச நட்பு நாடுகள், வர்த்தக பங்காளிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு பலமுறை உறுதியளித்துள்ளது.

எனினும் இதுவரை அது நடைமுறைக்கு வரவில்லை. ஏற்கனவே தொடர்ச்சியான அரசாங்க பாகுபாட்டை எதிர்கொள்ளும் ஒரு சமூகத்தை மேலும் இது ஓரங்கட்டுவதாக அமைந்துள் ளதென என்று மனித உரிமைகள் கண்




காணிப்பகத்தின் துணை ஆசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி கூறியுள்ளார்

# ஈழத்தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வு வழங்கப்படவேண்டும் என அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் ஒலித்த குரல்!

டிசம்பர் 12, 2023

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் டான் டேவிஸ் Don Davis ஈழத் தமிழர்களுக்கு சுயநிர்யண உரிமையின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

நேற்றைய தினம் (12-12-2023) பிரதிநிதிகள் சபையில் உரையாற்றும் போது டான் டேவிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இலங்கையில், 2009 ஆம் ஆண்டில் தமிழர் இனப்படுகொலை புரியப்பட்டதாகக் கூறினார்.

சமீபத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெற்றதை அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழர்களுக்கு வழங்கப்படும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் அமைதியையும், உறுதிப்பாட்டையும் உறுதி செய்யும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

US Congressman Don Davis called on his colleagues "to recognize and address the ongoing oppression of the Tamil People" today, as he spoke out against genocide and called for "a permanent



solution based on their right to self-determination" in the region.

Speaking at the US House of Representatives, Davis said "I stand with the Eelam Tamils in Sri Lanka".

"Following the British departure in 1948, the unification of these kingdoms under a Sinhalese-dominated Sri Lanka led to the marginalization of the Tamil people," he continued. "This process disregarded the Tamils' right to self-determination."

"State-sponsored discrimination and violence against Tamils sparked a tragic 30-year ethnic conflict, resulting in the 2009 Tamil Genocide."

He went on to condemn the "recent arrests of Tamils for participating in peaceful events under the Prevention of Terrorism Act, " which he labelled as "deeply troubling".

The arrests of Tamils last month, as they attempted to commemorate Maaveerar Naal, sparked international condemnation.

"Therefore, I call upon my colleagues in Congress to recognize and address the ongoing oppression of the Tamil People," Davis concluded.

"We must support a permanent solution that ensures stability and peace in this vital part of the Indo-Pacific. And we must honor our commitment to human rights and democracy."

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலகப்பரப்பில் மாவீரர் நாள்

**27.11.2022**


பிரித்தானியா


பிரான்


சுவிட்சர்லாந்து



நியூசிலாந்து


யேர்மனி


டென்மார்க்


இத்தாலி



அமெரிக்கா


ஆஸ்திரேலியா



இந்தோனேசியா

# உலகப்பரப்பில் மாவீரர் நாள்

27.11.2023
























# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.


MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “அனுபவங்களின் முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



சிறு வயது முதல் இந்தியப் போராட்ட வரலாறு என்னைக் கவர்ந்திருந்தது. இப்போராட்டத்தில் நேதாஜி அவர்கள் கொண்டிருந்த பங்கு என்னை ஆழமாகத் தொட்டது. அந்தக் காலத்தில் நான் வீட்டில் மிகவும் கட்டுப்பாடான சூழலில்தான் வளர்ந்தேன். வெளியாரோடு கலந்து பழக எனக்கு அனுமதி இருக்கவில்லை. இளம் பெண்களைக் கண்டால் வெட்கப் படுவேன். என் தந்தையின் நல்லொழுக்கம் என்னை நெறிப்படுத்தியது. வெற்றிலை கூடப் போடமாட்டார். ஒழுக்கங்களை நான் அவரைப் பார்த்தே உருவாக்கிக் கொண்டேன். ஓர் அரச ஊழியராக, மாவட்ட நிலை அதிகாரியாக அவர் இருந்தார். என் தந்தையார் கொஞ்சமும் ஒளிவு மறைவு இல்லாதவர். நேர்மையானவர். எமது ஊர் மக்கள் இப்படிச் சொல்லிக்கொள்வார்கள்: “அந்த மனிதர் நடந்தால், அவர் காலின் கீழே உள்ள புல்லுக்குக்கூட நோகாது”. ஆம் அப்படிப்பட்ட தந்தைக்கு இப்படிப்பட்ட ஒரு மகன் பிறந்தானே என்றுதான் மக்கள் பேசிக்கொண்டார்கள். அவர் கண்டிப்பானவராக இருந்தார். அதே வேளை நெஞ்சைத் தொடுகின்ற ஓர் ஆற்றலும் அவரிடம் இருந்தது. நண்பன் ஒருவனைப் போல். பக்கத்தில் உட்கார்ந்து நியாயங்களை எடுத்துச் சொல்லி, அவர் என்னை நல்வழிப்படுத்தினார்.

சுபாஷ் சந்திரபோஸின் வாழ்க்கை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவனாய் இருந்தபோது காந்தி அடிகளின் உண்மை - பிரமச்சாரியம் பற்றிய நூல்களைப் படித்தேன். சின்ன வயதிலேயே ஆன்மீகத்தைத் தேடிப்போய், ஈற்றில் துறவு வாழ்க்கையில் வெறுப்புற்றுத் திரும்பிய சுபாஸ் சந்திரபோஸை எனக்குப் பிடித்திருந்தது. ஆனாலும், வாழ்க்கையில் துன்பமும் தொல்லையும் சூழ்ந்த போதெல்லாம் அவர் மீண்டும் மீண்டும் ஆன்மீகத்தையே நாடினார். சுபாஷின் வாழ்க்கை மிகவும் என்னைக் கவர்ந்தது. என் நெஞ்சில் சுபாஷ் நிலைத்த மனிதனானார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் (நூல்வடிவில் வந்தவை) அப்படியே நெஞ்சில் பதிந்தன. “கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன்” என்ற சுபாஷின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லாம். நினைவுக்கு வரும் போதெல்லாம். நினைவுக்கு வரும் போதெல் லாம் இந்தச் சொற்கள் என் நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன. அடுத்து “பகவத்சிங்கின்” வரலாறு என்னை ஆகர்சித்தது.

சுருக்கமாகச் சொன்னால். அநீதியாளர்களை மோதியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையே, அந்த நாட்களில் நான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தேன்.

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருந்தது. எமது தயாகத்தில் சிங்களவர்கள் அப்போது எம்மை மிகவும் கொடுமையாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அக்கொடுமைகள் பற்றிய செய்திகள் அவ் வப்போது பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் 1958ல் நடைபெற்ற பயங்கர தமிழர் படுகொலைகள் பற்றி நான் படிக்க நேர்ந்தது. அந்த நிகழ்ச்சிகள் எத்தனை கொடூரமானவை தெரியுமா? கோயிலில் உறங்கிக்கொண்டிருந்த பூசை செய்யும் ஒர பிராணமரைத் தட்டி எழுப்பிய கொடிய சிங்களவர்கள் எண்ணெய் ஊற்றி எரித்துக்கொன்றார்கள். பாணந்துறை என்ற இடத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது.

கடவுள் பக்தி உள்ள, சமய உணர்வுள்ள எமது மக்களின் கோயில் அர்ச்சகரையே கொன்றுவிட்டார்களே கொடியவர்கள். நாங்கள் ஏன் இவர்களைத் திருப்பித் தாக்கக் கூடாது? என்று எண்ணத்தலைப்பட்டோம். இந்த இனவெறிக் கலவரத்தில் இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. ஒன்றும் தெரியாத பிஞ்சுத் தமிழக் குழந்தை ஒன்றைச் சிங்கள வெறியர்கள் துடிக்கத் துடிக்க தாரில் தோய்த்துக் கொன்றார்கள். இந்நிகழ்ச்சிகள், என் நெஞ்சிலும் என் நண்பர்கள் நெஞ்சிலும் அந்தச் சின்ன வயதிலேயே நெருப்பை மூட்டிற்று. ஒன்று மறியாத அப்பாவிகளைக் கொல்கின்றார்களே. திருப்பி நாம் ஏன் இவர்களை ஓங்கி அடிக்கக்கூடாது? என்று எண்ணத் தொடங்கினோம்.

இந்தக் கால கட்டத்தில்தான் இந்தியப் போராட்ட வரலாறும் என் உணர்வுகளுக்கு எருவாயிற்று. ஒவ்வோர் ஆண்டும் இந்திய சுதந்திர நாளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. அவற்றைப் படிக்கும் வாய்ப்பு இப்பொழுது எனக்குக் கிடைத்தது. திருப்பூர்க் குமரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுடைய அகிம்சை யிலும் ஓர் இரும்பு உறுதி இருந்தது. ஆயுதப் போரின் அனுபவங்களைப் பற்றி நான் கற்றறிந்த அதேவேளை, அகிம்சைப் போரின் ஒழுங்குணர்வாலும் கவரப்பட்டேன். இப்போராட்டங்களில் காணப்பட்ட மன உறுதியும் துன்பங்களின் நடுவில் நிற்கும் துணிச்சலும் என்னை உணர்ச்சி வசப்படுத்தின. சின்ன வயதிலேயே இத்தகைய உணர்வுகளில் தோய்ந்துதான், சிந்திக்கத் தொடங்கினேன். “நாமும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினால் என்ன?” நெப்போலியனின் எழுச்சி – வீரச் செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.


மகாபாரத்தில் வீமன், கர்ணன் ஆகிய பாத்திரங்களைப் படித்த போது ஒரு மன நிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு - உயிர்த் தியாகத்துக்கு ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந் தானே கர்ணன் - அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன்மொழிகள் சில வற்றைப் படித்தேன். இளைஞர் அணி ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மெல்ல அரும்பிற்று. ஆம், அப்பொழுது எனக்கு 16 வயதுதான்.

கிருபானத்தவாரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றேன். அரசியற் கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். எங்களுர் மேடையில் அரங்கேறிய “சோக்கிரட்டீஸ்” போன்ற நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்.

இப்படித்தான் நாங்கள் உருவாகினோம். எமது வரலாற்றுப் பின்னணியே எம்மை ஆயத பாணிகள் ஆக்கிற்று. நாங்கள் சிந்தித்தோம். ஆயுதங்கள் இன்றி நாம் வெறுங்கையோடு பாது காப்பற்ற நிலையில் இருப்பதால் தானே, ஆயுதங்கள் உள்ள சிங்களவர்கள் எங்களைக் கொடுமை யாகத் தாக்குகின்றார்கள். நாம் ஏன் வெறுங்கைகயோடு இருக்கவேண்டும்? ஆயுதங்களை - ஆயுதங்களால் முறியடிப்போம்! ஆம்; அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

- டிசம்பர் 1995- எரிமலை







**INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)**

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

**Surrounding Area:**
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

**647-294-2996**

# வேகாவனம்

வேகாவனமென்றால் வெந்துதணியாக்காடு,
எரியாவனமென்றும் எழுதலாம்,
ஒட்டுசுட்டானும் வேகாவனமென்றே விளங்குகிறது.
ஒட்டுசுட்டானுக்கு மட்டுமல்ல
வன்னி முழுமைக்கும் தகுமிந்நாமம்,
முல்லையும்,
மருதமும்,
நெய்தலும் சேர்ந்து
சொல்லவொண்ணா அழகுச் சோதியாய் மிளிரும் வன்னி
எம் தாயின் வயிறு,
தண்புனல் நிறைந்த தாமரைக்கு குளமும்,
வெண்கொக்குத் தவமியற்றும் விரிந்த வயல்களும்,
விண்தொட நிமிர்ந்த வியத்தகு வனமும்,
அலைவந்தெறியும் ஆழியாய்க் கரையுமாக
அழகெடுத்த கலையுடுத்த அணங்கா
வளம் கொளித்துக் கிடக்கின்றாள் வன்னிமகள்.
பால் சுரக்கும் மடிகனத்த பசுக்களும்
வாலடித்துத்திமிரும் காளைகளும்
வயலுழுது வரும் எருமைகளும்
வன்னிக்கு முதுகு,
வைகாசி மாதம் வன்னிக்கு வளைகாப்பு
அந்த மாதத்தில்தான் இங்கே பொங்கல் நடக்கும்.
காட்டு மரங்களுக்கும் அப்போதுதான்
வசந்தோற்ஸவம்
பூத்துக்கிடக்கும் பூவனம்.
காற்றுக்கும் ஆயிரம் கச்சேரி
குழலெடுத்து ஊதிக் குதூகலிக்கும்.
கூத்து வன்னி நிலத்தோடு கூடப்பிறந்தது.
தண்டையும், சிலம்பும் சிலம்பாக ஊர்களென
இங்கே எதுவும் கிடையாது.
ஆசைகள் பெரிதாய் எதுவுமற்ற அற்புதமாக ஜீவிதம்,
கொத்துக்கு அளவான அரிசி
குடத்துக்கு அளவான தண்ணீர்
முள்ளுக்கும் நோகாத ஒரு வாழ்க்கை முறை.
பொல்லாப்பெதுவுமின்றி இங்கே பொழுதுபுலரும்.
பண்டார வன்னியனும்
கைலாய வன்னியனும்
அடங்கமறுத்த அபூர்வமண்.
குருவிச்சி நாச்சியார் இந்தப்பூமியிற் தான்
ஆடினாள்,
பாடினாள்,
அடங்கினாள்,
அரியாத்தையென்ற எங்கள் பெரியாத்தை
ஆனை அடக்கிய அற்புதம் இங்கே தான் நடந்தது.
வன்னிக்கு எவரும் விலங்கிட முடியாது
அது அடங்காப்பற்று
அடங்காததில் இதற்கு அத்தனை பற்று.
காந்திசேதம் எங்களுக்குக் கண்ணி வைத்த காலத்தில்
விடுதலை அவாவிய அனைவருமே
விக்கித்து நின்ற நாட்களில்
அடங்கா மண்தானே அடைக்கலம் தந்தது.
இந்தச் சந்தனக்காடுகள் தானே தஞ்சமளித்தன.
வன்னி மண்ணே எமக்கு வளையாச்சு
வென்று மீண்டனர் எங்கள் வீரர்கள்
மீண்டும் காலச்சக்கரத்தின் ஒரு சுழற்சியின் பின்
சங்கிலியன் தோப்பிலிருந்து
பண்டார வன்னியனின் பழைய அரண்மனைக்கு
அணையா விளக்குடன் அடைக்கலமானோம்.
இன்றும் வன்னிமண்ணே எமக்குக் கவசமானது.
ஓடி வந்த போது வாரி அணைத்தவளே!
வன்னி மண்ணே நின்னை வணங்குகின்றோம்.
உன் பாதக்கமலம் பற்றினோம்.
வதையுண்டும் எழுந்தாய்
எரியுண்டும் நிமிர்ந்தாய்
வீரத்திலூறியது வேகாவனம்.

– புதுவை இரத்தினதுரை






# எம்.ஜி.ஆரும் புலிகளும்: விடுதலைக்கு வித்திட்ட மாமனிதர்

அந்த வரலாற்றுக் காலகட்டத்தில், அந்த மனிதரிடம் தான் தமிழ நாட்டை ஆட்டிப் படைக்கும் அரசியல் அதிகாரம் இருந்தது. அரசியல் அதிகாரத்துடன் பண பலமும் இருந்தது. இல்லாதோருக்கு வாரி வழங்கும் மன வளமும் இருந்தது. ஏழை மக்கள் அவரை ஒரு தெய்வமாகப் பூசித்தனர். மக்கள் திலகமென தமிழுலகம் அவரைப் போற்றியது. அவர் ஒரு அபூர்வமான மனிதர். அதிசயமான குணவியல்புகள் கொண்டவர். நெஞ்சில் உறுதியும் நேர்மையும் கொண்ட ஒரு உன்னதமான மனிதாபிமானி. அவரிடம் ஒரு புதுமையான மனிதம் இருந்தது. அந்த மனிதப் பண்பு மனிதர்களைக் கவர்ந்து இழுக்கும் சக்தி பெற்று விளங்கியது. அவர் மிகவும் கவர்ச்சி மிக்க தலைவராக விளங்கினார். அவர்தான் எம்.ஜி.ஆர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள்.

எம்.ஜி.ஆர் அவர்களின் பெருமை பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவரது திராவிட இயக்கப் பின்னணி பற்றியும் கலை உலக, அரசியல் உலக வாழ்க்கை பற்றியும் அறிந்திருக்கின்றேன். ஆயினும் அவரை சந்தித்துப் பழகும் வாய்ப்புக் கிட்டுமென நான் கனவுகூட கண்டதில்லை. என்றாலும் அந்த வாய்ப்புக் கிட்டத்தான் செய்தது. எதிர்பாராத விதமாக எம்.ஜி.ஆருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் மத்தியில் ஒரு உறவு பிறந்தது. அது ஒரு வரலாற்று உறவாக மலர்ந்தது.



தலைவர் பிரபாகரனது புரட்சிகரமான வாழ்வும் வீர விடுதலை வரலாறும் எம்.ஜி.ஆரை வெகுவாகக் கவர்ந்தது. அவர்கள் மத்தியிலான உறவு நல்லுறவாக வளர்ந்து, நட்புறவாகப் பரிணமித்தது. பிரபாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னாலான உதவிகளை வழங்க எம்.ஜி.ஆர் முன்வந்தார். பல வழிகளில் உதவியும் செய்தார். அவரது பேருதவிகள் எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியிலும் விரிவாக்கத்திலும் என்றுமில்லாத ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தின.

எம்.ஜி.ஆர் அவர்கள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வழிகளில், எப்படியாக உதவினார்? எத்தகைய ஆபத்தான எதிர் விளைவுகளையும் பொருட்படுத்தாது எப்படியெல்லாம் துணிந்து அவர் காரியங்களைச் சாதித்தார்? எமது இயக்கத்திற்கு ஏற்பட்ட அழுத்தங்கள், நெருக்குவாரங்களிலிருந்து எவ்வாறு எமக்குக் கைகொடுத்து உதவினார்? இப்படியான பல விடயங்கள் காலத்தால் சாகாத நினைவுகளாக எமது போராட்ட வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியவை. எம்.ஜி.ஆர் அவர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பில் முதன்முதலாகச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனைத் தொடர்ந்து, தனித்தும் தலைவர் பிரபாகரனுடனும் பல சூழ்நிலைகளில் முதலமைச்சரை சந்தித்து உறவாடும் அரிய சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்தன. அவற்றை எல்லாம் உண்மை வழுவாது சுருக்கமாக இங்கு பதிவு செய்துள்ளேன். தமிழீழ விடுதலை வரலாற்றில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைவருக்கும் இக்குறிப்புகள் பயன்படும் என்பது திண்ணம்.

முதன் முதலாகத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்த பின்னணி ஒரு சுவாரஸ்யமான கதை.

1984ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம். அப்பொழுது நானும் எனது மனைவி அடேலும் சென்னை நகரப் புறத்திலுள்ள திருவான்மையூரில் விடுதலைப் புலிப் போராளிகளுடன் வசித்து வந்தோம். எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்களும் மூத்த தளபதிகள் சிலரும் போராளிகளும் எமது இருப்பிடத்திற்குச் சமீபமாகத் தங்கியிருந்தனர். இந்திய மத்திய அரசு இரகசியமாக ஒழுங்கு செய்த இராணுவப் பயிற்சி முடிந்தபோதும், தமிழக நாட்டுப் புறங்களில் பயிற்சிப் பாசறைகளை நிறுவி, புதிய போராளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அடையாறில் அமையப்பெற்ற விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையகத்தில் நான் பணிபுரிந்து வந்தேன்.

அந்தக் காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் மட்டுமன்றி மற்றைய போராளி அமைப்புகளும் சென்னையைப் பிரதான பின்தளமாகக் கொண்டு இயங்கி வந்தன. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்), ஈழ விடுதலை அமைப்பு (ஈரோஸ்) ஆகியன, இந்திய இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் செயற்பட்டு வந்தன. பிளவுபட்டு, பிரிந்து நின்ற போராளி அமைப்புக்களை ஒரே இலட்சியத்தில், ஒரே அணியாக ஒன்றிணைத்தால் தமிழீழ விடுதலைப் போராட்டம் பலப்படும் என தமிழ் மக்கள் மத்தியில் அவ்வேளை பரவலாக கருத்தொற்றுமை நிலவியது. பல்வேறு வட்டாரங்களிலிருந்து ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் வசித்த ஈழத் தமிழ் பிரமுகர்கள் சிலர் சென்னைக்கு வருகை தந்து விடுதலை அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்து ஒற்றுமையை வலியுறுத்தினர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் இந்த ஒற்றுமை முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். 1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான இன ஒழிப்புக் கலவரத்தை அடுத்து தமிழ்நாடு எங்கும் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சி கிளர்ந்தது. என்றுமில்லாத வகையில் தமிழின உணர்வு மேலோங்கி நின்றது. தமிழ்நாட்டில் தஞ்சம் புகந்திருந்த போராளி அமைப்புகள் மீது அனுதாபமும் ஆதரவும் நிலவியது. ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி, தமிழ்நாட்டுத் தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மத்தியில் போட்டியும் நிலவியது. இந்தச் சூழ்நிலையில்தான் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது.

அப்பொழுது திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்தார். ஈழ விடுதலை அமைப்புகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அவர், விடுதலை அமைப்புக்களின் தலைவர்களுக்கு ஒரு பகிரங்க அழைப்பையும் விடுத்தார். ஒரு குறிப்பிட்ட நாளில் ஈழ விடுதலை அமைப்புக்களின் தலைவர்கள் தம்மைச் சந்திக்குமாறு வேண்டிக்கொண்டார். திரு.எம்.ஜி.ஆர் அவர்களின் இந்த அழைப்பை தமிழ்நாட்டுத் தினசரிகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன.

இந்த அழைப்பு விடுக்கப்பட்ட மறுதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.மு.கருணாநிதி அவர்களிடமிருந்து இன்னொரு அழைப்பு வந்தது. திரு.எம்.ஜி.ஆர் அவர்கள் குறிப்பிட்ட தினத்திற்கு முதல்நாள் தம்மைச் சந்திக்குமாறு ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களுக்கு திரு.கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார். கலைஞரின் அழைப்பினைத் தி.மு.க. பத்திரிகைகள் முக்கியமளித்துப் பிரசுரித்தன.

ஈழ விடுதலை இயக்கங்களின் ஒற்றுமை முயற்சியில் தமிழ்நாட்டின் இருபெரும் தலைவர்களும் போட்டியில் இறங்கியது எமக்கு ஒரு சிக்கலையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியது. தமிழ்நாட்டு அரசியலில் தலையிடுவதில்லை என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக இருந்தது. தமிழ்நாட்டு அரசியலில் பக்கசார்பற்ற நிலையைப் பேணுவதும் எமது கொள்கையாக இருந்தது. அப்படியிருக்கும் பொழுது திராவிட இயக்கத்தின் இருபெரும் தலைவர்கள் மத்தியில் எழுந்துள்ள இப்போட்டி எமக்கு ஒரு புதிய சவாலாக அமைந்தது. திரு. பிரபாகரன் அவர்களுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடினேன்.

கலைஞரின் அழைப்பை ஏற்று அவரைச் சந்தித்தால் எம்.ஜி. ஆரைப் பகைக்க நேரிடும், கலைஞரின் அழைப்பை நிராகரித்து, எம்.ஜி.ஆரைச் சந்தித்தால் கலைஞரைப் பகைக்க நேரிடும். இவ்விரு தலைவர்களினதும், அவர்கள் தலைமை தாங்கும் அரசியல் இயக்கங்களினதும் ஆதரவும் அனுதாபமும் எமக்கு அவசியம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு அவசியம். ஆகவே பக்க சார்பு நிலையெடுத்து யாரையும் பகைத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. அத்துடன் எமக்கு இன்னொரு பிரச்சினையும் இருந்தது. எமது இயக்கத் தலைமையின் பாதுகாப்புப் பிரச்சினை அது. அக் காலகட்டத்தில் போராளி அமைப்புகள் மத்தியில் முரண்பாடும் பகைமையும் நிலவியது. குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கும் புளொட் இயக்கத்திற்கும் மத்தியில் மோதல் வெடிக்கும் அளவிற்குப் பகைமை இருந்தது. ஏற்கனவே, சென்னையிலுள்ள பாண்டி பஜாரில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனுக்கும் பிரபாகரன் அவர்களுக்கும் மத்தியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து, இரு அமைப்புகள் மத்தியிலும் விரோதம் முற்றியிருந்தது. அப்படியான சூழ்நிலையில் ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்கள் ஒரே இடத்தில் ஒன்றாகக் கூடுவது என்பது சாத்தியமற்றது. ஆபத்தானதும் கூட. ஒற்றுமையை வேண்டி நின்ற தமிழக அரசியல் தலைவர்களுக்கு எம்மிடையே நிலவிய முரண்பாடுகள், பகைமை உணர்வுகள் பற்றி எடுத்து விளக்கிப் புரிய வைப்பதும் சாத்தியமில்லை. இந்தச் சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் ஒரேயொரு தீர்வுதான் இருந்தது. அதாவது கலைஞரையும் எம்.ஜி. ஆரையும் சந்திக்காமல் தவிர்ப்பது. இந்த யோசனையைப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டார்.

கலைஞர் கருணாநிதி அழைப்பு விடுத்த நாள் வந்தது. விடுதலைப் புலிகளையும் புளொட் இயக்கத்தையும் தவிர ஏனைய அமைப்புகளின் தலைவர்களான திரு.பத்மநாபா (ஈ.பி.ஆர். எல்.எப்), திரு.சிறீசபாரெத்தினம் (ரெலோ), திரு.பாலகுமார் (ஈரோஸ்) ஆகியோர் கலைஞரைச் சந்தித்தனர். திரு.பிரபாகரனும், திரு.உமா மகேஸ்வரனும் தமது அழைப்பை ஏற்று வரவில்லை என்பது கலைஞருக்குக் கவலைதான். ஆயினும், எம்.ஜி.ஆரைச் சந்திப்பதற்கு முன்னராக ஏனைய ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்ததை அவர் ஒரு அரசியல் வெற்றியாகக் கருதியிருக்க வேண்டும். அதனால்தான் அந்த சந்திப்பை அவர் ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக பெரிதுபடுத்திப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார். மறுநாள் அந்தச் சந்திப்பைத் தலைப்புச் செய்தியாகப் புகைப்படங்களுடன் தி.மு.க. பத்திரிகைகள் பிரசுரித்தன.

தான் குறித்த தினத்திற்கு முதல் நாளே, கலைஞர் கருணாநிதி மூன்று ஈழ விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்து, ஒரு அரசியல் நாடகத்தை மேடையேற்றி, அதனை ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது எம்.ஜி.ஆருக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியது. ஒரு நல்ல நோக்குடன் தான் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சியைச் சுயநல அரசியல் நோக்கத்திற்காகக் கலைஞர் குழப்ப முயற்சிக்கிறார் என அவர் எண்ணினார் போலும்.

அன்று மாலை, தமிழ்நாட்டு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ்மா அதிபர் (D.I.G) திரு.அலெக்ஸாந்தர் அடையாறிலிருந்த எமது அரசியல் செயலகத்திற்கு வருகை தந்து என்னைச் சந்தித்தார். திரு.அலெக்ஸாந்தரை எனக்கு ஏற்கனவே தெரியும். பல தடவைகள் சந்தித்து உறவாடியதால் நல்ல பழக்கம். சென்னையில் எழுந்த சில பிரச்சினைகளை அவர் தலையிட்டுத் தீர்த்து வைத்து எமக்கு உதவியவர். முத

லமைச்சர் எம்.ஜி.ஆருடன் நெருக்கமானவர் என்பதும் எனக்குத் தெரியும்.

“கலைஞர் கருணாநிதி மீதும், அவரைச் சந்தித்த போராளி அமைப்புகளின் மீதும் முதலமைச்சர் கடும் சினங்கொண்டிருக்கிறார். அந்த மூன்று அமைப்புகளின் தலைவர்களையும் தான் இன்று சந்திக்கப்போவதில்லை என்றும் முதல்வர் கூறினார். விடுதலைப் புலிகளை மட்டும் அவர் இன்று சந்திக்க விரும்புகிறார். இன்று மாலை விடுதலைப் புலிகளை, சென்னை பறங்கிமலையிலுள்ள தனது இல்லத்திற்கு அழைத்து வருமாறு எனக்கு அவர் ஆணை பிறப்பித்து இருக்கிறார்.” இவ்வாறு சொன்னார் திரு.அலெக்ஸாந்தர்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. எதற்கும் நான் தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடிய பின்னரே முடிவு எடுக்க வேண்டும் என்றேன். “முதலமைச்சர் உங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார். தயவு செய்து அவரை ஏமாற்றிவிட வேண்டாம். நீங்கள் முதலமைச்சரையும் தமிழ்நாட்டு அரசையும் பகைத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் செயற்படுவது கடினமாக இருக்கும்.” என்று லேசாக ஒரு எச்சரிக்கையும் விடுத்தார். உமா மகேஸ்வரனையும் முதல்வர் சந்திப்பாரா என்று கேட்டேன். புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் புளொட்டின் தலைவர் உமாவுக்கும் மத்தியிலான பகை முரண்பாடு பற்றி அலெக்ஸாந்தர் நன்கு அறிவார். உமாவைப் பிறிதொரு தினத்தில் முதலமைச்சர் சந்திப்பார் என்றும், முக்கியமாகப் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் சந்திப்பதையே அவர் பெரிதும் விரும்புகிறார் என்றும் அலெக்ஸாந்தர் சொன்னார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றாகிவிட்டது. முதல் சந்திப்பில் எமது இயக்கத்தை அறிமுகப்படுத்த வேண்டும். எமது இயக்கத்தின் போராட்ட இலட்சியத்தை எடுத்து விளக்க வேண்டும். ஆகவே, முதற் சந்திப்பிற்கு என்னைப் போகுமாறு பிரபாகரன் பணித்தார். எம்.ஜி.ஆர் வற்புறுத்தினால் பின்பு தாம் அவரைச் சந்திக்கலாம் என்றும் பிரபாகரன் முடிவு எடுத்தார். எனது தலைமையில் ஒரு குழுவாகச் சென்று அன்று மாலை முதலமைச்சரை சந்திப்பதென்று முடிவாயிற்று. என்னுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்ரமணியம் (இளங்குமரன்), சமீபத்தில் வீரச்சாவு எய்திவிட்ட கேணல் சங்கர், அன்று ‘விடுதலைப் புலிகள்’ பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரிந்த திரு.மு.நித்தியானந்தன் ஆகியோர் அன்று மாலை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட எம்.ஜி.ஆர் எம்மை அன்புடனும் பண்புடனும் வரவேற்றார். முதலில் நாம் எம்மை அறிமுகம் செய்து கொண்டோம். “உங்கள் தலைவர் பிரபாகரன் வரவில்லையா? அவரைச் சந்திக்க நான் ஆவலாக இருப்பதாகச் சொல்லுங்கள்” என்றார். “அவர் சென்னைக்கு வெளியே ஒரு பயிற்சிப் பாசறைக்கு அவசர அலுவலாக சென்றிருக்கிறார். அடுத்த தடவை நிச்சயமாக அவரை அழைத்து வருவோம்.” என்றேன்.

“கலைஞர் கருணாநிதியின் அழைப்பை நீங்கள் ஏன் ஏற்கவில்லை? அவரை எதற்காகச் சந்திக்க மறுத்தீர்கள்?” என்று ஒரு சங்கடமான கேள்வியை எழுப்பினார் எம்.ஜி.ஆர்.

“ஈழ விடுதலை அமைப்புகள் ஒன்றுபட வேண்டும், ஈழ விடுதலைப் போராட்டம் வலுப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நீங்கள்தான் முதலில் ஈழ விடுதலை அமைப்புகளுக்கு அழைப்பை விடுத்தீர்கள். இன்றைய நாளை சந்திக்கும் தினமாக குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி வீம்பிற்காக தானும் ஒரு அழைப்பை விடுத்து ஒரு நாள் முன்கூட்டியே ஈழ விடுதலை அமைப்புகளைச் சந்திக்க விரும்பினார். கலைஞர் விடுத்த அழைப்பு ஒற்றுமை முயற்சியை நோக்காகக் கொண்டதன்று. அவர் உங்களுடன் போட்டி போட்டு அரசியல் இலாபம் தேட முயற்சித்தார். அதனால்தான் நாங்கள் அவரது அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.” என்று விளக்கினேன். முதல்வரின் முகம் மலர்ந்தது. “நீங்கள் தமிழ்நாட்டு அரசியலை நன்கு புரிந்து வைத்திருக்கின்றீர்கள்.” என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

“ஈழ விடுதலைப் போராளிகள் ஐந்து அமைப்புகளாக ஏன் பிளவுபட்டு நிற்க வேண்டும்? ஒரே அணியில் ஒன்றுசேர முடியாதா?” என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

“ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஒரு உறுதியான, தெளிவான இலட்சியத்தின் அடிப்படையில்தான் போராளி அமைப்புகள் ஒன்றுசேர முடியும். ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு நிறையவுண்டு. நடத்தையிலும் வேறுபாடு உண்டு. விடுதலைப் புலிகள் தனித்துவமானவர்கள். தனித்துவப் பண்பியல்பு கொண்டவர்கள். ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு போன்ற உயரிய பண்புகளை இறுக்கமாகப் பேணுபவர்கள். சாவுக்குத் துணிந்தவர்கள். எதிரியின் கையில் உயிருடன் சிக்காதிருக்க நஞ்சுக் குப்பிகளை அணிந்திருப்பவர்கள். தமிழீழத் தாயக விடுதலை என்ற இலட்சியத்திற்காகத் தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். இந்த அற்புதமான பண்புகளும் இலட்சிய உறுதிப்பாடும் ஏனைய அமைப்பினரிடம் காணமுடியாது.” என்று விளக்கினேன். மௌனமாக ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலி வீரர்கள் கடைப்பிடிக்கும் பண்பியல்புகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன.

உமா மகேஸ்வரனைப் பற்றிக் கேட்டார். “அவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராமே? தனது இயக்கம் தான் உண்மையான புலி இயக்கம் என்று சொல்லித் திரிகிறாராம். பிரபாகரனுக்கும் அவருக்கும் என்ன பிரச்சினை?” என்று கேட்டார்.

“போராளி அமைப்புக்களைச் சேர்ந்த அனைவரையுமே ஈழத்துப் புலிகள் என்று தமிழ்நாட்டு மக்கள் அழைப்பது வழக்க




மாகி விட்டது. இந்தக் குழப்பத்தால் மற்றைய அமைப்புகள் புரியும் பாவம், பழி எல்லாமே புலிகள் இயக்கம் மீது விழுந்து விடுகிறது. உமா மகேஸ்வரனும் ஒரு காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தவர். இயக்கத்தின் ஒழுக்க விதிகளை மீறி ஒரு பெண்ணுடன் தகாத உறவு கொண்டதால் அவர் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் புளொட் என்ற புதிய அமைப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். புலிகளின் தலைமையை அழிக்கவும் முயற்சி செய்து வருகிறார். அவர் ஒரு கொடிய மனிதர், தமிழ் நாட்டிலுள்ள அவரது பயிற்சி முகாம்களில் கொடுமைகள் நிகழ்வதாகச் சொல்லப்படுகிறது. அவை வதை முகாம்களாக மாற்றப்பட்டிருக்கின்றனவாம். பல அப்பாவி இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாகிக் கொல்லப்பட்டிருப்பதாக நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கிறது.” என்று கூறினேன்.

“அப்படியான பேர்வழியா? எனக்கு அவர் பற்றி விபரமாகத் தெரியாது. அவரை நாளை சந்திப்பதாக நேரம் ஒதுக்கியிருக்கிறேன். அதை இரத்துச் செய்ய வேண்டும். இப்படியான பேர்வழியுடன் எந்த உறவும் வைத்திருக்கக் கூடாது.” என்றார்.

“விடுதலைப் புலிகளின் கொள்கை என்ன? அரசியல் சித்தாந்தம் என்ன? விடுதலைப் புலிகள் கம்யூனிசத் தீவிரவாதிகள் என்று எனது அமைச்சர் ஒருவர் சொல்கிறாரே, அது உண்மையா?” என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

“விடுதலைப் புலிகள் கம்யூனிஸ்டுகள் அல்லர். விடுதலைப் புலிகள் புரட்சிவாதிகள், சுதந்திரப் போராளிகள். தமது தாயகமான தமிழீழத்தின் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள். சாதியக் கொடுமை, பெண் அடிமைத்தனம் மற்றும் சமூக முரண்பாடுகள் நீங்கிய சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஒரு உன்னதமான, சுதந்திரமான சமுதாயத்தைப் படைக்கவே நாம் போராடுகிறோம். இப்படியான எமது புரட்சிகரக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் எம்மைக் கம்யூனிசத் தீவிரவாதிகள் என சிலர் தவறாகக் கருதக்கூடும். ஏழைகளின் சுபீட்சத்திற்காகவும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவிற்காகவும் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம். இரத்தம் சிந்தி, உயிரை அர்ப்பணித்துப் போராடுகிறோம். எமது இந்த இலட்சிய உறுதியை தீவிரவாதம் என்று சொல்ல முடியாது. விடுதலை வேட்கை என்று சொல்வதே பொருந்தும்.” என்று விளக்கினேன். விடுதலைப் புலிகளின் கொள்கையையும் சித்தாந்தத்தையும் விபரிக்கும் போது கடினமான, சிக்கலான சொற்பிரயோகங்கள், கோட்பாடுகளைத் தவிர்த்து மிகவும் எளிமையாக அவர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் விளக்க முயன்றேன்.

“ஏழைகளின் நண்பனாக, தொழிலாளர்களின் தோழனாக, நசுக்கப்படும் மக்களின் நாயகனாக நீங்கள் திரையுலகில் நடித்து தமிழ் நாட்டில் சமூக விழிப்புணர்வை தட்டியெழுப்பவில்லையா? இதனால் தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடிக்கவில்லையா? இன்னும் தமிழகத்தின் முதல்வராக உயர் பதவி வகிக்கும் நீங்கள் ஏழைகளின் துயர் துடைக்கத் தொண்டாற்றவில்லையா? நீங்கள் சினிமா உலகில் சாதித்ததை விடுதலைப் புலிகள் நிஜவுலகில் சாதிக்கிறார்கள். உங்களுக்கும் புலிகளுக்கும் இலட்சியம் ஒன்றுதானே? கொள்கையளவில் நோக்கினால் உங்களையும் பிரபாகரனையும் சமூகப் புரட்சிவாதிகள் என்றுதான் சொல்லவேண்டும்.” என்று விளக்கினேன். அவர் புன்முறுவலுடன் தலையசைத்த போது நான் கொடுத்த விளக்கம் அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது என்பது தெளிவாகியது.

அடுத்ததாக சிங்கள அரச பயங்கரவாதத்தின் கொடுமைகளையும் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் தாங்கொணாத் துன்பங்களையும் எடுத்துக் கூறினோம். சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் தாயகத்தில் நிகழ்த்திய படுகொலைகளை விபரித்துக் கூறிய திரு. பேபி சுப்பிரமணியம், அந்தக் கொடூரக் காட்சிகளைச் சித்தரிக்கும் புகைப்படங்களை எம்.ஜி.ஆரிடம் காண்பித்தார். அந்தக் கொலைக் காட்சிகளை படங்களில் பார்த்ததுமே அவரது முகம் விகாரமடைந்தது. “இதைப் பார்க்க முடியவில்லையே. இப்படியெல்லாம் கொடுமை செய்வார்களா?” என்று கவலையுடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார்.

“ஈழத்தில் இனக்கொலை நடக்கிறது. எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தத் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களையும் மண்ணையும் மீட்கவே நாம் ஆயுதமேந்திப் போராடுகிறோம்.” என்று விளக்கினேன்.

“இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை இந்திய அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறதா? ஈழத்துப் போராளிகளுக்கு ஏதோ இரகசியமாக உதவி செய்வதாகக் கேள்விப்பட்டேன். இராணுவப் பயிற்சியும் ஆயதங்களும் பணமும் கொடுப்பதாகச் சொல்லுறாங்க. உண்மையா?” என்று கேட்டார் முதலமைச்சர்.

“மிகவும் சிறிய அளவில் உதவி புரிகிறார்கள். யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட மாதிரி. எமது அமைப்பைச் சேர்ந்த இருநூறு போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். சிறிய தொகையில் பழைய துருப்பிடித்த ஆயதங்களும் தந்திருக்கிறார்கள். இவற்றில் பல பாவனைக்கு உகந்தன அல்ல என்று எமது தளபதிகள் சொல்கிறார்கள். தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்காக இந்திய அரசு எமக்கு உதவி புரியவில்லை. தனது பூகோள - அரசியல் நலனுக்காகவே எமக்கு உதவி புரிகிறது. அதாவது மேற்குலக அரசியல் - இராணுவ வலைக்குள் சிக்குண்டு நிற்கும் இலங்கை அரசைத் தனது ஆதிக்க வியூகத்தினுள் கொண்டு வருவதற்கே இந்தியா முயல்கின்றது. இந்த நோக்கை அடைவதற்காகவே ஈழத்துப் போராளிகளை இந்தியா பகடைக் காய்களாகப் பாவிக்கிறது. இந்த இராணுவப் பயிற்சித் திட்டத்திலும் பாகுபாடு காட்டப்படுகிறது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி மறுக்கப்பட்டது. ஆயினும் இந்திரா காந்தி அம்மையாரின் தலையீட்டின் பின்னரே இந்தப் பயிற்சித் திட்டத்தில் நாம் இணைக்கப்பட்டோம். அப்படியிருந்தும் எம்மைவிட மற்றைய அமைப்புகளுக்கே கூடுதலாகப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பணமும் வழங்கப்படுகிறது. எமக்கு நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை.” என்று சொன்னேன்.

“என்ன காரணத்திற்காக இப்படிப் பாராபட்சம் காட்டுகிறார்கள்?” என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

“நாம் தனித்துவமான போக்குடையவர்கள் என்பது இந்திய அரசுக்குத் தெரியும். அத்தோடு, வரித்துக்கொண்ட இலட்சியத்

தில் நாம் உறுதியாக நிற்போம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவின் இரகசியத் திட்டங்களுக்கு இசைந்து போய் வளைந்து கொடுக்க மாட்டோம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஏனைய அமைப்புகள் அப்படியல்ல. அவர்களுக்கு உறுதியான இலட்சியம் எதுவுமில்லை. இந்திய அரசின் அழுத்தங்களுக்கு அவர்கள் பணிந்து சென்று வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இதன் காரணமாகவே ஏனைய போராளி அமைப்புகளை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த இந்திய அரசு முனைகிறது." என்று விளக்கினேன்.

எல்லாவற்றையும் மிகவும் உன்னிப்பாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர், "எல்லாம் எனக்குப் புரிகிறது. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? எத்தகைய உதவியை என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

"எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் கைகொடுத்து உதவ வேண்டும். இந்திய அரசு ஒழுங்கு செய்த பயிற்சி அறவே போதாது. இந்தியப் பயிற்சி பெற்ற இருநூறு போராளிகளுடன் சிங்கள இராணுவத்தைச் சமாளிப்பது மிகவும் கடினம். நாம் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைத்து எமது போராளிகளுக்கு நாமே பயிற்சி கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம். குறைந்தது ஆயிரம் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சியளித்து அவர்களுக்கு ஆயுதம் தரிக்க விரும்புகின்றோம். இத்திட்டத்தை நிறைவு செய்யப் பண உதவி செய்வீர்களா? அப்படி உதவினால் அது எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும். அந்த உதவிக்காக எமது மக்கள் என்றுமே உங்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்." என்றேன்.

"அது சரி என்னிடமிருந்து எந்தளவு பணத்தை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர். மிகவும் சங்கடமான கேள்வி. என்ன சொல்வதென்று தெரியாது தடுமாறியபடி, "பெரிய தொகையாகத் தேவைப்படும்." என்று இழுத்தேன்.

"அது சரி. எந்தளவு தொகையை எதிர்பார்க்கிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டார். நான் சங்கடப்படுவதைக் கண்ட கேணல் சங்கர் "குறைந்தது இரண்டு கோடியாவது தேவைப்படும். ஆயிரம் போராளிகளுக்குப் பயிற்சி அளிக்க ஒரு கோடியும், அந்த ஆயிரம் பேருக்கும் ஆயுதம் தரிக்க இன்னொரு கோடியுமாக இரண்டு கோடி தேவைப்படும்." என்று சொன்னார்.

"ஆக இரண்டு கோடிதானா? நாளைக்கே கொடுத்து விடுகிறேன்." என்று கூறிய முதலமைச்சர், என்னைச் சுட்டிக்காட்டி, மறுநாள் இரவு பத்து மணியளவில் ஒரு வாகனத்துடன் தனது வீட்டுக்கு வருமாறு கேட்டுக் கொண்டார்.

நாம் வாயடைத்துப் போனோம். அந்த நேரத்தில் இரண்டு கோடி இந்திய ரூபாய் என்றால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத தொகை. அப்பொழுது எமக்கு பயங்கரமான பணப் பிரச்சினை. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த ஆதரவாளர்களிடமிருந்து கிடைத்த சிறு தொகைப் பணத்தில் தான் மிகச் சிரமத்துடன் முழு இயக்கமும் ஓடிக்கொண்டிருந்தது. இப்படியாகத் திடீரென எம்.ஜி.ஆரின் உருவத்தில் அதிர்ஸ்ட தேவதை எம் மீது கருணை காட்டுவாளென நாம் எதிர்பார்க்கவில்லை.

எம்.ஜி.ஆருக்குப் புகழாரம் பாடி, விரைவில் தலைவர் பிரபாகரனுடன் வருவதாக வாக்குறுதி அளித்துவிட்டு விடை பெற்றோம். வெளியே வந்ததும், "இன்னும் கூடுதலாகக் கேட்டிருந்தால் கொடுத்திருப்பார் போலத் தெரிகிறதே?" என்று கேணல் சங்கரிடம் கேட்டேன்.

"முதலில் இந்தத் தொகை கிடைப்பதே பெரிய காரியம். தேவை ஏற்பட்டால் பின்பும் உதவி கேட்கலாம்தானே?" என்றார் சங்கர். அவர் சொன்னது எனக்குச் சரியாகப்பட்டது.

தலைவர் பிரபாகரனுக்கு இந்த மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தபோது அவர் முதலில் நம்ப மறுத்துவிட்டார். கேலி செய்கிறோம் என்று எண்ணினார் போலும். பின்பு முழு விபரத்தையும் கூறினோம். மிகவும் பூரிப்படைந்த பிரபாகரன், சில தினங்களில் எம்.ஜி.ஆர் அவர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கப் போவதாகச் சொன்னார்.

மறுநாள் இரவு சரியாகப் பத்து மணியளவில் ஒரு கயஸ்வான் வண்டியுடன் பறங்கிமலையிலுள்ள எம்.ஜி.ஆர் அவர்களின் வீட்டுக்குச் சென்றோம். ரகு என்ற போராளி வாகனத்தை ஓட்டி வந்தார். எம்மை எதிர்பார்த்தபடி அந்தப் பங்களாவின் முன் வாசலில் எமக்காகக் காத்து நின்றார் முதல்வர்.

வாகனத்தை வீட்டுக்கு ஓரமாக நிறுத்தும்படி சொல்லிவிட்டு என்னை மட்டும் வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். "யார் அந்தப் பையன்?" என்று கேட்டார். "பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவர். ஒரு விடுதலைப் போராளி" என்றேன்.

வீட்டுக்குள் ஒரு லிப்ட் (டகைவ) இருந்தது. அதைத் திறந்து உள்ளே வர அழைத்தார். பாதாளம் வரை ஒரு தளத்துக்குக் கொண்டு சென்று அது திறந்து கொண்டது. அங்கு விரிந்து அகன்ற ஒரு அறை. அந்த அறை நிறையப் பெட்டிகள். ஒன்றின் மேல் ஒன்றாக, நிரையாகப் பத்து அடி உயரம் வரை அடுக்கப்பட்டு இருந்தன. அது ஒரு பாதாளப் பண அறை. அந்த அறைக்குள் இரண்டு காவலாளிகள் ஓரமாக ஒதுங்கி நின்றனர். அவர்களிடம் இரு விரல்களைக் காட்டி மலையாள மொழியில் ஏதோ சொன்னார். பத்துப் பெட்டிகள் வரை எடுத்து வந்து லிப்டுக்குள் அடுக்கினார்கள். பின்பு வெளியே வந்ததும் பெட்டிகள் எமது வாகனத்திற்குள் அடுக்கப்பட்டன.

அந்த நள்ளிரவில் கோடிக்கணக்கான பணத்துடன் சென்னை நகரம் ஊடாக திருவான்மையூரிலுள்ள எமது வீட்டுக்குச் செல்வதில் சிக்கல்கள் எழலாம். சில சமயம் காவல்துறையினர் மறித்துச் சோதனையிட்டாலும் பிரச்சினை வரலாம். எம்.ஜி.ஆரிடம் விடயத்தைக் கூறினோம். எமக்குப் பாதுகாப்பு ஒழுங்கு செய்வதாகக் கூறிவிட்டு யாரிடமோ தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஒரு சில நிமிடங்களுக்குள் இரு ஜீப் வண்டிகளில் ஆயுதம் தரித்த காவல்துறையினர் அங்கு வந்து சேர்ந்தனர்.

முன்பாக ஒரு ஜீப் வண்டியும், பின்னால் இன்னொன்றுமாக, ஆயுதம் தரித்த காவல்துறையினர் புடைசூழ நானும் ரகுவும், இரண்டு கோடி ரூபா அடங்கிய பெட்டிகளும் சென்னை நகர வீதிகள் ஊடாகப் பவனி சென்று திருவான்மையூரை அடைந்தோம். எமது வீட்டில் தலைவர் பிரபாகரனும் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தியும் கேணல் சங்கரும் மற்றும் சில போராளிகளும் எமக்காகக் காத்திருந்தனர். எமது இருப்பிடம் வந்தடைந்ததும் காவற்துறையினர் விடைபெற்றுச் சென்றனர். பணப் பெட்டிகள் வீட்டின் மேல்மாடியிலுள்ள எமது படுக்கை அறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டன. ஒவ்வொரு பெட்டியாகத் திறந்து நூறு ரூபா நோட்டுகள் அடங்கிய கட்டுகளை எடுத்து அடுக்கி எண்ணி முடிக்க விடிந்து விட்டது. அன்றிரவு தூக்கத்தைத் துறந்த போதும், திடீரென அதிர்ஸ்டம் ஏற்பட்டு துயரங்கள் தீர்ந்தது போன்ற குதூகலம் எல்லோரது முகத்திலும் தென்பட்டது. வெகு விரைவாக முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார் பிரபாகரன்.

ஒரு முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தில் நிதி நெருக்கடியால் நாம் திணறிக் கொண்டிருந்த வேளையில் எம்.ஜி.ஆர் அவர்கள் செய்த பண உதவி எமது விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்தது. இராணுவ அரசியற் பிரிவுகளின் விரிவாக்கத்திற்கும், புதிய பயிற்சி முகாம்களை அமைக்கவும், நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குமே எம்.ஜி.ஆர் அளித்த நிதியுதவியைப் பிரபாகரன் பயன்படுத்தினார்.

அந்த வாரமே பிரபாகரன் - எம்.ஜி.ஆர் சந்திப்பு நிகழ்ந்தது. நானும் பிரபாகரனுடன் சென்றிருந்தேன். பிரபாகரனின் வாழ்க்கைப் பின்னணி, அவரது போராட்ட வாழ்க்கை, ஈழத்து அரசியல் இராணுவ நிலைமை, தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் துயரங்கள், இந்தியப் புலனாய்வுத் துறை ஒழுங்கு செய்த இராணுவப் பயிற்சித் திட்டம், விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய போராளி அமைப்புகளுக்கும் மத்தியிலான முரண்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. எம்.ஜி.ஆர் காட்டிய ஆர்வத்தைப் பார்த்த பொழுது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவர் மிகவும் அக்கறை கொண்டுள்ளார் என்பது புலனாகியது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நின்று, ஈழ மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்குத் தன்னாலான உதவிகள் செய்யத் தயாராக இருப்பதாகத் தலைவர் பிரபாகரனிடம் சொன்னார். முதற் சந்திப்பிலேயே பிரபாகரனை அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது. அன்றைய நாளில் ஒரு வரலாற்று நட்புறவுக்கு அடித்தளம் இடப்பட்டது.

எம்.ஜி.ஆர் அவர்கள் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். குழந்தை உள்ளம் படைத்தவர். நண்பர்களுக்கு நண்பர். தனக்குப் பிடித்தவர்கள் மீது அளப்பரிய அன்பு காட்டுவார். ஒரு தடவை அவரது அன்புத் தொல்லையில் நான் சிக்குப்பட்டு இரு வாரங்கள் வரை ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவஸ்தைப்பட நேர்ந்தது. இதுவொரு சுவாரஸ்யமான சம்பவம்.

ஒரு நாள் காலை எம்.ஜி.ஆர் அவர்கள் என்னையும் பிரபாகரனையும் அவசரமாகத் தனது இல்லத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். நாங்கள் அவரது வீட்டுக்கு விரைந்து சென்றோம். ஏதோ அதிமுக்கிய விடயமாக இருக்கலாமென எண்ணிக் கொண்டோம். அங்கு சென்றபோது, எம்.ஜி.ஆரின் செயலர் எம்மை வரவேற்றார். "எதற்காக எம்மை அழைத்திருக்கிறார்?" என்று அவரிடம் கேட்டோம். "அப்படியாக ஒரு முக்கிய விடயமும் இல்லை. உங்களுடன் சேர்ந்து காலை விருந்து உண்ண விரும்புகிறார். தனக்குப் பிடித்தவர்களைக் காலை விருந்துக்கு அவர் அழைப்பது வழக்கம்." என்றார் செயலர். சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே முதல்வர் எமக்காகக் காத்திருந்தார். "வாருங்கள், வாருங்கள். உங்களுக்கென்று விசேடமாக காலை உணவு தயாரித்திருக்கிறோம்." என்று கூறிப் பெரியதொரு சாப்பாட்டு மேசையில் எம்மை அமரச் செய்தார்.

முதலில் இட்டலி, அதன் பின் தோசை, பின்பு பூரி, உப்பு மா, தயிர் வடை இப்படியாகச் சுடச் சுட வாழை இலையில் உணவு வகைகள் மாறி மாறிப் பரிமாறப்பட்டன. எம்.ஜி.ஆருக்கு ஈடாகப் பிரபாகரன் சுவைத்து ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இவர்களுக்கு ஈடுகட்ட முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன் நான். நீரிழிவு வியாதி இருப்பதால் எனக்கு உணவுக் கட்டுப்பாடு. அவசரத்தில் இன்சுலின் ஊசி ஏற்றாமல் வந்துவிட்டதால் அதிகமாகச் சாப்பிட முடியாத நிலை. சிறிய அளவாகத்தான் சாப்பிட முடிந்தது. எம்.ஜி.ஆரின் கழுகுக் கண்கள் அதனைக் கவனித்து விட்டன.

"எனது வீட்டிற்கு உணவருந்த வருபவர்கள் வயிறு நிறையச் சாப்பிட வேண்டும். தம்பி பிரபாகரன் நன்றாகச் சாப்பிடுகிறார். நீங்கள் சிரமப்படுவதுபோலத் தெரிகிறது. நிறையச் சாப்பிடுங்கள்." என்று கூறிச் சமையற்காரப் பையனிடம் சைகை காட்டினார். அவன் இட்டலி, தோசை, சாம்பாருடன் ஓடி வந்தான்.

"சார், எனக்கு நீரிழிவு வியாதி. இன்சுலின் ஊசியும் ஏற்றவில்லை. உணவுக் கட்டுப்பாடும் இருக்கிறது. அதிகம் சாப்பிட முடியாது" என்றேன்.

"நீரிழிவு வியாதியைக் குணப்படுத்தலாம் அல்லவா? எனக்கும் நீரிழிவு இருந்தது. இப்பொழுது குணமாகிவிட்டது. நீரிழிவு இருந்தால் சாப்பிடக் கூடாது என்று யார் சொன்னார்கள்? எந்த முட்டாளிடம் வைத்தியம் பார்க்கிறீர்கள்?" என்றார் எம்.ஜி.ஆர்.



எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. வீணாக வம்புக்குள் மாட்டிவிட்டோம் போலத் தோன்றியது. எனது வாழையிலை மீது இட்டலிகள் குவிந்தபடி இருந்தன.

"நீரிழிவு வியாதியைக் கட்டுப்படுத்த இன்சுலின் ஊசி பாவிக்கிறேன். காலையும் இரவும் இரு தடவைகள் ஊசி ஏற்ற வேண்டும். இந்த ஊசியில்தான் உயிரே தங்கியிருக்கிறது. நீரிழிவு நோய் முற்றிவிட்டால் அதனைக் குணப்படுத்த முடியாது என்று லண்டனிலுள்ள மருத்துவ நிபுணர்கள் சொன்னார்கள்" என்றேன்.

"நான் சொல்கிறேன் நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த முடியும். நான் குணப்படுத்திக் காட்டுகிறேன்." என்று சவால் விட்டபடி தனது சொந்த மருத்துவரை உடன் வருமாறு அழைப்பு விடுத்தார். எனது கெட்ட காலம், மருத்துவரும் உடனே அங்கு வந்து சேர்ந்தார்.

"வாருங்கள் டாக்டர். நீங்கள் ஒரு மருத்துவ நிபுணர். நீங்கள்தான் சொல்ல வேண்டும். தனக்கு நீரிழிவு வியாதி இருப்பதாகவும் அந்த வியாதியைக் குணப்படுத்த முடியாது என்றும் பாலசிங்கம் சொல்கிறார். நான் சொல்கிறேன் குணப்படுத்த முடியும் என்று. யார் சொல்வது சரி?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"சார் நீங்கள் சொல்வதுதான் சரி" என்று கூனிக் குறுகியபடி பதிலளித்தார் அந்த வயோதிப மருத்துவர்.

"நீரிழிவைக் குணப்படுத்த எவ்வளவு காலம் பிடிக்கும்? இரண்டு வாரங்கள் போதும் அல்லவா?" என்று முதல்வர் கேட்க, "ஆமா" போட்டார் அந்த டாக்டர். நான் வாயடைத்துப் போனேன்.

"உடனடியாக, இப்பொழுதே இவரை அழைத்துச் சென்று அப்பலோ மருத்துவமனையில் சேர்த்து விடுங்கள். எனக்கு மிகவும் வேண்டியவர் என்று சொல்லுங்கள். நன்றாகக் கவனிப்பார்கள்." என்று மருத்துவரிடம் சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து, "உடனே புறப்படுங்கள்." என்று ஆணையிட்டார்.

நான் பரிதாபமாகப் பிரபாகரனைப் பார்த்தேன். சிரிப்பை அடக்கிக் கொண்டு, 'சீரியஸான' முக பாவனையுடன் "போய் வாருங்கள் அண்ணா." என்றார் பிரபாகரன்.

வீட்டுக்கு வெளியே வந்ததும் மருத்துவரின் காரில் ஏறினேன். "என்ன டாக்டர், வீணாக என்னை மாட்டிவிட்டீர்களே? இன்சுலின் ஏற்றுமளவுக்கு நீரிழிவு நோய் முற்றியிருக்கிறது. அப்படியிருந்தும் நோயைக் குணப்படுத்த முடியும் என்கிறீர்கள். உண்மையாக அப்படிக் கருதுகிறீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"முதலமைச்சர் சொல்வதற்கு மாற்றுக் கருத்து எப்படிச் சொல்வது? எதற்கு எனக்கு வீண் வம்பு? அப்பலோ மருத்துவமனையில் எல்லா வசதிகளுடனும் ஒரு தனி அறை ஒழுங்கு செய்து தரலாம். ஓய்வு எடுத்தால் உங்களுக்கு நல்லது. இரண்டு வாரங்கள் தானே. பொழுது போவது தெரியாது." என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். கன்னத்தைப் பொத்தி அறைய வேண்டும் போல இருந்தது.

எம்.ஜி.ஆரின் அன்புத் தொல்லையால் அப்பலோ மருத்துவமனையில் இரண்டு வாரம் சிறை இருந்தேன். மூன்று மாதங்கள் கழிந்த பின் ஒரு நாள் என்னையும் பிரபாகரனையும் காலை உணவருந்த அழைத்தார் எம்.ஜி.ஆர். இம்முறை இன்சுலின் மருந்தைக் கூடுதலாக ஏற்றிவிட்டுச் சென்றேன்.

என்னைக் கண்டதுமே, "சிகிச்சை எடுத்தீர்களா? நீரிழிவு நோய் குணமாகிவிட்டதா?" என்று மிகவும் ஆர்வுமாகவும் கருணையுடனும் கேட்டார் முதலமைச்சர். "ஆமா சார். மிகவும் நன்றி." என்றேன்.

இட்டலி, தோசை, வடை, பூரி என்று எனக்குப் படைத்ததை

எல்லாம் வயிறு நிறைய விழுங்கினேன். எம்.ஜி.ஆருக்குப் பரம திருப்தி.

விடுதலைப் புலிகள் தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் நல்கிய உதவி அளப்பரியது. எல்லாவற்றையுமே முழுமையாக இங்கு ஆவணப்படுத்த முடியாதபோதும், ஒரு சில முக்கிய சம்பவங் களையாவது பதிவு செய்வது வரலாற்று ரீதியாகப் பயன்படும் எனக் கருதுகிறேன். இப்பொழுது தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் என்ற சொல்லை உச்சரிப்பதே சட்டவிரோதமான ஒரு குற்றச் செயலாகக் கருதப்படுகிறது. எம்.ஜி.ஆர் அவர்கள் வளர்த்து விட்ட அ.தி.மு.க கட்சியும், அதன் தலைமையும் இன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தி நிற்கின்றன. ஆனால் அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழ மக் களின் விடுதலைக்காக மிகவும் துணிச்சலான காரியங்களைப் புரிந்து எமக்கு கைகொடுத்து உதவியிருக்கிறார்.

ஒரு தடவை சென்னைத் துறைமுகம் ஊடாக ஆயுதங்களைத் தருவிக்க முயன்றோம். எமக்கான நவீன ஆயுதங்கள் அடங் கிய கொள்கலனுடன் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகம் வந்தடைந்தது. துறைமுகம் ஊடாக ஆயுதக் கொள்கலனை வெளியே எடுக்க நாம் செய்த பகீரத முயற்சிகள் பயனளிக்கவில்லை. சரியாக ஒரு மாதத்திற்கு முன்புதான் உமா மகேஸ்வரன் ஒழுங்குசெய்த ஆயுதக் கப்பல் ஒன்று இந்தியப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்டது. பல கோடி பெறு மதியான ஆயுதங்களைப் புளொட் இயக்கம் இழக்க நேரிட்டது. புலிகளுக்கும் இந்தக் கதி நேரக் கூடாதென விரும்பினோம். ஆயுதங்களை பறிகொடுக்காமல் வெளியே எடுப்பதற்கு எம்.ஜி. ஆரின் உதவியை நாடுவதே ஒரேயொரு வழியாக எனக்குத் தென்பட்டது. பிரபாகரனும் நானும், எம்.ஜி.ஆரிடம் சென்றோம். நிலைமையை எடுத்து விளக்கினோம்.

"நீங்கள் கொடுத்த பணத்தில் இந்த ஆயுதங்களை வாங்கியிருக் கிறோம். சென்னைத் துறைமுகத்தில், ஒரு கப்பலில், ஒரு கொள் கலனுக்குள் இந்த ஆயுதங்கள் இருக்கின்றன. எப்படியாவது அதனை வெளியே எடுத்துத் தரவேண்டும். நீங்கள் மனம் வைத்தால் முடியும்." என்று கேட்டோம். எதுவித தயக்கமோ, பதட்டமோ அவரிடம் காணப்படவில்லை. "இதுதானா பிரச் சினை? செய்து முடிக்கலாம்." என்று கூறிவிட்டு, துறைமுக சுங்க மேலதிகாரிகளுடன் தொலைபேசியில் கதைத்தார். பின்பு எம் மிடம், ஒரு சுங்க அதிகாரியின் பெயரைக் குறித்துத் தந்து, அவரைச் சந்தித்தால் காரியம் சாத்தியமாகும் என்றார் முத லமைச்சர். அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு நாம் மகிழ்வுடன் வீடு திரும்பினோம்.

சென்னைத் துறைமுகத்திலிருந்து ஆயுதக் கொள்கலனை மீட்டு வரும் பொறுப்பைக் கேணல் சங்கரிடம் கையளித்தார் பிரபா கரன். ஒரு சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் இரவு தமிழ் நாட்டுக் காவற்துறையினரின் பாதுகாப்புடன் பாரம் தூக்கி பொருத்திய கனரக வாகனத்தில் எமது ஆயுதக் கொள்கலன் சென்னை நகரம் ஊடாகப் பவனி வந்து நாம் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இறக்கப்பட்டது. அதில் ஒரு தொகுதி ஆயுதங்கள் திருவான்மையூரில் நாம் வசித்த வீட்டில் குவிக்கப்பட்டன. ஏவுகணைகள், தானியங்கித் துப்பாக்கிகள், ரவைப் பெட்டிகள், கைக்குண்டுகளாக வீடு நிறைந்திருந்தது. அவை வீட்டிலிருந்து அகற்றப்படும் வரை என்னால் நிம்மதியாகத் தூங்க முடிய வில்லை.

எந்தப் பிரச்சினையுமின்றி பாதுகாப்பாக ஆயுதங்களைப் பெற் றுத் தந்ததற்காக எம்.ஜி.ஆருக்கு நேரில் சென்று நன்றி தெரி வித்தார் பிரபாகரன். அந்தப் பேருதவியின் நினைவுச் சின்ன மாக இறக்கப்பட்ட ஆயுதங்களிலிருந்து ஒரு புதிய ஏ.கே-47 ரக தானியங்கித் துப்பாக்கியை எம்.ஜி.ஆரிடம் கையளித்தார் பிரபா. அந்தத் துப்பாக்கியை கழற்றிப் பூட்டி அதன் செயற்பாட்டு இயக் கத்தையும் விளங்கப்படுத்தினார். எம்.ஜி.ஆருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து நீண்ட கால இடைவெளியின் பின்னர் ஒரு தடவை சுகவீனமுற்றிருந்த முதலமைச்சரை நான் சந்திக் கச் சென்றேன். பிரபாகரனைச் சுகம் விசாரித்தார். தமிழீழத்தில் சௌக்கியமாக இருக்கிறார் என்றேன். அப்பொழுது தனது படுக் கையில் தலையணிகளின் கீழ் வைக்கப்பட்டிருந்த ஒரு ஏ.கே- 47 துப்பாக்கியை எடுத்துக் காண்பித்து, "இது பிரபாகரன் தந்த நினைவுப் பரிசு." என்று பெருமிதத்துடன் சொன்னார்.

எமக்குத் தேவை ஏற்பட்ட வேளைகளில் எம்.ஜி.ஆர் அளித்த நிதி உதவிகளை ஆதாரமாகக் கொண்டே இயக்கம் ஒழுக் கொண்டிருந்தது. ஒரு தடவை எமக்குப் பெருமளவில் நிதி தேவைப்பட்டது. தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னை எம்.ஜி.ஆரிடம் தூது அனுப்பினார். நான் எம்.ஜி.ஆரைச் சந் தித்த பொழுது முதல்வருடன் அமைச்சர் பண்டுருட்டி இராமச் சந்திரனும் இருந்தார்.

"இராணுவ - அரசியல் ரீதியாக எமது விடுதலை இயக்கம் பெரு மளவில் வளர்ச்சி கண்டுவிட்டது. பல்வேறு வேலைத் திட்டங் களை நிறைவு செய்ய வேண்டி இருக்கிறது. இம்முறை பெரிய தொகையில் பணம் தேவைப்படுகிறது. தம்பி பிரபாகரன் உங் களைத் தான் நம்பியிருக்கிறார்" என்றேன்.

"பெரிய தொகையா? எவ்வளவு தேவைப்படுகிறது?" என்றார் முதல்வர்.

"ஐந்து கோடிவரை தேவைப்படுகிறது" என்றேன்.

எம்.ஜி.ஆர் அவர்கள் திரு.பண்டுருட்டி இராமச்சந்திரனைப் பார்த்து, "மாநில அரசு மூலமாக ஏதாவது செய்யலாமா?" என்று கேட்டார்.

அமைச்சர் சில வினாடிகள் வரை சிந்தித்து விட்டு, "போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்து மக்களுக்கென தமிழ்நாட்டு அரசால் திரட் டப்பட்ட நிதி இருக்கிறது. நான்கு கோடிக்கு மேல் வரும். அந்த நிதியை இவர்களுக்குக் கொடுக்கலாமே? ஈழ மக்களின் உரி மைப் போராட்டத்திற்கு இந்நிதி வழங்கப்படுவதில் தப்பில்லை அல்லவா?" என்றார்.



"அப்படியே செய்யுங்கள். இந்த விடயத்தை உங்கள் பொறுப்பில் விடுகிறேன்." என்றார் எம்.ஜி.ஆர்.

இதனையடுத்து அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரன் அவர் களின் இல்லத்திற்கு இரவு பகலாக அலைய வேண்டியிருந்தது. "தமிழ்நாட்டு அரசின் பொறுப்பிலுள்ள நிதி என்பதால், ஒழுங் கான முறையில் செய்ய வேண்டும். உங்களது தமிழர் புனர் வாழ்வு அமைப்பின் வாயிலாக அதிகாரபூர்வமான வேலைத் திட்டம் (Project) ஒன்று தயாரித்துத் தாருங்கள். இத் திட்டம் நான்கு கோடி ரூபா வரையிலான செலவீனங்களைக் கொண் டிருக்க வேண்டும்." என்றார் அமைச்சர். அவர் கேட்டுக் கொண் டதற்கு இணங்க ஒரு மருத்துவமனை நிர்மாணத்திற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் சார்பில் அமைச்சரிடம் கையளித்தேன். இறுதியாக ஒரு அரச செயலகத்தில் வைத்து நான்கு கோடி ரூபாவுக்கான காசோலை எனக்குக் கையளிக்கப்பட்டது. இந்நிதி விவகாரத் தில் அரச அதிகாரிகள் பலர் ஈடுபட்டதால், தமிழ்நாட்டு ஊடகங் களுக்குச் செய்தி கசிந்து விட்டது. மறுநாள் காலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கிலப் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக இவ்விவகாரமும் அம்பலமாகியதும் அது ஒரு அரசியற் பூகம்பத் தைக் கிளப்பியது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத் திற்கு தமிழ்நாட்டு அரசு நிதியுதவி செய்வதாகவும் தமிழக முதலமைச்சர் இலங்கையின் இறைமையை மீறுவதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தி யிடம் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தார். ரஜீவ் காந்தி உடன டியாகவே எம்.ஜி.ஆரிடம் தொடர்பு கொண்டு தமது ஆட்சேபத் தைத் தெரிவித்தார். அன்று மாலை தன்னை அவசரமாக சந்திக்குமாறு எம்.ஜி.ஆர் எனக்கு அழைப்பு விடுத்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற கவலையோடு நான் முதலமைச்சரின் இல்லத்திற்குச் சென்றேன். அங்கு முதல் வருடன் அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார்.

ஆத்திரத்துடன் காணப்பட்டார் எம்.ஜி.ஆர். ஜெயவர்த்தனா ரஜீவிற்கு முறையிட்டதையும் ரஜீவ் தனக்கு ஆட்சேபனை தெரிவித்ததையும் விபரமாகச் சொன்னார். சிங்கள வெறியன் என்றும், ஈழத் தமிழர்களுக்குக் கொடுமை இழைப்பவன் என் றும் முதலில் ஜெயவர்த்தனாவைத் திட்டித் தீர்த்தார். ரஜீவையும் விட்டு வைக்கவில்லை. துணிவில்லாதவர் என்றும் பயந்த பேர்வழி என்றும் ரஜீவிற்கும் திட்டு விழுந்தது. "ஈழத் தமிழர் களுக்கு திரட்டிய நிதியை அந்த மக்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலை இயக்கத்திற்கு கொடுப்பதில் என்ன தவறு? இதனைப் பிரதம மந்திரி புரிந்து கொள்கிறார் இல்லையே." என்று ஆதங்கப்பட்டார் முதல்வர்.

"அந்தக் காசோலையை வைத்திருக்கிறீர்களா? வங்கியில் போடவில்லை அல்லவா?" என்று கேட்டார்.

"அந்தக் காசோலை என்னிடம் தான் இருக்கிறது" என்றேன். அதனை அமைச்சரிடம் திருப்பிக் கொடுக்கும்படி சொன்னார்.

"நாளை இரவு வீட்டுக்கு வாருங்கள். எனது சொந்தப் பணத்தி லிருந்து நான்கு கோடி தருகிறேன்." என்றார். போன உயிர் திரும்பி வந்தது போல இருந்தது. ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் எம்.ஜி.ஆருக்கும் அமைச்சர் பண்டுருட்டிக்கும் நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டேன். வீடு திரும்பியதும், நடந்ததை எல்லாம் பிரபாகரனுக்கு எடுத்துச் சொன்னேன். முதல்வரின் பெருந்தன் மையைப் பாராட்டினார் பிரபாகரன். மறுநாள் இரவு எம்.ஜி. ஆரின் பாதாளப் பண அறையிலிருந்து நான்கு கோடி ரூபா புலிகளின் கைக்குக் கிட்டியது.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் மத்தியில் நல்லுறவு நிலவியது. எமது இயக்கத்தின் மீதும் தலைவர் பிரபாகரன் மீதும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டிருந்த அன்பும் மதிப்புமே இந்த நல்லுறவுக்கு ஆதார மாக விளங்கியது. தமிழ் நாட்டில் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாமல் எமது போராளிகள் நல்லொழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் பேணிவந்தனர். இவ்விடயத்தில் திரு.பிரபாகரன் மிகவும் கண்டிப்பாக இருந்தார். ஆயினும் தமிழ்நாட்டில் செயற் பட்டு வந்த ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவ்வித ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணவில்லை. தமிழ் நாட்டில் இவர்களது குற்றச் செயல்களும், வன்முறைச் சம் பவங்களும், சமூக விரோதச் செயற்பாடுகளும் தலைவிரித் தாடின. இதனால் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பொதுவாக ஈழப் போராளிகள் மீது வெறுப்புணர்வு வளரத் தொடங்கியது. பல்வேறான ஈழப் போராளி அமைப்புகள் பற்றியும் அவர்கள் மத்தியில் நிலவிய வேறுபாடுகளையும் புரிந்து கொள்ளத் தவறிய தமிழகப் பத்திரிகைகள் எல்லோரையுமே 'ஈழத்துப் புலிகள்' என்றும், 'ஈழத்துத் தீவிரவாதிகள்' என்றும் பொதுவாகக் கண்டனக் குரல் எழுப்பின. இதனால் எமது அமைப்பிற்குச் சிக்கல் எழுந்தது. பத்திரிகைகள் மட்டுமன்றித் தமிழகக் காவல் துறையினரும் இக் குழப்பத்திற்குள் சிக்கி எமக்கு விரோதமாகத் திரும்பினர். வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து தமிழ் நாட் டில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்ட பொழுது முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் இதுவொரு சவாலாக எழுந்தது.

ஏனைய அமைப்புகளின் வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட் டை ஆட்டிப் படைத்தன. உதாரணமாக 1984 ஆகஸ்ட் மாதம் தமிழீழ இராணுவம் என்ற குழுவின் தலைவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன், சிறீலங்கா எயர்லைன் விமானத்திற்கு குறி வைத்த வெடிகுண்டு, சென்னை மீனம்பாக்கம் விமான நிலை யத்தில் தவறுதலாக வெடித்ததில் 30 பொதுமக்கள் கொல்லப்பட் டதுடன் 50 பேர் வரை படுகாயமடைந்தனர். இந்த வன்முறைச் சம்பவம் தமிழ்நாட்டை மட்டுமன்றி முழு இந்தியாவையுமே உலுப்பிவிட்டது. விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய அமைப் புகள் இந்தியாவில் பயிற்சி எடுத்த போராளிகளை உடனடியாகத் தமிழீழக் களத்திற்கு அனுப்ப முடியவில்லை. அதற்கான போரி யல் திட்டங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. அத்துடன் பெருந்தொகையான போராளிகளைப் பராமரிக்க அவர்களிடம் பண பலமும் இருக்கவில்லை. இதனால் சில அமைப்புகளின் கட்டுப்பாடு உடைந்தது. ஒழுங்கீனமும் சீர்கேடும் தலைதூக் கியது. இலக்கின்றி அலைந்த ஈழத்து இளைஞர்கள் சமூக விரோதச் செயல்களில் இறங்கினர். தமிழ்நாட்டுக் கிராமப் புறங்களிலுள்ள உள்ளூர் மக்கள் சிலர் கொல்லப்பட்டனர். வீடுகள் சூறையாடப்பட்டன. 1985 டிசம்பரில் வேதாரணியத்தில் ஆயுதம் தரித்த புளொட் உறுப்பினர்கள் உள்ளூர் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்தனர். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்று 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி, தீபாவளித் தினத்தன்று சென்னை நகரின் மையத்தில் அமைந் திருக்கும் சூளைமேட்டில் ஒரு வன்முறைச் சம்பவம் நிகழ்ந்தது. இந்த வன்முறைச் சம்பவத்தின் கதாநாயகராக விளங்கியவர் டக்ளஸ் தேவானந்தா. இப்பொழுது சனநாயகவாதியாக வேடம் பூண்டு ஈ.பி.டி.பி இன் தலைவராக விளங்கும் இவர் அப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இராணுவப் பிரிவில் பணிபுரிந்தவர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைமைச் செயலகம் சூளைமேட்டுப் பிரதான வீதியில் அமைந்திருந்தது. அன்று தீபாவளி பண்டிகை என்பதால் வீதியெங்கும் சனசமுத்திரம். நண்பகல் வேளை. ஓட்டோவில் தனது அமைப்பின் செயலகத்திற்கு முன்பாக வந் திறங்கினார் தேவானந்தா. ஓட்டோ கூலிக்கு பேரம் பேசியதில் எழுந்த சிறு தகராறு சொற் சண்டையாக வெடித்தது. "நான் யாரென்று தெரியுமா? காட்டுகிறேன் பார்." என்று மிரட்டியபடி தனது அமைப்பின் செயலகத்திற்குள் ஓடிய தேவானந்தா, ஒரு தானியங்கித் துப்பாக்கியுடன் திரும்பி வந்தார். துப்பாக்கியைக் கண்டதுமே ஓட்டோவை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்திருக்கிறான் ஓட்டோக்காரன். ஓடியவனை நோக்கித் தனது துப்பாக்கியால் தேவானந்தா சிலாவிச் சுட, துப்பாக்கி வேட்டுகள் வீதியால் சென்று கொண்டிருந்த அப்பாவிப் பொதுசனங்களைப் பதம் பார்த்தன. பத்துப் பேர் வரை படுகாயத்துடன் சாய்ந்தனர். ஒரு இளம் வழக்கறிஞர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். சூளைமேடு அல்லோலகல்லோலப்பட்டது. தமிழ்நாடு எங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. ஈழப் போராளி அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக ஊடகங்கள் வற்புறுத்தின. ஈழ விடுதலை அமைப்புகள் மீது பழிவாங்கத் தமிழக காவற்துறையினருக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது.

எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் நிர்வாக ஆட்சியில் சர்வ அதிகாரம் படைத்த உயர் அதிகாரியாக விளங்கியவர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு.கே.மோகனதாஸ். மிகக் குள்ளமாக இருந்தாலும் வல்லமை படைத்தவர். தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கிற்கு இவரே பொறுப்பதிகாரி. தமிழகப் புலனாய்வுப் பிரிவின் தலைவரும் இவரே. இவர் எம்.ஜி.ஆருக்கு விசுவாசியாகக் காட்டிக் கொண்ட போதும் இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமான உறவை வைத்திருந்தார். ஈழப் போராளிகள் பற்றிய சகல விடயங்களையும் இலங்கைப் புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கொடுத்து வந்தார். இலங்கை அரசுடன் மிகவும் நெருங்கியவர் என்பதால், ஈழப் போராளிகளுக்கு இந்திய மத்திய அரசு இராணுவப் பயிற்சி வழங்கி ஊக்குவிப்பது இவருக்குப் பிடிக்கவில்லை. இந்தியப் புலனாய்வுக் கட்டமைப்பின் உள்துறை (I.B), வெளித்துறை (RAW) பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஈழ விடுதலை அமைப்புகளுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருப்பதையும் இவர் விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த நல்லுறவையும் இவர் வெறுத்தார். சூளைமேட்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை சாக்காக வைத்து, விடுதலைப் புலிகள் உட்பட சகல ஈழ விடுதலை அமைப்புகள் மீதும் பழி வாங்கும் நடவடிக்கையில் இறங்கினார்.

இது ஒருபுறமிருக்க, கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பங்ளூரில் நவம்பர் 15-17 வரை சார்க் மாநாடு நடைபெற விருந்தது. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இம் மாநாட்டில் பங்குபற்ற இருந்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு ஈழத்துப் போராளிகளால் உயிராபத்து ஏற்படலாம் என அச்சம் கொண்ட இந்திய உள்துறை அமைச்சு தமிழ் நாட்டில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தக் கோரிக்கையும் மோகனதாஸிற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. விடுதலைப் புலிகள் உட்பட தமிழ்நாடு அடங்கிலும் செயற்பட்டு வந்த சகல ஈழ விடுதலை அமைப்புகளையும் நிராயுதபாணிகளாக்க மோகனதாஸ் திட்டமிட்டார். தனது திட்டத்திற்கு "புலி நடவடிக்கை" (Operation Tiger) எனவும் பெயரிட்டார். தனது ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் முழு ஆதரவு தந்ததாகப் பின்பு எழுதிய ஒரு நூலில் (எம்.ஜி.ஆர் மறைந்த பின்பு, MGR: The Man and the ஆலவா என்ற தலைப்பில் எழுதிய நூலில்) கூறுகிறார். மத்திய அரசின் அழுத்தத்திற்குப் பணிந்து ரஜீவ் காந்தியை திருப்திப்படுத்துவதற்காக மோகனதாஸின் ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு எம்.ஜி.ஆர் மிகவும் தயக்கத்துடன் இறங்கியதாகப் பின்பு அறிந்தோம். ஆயினும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முறையும், தமிழகப் பொலிஸாரால் தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் இழைக்கப்பட்ட அவமானமும் எம்.ஜி.ஆரை ஆழமாகக் கவலை கொள்ளச் செய்தது.

1986 நவம்பர் 8ஆம் நாள் அதிகாலை ஆறு மணி இருக்கும். மோகனதாஸின் அதிரடிப் படைகள் ஈழப்போராளி அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கும் 'புலி நடவடிக்கையில்' குதித்தன. போராளிகளின் சகல வீடுகளும் பாசறைகளும் சூறையாடப்பட்டன. எனது வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தரித்த காவல்துறை அணியொன்று, வீட்டைச் சல்லடை போட்டுத் தேடியது. எனது மனைவியின் கைத் துப்பாக்கியை மட்டும் அவர்களால் கைப்பற்ற முடிந்தது. தேடுதல் முடிந்ததும் என்னைக் கைது செய்து உள்ளூர் காவல் நிலையம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். பல கோணத்தில் நிறுத்திப் படம் பிடித்தார்கள். கைரேகையைப் பதிவு செய்தார்கள். தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து அவமானப்படுத்தினார்கள். உட்கார வைக்கவில்லை. தண்ணீர் கேட்டும் தரவில்லை. மோகனதாஸின் பணிப்பின் பேரில் திட்டமிட்டு இம்சைப்படுத்தியது போலத் தெரிந்தது. தலைவர் பிரபாகரனுக்கும் இதே கதிதான். அவரும் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டு வேறொரு காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். படம் பிடித்து, கைரேகை பதிந்து, குற்றவாளியைப் போல விசாரிக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார். பல மணி நேரமாக நிகழ்ந்த குறுக்கு விசாரணையின் பின்னர் எம்மை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். வீட்டுக்கு முன்பாக ஆயுதம் தரித்த காவற்துறையினர் நிலையெடுத்து நின்றனர். நானும் பிரபாகரனும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம். ஆயுதக் களைவு பற்றியும், எனக்கும் பிரபாவுக்கும் இழைக்கப்பட்ட அவமானம் பற்றியும் எம்.ஜி.ஆருக்கு முறையிட நான் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எந்தக் காரணத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்றார்கள். அன்றைய தினம் எம்.ஜி.ஆர் சென்னையில் இருக்கவில்லை. புதுடில்லியில் இருந்ததாகப் பின்பு அறிந்தோம்.

தலைவர் பிரபாகரன் மிகவும் கொதிப்படைந்தார். ஒரு குற்றவாளிபோல் காவல்துறையினரால் கைதாகி காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. தனது சுயகௌரவத்திற்கு மட்டுமன்றி தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கத்திற்கும் ஏற்பட்ட இழுக்காகவும் இதனை அவர் கருதினார். தமிழ்நாட்டில் ஏனைய அமைப்புகள் புரியும் குற்றச் செயல்களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் தண்டிக்கப்பட்டதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழ்நாட்டு அரசு மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை இடிந்து போனது. முதலமைச்சரின் அனுமதியின்றி இக்கைது நடவடிக்கையும் ஆயுதக் களைவும் நடைபெற்றிருக்க முடியாது எனப் பிரபாகரன் கருதினார். ஆயினும் காவல் நிலையத்தில் வைத்து பிரபாகரனையும் என்னையும் அவமானப்படுத்தியதில் மோகனதாஸிற்குப் பெரும் பங்குண்டு என்பதையும் அவர் அறிவார். எனினும் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தஞ்சம் பூண்டிருப்பது ஆபத்தானது என்பதை உணர்ந்தார்.




ஈழ விடுதலை அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கி, அவ்வமைப்புகளின் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்துவிட்டுப் பங்களூரில் சார்க் மாநாட்டிற்கான ஆயத்தங்களை செய்தது மத்திய அரசு. சார்க் மாநாட்டிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா வருகை தர இருப்பதால் பங்களூரில் வைத்து இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு முயற்சியை மேற்கொள்வதற்கு ரஜீவ் காந்தி விரும்பினார். அக்காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரித்து அதிகாரப் பகிர்வு செய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை இந்திய-இலங்கை அரசுகள் தயாரித்தன. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத இத்திட்டத்தைப் பங்களூரில் வைத்து விடுதலைப் புலிகளிடம் திணித்துவிட வேண்டும் என ரஜீவ் காந்தி திட்டமிட்டார். பங்களூர் மாநாட்டிற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக தலைவர் பிரபாகரனுக்கும் எனக்கும் போடப்பட்டிருந்த வீட்டுக் காவல் திடீரென நீக்கப்பட்டது. நவம்பர் 16ஆம் திகதி இரவு பிரபாகரனும் நானும் சென்னை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்த ஒரு விமானப் படை விமானத்தில் பங்களூர் கொண்டு செல்லப்பட்டோம்.

பங்களூரிலுள்ள ராஜபவனுக்கு நாம் போய்ச் சேர இரவு பத்து மணி ஆகிவிட்டது. அங்கு எம்மைச் சந்திப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் பிரமுகர்கள் பலர் காத்திருந்தனர். அமைச்சர் நட்வார் சிங், வெளிவிவகாரச் செயலர் வெங்கடேஸ்வரன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே.என்.டிக்சிட், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த குல்திப் சகாதேவ், மற்றும் இந்தியப் புலனாய்வுத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கிருந்தனர். நாம் அங்கு சென்றதுமே முதலில் திரு. டிக்சிட் எம்மை வரவேற்று நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறி, கிழக்கு மாகாணத்தைக் கூறுபோடும் தீர்வுத் திட்டம் பற்றி ஒரு விளக்கமும் தந்தார். ஏற்கனவே அவமானப்பட்டு நொந்து போயிருந்த எமக்கு, ஏற்கமுடியாத ஒரு தீர்வுத் திட்டத்தை இந்தியத் தூதுவர் திணிக்க முயன்றது கடும் சினத்தை ஏற்படுத்தியது. கடுமையான தொனியில் ஒரே வசனத்தில் பதிலளித்தார் பிரபாகரன். "தமிழர் தாயகத்தைப் பிரிக்கவும் முடியாது, பிரிக்கவும் விடமாட்டோம்" என்று அடித்துச் சொன்னார். கிழக்கு மாகாண வரை படத்தைச் சுட்டிக் காட்டி, விளக்கங்கள் கூறி, ஏதோவெல்லாம் அலம்பிக் கொண்டிருந்தார் டிக்சிட். எதிலுமே அக்கறை காட்டாது, பதிலும் கூறாது, இறுக்கமாக மௌனம் சாதித்தார் பிரபா. இறுதியில் நான் குறுக்கிட்டு, "எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விட்டார் திரு.பிரபாகரன். தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் எந்தத் திட்டத்தையும் நாம் ஏற்கப்போவதில்லை. இது பற்றிக் கதைத்தும் பலனில்லை" என்றேன். என்னையும் பிரபாவையும் முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றார் டிக்சிட். இந்தியத் தூதுவரின் முயற்சி தோல்வியில் முடிந்ததும், அடுத்ததாக திரு.வெங்கடேஸ்வரனைக் களத்தில் இறக்கினார்கள். ரஜீவ் காந்தியின் நிர்வாகத்திலுள்ள ஒரு முக்கிய தமிழ் அமைச்சர் என்பதால் அவர் மூலம் ஏதாவது சாதிக்கலாம் என எண்ணினார்கள் போலும். திரு.வெங்கடேஸ்வரன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் கதைத்தார். எமது நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் தமக்கு எடுத்துரைத்ததாகச் சொன்னார். ஆயினும் இப்பொழுது முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் நிரந்தரமானதன்று என்றும் ஒரு இடைக்கால ஒழுங்கு என்றும் விளக்கினார். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதில் ரஜீவ் ஆர்வமாக இருக்கிறார். இந்த சார்க் மாநாட்டில் ஒரு தீர்வு எட்டப்படுமானால் அது அவருக்கு ஒரு பெரிய அரசியல் - இராஜதந்திர வெற்றியாக அமையும் என்றார். இப்படியெல்லாம் கூறிவிட்டு எமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டார். பிரபாகரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "ரஜீவ் காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காக எமது விடுதலைப் போராட்டத்தை விற்கவா சொல்கிறீர்கள்?" என்று கடிந்து சொன்னார். வெங்கடேஸ்வரன் மலைத்துப் போனார். "எனக்கு உங்களது மனநிலை புரிகிறது." என்று சொல்லி ஒருவாறு சமாளித்துக் கொண்டு விடைபெற்றார். அடுத்ததாக, இந்தியப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் வந்தார்கள். எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள். முடியவில்லை. பிரபாகரனை நெகிழ்வுபடுத்தும் இறுதி ஆயுதமாக எம்.ஜி.ஆரைப் பயன்படுத்த முடிவாகிற்று. மறுநாள் தமிழக முதல்வர் பங்களூருக்கு அழைக்கப்பட்டார்.

தலைவர் பிரபாகரனும் நானும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்தபொழுது, அவரோடு அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் இருந்தார். நாம் எமது நிலைப்பாட்டை அவருக்குத் தெளிவாக விளக்கினோம். வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் தாயக பூமியைக் கூறுபோடும் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதனை எம் மீது திணித்து விட ரஜீவ் அரசு முயற்சிக்கிறது என்பதைக் கூறி, இத்திட்டத்தை எம்மால் ஏற்க முடியாது என உறுதிபடக் கூறினோம். எமது வாதத்தை எம்.ஜி.ஆர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வது போன்று இடையிடையே தலையையும் அசைத்துக் கொண்டார். நாம் பேசி முடித்ததும், அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "ஈழத் தமிழர் வாழும் பிரதேசத்தை எதற்காகக் கூறுபோட்டுப் பிரிக்க வேண்டும்?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் தமிழர்களுடன் சிங்களவர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகிறார்கள். அதனால்தான் கிழக்கு மாகாணத்தைக் கூறு போட முனைகிறார்கள்." என்றார் அமைச்சர். உடனே நான் குறுக் கிட்டு, "கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் கிழக்கில் பெரும்பான்மையான சிங்களவர்கள் பலவந்தமாகச் சிங்கள ஆட்சியாளர்களின் உதவியுடன் தமிழர் நிலத்தில் குடியேற்றப்பட்டவர்கள்." என்றேன். எம்.ஜி.ஆர் சிறிது நேரம் சிந்தித்தார். பின்பு அமைச்சர் பண்டுருட்டியைப் பார்த்து, "தமிழர் வாழும் நிலம் தமிழருக்குச் சொந்தம். சிங்களவர்கள் வாழும் நிலம் சிங்களவர்களுக்குச் சொந்தம். அதுதானே இந்திய அரசு கூறும் நியாயம்?" என்று கேட்டார். அதற்கு ஆமாப் போட்டார் அமைச்சர்.

எம்.ஜி.ஆருக்கும் பண்டுருட்டியாருக்கும் மத்தியிலான விவாதம் ஒரு விசித்திரமான திசையை நோக்கி நகர்ந்தது. எம்.ஜி.ஆர் கேள்விகளை அடுக்கிச் செல்ல 'ஆமா' போட்டுக் கொண்டிருந்தார் அமைச்சர்.

"வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?"

"ஆமா சார்."

"தென் இலங்கையை எடுத்துக் கொண்டால், மலைநாட்டில் பொரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?"

"ஆமா சார்."

"தென்னிலங்கைத் தலைநகரான கொழும்பில் பெரும்பான்மையாக வாழ்பவர்கள் யார்? தமிழர்கள் அல்லவா?"

சிறிது தயக்கத்துடன் ஆமாப் போட்டார் அமைச்சர்.

"முழு இலங்கையிலும் தமிழர்கள்தானே பரவலாக வாழ்கிறார்கள் இல்லையா?"

"ஆமா சார்."

"அப்படிப் பார்த்தால், இந்திய அரசின் நியாயப்படி, முழு இலங்கைத் தீவும் தமிழர்களுக்குத் தானே சொந்தமாக்கப்பட வேண்டும்? பின்பு எதற்காக தமிழர் நிலத்தைப் பிரிக்க வேண்டும்? முழு இலங்கையையும் புலிகளுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்?" என்றார் எம்.ஜி.ஆர். சொல்வது தெரியாது தடுமாறினார் பண்டுருட்டியார்.

"என்ன நான் சொல்வதில் நியாயம் இருக்கிறது தானே?" என்று கூறி அமைச்சரைப் பார்த்தார் எம்.ஜி.ஆர். இம்முறை பண்டுருட்டியாரின் அடித் தொண்டையிலிருந்து "ஆமா" என்ற சொல் ஆர்வமிழந்து அரைகுறையாக வெளிவந்தது.

நானும் பிரபாவும் எதுவுமே பேசவில்லை. மௌனமாக



இருந்து, உரையாடலை ரசித்துக் கொண்டிருந்தோம். எம்.ஜி. ஆர் எம்மைப் பார்த்து, "நீங்கள் போகலாம். இந்தியாவின் யோசனையை ஏற்க முடியாது என நீங்கள் கருதினால், ஏற்க வேண்டாம். ஏற்றுக் கொள்ளும்படி நான் வற்புறுத்த மாட்டேன்." என்றார்.

எம்.ஜி.ஆருக்கு நன்றி கூறிவிட்டு, அவரது அறையிலிருந்து வெளியேறி நடந்து கொண்டிருந்த பொழுது, எம்மை அழைத் தவாறு அமைச்சர் பண்டுருட்டி எமக்குப் பின்னால் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தார். "முழு இலங்கையையும் புலிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று தலைவர் சொன்னார் அல்லவா? அதனை சீரியஸாக எடுக்க வேண்டாம். ஒரு வாதத்திற்காக அப்படிச் சொன்னார். தயவு செய்து பத்திரிகையாளர்களிடம் இது பற்றிக் கதைக்க வேண்டாம்." என்று மன்றாட்டமாகக் கேட்டார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித் தோம்.

பங்களூரில் இந்திய அரசு முன்வைத்த யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்தது ரஜீவ் காந்திக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியது. சார்க் மாநாட்டின்போது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை அறிவித்து, புகழ்மாலை சூட்டிக் கொள்ள விரும்பிய ரஜீவுக்குப் புலிகளின் விட்டுக்கொடாத உறுதியான நிலைப்பாடு ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. அற்ப சொற்ப அதிகாரப் பரவலாக்கத்துடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, இலங்கை அரசைத் தனது வல்லாதிக்கத்தின் கீழ் கொண்டு வர விரும்பிய இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சவாலாக நின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏனைய போராளி அமைப்புகளின் தலைவர்களும் இந்திய அழுத்தத்திற்குப் பணிந்து போகத் தயாராக இருக்கும் பொழுது, தலைவர் பிரபா மட்டும் வணங்கா முடியாக, கொண்ட இலட்சியத்தில் உறுதி பூண்டு நிற்பது இந்திய ஆட்சியாளருக்கு எரிச்சலை ஊட்டியது. இந்தியாவில் பயிற்சி எடுத்து, இந்திய மண்ணில் பயிற்சிப் பாசறைகளை அமைத்து, இந்தியாவில் வாழ்ந்து கொண்டு, இந்திய அழுத்தங்களை எதிர்க்கத் துணிந்த பிரபாகரனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென ரஜீவ் ஆட்சிப் பீடம் எண்ணியது. இதன் அடிப்படையில் பிரபாகரன் பாவித்து வந்த மிக நவீனகரமான, விலையுயர்ந்த தொலைதொடர்புச் சாதனங்களைப் பறிமுதல் செய்து, விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், தமிழீழ களத்திற்கும் மத்தியிலான தகவல் தொடர்புகளைத் துண்டித்துவிட மத்திய அரசு முடிவெடுத்தது. தமிழீழ சுதந்திரப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எதிராகச் செயற்பட்ட தமிழ நாட்டுப் புலனாய்வுப் பிரிவின் அதிபரான உதவிப் பொலிஸ் மாஅதிபர் மோகனதாஸின் உதவியுடன் இந்நடவடிக்கை நிறைவேற்றப்பட்டது.

தனது தொலைதொடர்புச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதை அறிந்ததும் கடும் சினம் கொண்டவராக எனது வீட்டுக்கு வந்தார் பிரபாகரன். "நரம்பு மையத்தில் கைவைத்து விட்டார்கள். இதனை அனுமதிக்க முடியாது. எப்படியாவது, இந்தக் கருவிகளைத் திருப்பிப் பெற வேண்டும்." என்றார். தமிழீழக் களத்துடனும், அனைத்துலக கிளைகளுடனும் திடீரென தொடர்புகள் துண்டிக்கப்பட்டமை பிரபாகரனுக்கு ஆத்திரத்தை மூட்டியதுடன் இந்தியா மீதுள்ள நம்பிக்கையையும் முற்றாகத் தகர்த்தது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் மீதும் அவருக்குக் கோபம். முதல்வரின் அனுமதியின்றி தமிழ்நாட்டுக் காவல்துறை இந் நடவடிக்கையை எடுக்க முடியாது என அவர் கருதினார். இனித் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் தங்கியிருப்பது தனது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்றும் சொன்னார்.

பறிமுதல் செய்யப்பட்ட தொலைதொடர்பு சாதனங்களைத் திருப்பித் தருமாறு கோரிக்கை விடுத்து சாகும்வரை உண்ணாவிரதம் கடைப்பிடிக்கப் போவதாகப் பிரபாகரன் முடிவெடுத்தார். உடனடியாகவே எனது வீட்டில் வைத்தே உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். உணவையும் நீரையும் துறந்த கடும் விரதம். என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை. பிரபாகரன் தனது முடிவில் மிகவும் உறுதியாக நின்றார். நான் உடனடியாக பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டுவித்து, பிரபாகரனின் உண்ணாவிரதத்தை உலகிற்குத் தெரியப்படுத்தினேன். மறு நாள் காலை பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ்நாட்டு ஊடகங்கள் செய்தியைப் பிரசுரித்தன. இதனையடுத்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், இயக்க ஆதரவாளர்கள், ஊடகவியலாளர் ஆகியோரும் தமிழீழ விடுதலை விரும்பிகளுமாக ஏராளமானோர் உண்ணாவிரதம் நடைபெற்ற எனது இல்லத்திற்கு வருகை தந்து, பிரபாகரனுக்குத் தமது நல்லாதரவைத் தெரிவித்தார்கள். வீட்டுக்கு முன்புறமாக அணி திரண்ட சனக்கூட்டம் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாகக் குரல் எழுப்பியது. பல்வேறு அரசியல் இயக்கங்களும், அமைப்புகளும், பத்திரிகைகளும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டன. பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஒரு அரசியல் சூறாவளியைக் கிளப்பிவிட்டது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் அப்பொழுது சேலத்தில் இருந்தார். பிரபாகரனின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாட்டில் ஒரு அரசியல் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளதை அறிந்து மிகவும் கலங்கிப் போனார். விடுதலைப் புலிகளின் தொலைதொடர்புக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் தமக்குத் தெரியாது என அறிக்கை வெளியிட்ட அவர் புதுடில்லி மீது பழியைச் சுமத்தினார். பதிலுக்கு மத்திய அரசு தமிழ்நாட்டு அரசு மீது குற்றம் சுமத்தியது.

ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழ்நாட்டில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த காலகட்டம் அது. சிங்கள அரச ஒடுக்குமுறையிலிருந்து ஈழத்தமிழர்கள் விடுதலை பெற வேண்டும் என்பதில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் பெரும் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் சுதந்திர வீரர்களாக மதிக்கப்பட்டனர். தலைவர் பிரபாகரன் ஒரு வரலாற்று நாயகனாகப் போற்றப்பட்டார். அப்படிப்பட்ட ஒரு மாபெரும் வீரன் தமிழ் நாட்டு அரசிடம் நீதி கேட்டு, மகாத்மா காந்தியின் அகிம்சை வழியில் சாகும் வரை உண்ணாவிரதம் கடைப்பிடித்து வருவதனை அறிந்ததும் தமிழ்நாட்டு மக்கள் கொதிப்படைந்தனர். எம்.ஜி.ஆரின் நிர்வாகம் மீதும் குறிப்பாகத் தமிழ்நாட்டுக் காவல்துறை மீதும் வெறுப்புணர்வு பரவத் தொடங்கியது. உண்ணாவிரதம் நீடித்து பிரபாகரனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதன் அரசியல் விளைவுகள் படுபாதகமாக அமையும் என எம்.ஜி.ஆர் பயந்தார்.

பிரபாவின் சாகும் வரை உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாள். முதலமைச்சரிடமிருந்து எனக்கு ஒரு அவசரத் தகவல் வந்தது. உடனடியாக தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டிருந்தார். எனது வீட்டிற்கு அருகிலுள்ள எமது அரசியற் செயலகத்திற்குச் சென்று எம்.ஜி.ஆருடன் தொலைபேசியில் கதைத்தேன். முதலில் பிரபாவின் உடல் நிலைபற்றி மிகவும் பரிவோடு விசாரித்தார். மிகவும் சோர்ந்து போய் இருக்கிறார் என்றும், உண்ணாவிரதம் நீடித்துச் சென்றால் உடல்நிலை மோசமடையும் என்றும் சொன்னேன். முதலில் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு பிரபாகரனுக்கு ஆலோசனை வழங்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். தாம் சென்னைக்குத் திரும்பியதும் எம்மை நேரில் சந்தித்து பிரச்சினை பற்றிப் பேசுவதாகச் சொன்னார். பிரபாகரன் ஒரு முடிவு எடுத்தால் அதிலிருந்து பின்வாங்க மாட்டார் என்பதை முதல்வருக்குத் தெளிவாக விளக்கினேன்.

"தமிழ்நாட்டு அரசு தனக்கு அநீதி இழைத்துவிட்டதாக பிரபாகரன் கருதுகிறார். தொலைதொடர்புக் கருவிகளைப் பறித்து, தாயகக் களத்துப் போராளிகளுடன் தொடர்பைத் துண்டித்தது மிகவும் பாரதூரமான பழிவாங்கும் நடவடிக்கை என எண்ணி அவர் மிகவும் வேதனை அடைந்து இருக்கிறார். தொலைதொடர்பு சாதனங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டாலன்றி அவர் உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை." என்று கூறினேன். முதலமைச்சர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். ஏதோ ஆழமாகச் சிந்திப்பது போல் தெரிந்தது. காவல்துறையினருடன் கலந்தாலோசித்துவிட்டு மீண்டும் தொடர்பு கொள்வதாகச் சொன்னார். எம்.ஜி.ஆருடன் கதைத்த விபரத்தை பிரபாகரனுக்கு எடுத்துக் கூறினேன். முதலமைச்சரின் பதிலுக்காகக் காத்திருந்தோம். சில மணிநேரத்தின் பின் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு எம்.ஜி.ஆர் தகவல் அனுப்பியிருந்தார். "உங்களது தொலைதொடர்புச் சாதனங்களை உங்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறு நான் காவல்துறையினரைப் பணித்திருக்கிறேன். ஒரு சில தினங்களுக்குள் அவற்றைத் திருப்பித் தருவார்கள். உடனடியாகத் தம்பி பிரபாகரனை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு சொல்லுங்கள்." என்று கேட்டுக் கொண்டார். நான் அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு, பிரபாகரனிடம் சென்று தகவலை அறிவித்தேன்.

எம்.ஜி.ஆர் அளித்த வாக்குறுதி பிரபாகரனைத் திருப்திப் படுத்தவில்லை. தமிழ்நாட்டுக் காவல்துறையினரை, குறிப்பாக மோகனதாஸை அவர் நம்பத் தயாராக இல்லை. உண்ணாவிரதத்தைக் கைவிட்டதற்கு அப்புறம் தொலைதொடர்புச் சாதனங்களை காவற்துறையினர் திருப்பி ஒப்படைக்க மறுத்தால் என்ன செய்வது எனக் கேள்வி எழுப்பினார். பிரபாகரனது வாதத்தில் ஒரு நியாயப்பாடு இருப்பதாக எனக்குத் தோன்றியது. "எனது தொலைதொடர்பு சாதனங்கள் நேரடியாக என்னிடம் திருப்பி ஒப்படைக்கப்படும் வரை உண்ணாவிரதத்தை நான் கைவிடப் போவதில்லை. இதனை முதலமைச்சரிடம் சொல்லுங்கள்." என்றார். மீண்டும் எம்.ஜி.ஆருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரபாகரனின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கினேன். எம்.ஜி.ஆருக்கு நிலைமை புரிந்தது. தமிழக காவல்துறையினர் மீது பிரபாகரன் கசப்புணர்வுடன் இருப்பதன் காரணத்தையும் அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பிரபாகரன் விரும்பியபடியே செய்கிறேன் என்றார்.

அன்று மாலை பறிமுதல் செய்யப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. இந்த சாதனங்களை எனது வீட்டுக்குள் சுமந்து வந்த தமிழக காவல்துறை அதிகாரிகள் அவற்றை பிரபாகரன் முன்பாக வைத்தார்கள். மிகவும் சோர்ந்து போயிருந்த பிரபாகரனது முகத்தில் லேசாக ஒரு புன்னகை மலர்ந்தது. பிரபாகரனது நாற்பத்து எட்டு மணி நேர உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது. திராவிடக் கழகத் தலைவர் வீரமணி அவர்கள் பழச்சாறு ஊட்ட, அங்கு குழுமியிருந்த பெருந்திரளான ஆதரவாளர்கள், போராளிகள், பத்திரிகையாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவிக்க, அந்த வரலாற்று நிகழ்வு முடிவுக்கு வந்தது.

ஒரு சில வாரங்களுக்குப் பின்னர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைவர் பிரபாகரனையும் என்னையும் பறங்கி மலையிலுள்ள தனது இல்லத்திற்கு அழைத்தார். எம்மைக் கைது செய்து அவமானப்படுத்தியது, எமது ஆயுதங்களையும் பின்பு தொலைதொடர்பு சாதனங்களையும் பறித்தெடுத்தது சம்பந்தமாக நீண்ட நேரம் கலந்துரையாடல் நிகழ்ந்தது. தனது மனவேதனைகளை மனம் திறந்து கொட்டினார் பிரபாகரன். உதவிப் பொலிஸ் மாஅதிபர் திரு.மோகனதாஸ் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமானவர் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைமையையும் வெறுக்கிறார் என்றும் சிங்கள அரசின் உளவுத்துறையுடன் அவருக்கு நெருங்கிய உறவுண்டு என்பதையும் விளக்கிச் சொன்னோம்.

அப்பொழுது, திரு.மோகனதாஸ் பற்றி எமக்குச் சில அந்தரங்கத் தகவல்கள் கிடைத்திருந்தன. அவர் சிங்கப்பூருக்கு அடிக்கடி பயணம் செய்து ஒரு சிங்கள உயர்தர அதிகாரியைச் சந்திப்பதாகவும், பெரும் தொகையில் லஞ்சம் வாங்கி ஈழ விடுதலை அமைப்புகள் பற்றித் தகவல்களைப் பரிமாறுவதாகவும் மிகவும் நம்பிக்கைக்குரிய மலையாளப் பத்திரிகையாளர் ஒருவர் எமக்குத் தெரிவித்திருந்தார். இந்த விபரங்களை எல்லாம் நாம் முதலமைச்சருக்கு தெரிவித்தோம். நாம் கூறியதையெல்லாம் மிகவும் ஆர்வமாகவும் உன்னிப்பாகவும் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். நாம் கொடுத்த தகவல்கள் முதலமைச்சருக்கும் மோகனதாசுக்கும் மத்தியில் பெரிய விரிசலை ஏற்படுத்தியது என்பதை பின்பு அறிந்தோம்.

எம்.ஜி.ஆருடனான அன்றைய சந்திப்பு எமக்குச் சாதகமாக அமைந்தது. விடுதலைப் புலிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் அனைத்தையும் திருப்பி ஒப்படைக்குமாறு தமிழக காவல்துறையினருக்கு உத்தரவிட்டார் எம்.ஜி.ஆர். எமது இயக்கத்திடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்கள் மிகவும் சொற்பம். இந்திய அரசிடமிருந்தும் வெளியுலகத்திடமிருந்தும் பெறப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை நாம் ஏற்கனவே தமிழீழத்திற்கு அனுப்பியிருந்தோம். ஏனைய அமைப்புகளிடமிருந்தே ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மொத்தம் நாற்பது கோடி பெறுமதியான ஆயுதங்களைக் கைப்பற்றியதாக திரு.மோகனதாஸ் அறிவித்திருந்தார். ஏனைய அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களையும் புலிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டோம். எவ்வித தயக்கமுமின்றி அதற்கு இணங்கினார் எம்.ஜி.ஆர். ஏனைய அமைப்புகளிடமிருந்து பறிமுதல் செய்த சகல ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகளிடம் திருப்பி ஒப்படைக்கும் பொறுப்பும் திரு. மோகனதாஸிடம் கையளிக்கப்பட்டது. எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆயுதப் பறிமுதல் அதிர்ஸ்டத்தில் முடிந்தது என எண்ணிக் கொண்டோம்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அன்பும் ஆதரவும் இருந்த போதும், தமிழ்நாட்டில் தங்கியிருந்து இந்திய அரசின் அழுத்தங்களுக்கு ஆளாவதை தலைவர் பிரபாகரன் விரும்பவில்லை. இந்திய ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, தமிழீழத்தில் சுதந்திரமாக இயங்கி போராட்டத்தை முன்னெடுப்பதையே அவர் விரும்பினார். யாழ்ப்பாணம் செல்வதற்கான இரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 1987ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதியில் பிரபாகரன் தமிழீழம் சென்றடைந்தார். நானும் அடேலும் தொடர்ந்தும் சென்னையில் தங்கியிருந்து அரசியற் பரப்புரைப் பணியில் ஈடுபட்டிருந்தோம். பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்று விட்டார் என்ற செய்தி தமிழகப் பத்திரிகைகளில் பிரசுரமாகியதை அடுத்து முதலமைச்சர் என்னை அவசரமாக அழைத்தார்.

எம்.ஜி.ஆர் அவர்களுடன் திரு.சிதம்பரமும் இருந்தார். அப்

பொழுது சிதம்பரம் இந்திய மத்திய அரசின் ஒரு முக்கிய அமைச்சராகப் பணிபுரிந்தார். பிரதமர் ரஜீவ் காந்திக்கு மிகவும் நெருக்கமானவர். இலங்கையின் இனப் பிரச்சினை குறித்து ரஜீவிற்கு ஆலோசனையும் வழங்கி வந்தார். மத்திய அரசின் தூதுவராக ஏதோ பிரச்சினையுடன் வந்திருக்கிறார் என எண்ணினேன்.

புன்முறுவலுடன் என்னை வரவேற்ற எம்.ஜி.ஆர் தனக்கு முன்பாக அமரச் சொன்னார். நான் அமர்ந்த அந்தக் கணமே திரு.சிதம்பரம் என் மீது சீறி விழுந்தார். "நீங்கள் நன்றிக் கடன் உள்ளவர்களா? உங்களுக்கு பொறுப்புணர்வு ஏதாவது உண்டா?" என்று கதறினார். எதற்காக இப்படி ஆத்திரப்படுகிறார்? முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"உங்களது இயக்கத்திற்கு இந்திய அரசு எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறது. உங்களுக்கு புகலிடம் தந்து, உங்களது போராளிகளுக்குப் பயிற்சி கொடுத்து, ஆயுதங்கள் கொடுத்து உதவி செய்யவில்லையா? இப்பொழுதும் கூட ஈழத் தமிழரின் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண இந்திய அரசு எத்தனையோ முயற்சிகளை எடுத்து வருகிறது. இப்படி எல்லாம் நாம் செய்தபோதும் நீங்கள் எமக்கு விரோதமாகச் செயற்படுகிறீர்கள். இந்திய அரசுக்கு நீங்கள் எந்த வகையிலும் ஒத்துழைப்புத் தரவில்லை." என்றார் அமைச்சர் சிதம்பரம். நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"இப்பொழுது உங்களது தலைவர் பிரபாகரன் எங்கே இருக்கிறார்? திடீரென மாயமாக மறைந்து விட்டார். யாருக்கும் தெரிவிக்காமல் யாழ்ப்பாணம் சென்றுவிட்டாராமே? இப்படிச் செய்வது சரியா? மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தாதது பரவாயில்லை. ஆனால் தமிழ்நாட்டு அரசுக்காவது தெரியப்படுத்தியிருக்கலாம் அல்லவா? அப்படித்தான் செய்யாவிட்டாலும் முதலமைச்சருக்காவது சொல்லியிருக்கலாம் அல்லவா? முதலமைச்சர் உங்களுடன் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார். ஆதரவாக இருக்கிறார். அவருக்காவது தெரியப்படுத்தியிருக்கலாம் அல்லவா? அப்படிச் செய்யாதது பெரிய தவறு." என்றார் திரு.சிதம்பரம். முதலமைச்சருடன் முடிந்துவிடப் பார்க்கிறார் என்பது தெளிவாகியது. எம்.ஜி.ஆர் எதுவுமே பேசவில்லை. என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எண்பத்து மூன்று இறுதிப் பகுதியிலிருந்து பல வருடங்களைப் பிரபாகரன் இந்தியாவில் கழித்துவிட்டார். அவர் இங்கு தஞ்சம் கேட்டு வரவில்லை. இராணுவப் பயிற்சித் திட்டம் சம்பந்தமாக இந்திய அரசின் அழைப்பின் பேரில்தான் அவர் இங்கு வந்தார். இங்கு தங்கியிருந்த காலத்தில் பல கசப்பான அனுபவங்களையும் பெற்றார். இப்பொழுது போராட்ட களத்திற்குச் செல்ல வேண்டிய காலமும் வரலாற்றுத் தேவையும் அவருக்கு ஏற்பட்டு விட்டது. தமிழீழக் களத்திலிருந்துதான் எமது மக்களின் உரிமைப் போராட்டத்தை அவர் முன்னெடுக்க விரும்புகிறார். அதனால்தான் அவர் தாயகம் செல்ல வேண்டி நேர்ந்தது. சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வது மிகவும் ஆபத்தான பயணம். தரைப் பாதை மட்டுமன்றி, கடல் கடந்தும் செல்ல வேண்டும். பிரபாகரனுக்குப் பல எதிரிகள் இருக்கிறார்கள். அவருக்கு விரோதமாகப் பல சக்திகள் செயற்படுகின்றன. ஏனைய போராளி அமைப்புகளும் அவரைப் பழி தீர்ப்பதற்காக வெறிகொண்டு அலைகின்றன. இப்படியான சூழ்நிலையில் பிரபாகரனின் பாதுகாப்புக் கருதியே அவரது பயணத்தை இரகசியமாக வைத்திருக்க எமது இயக்கம் முடிவெடுத்தது." இப்படியாக ஒரு விளக்கம் கொடுத்தேன்.

அமைச்சர் சிதம்பரம் என்னை விட்டபாடில்லை. "சரி, பிரபாகரன் தான் பாதுகாப்புக் கருதி அவசரமாக, இரகசியமாக யாழ்ப்பாணம் போய்விட்டார். நீங்களாவது முதலமைச்சருக்கு அத்தகவலைத் தெரிவித்திருக்கலாம் அல்லவா?" என்று கூறி என்னை மடக்க முயன்றார். முதலமைச்சரும் என்னைக் கேள்விக் குறியுடன் நோக்கினார். உண்மையைச் சொல்வதுதான் ஒரே வழியாகத் தென்பட்டது.

முதலமைச்சரைப் பார்த்துச் சொன்னேன். "சார், பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றது உண்மையில் எனக்கும் தெரியாது. அவர் எனக்கும் கூட தெரியப்படுத்தவில்லை. மிகவும் இரகசியமான காரியங்களை இரகசியமாக செய்து முடிப்பதுதான் எமது இயக்கத்தின் மரபு. நேற்றுத்தான் எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தகவல் அனுப்பியிருந்தார் பிரபாகரன். உங்களுக்கு அறிவிக்குமாறு பணித்திருந்தார். நான் உங்களுக்கு அறிவிப்பதற்கு முன்னராக நீங்கள் என்னை இங்கு அழைத்து விட்டீர்கள்." என்றேன். சகுனியார் வாயடைத்துப் போய் இருந்தார்.

முதலமைச்சருக்கு நிலைமை புரிந்தது. தலைவர் பிரபாகரன் தாயகம் திரும்பியதன் அவசியத்தை அவர் உணர்ந்து கொண்டார். அந்தப் பயணம் குறித்து இரகசியம் பேணப்பட்டதையும் அவர் புரிந்து கொண்டார். மத்திய அமைச்சர் சிதம்பரம் முடிந்துவிட முனைகிறார் என்பதையும் விளங்கிக் கொண்டார்.

"பிரபாகரன் சௌக்கியமாக இருக்கிறாரா?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர். "ஆமா சார்" என்றேன்.

"அவரைப் பாதுகாப்பாக இருக்கச் சொல்லுங்கள்." என்றார். "நான் விசாரித்ததாகவும் சொல்லுங்கள்." என்றார். சந்திப்பு சுமுகமாக முடிந்தது. முகத்தை தொங்கப் போட்டபடி இருந்தார் சிதம்பரம்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பாக நானும் பிரபாகரனும் முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் புதுடில்லியில் சந்தித்தோம். அதுவே எமது கடைசிச் சந்திப்பாக அமைந்தது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் நிகழ்ந்த இறுதிச் சந்திப்பிலும் எம்.ஜி.ஆர் அவர்கள் எமக்கு அனுசரணையாக நின்று எமது நிலைப்பாட்டை ஆதரித்தார். புதுடில்லியில் நிகழ்ந்த அந்தச் சந்திப்பின் பின்னணியே ஒரு விசித்திரமான கதை.



1987 ஜூலை மாதம் 24ஆம் திகதி. தலைவர் பிரபாகரன், யோகரத்தினம் யோகி, திலீபன் ஆகியோருடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதற் செயலர் ஹர்தீப் பூரியையும் ஏற்றிக் கொண்டு இந்திய விமானப் படையின் உலங்கு வானூர்தி ஒன்று சுதுமலை அம்மன் கோவில் மைதானத்திலிருந்து சென்னை புறப்பட்டது. பிரபாகரனும் அரசியல்துறையைச் சேர்ந்த போராளிகளும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள் என்றும், அங்கு சென்று அவர்களைச் சந்திக்குமாறும் எனக்குத் தகவல் தரப்பட்டது. மீனம்பாக்கம் சென்றபொழுது அவர்கள் எனக்காகக் காத்து நின்றார்கள். நாம் அவசரமாகப் புதுடில்லி செல்ல வேண்டும் என்றும், ஒரு முக்கிய விடயமாக பிரதமர் ரஜீவ் காந்தி எம்மைச் சந்திக்க விரும்புவதாகக் கூறிய இந்தியத் தூதரக அதிகாரி திரு.பூரி தம்மைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்ததாகவும் பிரபாகரன் சொன்னார். இதில் ஏதோ தில்லு முல்லு இருப்பதாக எனக்குத் தோன்றியது. எனினும் இந்தியப் பிரதமர் விடுத்த அழைப்பை நிராகரிப்பது நாகரீகம் அல்ல. எதற்கும் புதுடில்லி சென்று பார்ப்போமே என நினைத்தேன். ஒரு இந்திய விமானப் படை விமானத்தில் புதுடில்லி சென்றோம். அங்கு அசோகா விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அது ஒரு ஐந்து நட்சத்திர விடுதி. புதுடில்லியில் மிகவும் பிரபல்யமானது. விமான நிலையத்திலிருந்து ஆயுதம் தாங்கிய காவல் துறையினரின் பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்த எமது வண்டி விடுதியின் முன் வாயிலை அடைந்தபோது அங்கு பல நூற்றுக்கணக்கான இந்திய இராணுவ அதிரடிப் படையினர் (கறுப்புச் சீருடை அணிந்த கரும்பூனைகள்) விடுதிக் கட்டடத்தைச் சூழ நிற்பதைக் கண்டோம். நாம் சந்தேகத்துடன் ஒருவரை ஒருவர் பார்ப்பதைக் கண்டதும், "உங்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது." என்றார் பூரி.

கரும்பூனைகள் சூழ விடுதியின் அதியுயர் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆளுக்கு ஒரு அறையும், கலந்துரையாடுவதற்கு ஒரு கூடமுமாக அந்த மாடியின் ஒரு பகுதி எமக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எமது அறைகளுக்கு முன்பாகவும் மாடிபூராகவும் ஆயுதம் தரித்த கரும்பூனைகள் பாதுகாப்பாக நிலையெடுத்து நின்றனர். சிறிது நேரத்தில் இந்தியப் புலனாய்வு உயர் அதிகாரி ஒருவர் அங்கு வந்தார். எமது பாதுகாப்புக் குறித்து நாம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் விடுதியை விட்டு வெளியேற எமக்கு அனுமதியில்லை என்றும் தொலைபேசி மூலம் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாதென்றும் எமது நிலைமையைத் தெளிவுபடுத்தினார். சற்று நேரத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு.டிக்சிட் எம்மைச் சந்திப்பார் என்றும் நாம் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டதன் அரசியல் காரணத்தை அவர் விளக்கிக் கூறுவார் என்றும் சொன்னார். இந்திய அரசின் பொறிக்குள் சிக்கி விட்டோம் என்பது புலனாகியது. எதுவுமே செய்யமுடியாத நிர்க்கதியான நிலை. இந்தியத் தூதுவருக்காகக் காத்திருந்தோம்.

ஒரு மணிநேரம் கழித்து, திரு.டிக்சிட் அங்கு வந்தார். முகத்தைக் கடுப்பாக வைத்துக் கொண்டு, தனது சுங்கானைப் பற்ற வைத்த பின்னர் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார். "இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் மத்தியில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தி வெகு விரைவில் கொழும்பு சென்று அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருக்கிறார். இந்த ஒப்பந்தம் தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நல்ல, நியாயமான தீர்வை வழங்குகிறது. இவ்வொப்பந்தத்தை நீங்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்." என்று அடித்துக் கூறினார். பின்பு தனது பைக்குள்ளிருந்து ஒப்பந்தத்தின் பிரதி ஒன்றை எடுத்து என்னிடம் கையளித்துவிட்டு, அதனை மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளங்கப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். இரண்டு மணி நேரத்தின் பின்பு தான் திரும்பி வருவதாகவும் அப்பொழுது ஒரு முடிவுடன் இருக்குமாறும் கூறியவர் எமது பதிலுக்காகக் காத்திராது அவசரமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளங்கப்படுத்தினேன். உப்புச் சப்பற்ற மாகாண சபைத்திட்டம் ஒன்று இனப் பிரச்சினைக்கு தீர்வாக வைக்கப்பட்டிருந்தது. அரசியல் அதிகாரங்கள் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருந்தது. வட கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படுமென விதிக்கப்பட்டிருந்தது. மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட 72 மணி நேரத்திற்குள் எமது ஆயுதத் தளபாடங்கள் இந்திய அமைதிப் படைகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்தது. எமக்குத் தரப்பட்ட இரண்டு மணிநேர கால அவகாசத்தில் ஒரு தீர்க்கமான முடிவைப் பிரபாகரன் எடுத்தார். அதாவது, எந்தக் காரணத்திற்காகவும் இந்த ஒப்பந்தத்தை ஏற்பதில்லை என உறுதியான தீர்மானம் மேற்கொண்டார்.

சரியாக இரு மணிநேரத்தின் பின் திரு.டிக்சிட் திரும்பி வந்தார். வந்ததும் எமது முடிவைக் கேட்டார். இந்த ஒப்பந்தத்தை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்க முடியாது என்றோம். ஏன் ஏற்க முடியாது என்று கேட்டார். காரணங்களை விளக்கிக் கூறினோம். ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைத் திட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இத்திட்டம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யத் தவறிவிட்டது என்றோம். எமது முடிவை மாற்றுமாறு மன்றாட்டமாகக் கேட்டார். பின்பு வற்புறுத்திக் கேட்டார். இறுதியாக மிரட்டத் தொடங்கினார்.

"நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இரு நாடுகள் செய்து கொள்ளும் உடன்பாடு இது. இதனை நீங்கள் எதிர்த்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்." என்று மிரட்டினார். எப்படியான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என்று கேட்டபொழுது, "இங்கே தொடர்ந்தும் தடுப்புக் காவலில் இருக்க வேண்டி நேரிடும். ஒப்பந்தத்தை ஏற்கும் வரை இந்தியாவில் உங்களை தடுத்து வைத்திருக்க எம்மால் முடியும்." என்றார்.

"எத்தனை காலமோ, எத்தனை வருடங்களோ எம்மைத் தடுப்புக் காவலில் வைத்தாலும் நாம் இந்த ஒப்பந்தத்தை ஏற்கப் போவதுமில்லை. ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதுமில்லை." என்று உரத்த குரலில் சொன்னார் பிரபாகரன். ஆத்திரத்தில் அவரது விழிகள் பிதுங்கின. திரு. டிக்சிட் கேரளத்தைச் சேர்ந்தவர். அவருக்கு தமிழ்மொழி நன்கு தெரியும். நான் மொழிபெயர்ப்பதற்கு முன்னரே பிரபாகரன் அடித்துச் சொன்னது அவருக்கு ஆத்திரத்தை மூட்டியது.

"ஆயுதங்களை நீங்கள் ஒப்படைக்க மறுத்தால், இந்திய இராணுவத்தைக் கொண்டு உங்களது ஆயுதங்களைப் பறித்தெடுப்போம். இந்திய இராணுவத்திற்கு முன்பாக உங்களது போராளிகள் வெறும் தூசு." என்று ஆவேசத்தில் கூச்சலிட்டவர் தனது சுங்கானை எடுத்து பிரபாகரனிடம் காண்பித்து, "இதனை நான் பற்றவைத்து புகைத்து முடிக்கும் நேரத்திற்குள் இந்திய இராணுவம் உங்களது போராளிகள் அனைவரையும் துவம்சம் செய்துவிடும்." என்று கூறிவிட்டு ஏளனமாக ஒரு எக்காளச் சிரிப்புச் சிரித்தார். எங்கள் எல்லோரது முகங்களும் கோபத்தினால் சிவந்தது. மிகவும் சிரமப்பட்டு ஆத்திரத்தை அடக்கிய பிரபாகரன், "உங்களால் முடிந்ததைச் செய்து பாருங்கள். ஆனால் நாங்கள் இந்த ஒப்பந்தத்தை ஒரு பொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை." என்று உறுதிபடக் கூறினார்.

டிக்சிட்டுக்குக் கோபத்தால் உதடுகள் நடுங்கின. "மிஸ்டர் பிரபாகரன், நீங்கள் இந்திய அரசாங்கத்தை இத்துடன் நான்கு தடவைகள் ஏமாற்றிவிட்டீர்கள்." என்றார். "அப்படியானால், நான்கு தடவைகள் எமது மக்களை இந்திய அரசிடமிருந்து காப்பாற்றியிருக்கிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்." என்றார் பிரபாகரன். திடீரென எழுந்த டிக்சிட் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தார்.

இந்தியத் தூதர் டிக்சிட்டின் 'மிரட்டல் இராஜதந்திரம்' தோல்வி அடைந்த போதும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீது திணித்துவிடும் முயற்சி தொடர்ந்தது. ரஜீவ் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள், மாறி மாறி, ஒவ்வொருவராக



எம்மைச் சந்தித்து ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கினார்கள். இந்திய உள்ளக புலனாய்வுத் துறையின் (I.B) அதிபர் திரு.எம்.கே நாராயணன், வெளிவிவகார அமைச்சரின் கூட்டுச் செயலர் திரு.சகாதேவ், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த திரு.நிகல் சேத், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த ஹர்தீப் பூரி ஆகியோர் தொடர்ச்சியாக மாறி மாறிச் சந்திப்புக்களை நிகழ்த்தினர். புதுடில்லியில் அசோகா விடுதியில் இந்தத் திரைமறைவு நாடகம் பல நாட்களாகத் தொடர்ந்தது. திரு.பிரபாகரன் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. தனது நிலைப்பாட்டில் உருக்குப் போல உறுதியாக நின்றார். புலிகள் மிகவும் பிடிவாதமாக நிற்கின்றார்கள் எனப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தனது அதிகாரிகளை அழைத்து மந்திராலோசனை நடத்தினார். இறுதி முயற்சியாக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைப் புதுடில்லிக்கு அழைப்பதென முடிவாகியது. ஜூலை 26ஆம் திகதி பிரதமரின் விசேட விமானத்தில் எம்.ஜி.ஆர் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டார்.

அன்றிரவே, இந்திய தலைநகரிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் முதலமைச்சரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தலைவர் பிரபாகரனும் நானும் யோகரத்தினம் யோகியும் எம்.ஜி.ஆரிடம் அழைத்துச் செல்லப்பட்டோம். முதலமைச்சருடன் திரு.டிக்சிட்டும் இருந்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றியும் அதில் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் பற்றியும் இம் மாகாண சபைத் திட்டம் மூலம் ஈழத் தமிழரின் அரசியல் அபிலாசைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஒரு நீண்ட புராணம் பாடிக் கொண்டிருந்தார் டிக்சிட். நாடியில் கையூன்றியவாறு பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர்.

“தமிழர் விடுதலைக் கூட்டணியும் சகல போராளிக் குழுக்களும் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றன. ஆனால் இவர்கள் மட்டும் இதனை எதிர்க்கிறார்கள். தமிழீழத் தனியரசைத் தவிர இவர்கள் எதையுமே ஏற்கமாட்டார்கள் போலத் தெரிகிறது. ஆனால் இந்திய அரசு தனியரசு அமைவதை ஒருபொழுதும் அனுமதிக்கப் போவதில்லை. இவர்கள் இந்தியாவை விரோதித்தால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்” என்று சீறினார் இந்தியத் தூதுவர்.

“இந்த மாகாண சபைத் திட்டத்தில் உருப்படியாக ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் அபிலாசையை இது பூர்த்தி செய்யவில்லை. அப்படியிருக்க இத்திட்டத்தை நாம் எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும்?” என்றார் யோகரத்தினம் யோகி. இதைத் தொடர்ந்து யோகிக்கும் டிக்சிட்டுக்கும் கடும் வாக்குவாதம் மூண்டது. “சென்ற வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த திரு.பூரி இந்த ஒப்பந்தம் பற்றியும் மாகாணசபைத் திட்டம் பற்றியும் உமக்கு விபரமாக விளக்கினாராம். அப்போது அதற்கு ஆதரவு தெரிவித்த நீங்கள் இப்போது எதற்காக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்?” என்று டிக்சிட் கதற, அதனை மறுத்துரைத்தார் யோகி. “யாழ்ப்பாணத்தில் இந்த ஒப்பந்தம் பற்றி எதுவுமே பேசப்படவில்லை.” என்றார் யோகி. “அப்பொழுது என்னை ஒரு பொய்யன் என்று சொல்கின்றீர்களா?” என்று கேட்டார் டிக்சிட். “நீங்கள் உண்மை பேசவில்லை.” என்றார் யோகி. வாக்குவாதம் சூடு பிடித்தது. கோபாவேசம் கொண்டவராக முதலமைச்சரைப் பார்த்து, “பாருங்க சார், என்னைப் பொய்யன் என்று சொல்கிறார்.” எனக் கதறினார் டிக்சிட். ஒரு ஏளனப் புன்னகையுடன் மௌனம் சாதித்தார் பிரபாகரன். இந்த விவாதத்தில் நானும் குறுக்கிடவில்லை. இந்தியத் தூதுவர் டிக்சிட் நிதானம் இழந்து உணர்ச்சி வசப்படுகிறார் என்பதை உணர்ந்து கொண்டார் எம்.ஜி.ஆர். “நீங்கள் சிறிது நேரம் வெளியே இருக்கிறீர்களா? நான் இவர்களுடன் பேச வேண்டும்.” என டிக்சிட்டைப் பண்பாக வேண்டிக் கொண்டார் முதலமைச்சர். சிறிது தயக்கத்துடன் அங்கிருந்து வெளியேறினார் இந்தியத் தூதுவர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும் அதனை ஏற்றுக்கொள்ள நாம் மறுப்பதன் காரணங்கள் பற்றியும் எம்.ஜி.ஆர் எம்மிடம் வினவினார். ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கினோம். ஈழத்து அரசியற் கட்சிகளும் ஆயுதக் குழுக்களும் இந்திய அரசின் நெருக்குவாரத்திற்கும் மிரட்டலுக்கும் பணிந்து விட்டார்கள் என்றும், இந்திய அச்சுறுத்தல்களுக்குப் பணிந்து நாம் எமது மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்றும் சொன்னோம். தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணாத நிலையில், சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சூழ்நிலையில், எமது ஆயுதங்களைக் கையளித்து, எமது போராளிகளைச் சரணடையுமாறு கேட்பது நியாயமற்றது என்பதையும் எடுத்து விளக்கினோம்.

எமது விளக்கங்களை முதலமைச்சர் பொறுமையுடன் செவிமடுத்தார். எமது நிலைப்பாட்டின் நியாயப்பாடுகளையும் அவர் புரிந்து கொண்டார். இந்திய-இலங்கை ஒப்பந்தமானது இந்தியாவின் கேந்திர-புவியியல் நலனைப் பேணுவதற்காகவே செய்து கொள்ளப்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டார். இந்திய - இலங்கை ஒப்பந்த விவகாரத்தில் பிரபாகரன் என்ன முடிவு எடுக்கின்றாரோ, அதற்குத் தனது முழு ஆதரவும் இருக்கும் என்றார் எம்.ஜி.ஆர். அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்காது, கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பது குறித்துப் பிரபாகரனை அவர் பாராட்டவும் தவறவில்லை. முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

முதலமைச்சரின் சந்திப்பு அறைக்கு வெளியே திரு.டிக்சிட்டும் ஒரு இந்தியப் புலனாய்வு அதிகாரியும் நின்று கொண்டிருந்தனர். எம்மை வழிமறித்த இந்தியத் தூதுவர், “ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி முதலமைச்சர் வற்புறுத்தினார் அல்லவா?” என்று கேட்டார். நாம் பதிலளிக்காது மௌனமாக நின்றோம். “முதலமைச்சர் சொன்னபடியே செய்யுங்கள்.” என்றார். “அப்படியே செய்வோம்.” என்று கூறிவிட்டுச் சென்றோம்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுடனான கடைசிச் சந்திப்பு அதுதான். இந்திய-புலிகள் யுத்தம் தொடங்கிய காலத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள் கடும் சுகவீனமுற்றிருந்தார். அப்பொழுது ஒரு நாள் சென்னையில் தங்கியிருந்த கேணல் கிட்டுவைத் தனது வீட்டுக்கு அழைத்துப் பண உதவி செய்ததுடன், இந்திய இராணுவத்துடன் போர் நிறுத்தம் செய்யுமாறும் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு தகவல் அனுப்பியிருந்தார்.

1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலமானார். மறு நாள் 25ஆம் திகதி இந்தியத் தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டது. அன்றைய நாளில் தமிழீழத்தை ஆக்கிரமித்து நின்ற இந்தியப் படைகள் போர் நிறுத்தம் அறிவித்தனர். வீதிகளில் ரோந்து சென்ற இந்தியத் துருப்புக்கள் முகாம்களில் முடக்கப்பட்டன. அவ்வேளை யாழ்ப்பாணம் வடமராட்சியில் இந்தியப் படைகளின் கடும் வேட்டைக்கு இலக்காகிப் பல்வேறு அவலங்களை அனுபவித்து வந்த நானும் எனது மனைவி அடேலும் அன்றைய நாள், எம்.ஜி.ஆரின் நினைவாக அமைதி பேணப்பட்ட



அந்தச் சுமுக சூழலைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து தப்பிச் செல்ல முடிந்தது.

தமிழ் நாட்டில் நாம் வசித்தபோது எமது அமைப்பின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பேருதவி புரிந்த அந்தப் பெரிய மனிதர் தனது மறைவில் கூட எமக்கு உயிர் அளிப்பதில் பெரும் பங்கு வகித்தார் என அடேல் பாலசிங்கம் ‘சுதந்திர வேட்கை’ என்ற தமது நூலில் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தி இருக்கிறார்.

நன்றி: விடுதலை



17 ஆம் ஆண்டு

# வீரவணக்கம்




04.03.1938 **தேசத்தின் குரல்** 14.12.2006


# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மணஓர், மட்டு . . . கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி


வேலை இழப்பா?
வருமான பிரச்சனையா?
வேலை தேடுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
வாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழிகாட்டும்
உங்கள் நண்பன்
நாதன் பாலசிங்கம்
416.513.1000


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# மிருசுவில் படுகொலை 19.12.2000

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் “படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்” என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. தூரத்தில் மிருசுவில் கிராமம் அமைந்துளள்து.





2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளில் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசு விலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சுழ கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ் விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திர வதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமையினையும் தெரிவித்தார்.

காணாமற்போனோர்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட சிங்கள இராணுவ வீரர் லான்ஸ் கோப்ரல் ஆர். எம். எஸ். ரத்னநாயக்கவும் கொடுத்த தகவின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3:30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் ன்பட்டன. அப்பகுதியிற் காணாமற்போன எட்டுப் பேரது உடல்களும் பெட்டப் பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப் பட்டன.

மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு (29.12. 2000 வீரகேசரி) தகவல் கொடுத்தார்.

“தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். எஸ் ரட்ணாயக் காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்தி வேளை மரக்கட்டை காணப் பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்த போது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப் பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து றோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையில், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங்கள் காணப்பட்டன.” எனத் தெரிவித்தார்.




## மிருசுவில் படுகொலை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மிருசுவில் கிராமத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாள் குழந்தைகள் உட்பட எட்டு தமிழ் அகதிகள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். தமது வீடுகளை விட்டு வெளியேறிய எட்டுப் பொதுமக்கள் தமது வீடுகளைச் சென்று பார்ப்பதற்காக மிருசுவிலுக்குச் சென்ற போது 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 19 இல் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுப்புதைக்கப்பட்டனர். மிருசுவிலில் இருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளையும், உடமைகளையும் பார்ப்பதற்காக அதிகாரிகளிடம் அனுமதி பெற்று டிசம்பர் 19 ஆம் நாள் மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலத்தை அங்கு கண்டார்கள். அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளங் காண முற்பட்டவேளை அங்கு நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் இவர்களைக் கைது செய்தனர்

இவர்களுள் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள வீடொன்றின் மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் பொன்னுத்துரை மகேசுவரன் என்பவர் பலத்த காயங்களுடன் இத்தாக்குதல்களில் இருந்து தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விபரங்கள் தெரிய வந்தன. அவர் வழங்கிய தகவலிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் காவல்துறையினரால் மீட்கப்பட்டிருந்தது.
மாவட்ட வைத்திய அதிகாரி மரு. சி. கதிரவேற்பிள்ளையின் சாட்சியப்படி, கொலை செய்யப்பட்டவர்கள் கழுத்து வெட்டப்பட்டே கொல்லப்பட்டுள்ளனர் விசாரணைகளை அடுத்து ஐந்து இராணுவத்தினர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இலங்கைப் படைத்துறையைச் சேர்ந்த சுனில் ரத்னநாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 யூன் 25 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினரை போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் இரத்திநாயக்கவை 2020 மார்ச் 26 இல் தற்போதைய அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்ச மன்னிப்பளித்து விடுதலைசெய்துள்ளார்.

**19.12.2000 அன்று மிருசுவிற் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. சின்னையா வில்வராசா (41)
2. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் (31)
3. வில்வராசா பிரசாத் (05)
4. வில்வராசா பிரதீபன் (15)
5. பாஸ்கர் ஞானபாஸ்கரன் (19)
6. ஜெயச்சந்திரன் நடேசு (21)
7. ஞானச்சந்திரன் கதிரன் (35)
8. ஞானச்சந்திரன் சாந்தன் (-)

# மன்னார், பேசாலைப் படுகொலை 23, 12. 2005

மன்னார் மாவட்டத்தில் சிங்கள அரசபடைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து சிங்கள படையினர் தமது கொலை வெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காண முடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர்.

அவ்வாறே 13.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சோந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டனர்.

**23.12.2005 அன்று மன்னார், பேசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. திரேசா குருஸ் (40)
2. இம்மானுவேல் குருஸ் (43)
3. குருஸ் அந்தோனியம்மா (38)
4. குருஸ் டிலக்சன் (04)

# தென் தமிழீழப் படுகொலைகள் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் 2006

தமிழீழ விடுதலைப்புலகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை.



இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரச அதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்து விடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதுார் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்டபொழுதும் சிங்கள அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 06 ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதுார் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19 ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா சிங்கள இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா சிங்கள இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத் துறை முகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா சிங்கள இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன்போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் செல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு இலங்கை கண்ணகாணிப்புக் குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல்வதை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளும் மேலாக முயற்சித்ததையும் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் வெற்றிகண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையை விட்டு நேரகாலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்டிக்கப்பட்டார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்று ஐந்து பொதுமக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறுவளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச் செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

**உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு**

1. அ. அரசரட்ணா (42)
2. கோ. கணேசராஜா (46)
3. ஞா. சறோஜா (10)
4. ஞா. றகுமார் (06)
5. ஞா. சீவிதா (10)
6. ஞா. மஞ்சுளாதேவி (23)
7. இ. பவானி (24)
8. க. நற்குணம் (36)
9. மு. தங்கவேல் (22)
10. சீ. மகாலிங்கம் (32)
11. செ. சந்திரகலா (18)
12. சி. திரவியமலர் (55)
13. சி. முத்துலிங்கம் (45)
14. சி. ரஸ்யப்பிரியன் (01)
15. சி. சிவகுமார் (25)
16. சா. தவன்ஜா (21)
17. சு. யோகேஸ்வரன் (29)
18. சு. கணபதிப்பிள்ளை (62)
19. த.புமணி (45)
20. வே. தர்மலிங்கம் (50)
21. ந.டேவிட் (25)
22. ந. குணராசா (22)
23. ந. பாக்கியராசா (40)
24. ந. விமலேந்திரன் (35)
25. நா. யோகேஸ்வரன் (28)
26. நகுலேஸ்வரன் (32)
27. நா. திரவியமலர் (65)
28. ந. தனுசலீன் (04)
29. ந. நிசாந்தன் (20)
30. பா. நாகேந்திரன் (20)
31. பா. தயாநந்தினி (22)
32. ப. கோணேஸ்வரன் (31)
33. பி. தவனேசன் (36)
34. ற. றாமச்சத்திரன் (32)
35. இ. பிரபு (17)
36. ற. சதுர்சன் (-)
37. ற. விஜயா (30)
38. ந. தியாகராசா (48)
39. அ. செல்வறட்ணம் (-)
40. ற. கோபிநாத் (22)
41. க. பத்மா (-)
42. கு. தெய்வகரன் (-)
43. மா. நாகேஸ்வரன் (-)
44. மா. சுந்தரராஜா (-)
45. நா. இந்தரன் (46)
46. நா. பிறேமலதா (35)
47. சி. சிவசோதி (-)
48. வ. சுமநாதன் (-)
49. வெ. கோணேஸ்வரன்(-)
50. வி. றதிகலா (-)
51. யோ. சிதம்பரம் (45)
52. அ. அரசறட்ணம் (33)
53. ச. சண்முகநாதன் (29)
54. ச. சந்திரசேகரன் (22)
55. ச. கோஸ்பிரியன் (-)
56. சி. பவானி (22)
57. செ. தர்மலிங்கம் (31)
58. வ. திவ்வியா (14)
59. ஜீ. சித்திரவேல் (-)
60. கா. றாஜேஸ்வரன் (-)
61. றா. தேவராச் (25)
62. சி. சிவசங்கர் (27)
63. வெ. ஆறுமுகம் (28)
64. க. புஸ்பன் (25)
65. க. றதி (31)
66. க. றஜீன்திரன் (27)
67. க. சங்கர் (23)
68. க. சாந்தகனகம் (20)
69. கோ. நாகேந்திரன் (70)
70. கோ. தனபாக்கியம் (28)
71. கோ. தவராசா (32)
72. லோ. சசிகரன் (26)
73. ம. வரதன் (24)
74. மா. கள்ளிப்பிள்ளை (52)
75. மு. சிவமணி (58)
76. மு. பாஸ்கரன் (29)
77. ம. குணராசா (31)
78. அ. யோகநாதன் (12)
79. ஆறுமுகம் (34)
80. சு. நந்தினி (-)
81. அ. யோகநாதன் (26)
82. பா. தவமணி (27)
83. செ. ஜெயகாந்தன் (24)
84. டி. பட்மசிறி (27)
85. க. சசிக்குமார் (17)
86. T. புமணி (-)
87. T. மஞ்சுளாதேவி (-)
88. சு. கோமளாதேவி (32)
89. ச. கிளிராசா (50)
90. கு. காந்தன் (22)
91. வே. றாஜன் (35)
92. T. குமார் (07)
93. T. டயானா (15)
94. A வேல்முருகா (47)
95. ச. கிளியரசன் (50)
96. கு. சுத்தியராசா (17)
97. கலாபவனம் (45)
98. சேரன் (-)
99. சி. குணமணி (25)
100. ஞா. கோபால் (19)
101. இ. தர்சினி (07)
102. ஜெ. மாணிக்கப்போடி (19)
103. ஜெ. சகுலேஸ்வரன் (21)
104. க. அஜந்தன் (15)
105. ஞ. ஜெயகாந்தன் (21)
106. ஞ. முகிருபறாச் (30)
107. ஞ. சிவனேசன் (25)
108. ஞ. தயாகரன் (29)
109. ச. மாணிக்கப்போடி (27)
110. செ.ஶ்ரீகாந்தராசா (17)
111. சி. நிறஞ்சன் (20)
112. சி. நித்தியானந்தம் (22)
113. வி. விஸ்வலிங்கம் (19)
114. விக்னேஸ்வரன் (-)
115. த. நிமலநாதன் (34)
116. வி. துரைசாமி (-)
117. த. விவேகானந்தன் (36)
118. வே. கதிர்காமத்தம்பி (55)
119. வி. யாழினி (13)
120. A. ரகுவரன் (17)
121. I. பவானி (23)
122. I டெனிஸ்சிவானந்தன் (27)
123. K. ஜெயானந்தி (16)
124. K. கிருபேஸ்வரன் (-)
125. K. நற்குணம் (33)
126. K. சரத்பாபு (18)
127. M. கழிப்பிள்ளை (52)
128. M தவராசா (34)
129. N. யோகஸ்வரன் (-)
130. N. ரவீந்திரராசா (-)
131. P. கமல் (17)
132. P. கிருஸ்ணபிள்ளை (56)
133. S. ஜீவாநந்தன் (31)
134. S. நந்தினி (13)
135. S. றஸ்யப்பிரியன் (-)
136. S. சந்திரிக்கா (17)
137. S. தவப்பிரியா (20)
138. T. தவராசா (-)
139. V. பாலகுமாரன் (19)
140. V. கதிர்காமத்தம்பி (51)
141. V. றணீஸ்வரன் (17)
142. அ. சுதர்சினி (17)
143. கா. சரஸ்வதி (17)
144. நா. றவீந்திரராசா (41)
145. றா. சாளினி (04)
146. ர. றாமச்சந்திரன் (30)
147. சு. மகேந்திரராசா (43)
148. சு. றாஜேஸ்வரன் (26)
149. தி. றேகன் (21)
150. A. பிரியா (-)
151. A. தமயந்தி (-)
152. V. தர்மலிங்கம் (-)
153. சேரன் (-)
154. சி. குணரட்ணம் (60)
155. சி. குணமணி (60)
156. வி. சுசிகரன் (10)
157. க. கோமளாதேவி (32)
158. A. வனிதா (-)
159. வே. றாஜன் (-)
160. ஆ. மேனா (10)
161. V. தர்மலிங்கம் (-)
162. சி. சந்திரன் (39)
163. சி. ச்நதிரமூர்த்தி (23)
164. சி. பாக்கியராஜா (30)
165. சி. இந்திரன் (46)
166. சி. விஜயா (34)
167. சு. கோணேஸ்வரன் (28)
168. சு. யுவந்தன் (10)
169. த. விறதறாஜ் (22)
170. த. பிள்ளையான் (51)
171. த. றஞ்சன் (24)
172. த. யோகேஸ்வரன் (27)
173. த. சுமதி (42)
174. த. சந்திரன் (20)
175. தி. தர்சிகா (11)
176. தி. தஸ்காந்தி (16)
177. வ. குணவதி (58)
178. வே. மனோகுமார் (28)
179. S. திலசிகா (09)
180. S. கோகுலவாணி (-)
181. S. சோதி (-)
182. S. கேமலதன் (09)
183. P. மயில்வாகனம் (-)
184. N. தீபன் (17)
185. M. நாகேஸ்வரன் (38)
186. கு. சத்தியராசா (17)
187. ஆனந்தஜோதி (24)
188. கலாபவனம் (450
189. T. சர்மிளா (-)
190. K. நிறுசாந்தினி (12)
191. கு. காந்தன் (22)
192. ஆனந்தஜோதி (24)
193. குணரட்ணம் (60)
194. வி. வசீகரன் (10)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# டிசம்பர் 28, 1999 அன்று மிக கொரூரமான ஒரு துன்புறுத்தல் ஈழத்து பெண் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் என்ற பெண்ணுக்கு நிகழ்ந்தது

இந்த பெண் பலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் ஆவார். இவரை பாலியல் வன்புணர்வு செய்தவர்கள் சிறீலங்கா கடற்படையினர் இந்த கொடு மையை செய்தார்கள் என இந்த பகுதி மக்கள் உறுதியாக கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம், புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளை களின் தாயுமான 29 வயது சாரதாம்பாளின் இறந்த உடல் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழ் வல்லுறவுக்கு உள் ளாக்கப்பட்ட நிலையில் கிடந்ததை ஊர்மக்கள் கண்டு பிடித்தனர்.

இந்நிகழ்வு பலரையும் அதிர்ச்சி கொள்ள வைத்த பொழு தும் இன்றளவும் இதற்கு நீதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (AHRC) அறிக்கையின் படி, உள்ளூர் இந்துக் கோயில் குரக் களின் மகளான 29 வயது சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் சிறீலங்கா கடற்படையினர் எனச் சந்தேகிக்கப் படுவோரால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புங்குடுதீவு என்ற இடத்தில் அவரது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு சிதைக்கப்பட்டார் என கூறப்படுகின்றது.

பன்னாட்டு மன்னிப்பு அவையின் அறிக்கையின் படி, சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோ தரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரி களால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டது.

சாரதாம்பாளின் இறந்த உடல் வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள தரிசு நிலமொன்றில் அடுத்த நாள் கிடக் கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடுத்து சாரதாம்பாளின் உடல் மருத்துவ ஆய்வுக்காக கொண்டு செல்லப்பட்டது.

உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண் ணின் உள்ளாடை அவரது வாயினுள் அடைக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரது அறிக்கை தெரிவித்தது.

சாரதாம்பாளின் இறுதி நிகழ்வுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மனித உரிமை ஆர்வலர்கள் பலர் சென்று உரை நிகழ்த்தினர்.

அன்று அரசுத்தலைவராக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணை ஒன் றுக்கு உத்தரவிட்டார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநா சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட் டுகளை விசாரிப்பதற்கு சிறீலங்கா அரசிடம் இருந்து பெரு மளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித் தார்.

டிசம்பர் 1999 பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட் டதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமது வீட்டுக்கு வந்திருந்த கடற்படையினரின் ஆளடை யாளத்தை வெளியிடக் கூடாதென சாரதாம்பாளின் தந்தையும் சகோதரரும் எச்சரிக்கப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தெரிவித்துள்ளது.

சிறீலங்கா காவல்துறையின் புலன்விசாரணைத் திணைக் களத்தின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில்,

"சகோதரர் தமது வீட்டுக்கு வந்திருந்த நால்வரின் ஆளடை யாளத்தை நிரூபிக்கத் தவறி விட்டார்". எனக் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் வேறு இடங் களுக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டதாக பன்னாட்டு மன் னிப்பு அவை தனது அறிக்கையில் தெரிவித்தது.

சாரதாம்பாளின் பாலியல் வன்புணர்வு மற்றும் படு கொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப் படாததமையால், வழக்கைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இதே போல் கிருஷாந்தி குமாரசுவாமி, இளையதம்பி தர்சினி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை என பல தமிழ் பெண்களின் கொடூரமான படுகொலைகள் விசாரிக்கப் பட்டோ நீதி வேண்டியோ உண்மைகளை உலகுக்கு எடுத்து சொல்லாமலே மண்ணுக்குள் கொடும் துயரத்தை புதைத்து ஊமையாய் இருக்கின்றது...

28.12.1999




## சாரதாம்பாள் பாலியல் வன்முறையும் படுகொலையும்

சாரதாம்பாள் மீது படையினரின் பாலியல் வன்முறையும் படுகொலையும் யாழ் புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயதுடைய சாரதாம்பாள் சிறிலங்கா கடற்படையினரால் தனது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டுள்ளனர். சாரதாம்பாளின் இறந்த உடல் கடற்படையின் முகாமின் அருகில் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழிருந்து ஊர்மக்களால் கண்டறியப்பட்டது. உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் திணிக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியான ராதிகா குமாரசாமி இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். சிங்கள அரசு விசாரணைக்குழுவை அமைத்தது. சாரதாம்பாள் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாததமையால், வழக்கைத் தொடர முடியாது என சிறிலஂ்கா சட்டமா அதிபர் திணைக்களம் வழமைபோல் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.




JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாண அரசுகால வரலாறு கூறும் சங்கிலியன் தோரண வாசல்

– பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்

வட இலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு ஏறத்தாள 350 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துள்ளது. பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் இவ்வரசு பற்றியும், அதன் நான்குபக்க அரண்கொண்ட அரசமாளிகை, அதிலிருந்த பெரிய ஆலயம், அரச அதிகாரிகள் மற்றும் படைவீரர்களின் இருப்பிடங்கள், பூங்காவனம், புனித ஜமுனா ஏரி, நீதி மன்றம், நாற்றிசைக் கோவில்கள், காவலரண்கள், கோட்டைகள் முதலியன பற்றியும் கூறுகின்றன. அவ்வரலாற்றை மீள் நினைவுபடுத்துவதாகவே இன்றும் நல்லூரின் சிறிய வட்டாரத்திற்குள் எஞ்சியிருக்கும் ஜமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோரணவாசல் முதலான மரபுரிமைக் கட்டிடங்களும், நினைவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.



நல்லூரில் அரசமைத்த பாண்டியப்படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகளின் வழிவந்தவர்கள் சிங்கையாரியன், கங்கைநாடான், சேதுகாவலன் என்ற சிறப்புப் பெயர்களையும், செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர்களையும் பெற்றிருந்தனர். இவர்களின் ஆட்சி 1567இல் முடிவுற்றதன் பின்னர் இங்கு முதலாம் சங்கிலி, காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர்மன்னசிங்க குமாரன், இரண்டாம் சங்கிலி முதலான சுதேசமன்னர்களின் ஆட்சி நிலைபெற்றது. இவ்வரசமைந்த பிரதேசத்தை 14 ஆம் நூற்றாண்டுக்குரிய நம்பொத்த என்ற சிங்கள நூல் தெமளபட்டன (தமிழ்ப்பட்டினம்) எனவும், பாளி இலக்கியங்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு எனவும் தமிழ் இலக்கியங்கள் நல்லூர் இராசதானி, யாழ்ப்பாண இராச்சியம் எனவும், தமிழகக் கல்வெட்டுகள் யாழ்பாணயன்பட்டினம், யாழ்ப்பாண தேசம் எனவும், போத்துக்கேயர் ஆவணங்களில் யவ்னா எனவும் கூறுகின்றன. 1658 இல் ஒல்லாந்து தேசாதிபதியாக இருந்த பான்கூன்ஸ் என்பவர் இவ்வரசின் ஆதிக்கம் திருகோணமலையிலிருந்து கற்பிட்டிவரையான ஒரு நேர்கோட்டின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டிருந்ததாகக் கூறுகின்றார்.

இந்நிலையில் கி.பி. 14ம் நூற்றாண்டு இலங்கை அரசியல் நிலை தொடர்பாக ராஜாவலிய என்ற சிங்கள நூல் தென்னிலங்கையில் இருந்த கம்பளை, றயிகம அரசைக் காட்டிலும் யாழ்ப்பாண அரசு படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும்



மேலோங்கியிருந்ததாகவும், யாழ்ப்பாண மன்னன் மலைநாட்டிலுலிருந்தும், கீழ்நாட்டிலிருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்தும் திறைபெற்றான் எனவும் கூறுகின்றது. மேலும். சமகால வரலாறு கூறும் நிகாய சங்கிரகய மற்றும் ராஜாவலிய முதலான சிங்கள நூல்கள் கம்பளை அரசனுக்கு எதிராக யாழ்ப்பாண மன்னன் அனுப்பிய படை தரைவழியாகவும், கடல் வழியாகவும் நீர்கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு, தெமட்டக்கொடை, கோற்கான ஆகிய இடங்களைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன. இதை தென்னிலங்கையில் கேகாலை மாவட்டத்தில் கொட்டகம என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண அரசுகாலக் கல்வெட்டும் உறுதிசெய்கின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின்மீது போத்துக்கேயர் படையெடுத்த காலத்தில் சங்கிலி மன்னன் தலைநகரைப் பாதுகாக்க 12000 மேலான போர் வீரர்களை நிறுத்தியிருந்தான் என குவேறோஸ் சுவாமியார் கூறுகின்றார்.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டு இலங்கை வந்த மொறோக்கோ நாட்டுப் பயணியான இவுன் பற்றுற்றா தான் ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களில் ஒருவனை பத்தள என்ற இடத்தில் (புத்தளம்?) சந்தித்து உரையாடியது பற்றியும், அம்மன்னனின் பண்பு, பரோபகாரம், கடற்படைக் கப்பல்கள், மிகப்பெரிய அளவில் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகம், அம்மன்னன் தங்கியிருந்த துறைமுகத்திற்கு அருகே மலைபோலக் குவிக்கப்பட்டிருந்த கறுவாவினை மலையாளம், தமிழகத்திலிருந்து வந்த வணிகர்கள் புடவைகளைக் கொடுத்து அதற்குப் பதிலாக கறுவாவைப் பெற்று கப்பல்களில் ஏற்றிச் சென்றமை என்பன பற்றி தனது நூலில் விரிவாகக் கூறுகின்றார். மேலும் அவர் ஆரியச்சக்கரவர்த்தி மன்னனுடைய நூற்றுக்கணக்கான கப்பல்கள் ஒரு சமயத்திலே யெமென் தேசத்தை நோக்கி சென்றுகொண்டிருந்ததைத தான் பார்த்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இவ்வரலாற்று ஆதாரங்கள் போத்துக்கேயர் இலங்கை வந்த காலத்தில் கோட்டை கண்டி அரசுகளைப் போல் யாழ்ப்பாண அரசும் பலமான நிலையில் இருந்துள்ளதைக் காட்டுகின்றன. ஆயினும் தென்னிலங்கை இராசதானிகளின் மரபுரிமைச் சின்னங்கள் பெருமளவுக்குப் பாதுகாக்கப்பட்டிருப்பதைப் போல் யாழ்ப்பாண அரசு கால மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப் படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் வட இலங்கையில் ஆட்சிபுரிந்த போத்துக்கேயரும், பின் வந்த ஒல்லாந்தரும் சுதேச மக்களின் கலைமரபிற்குரிய கட்டிடங்களை அழித்துவிட்டு அவ்விடங்களில் தமது கலைமரபிற்குரிய கட்டிடங்களை அமைத்தமை முக்கிய காரணங்களில்













ஒன்றாகும்.

அவற்றுள் இரண்டாம் சங்கிலி மன்னனை வெற்றி கொண்ட போத்துக்கேயர் சிறிது காலம் நல்லூர் இரசதானியைத் தமது நிர்வாக மையமாகப் பயன்படுத்திவிட்டு பின்னர் அங்கிருந்த கட்டிடங்களை அழித்து அவ்விடங்களில் தமது கலைமரபில் கத்தோலிக்க தேவாலயம், நிர்வாக மையங்களை அமைத்தனர். பின்வந்த ஒல்லாந்தர் நல்லூர் இராசதானியிலும், பிற இடங்களிலும் இருந்த போத்துக்கேயரது கட்டிடங்களை தமது கலைமரபிற்குரிய கட்டிடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றை வடஇலங்கையின் பல இடங்களிலும் இன்றும் காண முடிகின்றது. மேலும் மதம் மாறி முதலியார், கங்காணி முதலான பதவிகளைப் பெற்ற சுதேசிகளும் தமது வாசல்த்தலத்தை, அதன் முகப்பை ஒல்லாந்தர் கலைமரபில் அமைத்துக் கொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் பெற்ற சுதேச மக்கள் யாழ்ப்பாண இராசதானி கால இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் பழைய பெயரில் புதிய ஆலயங்களை கட்டிய போது ஒரு சில ஆலயக் கட்டமைப்பிலும் ஒல்லாந்தர்காலக் கலைமரபின் செல்வாக்கு ஏற்பட்டது. இவை தமிழரின் பாரம்பரிய கட்டிடக் கலைமரபில் புதிய கலைமரபின் செல்வாக்கும் இணைந்து கொண்டதைக் காட்டுகின்றது. இதற்கு யாழ்ப்பாண இராசதானி கால மரபுரிமைச் சின்னங்களும் விதிவிலக்காக இருக்கவில்லை.

ஐரோப்பியரது 327 ஆண்டுகால ஆட்சியில் யாழ்ப்பாணம் அதன் நிர்வாகத் தலைமைப்பீடமாக இருந்த போதும் நல்லூர் இரசதானி இருந்த இடம் அவர்களது நிர்வாக, சமய, பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்துள்ளது. இதன் மூலம் நல்லூர் இராசதானிகால வரலாற்று நினைவுகள் தொடரவும், அதன் மரபுரிமைச் சின்னங்கள் புதிய கலைமரபுடன் இணைந்து வளர்வதற்கும் வாய்ப்பாக இருந்தது. அதன் ஒரு அடையாளமாகவே தற்போது மீளுருவாக்கப்பட்ட சங்கிலியன் தோரணவாசல் பார்க்கப்படுகின்றது. இந்நினைவுச் சின்னம் வேறு சில பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்றில் சங்கிலியன் தோரண வாசல் என்ற பெயரே நிலைத்திருக்கின்றது.

1970 க்குப் பின்னர் இந்நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்து அரச நிர்வாகம், பொது அமைப்பு, தனி நபர்கள் சில முயற்சிகளை எடுத்துள்ளனர்.

2007 இல் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இதை யாழ்ப்பாண அரசுகால மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. 2021 இல் உருவான யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் நிதிப்பங்களிப்போடு தொல்லியல்த் திணைக்கள அனுமதியும், அனுசரணையும் பெற்று இந்நினைவுச் சின்னம் இன்று மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. நல்லூர் இராசதானி காலத்தை நினைவுபடுத்தும் மரபுரிமைச் சின்னங்களில் ஆரியகுளத்தை தொடர்ந்து மீளுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படும் இரண்டாவது மரபுரிமைச் சின்னம் என்ற பெருமை இச்சங்கிலியன் தோரண வாசலுக்கு உண்டு.



பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தலைவர்: யாழ்ப்பாண மரபுரிமை மையம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# தமிழரசுக் கட்சி உடையுமா?

10.12.2023

தமிழரசுக் கட்சியின் தலைவர் யார் என்பதை தெரிவு செய்வதற்கு வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடக்கவிருக்கிறது. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி அது. அக்கட்சித் தலைவரை இதுவரை காலமும் தேர்தல் இன்றி ஏகமனதாக தெரிவு செய்து வந்தார்கள். அதாவது போட்டிக்கு ஆள் இருக்கவில்லை. ஆனால் இம்முறை போட்டி ஏற்பட்டிருக்கிறது. இப்போட்டிக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அந்த பதவியை அடைய விரும்புவதுதான்.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் பட்டத்து இளவரசர் போல சுமந்திரனே தோன்றினார். அதை நோக்கி அவர் தன்னை வளர்த்துக் கொண்டார். உள்ளூராட்சி சபை, மாகாண சபை போன்ற எல்லா மட்டங்களிலும் அவர் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பெருக்கிக் கொண்டார். அதற்கு முது தலைவராக இருந்த சம்பந்தரின் ஆசிர்வாதமும் இருந்தது. அதாவது பல ஆண்டுகளாகத் தலைமைப் பதவியை இலக்கு வைத்து திட்டமிட்டு உழைத்தவர் சுமந்திரன்.

அவரிடமிருந்த மொழிப்புலமை, சட்டப் புலமை, நிதிப்பலம் போன்றவை காரணமாக அவர் திட்டமிட்டுத் தன்னுடைய நிலையை பலப்படுத்தி வந்தார். சிறீதரன் அவருக்கு சவாலாக எழாதவரை அவர்தான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு தலைவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறீதரனும் அவரும் இணைந்து செயல்பட்டார்கள். சிறீதரன் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

கட்சிக்குள் சுமந்திரனின் எழுச்சி என்பது கடந்த 14 ஆண்டுகளிலும் படிப்படியாக திட்டமிட்டு கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. சம்பந்தர் அதைத் தொடங்கி வைத்தார். கட்சியை தீவிரவாத நீக்கம் செய்யவேண்டும், சிங்கள மக்களின் நன்மதிப்பை வென்றெடுக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து சம்பந்தர் உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். ஆயுதப் போராட



டமானது சிங்கள மக்களைப் பகை நிலைக்குத் தள்ளி விட்டது என்று சம்பந்தர் கருதினார். ஒரு தீர்வை பெறுவதாக இருந்தால் சிங்கள மக்களின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு கொழும்பை மையமாகக் கொண்ட மொழியாளுமை கொண்ட சுமந்திரனைப் போன்றவர்கள் விக்னேஸ்வரனைப் போன்றவர்கள் அவசியம் என்றும் அவர் நம்பினார். எனவே சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்றவர்களை சம்பந்தர் கட்சிக்குள் இறக்கியமை என்பது தற்செயலானது அல்ல. அவரிடம் அதற்கென்று தெளிவான ஒரு வழிவரைபடம் இருந்தது. அதன்படியே காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனால்தான் சுமந்திரன் பட்டத்து இளவரசராக மேல் எழுந்தார்.

ஆனால் சம்பந்தரின் வழி தோற்றுவிட்டது. அவர் எதிர்பார்த்தது போல ஒரு தீர்வைப் பெற முடியவில்லை. அதுமட்டுமல்ல, அவர் உள்ளே இறக்கிய விக்னேஸ்வரன் அவருக்கு எதிராகத் திரும்பினார். அதன்பின் இறக்கப்பட்ட குகதாசன் எதிராகத் திரும்பி விட்டார். சுமந்திரன் சாணக்கியர் கூறியது போல "நண்டாக" மாறிவிட்டார். "இளவரசர்கள் நண்டுகளைப் போன்றவர்கள். அவர்கள் தகப்பனைத் தின்னிகள்" என்று சாணக்கியர் கூறுவார். மொத்தத்தில் சம்பந்தர் ஒரு தோல்வியுற்ற தலைவராக ஓய்வு பெறப் போகின்றாரா?.

ஆனால் அவர் தமிழ் அரசியலைச் சீரழித்து விட்டார். கடந்த 14 ஆண்டுகளில் அவரால் உருப்படியான ஒரு தீர்வை பெற்றுத்தர முடியவில்லை. கூட்டமைப்பு என்ற ஐக்கிய கட்டமைப்பையும் பாதுகாக்க முடியவில்லை. அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலை. அவர் கடந்த 14 ஆண்டுகளாக திட்டமிட்டு முன்னெடுத்த அரசியல் வழியின் விளைவாக அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளேயே சிதைவுகள் தொடங்கி விட்டன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறீதரன் சுமந்திரனின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். அதனால்தான் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்றும் அழைத்தார். ஆயின் இப்பொழுது சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்பட்டிருப்பது தனிப்பட்ட முரண்பாடா? அல்லது, கொள்கை முரண்பாடா? கூட்டமைப்புத் தேய்ந்து தமிழரசுக் கட்சியாகியதற்கு சுமந்திரனையே பலரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. சிறீதரனின் செல்வாக்கு அடித்தளமாக காணப்படும் கிளிநொச்சிக்குள் சுமந்திரன் தனக்கு ஆதரவான ஒரு சிறு அணியை உருவாக்கி வைத்திருக்கிறார். ஏற்கனவே சிறீதரனோடு இருந்தவர்கள் அவர்கள். சிறீதரனின் கோட்டைக்குள் சுமந்திரன் ஊடுருவ முற்பட்டமையும், முரண்பாடுகள் தீவிரமடைய ஒரு காரணம்.

முதலில் இருவருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை பார்க்கலாம். சுமந்திரன் புரட்டஸ்தாந்து பாரம்பரியத்தில் வந்தவர். கொழும்புமைய வாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர். கொழும்புமைய உறவுகளைக் கொண்டவர். ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக கொழும்பில் தன் செல்வாக்கை மேலும் பலப்படுத்திக் கொண்டவர். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஓர் ஊடக முதலாளி ஒருமுறை சொன்னார் "தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருகிறார். அதேசமயம் தென்னிலங்கையில் அவர் அரசியல் உயர் குழாம், படைத்துறை உயர் குழாம், புத்திஜீவிகள், ஊடகங்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராக வளர்ந்திருக்கிறார். தென்னிலங்கை அரசியலில் அதிகம் செல்வாக்கு மிக்க ஒரு தமிழ் அரசியல்வாதி அவர்தான். தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் கொழும்பில் ஒரு பிரமுகராக வலம் வருகிறார்" என்று.

தனது மொழிப்புலமை, வாழ்க்கைப் பின்னணி காரணமாக சுமந்திரன் தென்னிலங்கையில் மட்டுமல்ல, உலக அளவில் ராஜதந்திரிகள் மத்தியிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் அதிகம் தெரியவந்த ஒருவராகக் காணப்படுகிறார்.

இப்பொழுது சிறீதரனைப் பார்க்கலாம். அவருடைய வேர் தீவுகளில் இருக்கிறது. அவர் தன்னைப் பலப்படுத்திக்கொண்டது கிளிநொச்சியில். போராட்டப் பாரம்பரியத்தில் வந்தவர். அதிகம் உள்ளூர் பண்புடையவர். உள்ளூர் உணர்வுகளை அதிகம் பிரதிபலிப்பவர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரான ஒரு காலகட்டத்தில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்ற அடிப்படையில் அவருடைய பாரம்பரியம் அவருடைய வாழ்க்கைமுறை போன்றன சுமந்திரனிடமிருந்து வேறுபாடானவை.

இந்த வேறுபாடுகளை சிறீதரனை ஆதரிப்பவர்கள் கொள்கை வேறுபாடுகளாக வியாக்கியானம் செய்கிறார்கள். சுமந்திரனின் அணுகுமுறை அதிகம் மிதவாதத் தன்மைமிக்கது இணங்கிச் செல்லும் தன்மை மிக்கது. அதனை அவருடைய கொழும்புமைய நிலையான நலன்கள் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றன. ஆனால் சிறீதரனின் அணுகுமுறை அதிகம் எதிர்ப்புத்தன்மை மிக்கது. ஒப்பீட்டளவில் சுமந்திரனை விடத் தீவிரமானது.

எதுவாயினும் ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால், அதாவது




தேர்தலை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றால், தேர்தலில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு கொள்கை முரண்பாடாகவே காட்டப்படும். சில சமயம் அது பிரதேச வாதமாகவோ அல்லது மத வாதமாகவோ மாறக்கூடிய ஆபத்துகளும் உண்டு.

அதை ஒரு கொள்கை வேறுபாடாக காட்டுவது சிறீதரனுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருக்கும். அனுகூலமாகவும் இருக்கும். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும் கொழும்பு மைய தமிழ் நிலைப்பாட்டுக்கும் இடையிலான ஒரு மோதலாக அதை உருவகித்தால் தனக்கு அதிகரித்த ஆதரவு கிடைக்கலாம் என்று அவர் நம்பக்கூடும். அதாவது கொள்கை அடிப்படையில் தன் பக்கம் பலமாக உள்ளது என்று அவர் நம்பக்கூடும்.

ஆனால், கடந்த 14 ஆண்டுகளிலும் அப்படியெல்லாம் கொள்கை வழியில் கட்சிகள் கட்டியெழுப்பப்பட்டனவா? தமிழ்மக்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்கிறார்கள் என்பது ஒரு "டெம்ப்லட்" வகை வசனமாக மாறி வருகிறதா? ஏனெனில் தமிழ் அரசியல்வாதிகள் தமது விசுவாசிகள் கூட்டத்தை கொள்கை அடிப்படையில் கட்டியெழுப்பியதை விட அதிகமாக எதிர்கால நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார்கள்.

எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு நின்றால் தனக்கு உள்ளூராட்சி சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது மாகாண சபையில் ஆசனம் கிடைக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் ஆசனம் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்தே பெரும்பாலான தொண்டர்கள் தலைவர்களைச் சூழ்ந்து காணப்படுகிறார்கள். அதாவது தேர்தல்மைய நோக்கு நிலையில் இருந்து சிந்தித்தே பெரும்பாலான கட்சி வலைப்பின்னல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. யாரோடு நின்றால் கட்சிக்குள் தங்களுடைய அடுத்தடுத்த கட்டப் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்றுதான் பெரும்பாலான கட்சித் தொண்டர்கள் சிந்திக்கிறார்கள்.

கொள்கைகளால் உருகிப் பிணைந்த ஒரு கட்டமைப்பாக கட்சி இருந்திருந்தால் கட்சிக்குள் உடைவு வரும்பொழுது அதை நாகரிகமாக கடந்து போக தெரிந்திருக்கும். சமூக வலைத்தளங்களில் நிகழும் மோதல்களில் தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் குறைந்தபட்ச அரசியல் நாகரீகமாவது பேணப்பட்டு இருந்திருக்கும்.

ஆனால் அதைக் காணவில்லை. இது தமிழரசு கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் நடந்தது. மணிவண்ணன் பிரிந்தபோது அதைக் காண முடிந்தது. நேற்றைய தோழன் இன்றைய துரோகி. இவ்வாறு முன்னாள் தோழர்களை இந்நாள் துரோகிகளாக்கும் அரசியல் பண்பாடு புதியது அல்ல. இது தமிழ் ஆயுத அரசியலில் இருந்து மிதவாத அரசியல் வரை உண்டு.

ஏற்கனவே பல தசாப்தங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் கொங்ரசுக்கும் இடையே மோதல்களின்போது, இரு கட்சி ஆதரவாளர்களும் மல முட்டிகளை பயன்படுத்துவார்கள். அதாவது மண் முட்டிகளுக்குள் மலத்தை நிரப்பிக் கொண்டு வந்து எதிராளியின் வீட்டு முற்றத்தில் உடைத்து விட்டுப் போவார்கள். அதே மலமுட்டிப் பாரம்பரியம் இப்பொழுது சமூக வலைத்தளங்களுக்கும் வந்துவிட்டது. முன்பு கட்சிகளுக்கு இடையே அது இருந்தது. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே வந்துவிட்டது. அது தேசத் திரட்சியைப் பாதுகாக்கும் ஓர் அரசியல் பண்பாடு அல்ல. கொள்கைப் பற்றுறுதி இருந்தால் அப்படியெல்லாம் பொது வெளியில் விமர்சனங்கள் வராது. தமிழ்க் கட்சிகளின் விசுவாசக் கட்டமைப்புக்கள் பெருமளவுக்கு கொள்கையை விடவும் எதிர்காலப் பதவி உயர்வுகளை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டவைதான்.

இப்படிப்பட்டதோர் அரசியற் சூழலில் தமிழரசுக் கட்சிக்குள், தலைவருக்கான ஒரு தேர்தல் நடந்தால், அது தமிழரசியலின் ஜனநாயகச் செழிப்பை நிரூபிக்குமா? அல்லது தேசத் திரட்சியை உடைக்குமா? தேர்தலில் யார் வென்றாலும் குறிப்பாகக் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிக்குள் உடைவு ஏற்படுமா?

நன்றி: நிலாந்தன்


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,
சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# “போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமதிப்பிற்குரியவர் புதுவை இரத்தினதுரை!




தமிழ் வாசகர்களுக்கு புதுவை அண்ணருக்குமான அறிமுகம் தேவையில்லை. வீச்சும், மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு எமது விடுதலைப்போரில் தனியானதோர் இடமுண்டு.

சொல்லப்போனால் விடுதலைப்போரின் வரலாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் பயணித்துள்ளன எனலாம்.


விடுதலைப் போராடடம் போரியலில் முனைப்புப்பெற்ற 1987க்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் தோல்வியை உரைத்தன. எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையைக் கூறின.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன.

யாழ்ப்பாணத்தில் பதுங்குகுழி வாழ்க்கைக்கும் அவரது கவிதைகள் பழக்கமாயின. விமானத்தின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. அவற்றின் படுகொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன.

யாழ்ப்பாணத்தைவிட்டு விடுதலைப்போரியல் தலைமை இடம் பெயர்ந்த போது புதுவை அண்ணரின் கவிதைகளும் அழுத படியே சேர்ந்துவந்தன. ஆனால் நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல்களாய்.

பொருட்தடை, மருந்துத்தடை, போக்குவரத்துத்தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம்மக்களுடன் சேர்ந்திருந்தன புதுவை அண்ணரின் கவிதைகள். வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலை வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும்.



இராணுவக் கொலை வலயத்தினுள் பயணிக்கும் இளம் வீரருடன் சேர்ந்து புதுவை அண்ணரின் பாடல்களும் பயணித்தன. எம்மக்களுக்கு ஆறுதல் சொல்லின... போரிட அழைத்தன... போரிட்டன... வெற்றிச் செய்திகளும் சொல்லின... விடுதலைக் கான ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமல்லாது, தமிழீழ கட்டமைப்பு, எமது தேசத்து நிலபுலங்கள், மக்களது கலாச்சார வாழ்வியல்கள், தமிழீழப் பெண்களது புரட்சிகர போரியல், சர்வதேச அரசியலுடனான எம்மின வாழ்வு என புதுவை அண்ணரது படைப்புக்கள் பன்முகப்பட்ட வாசிப்பனுபவத்தை தருபவை.

புதுவை அண்ணரது கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் “காலத்தின் குரல்கள்” என்று கூறு வேன். எமது விடுதலைப்போர் கடந்து வந்த பாதையின் வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமுமென மாறி மாறிய உணர்வுகளைக் கொண்ட காலங்களைக் கடந்துள்ளோம். அந்தக்கால உணர்வுகளின் குரலாக புதுவை அண்ணரின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன என்பது எனது கருத்து.

புதுவை அண்ணருக்கு வாய்த்துள்ள அற்புதமான கவி ஆற் றலும், அனாசயமான சொல் வளமும் அவரை பெரும் கவிஞர் களது வரிசையில் சேர்த்துள்ளது. இவற்றுடன் அவர் தன்னை இணைத்துக் கொண்ட இல்டசிய வாழ்வும் அவரது படைப்புக் களில் சேர்ந்துள்ளது. இவையே அவரை “காலத்தின் குரலாகப் பேசும்” கவிஞராக ஆக்கியது எனலாம்.

இங்கு நூலுருப் பெறும் உலைக்களம் அவ்வகையில் எழுந்த உணர்வு வரிகளின் தொகுப்பு. அந்தந்த காலத்தய விடுதலைப் போரின் களநிலைகளைத் தழுவிய உணர்வின் குரல்கள்.

இந்த உலைக்களத்தின் சிறப்பு என நான் பார்ப்பது இது வெறும் புதுவை இரத்தினதுரை என்ற தனி ஒருவனின் உணர்வின் குரலாக மட்டும் அமைந்து விடாததுதான். மாறாக உலைக்களத்தை ஆழ்ந்து, விரும்பி வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்திப் போகும் உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவற்றில் காணலாம். போராளி நிலையிலோ, பொதுமகனின் நிலையிலோ அல்லது படித்தவரின் நிலையிலோ, பாமரரின் நிலையிலோ எந்த நிலையில் நின்று பார்க்கும் போதும் அவரவரின் உணர்வின் வரிகளாக உலைக்களம் பொருந்தி வரும்.

ஆக்கிரமிப்பாளர்கள் பயங்கரவாதமென வர்ணிக்கும் விடுதலைப் போரியல் நடவடிக்கைகள் உலைக்களத்தில் பல இடங்களில் பேசப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளின் பின்னே உள்ள அர்ப்பணிப்புக்களையும், எம்மினத்தின் உணர்வுகளையும், அரசியல் அர்த்தங்களுடன் உலைக்களத்தில் பதிவாக்கியுள்ளார்.

எமது தலைவர் அவர்கள் உலைக்களத்தை ஒவ்வொரு வாரியாக ஏற்றி, இறக்கி, தணித்து வாசிக்கும் வேளையில் அருகில் இருந்து கேட்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறேன். சிலவேளைகளில் எனக்கென தனியாகக்கூட தலைவர் அவர்கள் வாசித்து காட்டியுள்ளார். தலைவர் அவர்கள் சிறந்த வாசகர் என்பதற்கு மேலாக உலைக்களத்தின் கருத்தோட்டத்தில் மீதான ஈர்ப்பே அதனை அவரை அப்படி வாசிக்க வைத்திருக்குமென நம்புகிறேன்.

“போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக் குரியவர்” எனவும், “எம் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப் படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச்செய்ய உழைத்தவர்.” எனவும் எம் தேசியத் தலைவர் அவர்களால் விதந்து பாராட்டுப்பெற்ற புதுவை அண்ணரைப் பற்றி நான் சொல்ல என்னதான் உள்ளது?

இலக்கிய வித்தகரும், பெரும் கவிஞருமான அவரது நூலுக்கு கருத்து எழுதுவதற்கு வாசகன் என்ற தகுதிநிலை போதுமெனக் கூறிய புதுவை அண்ணரது வார்த்தைக்கு கட்டுண்டு எழுதியுள்ளேன்.

எமது விடுதலைப்போர் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட்டம் கடந்துவந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும், சொல்லும் பெட்டகமாக உலைக்களம் திகழும் என நம்புகிறேன்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

அன்புடன்
ச.பொட்டு அம்மான்
பொறுப்பாளர்
புலனாய்வுத் துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

# மீட்பாருக்காக காத்திருப்பது

3.12.2023

**"சிறிய, சிந்தனைத்திறன் மிக்க, அர்ப்பணிப்பு மிக்க பிரஜைகள் உலகை மாற்றமுடியும் என்பதை எப்பொழுதுமே சந்தேகிக்கக்கூடாது. மெய்யாகவே, அது ஒன்றுதான் உலகில் எப்பொழுதும் நடந்திருக்கிறது"**
**– மார்கரட் மீட்**

கடந்த புதன்கிழமை, நொவம்பர் 29ஆம் திகதி, கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் உள்ள "ஆதாரம்" மண்டபத்தில் நடந்த ஓர் நிகழ்வில், "கிளிநொச்சி உளநல வலையமைப்பு" என்ற ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டது. அந்நிகழ்வில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த துறைசார் மருத்துவர்களும் இக்கட்டுரை ஆசிரியரும் உரையாற்றினார்கள்.

அம்மாவட்டத்துக்குரிய உளநல ஒருங்கிணைப்பு மருத்துவரான ஜெயராஜ் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். தனது தலைமை உரையில் அவர் ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கிளிநொச்சி மாவட்டத்தின் உளவியல் நெருக்கடிகள் குறித்துப் பேசினார். பேச்சின் ஒரு கட்டத்தில் அவர் சொன்னார் "நான் களைத்து விட்டேன். அதனால் மேற்படிப்புக்காக சற்று ஓய்வெடுக்கப் போகிறேன்" என்று.

உண்மை. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான தமிழ்ச்சமூகத்தின் அசாதாரணமான கூட்டு உளவியலைக் கையாள்வதற்குத் தேவையான அளவு மனநிலை மருத்துவ நிபுணர்கள் இல்லை. இருக்கின்ற கொஞ்சம் மருத்துவர் களிடமே எல்லாச் சுமைகளும் சுமத்தப்படுகின்றன.



கடைசிக்கட்டப் போரில் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு நிரந்தர மனநல மருத்துவ நிபுணர்கள் இப்பொழுது இல்லை. யாழ்ப்பாணத்தில் மூன்று மருத்துவ நிபுணர்கள் உண்டு. கிளிநொச்சி, முல்லைத்தீவு இரண்டையும் ஒரு மருத்துவ நிபுணர் தற்காலிகமாக பார்க்கிறார். வவுனியாவிலும் அதுதான் நிலைமை. 2009க்குப் பின், பாதிக்கப்பட்ட தமிழ் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மனநிலை மருத்துவர் நிபுணர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்கள். எனினும் போரின் உளவியல் விளைவுகளைக் கையாள்வது என்ற அடிப்படையில் தமிழ் மாவட்டங்களை ஒருங்கிணைத்த ஒரு மனநல மருத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

அதே சமயம், 2009க்கு பின்னரான தமிழ்ச்சமூகத்தின் கூட்டு உளவியல் நெருக்கடிகளைக் கையாள்வதற்கு தனியாக மனநல மருத்துவர்களால் மட்டும் முடியாது. ஆஸ்பத்திரிகளால் மட்டும் முடியாது. அது ஒரு கூட்டுப் பிரச்சினை. அது ஒரு சமூகத்தின் கூட்டு உளவியல் சம்பந்தப்பட்ட விடயம். மருத்துவர்களோடு அரசியல் வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள்; சமூகத் தலைவர்கள்; சமூகப் பெரியார்கள்; மதத் தலைவர்கள் கருத்துருவாக்கிகள்; அரச சார்பற்ற நிறுவனங்கள் முதலாக பல்வேறு வகைப்பட்ட தரப்பினரும் இணைந்து கூட்டாகச் செயல்பட வேண்டும். ஒரு கூட்டுச் சிகிச்சையாக, கூட்டுக் குணப்படுத்தலாக அமையவல்ல அரசியல், சமூகப்பொருளாதாரா வழி வரைபடம் ஒன்று வேண்டும். ஆனால் அவ்வாறான கூட்டச்செயற்பாடு இல்லாத வெற்றிடத்தில் மருத்துவர்களின் தலையில் மொத்தச் சுமையும் சுமத்தப்படுகிறது.

வயதால் மிக இளைய தமிழ் நகரங்களில் ஒன்று கிளிநொச்சி. ஒரு குடியேற்ற நகரம் என்ற அடிப்படையில் வயதால் இளைய ஒரு நடுத்தர வர்க்கத்தை கொண்டிருக்கிறது. இரணைமடுப் பெருங்குளத்தை மையமாகக் கொண்ட குடியேற்றங்களின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நகரம். ஆயுத மோதல்களுக்கு முந்திய காலகட்டத்தில் அந்நகரத்தைக் கட்டியெழுப்பியவர்களில் ஆனந்தசங்கரி குறிப்பிடத்தக்கவர். அதுபோல ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா ஆயுதப் போராட்ட இயக்கங்களும் அதைக் கட்டியெழுப்பின. குறிப்பாக மூன்றாங்கட்ட ஈழப்போரின் விளைவாக கிளிநொச்சி சமாதானத்தின் தலைநகரமாக மேலெழுந்தது. அது சமாதானத்தின் காட்சி அறையாகவும் பிரகாசித்தது. ஆனால் நாலாங்கட்ட ஈழப்போர் வெடித்தபோது அது ஒரு பேய் நகரமாக மாறியது.

ஏனைய தமிழ் நகரங்களோடு ஒப்பிடுகையில் அதிக சேதமடைந்த ஒரு நகரமும் அது. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கூட்டுக்காயங்கள்; கூட்டு மனவடுக்கள்; கூட்டு அவமானங்கள் - போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு நகரம். கூட்டுத் தண்டனைக்கு உள்ளாகிய ஒரு நகரம். அந்த நகரத்தை, மாவட்டத்தை 2009க்குப்பின் சிறீதரனும் சந்திரகுமாரும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகளும் தனிநபர்களும் கட்டியெழுப்பினார்கள். சிறீதரனும் சந்திரகுமாரும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தவர்கள். ஒருவர் உரிமை மைய அரசியல். மற்றவர் அபிவிருத்தி மைய அரசியல். இந்த இரண்டு அரசியல் வாதிகளுக்கும் இடையிலான அரசியல் முரண்பாடு கிளிநொச்சியின் 2009க்குப் பின்னரான அரசியற் சூழலை பெரிதும் தீர்மானித்தது. அடுத்த ஜனவரி மாதம் தமிழரசுக் கட்சியின் தலைமையைத் தீர்மானிப்பதற்கான ஒரு தேர்தல் நடக்கக்கூடும். அப்படி நடந்தால், சிறீதரன் ஒரு போட்டியாளர். ஆயுத மோதல்களுக்கு பின்னரான தமிழ் அரசியலில் கிளிநொச்சிக்குரிய முக்கியத்துவத்தை இது காட்டுகின்றது.

கிளிநொச்சியும் உட்பட, போரால் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழ் மாவட்டங்களின் மீது அதிகரித்த கவனக்குவிப்பு இருந்திருக்க வேண்டும். அந்த மாவட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டுச்சிகிச்சையாக அமையவல்ல கூட்டுச் சமூக, அரசியல், பொருளாதாரத் திட்டங்களை வகுத்திருந்திருக்க வேண்டும். வடமாகாண சபை உருவாக்கப்பட்டபோது அதைக் குறித்து மேலும் ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 14




ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக் பொருளாதார ரீதியாக; உளவியல் ரீதியாக; முழுமையாகக் குடியமராத (unsettled) ஒரு நிலைமைதான் காணப்படுகின்றது. சமூகத்தின் பெரும் பகுதி இப்பொழுதும் கொந்தளிப்பான ஓர் உளவியல்



சூழலுக்குள்தான் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மூத்த மனநல மருத்துவர் சிவதாஸ் கூறுவதுபோல, சமூகம் இப்பொழுதும் தப்பிப்பிழைக்கும் வழியைத்தான் தேடுகின்றது. Survival mode.

2009க்குப் பின்னரான புனர்வாழ்வு பெற்ற போராளிகள்; உறுப்புகளை இழந்த போராளிகள்; போர் விதவைகள்; முதியோர்; போர் அனாதைகள்; மாவீரர் குடும்பங்கள்; உள்ளிட்ட பல தரப்பட்டவர்களுக்கும் கூட்டுச்சிகிச்சை தேவைப்படுகின்றது. கூட்டுக் குணமாக்கல் தேவைப்படுகிறது. தமிழ்ச்சமூகம் இப்பொழுதும் கொந்தளிப்பான ஒரு மனநிலையோடு காணப்படுகிறது. அதைப் பின்வரும் காரணங்கள் தீர்மானிக்கின்றன…

முதலாவது, அரசியல் ரீதியாக நிலைமாற்றம் ஏற்படாமை. அதாவது ஒடுக்குமுறையின் விளைவாகத் தோன்றிய ஆயுதப் போராட்டந்தான் நசுக்கப்பட்டிருக்கிறது. போருக்கு மூல காரணமான இன ஒடுக்குமுறை தொடர்ந்து நீடிக்கின்றது. அது ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்ட மக்களை அரசியல் ரீதியாகவும் தோற்கடிக்கும் நிகழ்ச்சிநிரலோடு காணப்படுகின்றது.

இரண்டாவதாக, மேற்படி நிகழ்ச்சிநிரலை எதிர்கொண்டு, ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான ஒரு புதிய மிதவாத அரசியலுக்கு, ஒரு புதிய பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமை தாங்கவல்ல தலைமைகள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை என்ற வெற்றிடம்.

மூன்றாவது, புலம்பெயர்ந்து வாழும் நிதிப்பலம்மிக்க தமிழர்கள் தாயக அரசியலின் மீது தலையீடு செய்கிறார்கள். அவர்கள் கள யதார்த்தத்திற்கு வெளியே இருந்தபடி, பிரிவேக்கத்தோடு தாயக அரசியலின் மீது ஏதோ ஒரு விதத்தில் தலையீடு செய்ய முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய நிதி அதிகாரம் நல்லதையும் செய்கின்றது கெட்டதையும் செய்கின்றது.

நாலாவது, உலகளாவிய தொழில்நுட்ப மாற்றமானது ஒருபுறம் தமிழ் மக்களை இணைய வலையில் பிணைக்கின்றது. இன்னொருபுறம் அது தமிழ் மக்களைச் சிதறடிக்கின்றது. ஒரு



தாங்க முடியாத தோல்விக்கு பின், கடந்த 14 ஆண்டுகளாக கொத்தளித்துக் கொண்டிருக்கும் கூட்டு உளவியலின் விளைவாக, தமிழ் மக்கள் இணைய வெளியில் தங்களுடைய கண்களைத் தாங்களே தோண்டுகிறார்கள்; தங்களுடைய கழுத்தைத் தாங்களே அறுக்கிறார்கள்; தங்களுடைய புனிதங்களின் மீது தாங்களே மலத்தைப் பூசுகிறார்கள்.

இறந்த காலத்தில் கல்வியைத் துறந்து சுகபோகங்களைத் துறந்து போராடி, கண்ணை, கையை, காலை, இழந்தவரெல்லாம் ஓரமாகநின்று அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க, பாதுகாப்பான இறந்த காலத்தை பெற்றவரெல்லாம் நிகழ்காலத்தின் பேச்சாளர்களாக மினுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை நோக்கிச் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகிறார்கள்.

ஐந்தாவது காரணம், ஆயுதப் போராட்டத்திற்கு முன்பு தமிழ்ச் சமூகத்தில் இயல்பான சமூகப், பொருளாதார, அரசியல் கட்டமைப்புக்கள் இருந்தன. ஆயுதப் போராட்டம் புதிய கட்டமைப்புகளையும் புதிய விழுமியங்களையும் புதிய பண்பாட்டையும் கொண்டு வந்தது. ஏற்கனவே இருந்த பலவற்றை நீக்கியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்ட போது அது கொண்டு வந்த புதிய கட்டமைப்புக்களும் சிதைந்து விட்டன. அதற்கு முன் இருந்த சமூகக் கட்டமைப்புகளும் சிதைந்து போய்விட்டன. அதனால் கடந்த 14 ஆண்டுகளாக நிறுவன உருவாக்கிகளும் அமைப்புருவாக்கிகளும் அதிகரித்த அளவில் தேவைப்



படுகிறார்கள்.

மேற்கண்ட பிரதான காரணங்களின் தொகுக்கப்பட்ட விளைவாக, ஈழத்தமிழ் கூட்டு உளவியலானது, பண்புரு மாற்றத்துக்குத் தேவையான ஆளுமைகள் இல்லாத வெற்றிடத்தில்,

அதற்கு வேண்டிய கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில், தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டதோர் அமைதியுறாத, கொந்தளிப்பான, காத்திருக்கின்ற கூட்டு உளவியலைத்தான் வெளிச்சக்திகள் வெவ்வேறு வடிவங்களில் கையாளப் பார்க்கின்றன. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவருடைய மகள் வருகிறார் என்ற அறிவிப்பும் எதிர்பார்ப்பும் இந்தப் பின்னணிக்குள்தான் நிகழ்ந்தது. ஒரு மீட்பருக்காக காத்திருக்கும் ஒரு நிலை உள்ளவரை, தங்களுக்குள் தீர்க்கதரிசனமும் அர்ப்பணிப்பும் மிக்க தலைமைகளைக் கட்டி எழுப்ப முடியாதவரை; திரும்பப்பெற முடியாத இறந்த காலத்தை “மம்மியாக்கம்” செய்து காவும் வரை; இறந்த காலத்தில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளாத வரை; அரசியலை அறிவியலாக விளங்கிக் கொள்ளாதவரை; இந்த நிலைமை தொடர்ந்துமிருக்கும்.

துவாரகாவைக் கொண்டு வருவது எனப்படுவது ஏற்கனவே கடந்த 14 ஆண்டுகளாக இருந்து வரும் ஓர் அரசியல் போக்கின் தொடர்ச்சிதான். தலைமையை அல்லது தகைமையை வெளியே தேடுவது. சம்பந்தரும் அதைத்தான் செய்தார். முதலில் சுமந்திரனை உள்ளே கொண்டுவந்தார். அதன்பின் விக்னேஸ்வரனைக் கொண்டுவந்தார். அதன்பின் தன் சொந்த மாவட்டத்திற்குக் குகதாசனைக் கொண்டு வந்தார். பட்டப் படிப்புகள் இல்லாத போராட்டத் தலைமைகள் தமிழ் சிங்கள உறவுகளை பகை நிலைக்கு தள்ளி விட்டன என்று அவர் நம்பினார். எனவே மெத்தப் படித்த, சட்டப் பின்னணியைக்

கொண்ட, புதியவர்களை கட்சிக்குள் இறக்கி, சிங்கள மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும் என்றும் அவர் சிந்தித்தார். அந்த அடிப்படையில் கட்சியை முதலில் புலி நீக்கம் செய்தார். அதன் பின் ஆயுதப் போராட்ட நீக்கம் செய்தார். அதற்கு வேண்டிய ஆட்களைக் கட்சிக்குள் கொண்டு வந்தார். ஆனால் அவருடைய சொந்தக் கட்சியே இப்பொழுது இரண்டாக உடையும் நிலை. அவருடைய சொந்த மாவட்டத்திலேயே ஆசனத்தை இழக்கும் ஆபத்து. சம்பந்தரின் அரசியல் வழியானது அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த அரசியலின் தோல்விதான் கடந்த 14 ஆண்டு கால காத்திருப்பு அரசியலும். ஒரு மீட்பரின் வருகைக்காக காத்திருப்பது. அவ்வாறு ஒரு மீட்பரின் வருகைக்காக காத்திருக்கும் நிலைமை தொடரும் வரை வெளியில் இருந்து மீட்பர்கள் உற்பத்தி செய்யப்படுவார்கள்.

இந்த நிலைமையை மாற்றுவதென்றால், தமிழ்மக்கள் மத்தியில் இருந்து பண்புருமாற்றத்திற்குத் தலைமை தாங்கும் ஆளுமைகள் மேற்கிளம்ப வேண்டும். ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கூட்டுக்காயங்களுக்கும் கூட்டு மனவடுக்களுக்கும் கூட்டுக் கொந்தளிப்புக்கும் கூட்டுச் சிகிச்சையாக அமையத்தக்க கூட்டுச் செயற்பாட்டுகளுக்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை தமிழ்மக்கள் உருவாக்க வேண்டும்.

கடந்த 29 ஆம் தேதி கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட உளநல வலையமைப்பு அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக வளர்ச்சிபெற வேண்டும். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 1987 இலிருந்து “சாந்திகம்” என்ற உளவளத் துணை நிலையம் செயற்பட்டு வருகின்றது.

மேலும், விதவைகளுக்கான கட்டமைப்பு; முதியோருக்கான கட்டமைப்பு; அனாதைச் சிறுவர்களுக்கான கட்டமைப்பு; உறுப்புகளை இழந்தவர்களுக்கான கட்டமைப்பு; போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கட்டமைப்பு; நினைவு கூர்தலுக்கான கட்டமைப்பு; கலை பண்பாட்டுக் கட்டமைப்பு; முதலீட்டுக் கட்டமைப்பு; உலகளாவிய ஒரு வங்கி, உலகளாவிய ஒரு தொண்டு நிறுவனம் - போன்ற பல்வேறு கட்டமைப்புகளையும் தமிழ்மக்கள் உருவாக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போதிய நிதி உண்டு; வளங்கள் உண்டு. தாயகத்தில் தேவை உண்டு. இரண்டையும் இணைப்பதற்கு அரசியல் தலைமைகளால் முடியவில்லை என்றால், நிறுவன உருவாக்கிகள் அதைச்செய்யலாம். அமைப்பு உருவாக்கிகள் அதைச் செய்யலாம்.


தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தொண்டுத் தேசியந்தான். முன்னுதாரணம் மிக்க செயற்பாட்டாளர்கள்; முன்னுதாரணம் மிக்க தொண்டர்கள். ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையான பொருத்தமான நிறுவனங்களை புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி மற்றும் துறைசார் அறிவுப் பங்களிப்புடன் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலுக்கு தலைமைதாங்கத் தக்கவர்கள் மேலெழும் பொழுது சமூகம் வெளியாருக்காக காத்திருக்காது. அதிசயங்கள் அற்புதங்களுக்காகக் காத்திருக்காது. மாறாக தானே அதிசயங்களையும் அற்புதங்களையும் பெருஞ் செயல்களையும் செய்யத் தொடங்கிவிடும்.

நன்றி: நிலாந்தன்


உலக வணிகம் ULAGA VANIKAM

2024




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY




## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# ஓடம்



சிறுகதை

கடற்கரைச்சேனை, அழகான கிராமம். கிராமியங்கள் தாம் தமிழனின் விருந்தோம்பல் பண்பை அழிந்து விடாமல் காத்து நிற்கும் மையங்கள், பண்பாட்டு மையங்கள் மட்டுமல்ல, ஈழப் போரின் ஆரம்பத் தளங்களாய் அமைந்த பாசறைகள். இலட்சிய வீரர்களை மறைத்துக்காத்த இரும்புத்திரைகளும் கூட!.

மூதூருக்கு செல்லும் துறை.

நாடியில் கையை ஊன்றியபடி, ஓடத்தின் நுனியில், யாரையோ எதிர்பார்த்து காத்திருந்தார் குலமண்ணன். மெல்லிய தென்றலில் எழுந்த திரைகள் அவரின் ஓடத்தை அசைத்துக்கொண்டிருந்தன. ஓடம் ஓட்டி உழைத்தே ஓடாய்ப்போனவர். துறையில் மக்கள் அதிகமிருந்தால் அவர் வீட்டிலும் கொண்டாட்டம். இல்லையேல் சாப்பாட்டுக்கே திண்டாட்டந்தான்.

கடற்கரைச்சேனையின் பிரதானவீதி; ஒரு பெட்டிக்கடை; குலமண்ணனின் பொருளாதார வண்டிலின் ஒற்றைமாடு அந்தக்கடை. கடை நடத்திக் கொண்டிருந்தவள் குலமண்ணனின் மனைவி. கடையில் லாபம் கிடைக்குமோ என்பது சந்தேகம். காரணம், விற்பனைக்குரிய நல்ல பொருட்கள் எதுவும் அங்கில்லை. வீட்டுச் செலவுக்காய் வயக்கட்டுப் போகும் கடைதான் அது. ஆனால், அந்தப் பெட்டிக்கடைக்கும், குலமண்ணனின் ஓடத்துக்கும் பெரிய வரலாறே இரந்ததை எவரும் அறிய முடியாது.

வானத்தில் செம்முகில்கள், பகலோன் மறையப் போகின்றான். கொக்குகளும், கோட்டான் குருவிகளும் கொஞ்சி மகிழும் நேரம். ஆற்றின் கரையே நீண்டு, கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியும் கண்ணாமரங்கள். பள்ளிகொள்ளப்போகும் புள்ளினங்களின் மெல்லினக்குரல்கள் ஒருபுறம், நெடுந்தூரம் இரைதேட பயணத்தை ஆரம்பிக்கும் வெளவால்களின் முகாரி. கண்ணாக்காடு அமளி துமளிப்பட்டது.

குலமண்ணன், கண்ணாமரங்களையும் அவற்றுக்கிடையே தெரியும் சிறிய ஓடைகளையும் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். ஓடத்திலிருந்த சவளில் கை மெல்லப் பதிந்தது. மனதில் மகிழ்ச்சி, சவள் வேகமாக தண்ணீரில் விழுந்தது. ஓடம் நீரைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது. பாலை மீன்கள் ஓடத்தில் மோதி துள்ளிப்பாய்ந்தன.

மண்ணுக்காய் மரணத்தை முத்தமிட விரும்பியவர்கள்... தேசபிதாக்கள்... தேசத்தின் சொத்துக்கள்... இவர்களுக்காகவே குலமண்ணனின் ஓடம் ஓடிக்கொண்டிருந்தது. பயணத்தின் களைப்பு..., பாதையின் தூரம்; தோளில சுமை... இவைதான் குலமண்ணனின் கண்களில் தெரிந்தன. சிந்தனையின் வேகத்தை முந்தியே ஓடம் கரையத் தொட்டது.

"என்ன குலமண்ணோய், இந்தியன்ர நடமாட்டம் என்ன மாதிரிக் கிடக்குது?" பொறுப்பாளரின் குரல் கேள்வியோடு நின்றது. "இந்தியன் எங்களை என்ன செய்யிறது; இது நாங்கள் பிறந்த மண்ணெல்லே; இதுக்குள்ள எங்களைப் பிடிக்கிற தெண்டால் அவன் புறிம்பாய் பயிற்சி எடுக்கோணும்." குலமண்ணனிடமிருந்து உறுதியான பதில் வந்தது.



"அது சரியண்ணோய், நாங்கள் ஓடித்தப்பீடுவம், முந்தியும் உங்கட ஓடத்தை ரெண்டு மூண்டு தரம் எரிச்சுப்போட்டாங்கள். போற போக்கப்பாத்தால் ஆளையுமல்ல எரிச்சுப போடுவாங்கள் போல கிடக்குது"

"தம்பி, இருக்கிறவரைக்கும் நானும் இந்த ஓடமும் இயங்கும். இயக்கம் நிக்கேக்க இன்னுமொரு ஓடம் இயங்காமல இருக்கப் போகுது."


"இல்லையண்ணோய், வீட்டைப் பற்றியும் கொஞ்சம் போசிக்கோணும். நாலு சனங்களையும் ஏத்தி ஓடினால்தான் அக்காவும் பிள்ளைகளும் சாப்பிடுங்கள்."

"தம்பி, இப்படித்தான் உவன் கணேசனையும் அவனோட வாற பிள்ளைகளையும் என்ர பிள்ளையாய் நினைத்து ஏத்தி இறக்கினன்; சோறு குடுத்து பாதுகாத்தம்; கடைசியில இண்டைக்கு ஒண்டுகூட இல்லாமல் செத்துப்போட்டுதுகள். இண்டைக்கு இருந்திட்டு நாளைக்கு செத்துப்போற பிள்ளையளுக்கு என்னால் வேற என்னத்தை செய்யமுடியும்? எண்பத்தியஞ்சிலை இருந்து இந்தக் கை என்ர பிள்ளையளுக்காய் சவள் பிடிச்சிருக்குது" என்று கூறியபோது அவரது கண்களில் நீர் அரும்பி நின்றது.

அக்கா பதில் கொடுத்தாள்.

மேஜர் கணேசின் காலத்திலிருந்து சோறு போடும் குடிசை... வறுமையின் கோடுகள பதிந்த அந்தக்கரங்கள்... தேசத்தின் சொத்துக்குளுக்கு சோறு போட்டதைத்தான் அந்தக் கரமும் குடிசையும் அறியும்.

சாப்பாடு முடிந்ததும் இரகசிய வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகின. இந்திய இராணுவ அணிக்கு நிலக்கண்ணி புதைக்க வேண்டும். பாதுகாப்பானதும், இரகசியமானதுமான இடம் வேண்டும். ஆலோசனை முடிவின்றி நீண்டது. விடிவதற்கு முன் கண்ணி நட்டாக வேண்டும்.




பேசிக்கொண்டு வரும்போதே ஓடம் கரை தட்டியது. எதைத்தான் கதைத்தாலும் குலமண்ணனின் ஓடமும் வீடும்தான் சுமைதாங்கிகள்

பசி வயிற்றைக் கிள்ளியிருக்க வேண்டும்.

"எல்லாம் சரியண்ணோய், நல்லாய் பசிக்குது. அக்கா சமைச்சிருப்பாவே?"

சுத்திச்சுத்தி, பசிக்குதக்கா சோறுதாருங்கே எண்டு ஓடி வருவாங்கள். அதுக்குள்ள ஒரு ஞானப்பேச்சு; தத்துவக்கதை என்று தன் மனதுக்குள் எண்ணிய குலமண்ணனின் முகத்தில் மெல்லிய நகைப்பு கோடிட்டது. வேற எங்கதான் அதுகள் போறது என்று அவர் மனம் சொல்லிக்கொண்டது.

துறையிலிருந்து கடற்கரைச்சேனை கிராமத்துக்குள் நுழையும் போது இருட்டியிருந்தது. காதுகளை கூர்மையாக்கி புலிப் பாதங்களை பதித்துக்கொண்டே குலமண்ணனின் வீட்டை அண்மித்தனர்.

குழந்தைகளைப் படுக்கவைத்துவிட்டு, இருட்டினை ஊடுருவி, வீதியைப் பார்த்தபடி வாசலில் இருந்தாள் குலமண்ணனின் மனைவி. இந்தியச் சிப்பாய்களின் காலடி ஓசைக்கும், புலிகளின் பாத ஒலிக்கும் அவளுக்கு வித்தியாசம் தெரியும். இருளில் தெரிந்த உருவங்களை தூரத்தில் வைத்தே இனம்கண்டு கொண்டாள். குப்பி விளக்கை ஏற்றிவிட்டு மளமளவென பீங் கான்களில் சோறுபோட்டாள்.

வீட்டினுள் நுழைந்த போராளிகள், சோற்றைப் போட்டு வைத்துவிட்டு பலகைத்துண்டில் குந்தியிருக்கும் அக்காவை இமைக்க மறந்து சிலகணம் நோக்கினர்.

"நாங்கள் வருவமெண்டு எப்படித் தெரியுமக்கா?" எனப் பொறுப்பாளர் கேள்வியொன்றைப் போட்டுவைத்தார்.

"எப்படியும் ஓடி ஒழிச்சுப் பசியோட ஆராவது வந்து சேருவியளெண்டு எனக்குத் தெரியும்; இது எனக்குப் புதிசில்லையே"

"எங்கட கடைக்கு முன்னால வைப்பம்; ஒருதருமே சந்தேகிக்க மாட்டார்கள்." அக்காவின் உறுதியான முடிவு... எல்லோரும் வாயில் கைவைத்தனர். முடிவு...? அக்கா சொன்ன முடிவே இறுதியானது.

பெட்டிக்கடையின் கதை நாளை முடியப்போகிறது. அதற்காக குலமண்ணனோ அக்காவோ சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்திய ஓநாய்கள் அழிக்கவேண்டுமென்ற வன்மமே அவர்களிடம் ஓங்கிநின்றது.

காலை விடிந்தது. வழமை போல கடையில் வியாபாரத்தைத் தொடங்கியிருந்தாள் அக்கா. துறைக்கரையில் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஓடத்தில் ஏறி அமர்ந்தார் குலமண்ணன். பதட்டமற்ற வழமையான நிகழ்வு... யாருக்கும் இருக்கமுடியாத உறுதி... தியாகத்தின் எல்லை...

இந்திய ரோந்துப் பவனி... அக்காவின் மனது மெல்ல அடிக்கத் தொடங்கியது. வாகனங்கள் அண்மித்துவிட்டன. இதோ... டுமீல்... வாகனங்கள் சிதறின. வாகனத்தில் இருந்த ஜவான்கள்...?

குலமண்ணனின் ஓடம் வெற்றிச் சுமையோடு மறுகரை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

அன்றைய இரவு... இரவின் அமைதி... அக்காவின் மனது ஏனோ என்றுமில்லாதவாறு குழம்பிக் கொண்டிருந்தது. தேச விரோதக் கும்பல்கள் தன் கணவனை சுட அலைந்து திரிவது, இந்தியப்படைவ ந்து, ஒப்புக்கு நடத்திய தேர்தலில் வாக்குச்சீட்டுப் போட தன் கணவனை இழுத்துச் சென்றது... எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாக மனதில் எழுந்து நின்றன.

இதயத்தில் கத்திவைத்த அந்த இரவு கொடுமையானதுதான். ஆற்றின் மெல்லிய திரைகள் சாம்பரை அள்ளி அலைத்துக் கொண்டிருந்தன. அப்படியாயின் துறைக்கரை ஓடம்...? கால்வேறு கைவேறாய்... ஆம். குலமண்ணன்தான், ஈழப்பயணத்தின் ஓடங்கள்...

இந்த ஓடங்கள் தாம் இன்று ஈழப்போரின் உறுதியாய்... உரமாய்... உறைவிடமாய்...

மணலாறு விஜயன்

-டிசம்பர் 1994 எரிமலை

# தமிழீழத்தின் நீங்காத நினைவுகளில் எம்.ஜி.ஆர்

இலங்கைத்தீவினிலே தமிழினம் கேட்பாரெவருமின்றி வேட்டையாடப் பட்டுக்கொண்டிருந்த வேளையில் தமிழீழத் தமிழர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர் மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள். தமிழக முதல்வராக இருந்து கொண்டு தமிழீழ விடுதலைக்காக குரல் கொடுப்பதோடு நின்று விடாது விடுதலையை வென்றெடுக்க வல்ல தலைமையாக தமிழீழத் தேசியத் தலைவரை இனங்கண்டு ஆதரித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது ஒன்றே தமிழீழத்தவர்களுக்கு மீட்சி தரும் என்பதை தீர்க்க தரிசனமாக எண்பதுகளின் ஆரம்பத்திலேயெ உணர்ந்து கொண்டு அதற்கென காத்திரமான பங்களிப்பையும் வழங்கினார்.

17.01.1917 அன்று ஈழம் மண் மலயகத்தில் கண்டி நகரில் ஆசிரியர் ஒருவரின் மகனாக மக்கள் திலகம் அவதரித்தார்.

இயல்பாகவே மக்கள் திலகத்திடம் நேர்மைத் திறனும், பிறர் இடுக்கண் கண்டு கவலையுத் தன்மையும் நிறைந்தே காணப் பட்டது. சிறீலங்காப் பேரினவாத அரசு தமிழீழ மக்கள் மீது குண்ட மாரி பொழிந்தும், துப்பாக்கியில் சுட்டும், சிறைப்பிடித்தும் வதைத்தும் துன்பம் அனுபவிப்பது கண்டு துடித்தார். ஈழத் தமிழர்கள் படும் அவலங்கள் கண்டுணர்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழ மக்களின் விடதலைக்கான ஆயுதப் போராட டத்தினை ஆதரிக்க முன்வந்தார்.

இதன் விளைவாகவே தமிழீழ மக்களுடைய விடுதலையை ஆக்கபூர்வமாக மீட்டெடுக்கக் கூடிய அமைப்பாக தமிழீழ விடு தலைப் புலிகளையும், தமிழீழ மக்களிற்கான தீர்க்கதரிசனம் மற்றும் நுண்மதி மிக்க விலைபோகாத தலைமையுமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைக் கண்டுணர்ந்து மனிதநேயத்தோடு எண்ணிறைந்த உதவிகளைச் செய்தார். தாம் வகித்த முதல்வர் பதவிக்கு ஆபத்து வந்தாலும் வரட்டு மேனன தமிழீழ விடுதலைக்காக செயற்கரிய பங்களிப்புக் களைச் செய்தார்.

தமிழீழத்திலிருந்து தாய்த் தமிழகத்திற்கு ஏதிலிகளாக வந்த தமிழர்களுக்கு பல நல்வாய்ப்புத் திட்டங்களை வகுத்தார்.

தனது அரசு, கட்சி, சொந்தச் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தி தமிழீழ விடுதலைக்கு உதவிய புரட்சித் தலைவர் அவர்கள் தீராத சுகயீனம் காரணமாக 24.12.1987 அன்று இயற்கை எய்தினார்.

ஆண்டுதோறும் தமிழீழ மக்களால் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவு நாள் உணர்வு பூர்வமாகவும் நன்றிப் பெருக்கோடும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் திலகம் அண்ணல் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து முப்பத்தாறு ஆண்டுகள் நிறைந்துள்ளநிலையில், தமிழீழத்தின் விடியலுக்காக எதுவித பிரதிபலனும் பாராது பாடுபட்ட அந்த நல்ல உள்ளத்தினை நினைவிற்கொள்கிறோம்.



## விடுதலைக்கு நிழ்ல் தந்த விருட்சம்



# ஈழத்தமிழர் உயிர் காக்க "தீ மூட்டிய முதல் நெருப்பு" ஈகைத் தமிழன் அப்துல் ராவூப்



யாழ் குடாநாட்டின் மீது சந்திரிகா அரசினால் மேற்கொள்ளப் பட்ட பெரும் படையெடுப்பினால் பல இலட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டதால் துயருற்ற அப்துல் ராவூப் அவர்கள் தமிழர்களின் விடியலுக்காக தமிழகம் திருச்சியில் 15.12.1995 அன்று தீக்குளித்து ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட ஈகைத்தமிழன் அப்துல் ரவூப்பின் 28ம் ஆண்டு வீரவணக்க நாள் - 15.12.2023

★ஈழத்தமிழர் உயிர் காக்க **"தீ மூட்டிய முதல் நெருப்பு" அப்துல் ரவூப்.**

1995ஆம் ஆண்டு சிங்கள இனவெறி பிடித்த சந்திரிகா அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கை மூலம் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களை யாழ்குடா நாட்டிலிருந்து வெளியேற்றி கொண்டிருந்தது. ஒருபுறம் தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்காக சிங்கள கிரிக்கெட் அணி இந்திய அரசின் சிவப்புக் கம்பள வரவேற்பை ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டில் விளையாட தயாராகிக் கொண்டிருந்தது.

மறுபுறம் தொலைக்காட்சியில் 150 விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவத் தாக்குதலில் மரணமடைந்தனர் என்ற செய்தி ஒலிக் கொண்டிருந்தது. இதையெல்லாம் காணப்பொறுக்காமல் இருபத்தி நான்கு வயதுடைய இளைஞன் ஒருவன் மனச்சோர்வோடு காணப்பட்டான்.

1995, டிசம்பர் 15ஆம் நாள் பொழுது புலர்ந்தது. தான் பணிபுரிந்து வந்த லண்டன் கணினி பயிற்சிப் பள்ளிக்குச் சென்றான். அங்கிருக்கும் ஒரு அறைக்குச் சென்று தாம் எடுத்து வந்திருந்த மண்ணெண்ணெய்யை தன்னுடலில் முழுவதும் ஊற்றினான். நனைந்த ஆடையோடு அருகிலுள்ள காமராசர் வளைவுக்கு ஓடோடி வந்தான். தீயை தன்னுடலில் பற்ற வைத்தான். கருகிக் கொண்டிருக்கும் உடலைக் கண்டவுடன் நண்பர்கள் சிலர் காப்பாற்ற ஓடோடி வந்தனர்.

அப்போது அந்த இளைஞன் பின்வருமாறு கூறினான்: "என்னைக் காப்பாற்றாதீர்கள்: ஈழத்தமிழரை காப்பாற்றுங்கள்" என்று உருக்கமாக பேசி சரிந்தான்.

அரசு மருத்துவ மனையில் உடல் முழுவதும் வெந்த நிலையில் சேர்க்கப்பட்டான். காவல் துறையினர் மோப்பம் பிடித்து வாக்கு மூலம் பெற ஓடோடி வந்தனர். "தம்பி! நீ எந்த கட்சியப்பா" என்றதும், "கட்சிகள் பேரைச் சொல்லி கொச்சைப்படுத்தாதீர்! முழுக்க முழுக்க ஈழத் தமிழர்களுக்காகத்தான் தீக்குளிச்சேன்" என்று இறுதி வாக்கு மூலம் தந்தான்.

அவன் பெயர் அப்துல் ரவூப். 5.12.1971ஆம் ஆண்டு பிறந்தான். தந்தை பெயர் அசன்முகம்மது. பெரம்பலூர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர். தி.மு.க. ஆதரவாளரும் கூட.


அப்துல் ரவூப் 12-ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவன். சிறுவயது முதலே எதையும் தீவிரமாக சிந்திக்கும் குணமுடையவன். யாரிடமும் அதிமாக பேச மாட்டான். ஆனால் எதைப் பற்றிக் கேட்டாலும் தெளிவாக பதில் தருவான். தாய் மீது மிகுந்த பாசம் கொண்டவன். புத்தக வாசிப்பு நிறைய உண்டு.

ஒருமுறை கிரிக்கெட்டில் இந்தியா தோற்ற போது விம்மிவிம்மி அழுது தனது இந்திய தேசப்பற்றை வெளிக்காட்டினான். அப்போது தமிழினத்தை அழித்தொழிக்கும் சிங்கள அரசின் கொடூரக் கொலைகள் வெளிவந்த வண்ணம் இருந்தது. அதற்காக இந்தியாவின் கல்மனம் கரையாதிருப்பது கண்டு மிகவும் வருத்தம் கொண்டான். அன்றிலிருந்து சிங்கள அரசோடு இந்தியாவையும் சேர்த்து வெறுக்க கற்றுக் கொண்டான்.

அப்துல் ரவூப் நாகப்பட்டினம் ஐ.ஐ.டி.யில் சுருக்கெழுத்தர் பயிற்சிக்கு சென்று கொண்டிருந்த போது திடீரென்று ஒருநாள் காணாமல் போனான். பரிதவித்து வந்த தந்தையார் அசன் முகம்மதுக்கு மும்பையில் உள்ள "கொலாபா" பகுதியில் இருப்பதாக தகவல் வந்தது. சமாதானம் பேசி ஒருவழியாய் அசன் முகமது தனது மகனை தமிழகத்திற்கு அழைத்து வந்தார். அப்போது தந்தையிடம் அப்துல் ரவூப் பின்வருமாறு கூறினார்: "நான் பிரபாகரன் அணியில சேர்ந்து போராடறதுக்காகப் போனேன். என் இலட்சியத்தை வீணடித்து விட்டீர்களே?" அவன் சொன்ன பதில் தந்தையை திகைக்க வைத்தது. அப்துல் ரவூப்பிற்கு ஈழ விடுதலை உணர்வு நெஞ்சில் கனன்று கொண்டிருப்பதை புரிந்து கொண்டார். சாவின் விளிம்பிலும் கூட அப்துல் ரவூப்பின் கண்ணில் ஈரம் கசிய வில்லை என்பதை பல பேட்டிகளில் வெளிப்படுத்தினார்.




அப்துல் ரவூப் ஈழ விடுதலை மீதும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் தீராப் பற்றுக் கொண்டதை பாராட்டும் வகையில் தமிழீழ



விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப் பணியகம் விடுத்த அறிக்கை பின் வருமாறு: "கலந்திருக்கும் சுவாசக் காற்றில் நஞ்சைத் தூவக் காத்திருப்பவைகள் யாவும் சத்தின்றி சருகாகப் போகும் என்பதைத் தான் அப்துல் ரவூப்பின் தியாகம் எடுத்துரைக்கிறது"

அப்துல் ரவூப் ஏந்திய தீப்பந்தம் இன்னும் அணைய வில்லை. அது எதிரிகளை எரிக்கும். தன்பகை முடிக்கும். வெல்லும் தமிழீழம்!

நன்றி: செய்தி உதவி: நந்தன் வழி மாதமிருமுறை ஏடு (மார்கழி 1-15, 1997)

**வரலாற்றைப் படி!**

**வரலாற்றைப் படை!**

**வரலாறாய் வாழ்!**

# மாவீரர் நாள் 2023



27.11.2023

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான பதினைந்தாவது மாவீரர் நாள் இது. கடந்த 15 ஆண்டுகளாக மாவீரர் நாள் போன்ற நினைவு நாட்களை ஒரு கட்டத்துக்கு மேல் பரவலாக மக்கள் மயப்படுத்துவதில் சட்டப் பிரச்சினைகள் இருந்தன. நீதிமன்றங்கள் நினைவு கூர்தலுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் போது, நினைவு கூர்தலை ஒப்பீட்டுளவில் மக்கள் மயப்படுத்த கூடியதாக இருந்தது. எனினும் கடந்த 15 ஆண்டுகளிலும் மக்கள் மத்தியில் இருந்து பயத்தை முழுமையாக அகற்ற முடியவில்லை. அது ஒரு சட்டப் பிரச்சினை மட்டுமல்ல. அரசியல் பிரச்சினையுந்தான். அரசியல் தலைமைத்துவப் பிரச்சினையுந்தான்.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட நினைவு நாட்களின் போது நீதிமன்றங்களின் முடிவுகளே பெருமளவுக்கு நினைவு கூர்தலைத் தீர்மானிக்கும் ஒரு நிலைமைதான் கடந்த 15 ஆண்டுகளாகக் காணப்படுகின்றது.

இம்முறை வடக்கிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் பெரும்பாலான நீதிமன்றங்கள் நினைவு கூர்தலுக்குச் சாதகமாக முடிவெடுத்துள்ளன. இந்த விடயத்தில் சட்டவாளர்களாகக் காணப்படும் தமிழ் அரசியல்வாதிகள் ஒப்பீட்டளவில் நிரந்தரமான ஒரு சட்ட ஏற்பாட்டைக் குறித்துச் சிந்தித்திருக்கக் கூடிய ஒரு காலகட்டம் இருந்தது என்று ஒரு சட்டவாளர் சில ஆண்டுகளுக்கு முன் சுட்டிக்காட்டினார். 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான 30/1 தீர்மானத்தின்படி மக்களுக்கு நினைவு கூரும் உரிமை உண்டு. தனிப்பட்ட அல்லது பொது நினைவுச் சின்னங்களை உருவாக்கும் உரிமையும் உண்டு. நிலைமாறுகால நீதியின் நான்கு பெரும் தூண்களில் ஒன்று ஆகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அது குறித்து பேசப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க இழப்பீட்டு நிதிக்கான அலுவலகத்துக்குரிய சட்ட வரைவைக் கொண்டு வந்த பொழுது அதில் நினைவு கூர்தல் தொடர்பாக தமிழ் நோக்கு நிலையில் இருந்து சில ஏற்பாடுகளைத் தமிழ் அரசியல்வாதிகள் இணைத்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அவ்வாறு முன் யோசனையோடு செயற்பட்டு இருந்திருந்தால், இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் நீதிமன்றம் ஏறும் நிலைமை ஒப்பீட்டளவில் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் அதி உயர் சட்டமாகிய யாப்பில் இருப்பதையே அதாவது 13-வது திருத்தத்தையே முழுமையாக அமல்படுத்தாத ஓர் அரசியல் பாரம்பரியமுடைய நாட்டில், நினைவு கூர்தல் பொறுத்து உருவாக்கப்படும் சட்ட ஏற்பாடுகள் எந்தளவுக்கு மதிக்கப்படும் என்ற கேள்வியும் இங்கு உண்டு.

எதுவாயினும் கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பங்காளியாகச் செயற்பட்ட அக்காலகட்டத்தில், தென்னிலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக உழைத்த அக்காலகட்டத்தில், தமிழ் மக்களின் நினைவு கூரும் கூட்டுரிமை தொடர்பில் ஏன் முன்யோசனையோடு செயல்பட்டிருக்க வில்லை என்று மேற்படி சட்டவாளர் கேள்வி எழுப்பினார்.

அரசியல்வாதிகளாக உள்ள தமிழ்ச் சட்டவாளர்கள் இந்த விடயத்தில் மட்டுமல்ல நினைவு கூர்தல் சம்பந்தப்பட்ட வேறு ஒரு விடயத்திலும் பொருத்தமான, தாக்கமான விதங்களில் செயல்பட்டிருக்கவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அது என்னவேனில் படை முகாம்களாக மாற்றப்பட்டிருக்கும் துயிலுமில்லங்கள் பற்றிய விவகாரம் ஆகும்.



1996 இல் யாழ் குடாநாடு முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின், கடந்த 28 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒரு விடயம் இது. யாழ். குடாநாட்டில் கோப்பாய், கொடிகாமம், வடமராட்சி, எள்ளங்குளம் ஆகிய மூன்று துயிலுமில்லங்கள் படைத்தளங்களாக மாற்றப்பட்டன. அதுபோலவே 2009க்கு பின் வன்னியில், கிளிநொச்சியில், தேராவில் துயிலுமல்லத்திலும் முல்லைத்தீவில் ஆலங்குளம், முள்ளியவளை, அளம்பில் ஆகிய துயிலுமில்லங்களிலும் படைக்கட்டுமாணங்கள் உண்டு. மட்டக்களப்பில் தாண்டியடி துயிலுமில்லம், வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலுமில்லம் ஆகியவற்றில் படை முகாம்கள் உண்டு. மொத்தம் ஒன்பதுக்கும் குறையாத துயிலுமில்லங்களில் படைமுகாம்கங்கள் உண்டு.

போரில் வெற்றி கொள்ளப்பட்டவர்களின் புதை மேட்டை அவமதிப்பது என்பது நவீன அரசியலில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நடைமுறை. மன்னர்களின் காலத்தில்கூட துட்டகெமுனு தோற்கடிக்கப்பட்ட எல்லாளனுக்கு அனுராதபுரத்தில் ஒரு நினைவுத் தூபியைக் கட்டினான். அதைக் கடந்து போகின்றவர்கள் அதற்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டான். மன்னர் காலத்தில் பேணப்பட்ட அந்த அரசியல் மாண்பைக்கூட நவீன காலத்தில் இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசியல் பேணவில்லை.

தோற்கடிக்கப்பட்டவர்களின் புதைகுழிகளின் மீது வெற்றி பெற்றவர்கள் தமது படை முகாம்களைகக் கட்டுவது என்பது எதிரியை இறந்த பின்னரும் தண்டிக்க விரும்பும் ஒரு கூட்டு மனோநிலையின் வெளிப்பாடுதான். இறந்த



பின்னும் அவர்களை நிம்மதியாகத் துயில விடக்கூடாது. இறந்த பின்னும் அவர்களுடைய நெஞ்சை மிதித்து கொண்டு நடக்க வேண்டும் என்ற பழிவாங்கும் உணர்ச்சியை அது வெளிப்படுத்துகின்றது. போரில் உயிர்நீத்தவர்களின் மார்பின் மீது குந்தியிருப்பது என்பது போர் வெற்றியைக் கொண்டாடுவதில் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா வரையறைகளையும் அவமதிக்கும் ஒரு நடைமுறைதான்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது நினைவு சின்னத்தை உருவாக்குவதற்கான நிபுணர் குழு ஒன்றை உருவாக்கினார். அக்குழுவினர் திலீபனின் நினைவு நாட்களின்போது யாழ்.கச்சேரியில் ஒரு சந்திப்பை ஒழுங்கு படுத்தினார்கள். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இரண்டு சிங்கள நிபுணர்களும் அழகியல் துறை பேராசிரியர்கள் ஆகும். அவர்களிடம் இவ்வாறு துயிலுமில்லங்களில் படைத்தளங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது சுட்டிக் காட்டப்பட்டது. அவ்வாறு இறந்தவர்களையும் அவமதிக்கும் ஓர் அரசியல் இராணுவச் சூழலில், எப்படி பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கலாம் என்றும் அவர்களிடம் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு விவகாரமாக எழுப்பியிருக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு உண்டு. கடந்த 15 ஆண்டுகளாக அதை அவர்கள் செய்திருக்கிறார்களா? குறிப்பாக நிலைமாறுகால நீதியின் பங்காளியாக கூட்டமைப்பு செயற்பட்ட காலகட்டங்களில் ஏன் அந்த விவகாரத்தை ஐநாவில் எழுப்பவில்லை? ஏனைய உலகளாவிய மனித உரிமை அமைப்புகள் மத்தியில் எழுப்பவில்லை? அண்மையில் சிறீதரன் நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் பேசியிருக்கிறார். அந்த உரையில் இதுதொடர்பான புள்ளி விபரங்கள் உண்டு .

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை தத்தெடுக்க முற்பட்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்த விடயத்தில் எந்தளவுக்கு அக்கறை காட்டியிருக்கிறது? பெரும்பாலான கட்சிகள் இறந்த காலத்தைத் தத்தெடுக்க முயற்சிக்கின்றன. தமிழ் அரசியலில் பெரும்பாலானவர்கள் தங்களை இறந்த காலத்தின் வாரிசுகளாகக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாகக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள். துயிலுமில்லங்களை எப்படித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் மேற்சொன்ன விடயத்தில் அவர்கள் பயன் பொருத்தமான விதங்களில் அக்கறை காட்டியிருக்கிறார்களா?

அண்மையில் விசுவமடு தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்க கோரி ஒரு போராட்டம் இடம்பெற்றது. அத் துயிலுமில்லத்தின் ஒரு பகுதி இப்பொழுதும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை விடுவிக்க வேண்டும் என்று போராடியது சரி. ஆனால் அந்தப் போராட்டத்தை மாவீரர் நாளுக்கு சில கிழமைகளுக்கு முன்னதாக முன்னெடுப்பது என்பது, வளமையான தமிழ் அரசியலின் மந்தத்தனத்தையே காட்டுகிறது.


இது துயிலுமில்லங்களை அல்லது நினைவுத் தூபிகளை குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக சென்று துப்புரவாக்குவதற்கு நிகரானது. கடந்த 15ஆண்டுகளாக பெரும்பாலும் அதுதான் நடந்து வருகிறது. துயிலுமில்லங்களை நவம்பர் மாதங்களில் மட்டும் துப்புரவாக்குவதும், நவம்பர் மாதங்களில் மட்டும் அவற்றைப் புனிதமான இடங்களாக உருவகிப்பதும் சரியா? புனிதமான நினைவிடங்கள் என்றால் அவை ஆண்டு முழுவதும் பராமரிக்கப்பட வேண்டும். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் அப்படித்தான் அவை பராமரிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது எத்தனை துயிலுமில்லங்கள் அவ்வாறு தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படுகின்றன? அவ்வாறு பராமரிக்கத் தேவையான கட்டமைப்புக்கள், ஏற்பாடுகள் உண்டா? அப்படித்தான், மாவீரர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புக்களை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அனாதைகள் போன்றோரைத் தொடர்ச்சியாகப் பராமரிக்கும் கட்டமைப்புகள் எத்தனை உண்டு?



மாவீரர்களின் பெற்றோரை மாவீரர் மாதத்தில் மட்டும் அழைத்து அவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்குவதும் உதவிப் பொதிகளை வழங்குவதும் போதாது. அவர்களுக்கு தொடர்ச்சியாக உதவி வழங்க வேண்டும். அல்லது அவர்கள் உழைத்து சம்பாதிக்க கூடிய விதத்தில் பொருத்தமான முதலீடுகள் செய்யப்பட வேண்டும். அப்படித்தான் மாவீரர்களின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உடலுறுப்புக்களை இழந்த போராளிகள், யுத்த விதவைகள், யுத்த அனாதைகள்-போன்றோரின் விடயத்திலும். ஆனால் அவற்றுக்குரிய கட்டமைப்புகள் அதிகரித்த அளவில் இல்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட கிழமையில் மட்டும் தியாகிகளையும் தியாகிகளின் குடும்பங்களையும் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் கௌரவிப்பது அல்லது அவர்களுக்கு உதவி செய்வது என்பது ஒரு விதத்தில் அரசியல் சடங்குதான். அதை அதற்குரிய புனிதத்தோடு விசுவாசமாகச் செய்வது என்று சொன்னால், அதைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். புனிதம் என்பதே தொடர்ச்சிதான். அதைத் தொடர்ச்சியாகச் செய்வது என்று சொன்னால், அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்படும் கொண்டாட்டங்களில் கோடிக்கணக்கான காசு புரள்கிறது. உதாரணமாக அண்மையில் சிட் சிறீராமின் இசை நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட தொகை மிகப்பெரியது. இருபது லட்ஷம் கனேடிய டொலர்கள். அதில் சிறு துளி போதும். மாவீரர்களின் குடும்பங்களையும் புனர்வாழ்வு பெற்ற போராளிகளையும் பராமரிப்பதற்கு. எனவே தமிழ் அரசியல்வாதிகள் காசு இல்லை என்ற ஒரு காரணத்தை கூற முடியாது. உரிய கட்டமைப்புகளை பொருத்தமான விதங்களில் உருவாக்கினால், காசை வெளியில் இருந்து எடுக்கலாம். நினைவு நாட்களுக்கும், நினைவுகூரும் நிகழ்வுகளுக்கும், நினைவிடங்களுக்கும் உரிமை கோரும் அரசியல்வாதிகள், இந்த விடயத்தில் நினைவு கூர்தலின் புனிதத்தைத் தொடர்ச்சியைப் பேணத்தக்க விதத்தில் கட்டமைப்புகளை உருவாக்குவார்களா? கட்டமைப்புகளை கட்சிசாரா பொதுக் கட்டமைப்புகளாக உருவாக்கினால். அது மேலும் பொருத்தமாக இருக்கும்.

நன்றி: நிலாந்தன்


தமிழீழம்
நெய்தல் குடியில்
இடியாக வந்த
ஆழிப்பேரலை
நினைவுப்பகிர்வு
டிசம்பர் 26, 2023
ஆழிப்பேரலை போல் 100
மடங்கு அழிவை
தந்த ஆக்கிரமிப்பு
படை